"லிப்கோ"வின்

# கடிதம் எழுதுவது எப்படி?

# இப்புத்தகத்தைப் பற்றிய சில மதிப்புரைகள்

"......இந்நூலில் மாணவர் மட்டுமன்றி, முதியவரும் கற்கக் கூடிய பல அரிய விஷயங்கள் உள்ளன. உள்ளுறையாக உள்ள விஷயங்களைக் கவனித்தால், விலை அதிகமில்லை......"

—சுதேசமித்திரன், சென்னை.

"......அதிக படிப்பில்லாதவர்கள்கூட சுலபமாக கிரஹிக்கக்கூடிய விதத்தில் இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது......"

—தினமணி, சென்னை ; மதுரை.

"......இன்ன சந்தர்ப்பங்களில் இன்ன இன்ன விதமாகக் கடிதங்கள் எழுத வேண்டும் என்று நூற்றுக்கணக்கான மாதிரிக் கடிதங்கள் கொடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிச் சிறுவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டதெனினும் பெரியவர்களுக்கும் பயன்படக்கூடிய புஸ்தகம்......"

—கல்கி, சென்னை.

"......சில அறிஞர்களின் கடிதங்களையும் இப்புத்தகத்தில் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.........இவ்வளவு உபயோகமான ஒரு புத்தகம் வெளிவர உதவியாயிருந்த மயிலை சிவமுத்து, தணிகை உலக நாதன் முதலியோருக்கு நாம் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்..." —பூஞ்சோலை, சென்னை.

"......இப்புத்தகம் கடிதம் எழுதும் முறைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதில் மிக்க உபயோகமாயிருக்கும்......"

—பாரத தேவி, சென்னை.

"......தமிழில் முதன் முதலாக வெளிவரும் இவ்வெளியீடு தமிழ் நாட்டில் நன்கு வரவேற்கப்பட்டுச் சிறப்பாகப் போற்றப்படும்......"

—தி ஸண்டே டைம்ஸ், சென்னை.

"......இத் 'தர்ம சங்கட' நிலைக்கு மருந்து போல் அமைந்துள்ளது 'கடிதம் எழுதுவது எப்படி?' என்ற புத்தகம்......தமிழில் இது புது முயற்சி. அதில் வெற்றியும் கண்டுளர் 'லிப்கோ' கம்பெனியார்......"

—தாய் நாடு, மதுரை.

"......கடிதம் எழுதுவது எப்படியென்று நாம் பல சமயங்களில் ஆழ்ந்து யோசிக்கின்றோம். இனி அவ்வித யோசனைக்காகக் காலத்தைச் செலவழிக்க வேண்டாம். இப்புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொள்ளுங்கள்......இப்புத்தகம் தமிழ் மக்கள் அனைவர் கையிலும் இருக்க வேண்டியதவசியம்......"

—செங்குந்த மித்திரன், சென்னை.

"......சொல்லழகும், பொருளழகும் பொருந்தக் கடிதம் எழுதும் முறையை மக்களிடத்தில் பரப்புவதற்கு இந்த வெளியீடு முன் வந்திருப்பது பாராட்டத்தக்கதுதான். நல்ல முயற்சி......"

—நவ இந்தியா, கோயம்புத்தூர்.

விலை ரூ. 1-8-0.



# புத்தகத்தைக் காப்பதெப்படி?

## செய்ய வேண்டாதவை

1. புத்தகத்தை அதிகமாகப் பிரிக்க வேண்டாம்; பிரித்தபடியே கவிழ்த்து வைக்க வேண்டாம்.

2. மேலட்டைகளைப் பின்புறமாக வளைத்து, அவற்றைக் கெடுக்க வேண்டாம்.

3. எக்காரணத்தைக் கொண்டும் புத்தகத்தினுடைய தாள்களை மடிக்க வேண்டாம்.

4. குறிப்புகளும், கோடுகளும் எழுதி, புத்தக அழகைப் போக்கவேண்டாம்.

5. குழந்தைகளுக்கருகாமையில் எந்தப் புத்தகத்தையும் வைக்க வேண்டாம்.

6. தூக்கம் வரும்போது, புத்தகத்தை அதன் இருப்பிடத்தில் திருப்பி வைக்க மறக்க வேண்டாம்.

[பின் அட்டையைப் பார்க்க

"லிப்கோ"வின்

# கடிதம் எழுதுவது எப்படி?

[தமிழில் பல வகையான கடிதங்களும், கடிதம் எழுதும் முறைகளும், வாழ்த்து, வரவேற்பு முறைகளும், இன்னும் உபயோகமான அனுபந்தங்களும், தபால் கட்டணங்களும், பட விளக்கங்களும் அடங்கியது.]


ஆசிரியர் :
நால்வர்.


புலவர். அ. மு. பரமசிவானந்தம், பி.ஓ.எல்., எம்.லிட். அவர்கள் முன்னுரையுடன் கூடியது.

வெளியிடுவோர் :
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
(தந்தி விலாசம் : லிப்கோ, சென்னை)
"பூரங்கம் பில்டிங்ஸ்," 8, ரங்கநாதன் ரோட்,
தியாகராயநகர், சென்னை-17.

சென்னையில் முழு விற்பனை உரிமையாளர் :
எம். தாமோதரம் & கம்பெனி,
அப்பா பில்டிங்ஸ், 9/286, எஸ்பிளனேட், சென்னை-1.



பதிப்புரிமை]



[1952

LIFCO'S LETTER-WRITER IN TAMIL
முதற் பதிப்பு 1952

---

## எங்கள் நன்றி

எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, தம் இதழ்களில் வந்த சில கடிதங்களை இதில் சேர்த்துக் கொள்ளக் கனிவுடன் சம்மதித்த தினமணி, சுதேசமித்திரன், தினத்தந்தி, பேசும் படம் போன்ற பத்திரிகையாசிரியர்கட்கும், பிற அன்பர்கட்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

PRINTED AT
RAMANATH PRESS,
188, ROYAPETTAH HIGH ROAD,
MADRAS-14.

# புலவர் பொன்மொழி

புலவர். அ. மு. பரமசிவானந்தம்,
பி.ஓ.எல்., எம்.லிட்.,
துணைத் தமிழ்ப் பேராசிரியர்.

பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-10.

---

தாய் மொழியாம் தமிழ் மொழியில் கையெழுத்தும் போடத் தெரியாத மக்கள் நூற்றுக்கு எண்பதுக்குமேல் உள்ள இந்த நாட்டுக்குத் தேவையான நூல் 'கடிதம் எழுதுவது எப்படி?' என்பதாகும். எழுதப் படிக்கத் தெரிந்தவருள்ளும் பலர் பெரும்பாலும் வரம்புநிலை தவறியே எழுதி அறிவார்கள். எங்கோ ஒரு சிலர்தாம் எழுத்தையும், பேச்சையும் அமைக்க வேண்டிய வகையில் அமைத்து வாழ்கிறார்கள்.

வாழ்வோடு தொடர்பு கொண்டுள்ள இலக்கியமே கடிதம் என்பது. ஒருவர் எழுதும் கடிதங்களையெல்லாம் சேர்த்து ஒழுங்குபடுத்திப் பார்ப்போமாயின் அவர்தம் வாழ்க்கையை ஒருவாறு உணர்ந்து கொள்ள இயலும். எனவே இத்தகைய வாழ்விலக்கியம் அமைய வேண்டிய முறை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றே. இந்தத் துறையில் 'லிட்டில் ப்ளவர் கம்பெனியார்' மேற்கொண்ட முயற்சி சிறந்ததாகும். இதுவரை தமிழில் இதுபோன்ற நூல் ஒன்று வெளி வரவில்லை. ஆங்கில முதலிய மேலை மொழிகளில் இதுபோன்ற கடிதங்களை இலக்கியமாக வைத்துப் போற்றும் இந்த நாளில், நாம் அக்கடிதங்கள் எழுதும் முறையைக் கூட அறியாதிருப்பது வெட்கப் படக்கூடிய ஒன்றுதான். எனினும் கல்லாரும் அறிந்து கொள்ளும் வகையில் ஆசிரியர் 'நால்வர்' இந்நூலைத் தொகுக்க மேற்கொண்ட முயற்சி ஆறுதல் தருகின்றது. இது முயற்சியின் தொடக்க நூல். இன்னும் இதுபோன்று சிறந்த பல நல்ல நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும். 'லிட்டில் ப்ளவர் கம்பெனியார்' தமிழ் மொழிக்குச் செய்துவரும் தொண்டைத் தமிழ்நாடு அறியும். அவர்கள் இதுபோன்ற நூல்கள் பல வெளியிட்டு நாடு மொழியிலும், கலையிலும் முன்னேற ஆவன செய்வார்கள் என்ற உறுதியுடையேன். தமிழ்நாடு இந்நூலை ஏற்று நலம் பெறுக.

அ. மு. பரமசிவானந்தம்.



சகுந்தலை துஷ்யந்தனுக்குக் கடிதம் எழுதுதல்.

# எதற்கு இந்தப் புத்தகம்?

நாகரிகம் நிறைந்த இக்காலத்தில் மக்களின் அன்றாட வாழ்வில் கடிதம் எழுதுவதென்பது ஓர் இன்றியமையாத நிகழ்ச்சியாகிவிட்டது. தினந்தோறும் நம் வாழ்க்கையில் பற்பல இன்ப துன்ப நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன; நம் மனத்தில் பல எண்ணங்கள் தோன்றுகின்றன. இவைபற்றி நாம் நம் நெருங்கிய உறவினர்களிடமும், நண்பர்களிடமும், அவசியமானபோது அயலாரிடமும் உரையாடுகிறோம். அவர்கள் நேரில் இல்லாத சமயத்தில் என்ன செய்வது? கடிதத்தில் நம் மன எழுச்சிகளை நேரில் இருந்து பேசுவது போலவே எழுதியனுப்புகிறோம். இந்த நிலைமையில் தோன்றுவது தான் கடிதம் என்பது.

கடிதம் எழுதுவதென்பது நம் நாட்டிலும் சரி; மேல் நாட்டிலும் சரி, இன்று நேற்று நடைபெற்றுவரும் பழக்கமன்று. இது மனிதனின் நாகரிக வளர்ச்சி தொடங்கிய காலம் முதற்கொண்டே நடைபெற்று வரும் ஒரு சிறந்த கலையாகும். இதிகாசங்களில் சகுந்தலை துஷ்யந்தனுக்குக் கடிதம் எழுதிய செய்தியும், இலக்கியங்களில் இறைவனார் பாண்டியனுக்குக் கடிதம் எழுதிய செய்தியும், மாதவி கோவலனுக்குக் கடிதம் எழுதிய செய்தியும் பலரும் அறிந்தனவே.

காகிதம், பேனா, மைக்கூடு முதலிய சாதனங்கள் ஏற்படுவதற்கு முன் நம் நாட்டு மக்கள் ஓலைகளில் எழுத்தாணிகளைக் கொண்டு கடிதம் எழுதி வந்தனர். அக்காலத்தில் ஓலையில் எழுதப்பட்டதால், கடிதத்தை ஓலை என்றே வழங்கி வந்தனர். அதுபோல இக்காலத்தில் கடிதத்தில் (Paper) எழுதுவதைக் கடிதம் என்று வழங்கி வருகிறோம். அஞ்சல் (தபால்), புகைவண்டி, டெலிபோன், தந்தி, மோட்டார், ஆகாய விமானம், முதலியவை இந்தக் காலத்தில் நண்பர்கள், உறவினர்கள், அரசாங்கம்,

பொது மக்கள் இவர்களிடையே கடிதப் போக்குவரவின் மூலம் இடைவிடாத தொடர்பு வைத்துக் கொள்வதற்குச் சிறந்த சாதனங்களாக இருக்கின்றன.

மேல் நாட்டினர் கடிதக் கலையில் ஊக்கம் செலுத்துவதுபோல நம்மவர் அவ்வளவு ஊக்கம் செலுத்துவதில்லை. கடிதம் எழுதுவதற்கென்றே குறிப்பிட்ட முறைகள் சில ஆங்கிலத்தில் உண்டு; கட்டுப்பாடுகள் உண்டு; அவற்றினை எழுதும் முறைகளை விளக்கும் நூற்றுக்கணக்கான நூல்கள் உண்டு. நம் அருமைத் தமிழ் மொழியிலோ கடிதம் எழுதும் முறையை விளக்கும் நல்ல நூல்கள் ஒன்றும் வெளிவரவில்லை. இந்நிலைமை நீங்கி ஒரு வரன்முறைப்படி சொல்லழகு, பொருளழகு பொருந்தக் கடிதம் எழுதும் பழக்கம் தமிழ் மொழியாளரிடத்தும் பரவ வேண்டும் என்னும் சீரிய நோக்கத்தையே தலைமேற்கொண்டு இந்நூல் அரிய முயற்சியால் வெளியிடப் பெற்றது; இந்நூல் பாடசாலைகளில் பெரிதும் பயன்பட வேண்டுமென்ற பேரவாவுடன் தொகுக்கப் பெற்றது.

இந்நூலில் காணப்படும் பலவகைக் கடிதங்களும் பெரும்பாலும் ஆங்கில நெறியைத் தழுவியே எழுதப்பட்டன. ஆயினும், நம் இனிய தமிழ் மரபு கெடாவண்ணம் கூர்ந்து நோக்கி எழுதப்பட்டதென்பதை ஒரு முறை மேற்போக்காக ஏட்டைப் புரட்டிப் பார்ப்போர் நன்கு உணரலாகும். இப்புத்தகத்தில் உபயோகமான சில அனுபந்தங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கடிதம் எழுதுவது சம்பந்தமாகச் சில பட விளக்கங்கள் தரப்பட்டிருப்பது சிறப்பியல்பாகும். இதில் குறிப்பிட்ட பொருள்கள் அத்தனையும் மாதிரிகளேயல்லாமல் அவற்றை அப்படியே பிறர் பார்த்து எழுத வேண்டுமென்ற நியதி இல்லை. அவரவர் தமது இருப்பிடம், சூழ்நிலை, பழக்க வழக்கங்களுக்கேற்ப இவற்றைக் கூட்டியோ, குறைத்தோ, மாற்றியோ, திருத்தியோ எழுதிக் கொள்ளலாம்.

இந்நூல், தமிழ்ப் பொது மக்களிடையிலும், மாணவர்களிடையிலும், நூல் நிலையங்களிலும், உலவிவருமானல்,

அதுவே தம் முயற்சியின் பலனாகக் கருதி இந்நூலாசிரியர் மகிழ்ச்சியடைவார். இதனை இன்னும் சீரிய முறையில் அமைப்பதற்காகக் கூறும் ஆலோசனைகளை மனமுவந்து வரவேற்கிறோம்.

இப்புத்தகம் அச்சாவதற்கு முன் மேற்போக்காகக் கையெழுத்துப் பிரதிகளை ஒரு முறை பார்த்து அரிய கருத்துக்களை வழங்கியவர் சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவரும், மாணவர் மன்றப் புரவலருமாகிய உயர்திரு. புலவர். மயிலை. சிவமுத்து அவர்கள். இது வெளி வருதற்குத் தம் சிறந்த ஆலோசனைகளை வழங்கிப் பேருதவி புரிந்தவர் சென்னை, இந்து தியாலாஜிகல் உயர் நிலைப்பள்ளி ஆசிரியரும், மாணவர் மன்றத் துணைத் தலைவரும் ஆகிய அறிஞர் உயர்திரு. தணிகை. உலகநாதன் அவர்கள். இந்நூல் இவ்வளவு அழகுடன் வெளிவர உற்சாகமளித்தவர்கள் உயர்திரு. அறிஞர். மணி. கோடீஸ் வரனார், எம். ஏ. (கொலம்பியா), எல். டி. அவர்கள், உயர்திரு. சி. ஆர். ஸ்ரீபதி அவர்கள். தமக்கிருக்கும் மலை போன்ற பற்பல அலுவல்களிடையே பொது மக்களின் நன்மையை விரும்பி இந்நூலில் வரும் தபால் குறிப்புக் களும், படங்களும் சேர்த்துக் கொள்ளப் பேருதவியாக இருந்தவர் உயர்திரு. போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அவர் களும், அவர்தம் துணை அலுவலாளர்களும் ஆவர். மற்றும் பல அன்பர்களும் இது நல்ல முறையில் வெளி வருவதற்கு உதவி செய்தார்கள். எல்லோருக்கும் என்றும் மறவாத எங்கள் நன்றி உரியதாகும்.

சிறப்பாக, இப்புத்தகத்திற்கு முன்னுரை எழுதித் தந்து எங்களை மகிழ்வித்த உயர்திரு. புலவர். அ. மு. பரம சிவானந்தம், பி. ஓ. எல்., எம். லிட். அவர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றி உரியதாகும்.

சென்னை-17,
1-2-1952.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
பதிப்பகத்தார்.

# என்னென்ன ?

கடிதங்களின் வகைகள் ... 1

கடிதத்தின் உறுப்புகள் ... 3

கடிதம் எழுதுவோர் கவனிக்க வேண்டுவன ... 11

கடிதம் எழுதுதல் ... 13

உறவுக் கடிதங்கள்

(அ) குடும்பக் கடிதங்கள்

1. மகிழ்ச்சி தெரிவித்தல் ... 17
2. நன்றி கூறுதல் ... 21
3. அறிவுரை புகட்டுதல் ... 22
4. ஆறுதல் கூறுதல் ... 27
5. குறிப்பிட்ட ஒரு பொருள் பற்றியவை ... 28
6. தம் இல்ல நிகழ்ச்சிகள் ... 41
7. பிற வெளி நிகழ்ச்சிகள் ... 44

(ஆ) அழைப்பும், வாழ்த்தும்

1. அழைப்பு

(1) புதுமனை புகுவிழா ... 50
(2) பிறந்த நாள் விருந்து ... 50
(3) காதணி விழா ... 52
(4) குழந்தை தாலாட்டு விழா ... 52
(5) திருமணம் ... 53
(6) பூச்சூட்டல் ... 59
(7) கருவளர் சிறப்பு ... 60
(8) மணி விழா ... 60
(9) முத்து விழா ... 61
(10) நவராத்திரி விழா ... 61

2. வாழ்த்தும், பாராட்டும்

(1) புதுமனை புகுவிழா ... 62
(2) காதணி விழா ... 64
(3) திருமணம் ... 66
(4) புத்தாண்டு ... 74
(5) மணி விழா ... 75

(6) பொங்கல் ... 78
(7) தீபாவளித் திருநாள் ... 82
(8) குடியரசு அல்லது சுதந்திரத் திருநாள் ... 83

(இ) பிரிவும், அனுதாபமும்

1. பிரிவு ... 84

2. அனுதாபம்

(1) தாயை இழந்த நண்பருக்கு ஆறுதல் கடிதம் ... 87
(2) தந்தையைப் பிரிந்த நண்பருக்கு ஆறுதல் கடிதம் ... 88
(3) அண்ணனை இழந்த நண்பருக்கு ஆறுதல் கூறுதல் ... 89
(4) மனைவியை இழந்த நண்பருக்குக் கடிதம் ... 91
(5) ஆதரித்தவர் பிரிவுக்கு எழுதும் இரங்கல் உரைகள் ... 94

வியாபாரக் கடிதங்கள்

(அ) முன்னுரை ... 97
(ஆ) மாதிரிகள் ... 102

ஆட்சிநெறிக் கடிதங்கள்

(அ) முன்னுரை ... 111
(ஆ) மாதிரிகள் ... 115

பொதுக் கடிதங்கள்

(அ) வரவேற்புரை ... 140
(ஆ) பாராட்டுரை ... 153
(இ) சொற்பொழிவு ... 160
(ஈ) பிரிவு உபசாரப் பத்திரங்கள் ... 165
(உ) ஆசிரியருக்குக் கடிதங்கள் ... 175

அனுபந்தங்கள்

(அ) பொது இடு அழைப்புக் கடிதங்கள் ... 179
(ஆ) வைஷ்ணவக் கடிதங்கள் ... 185
(இ) விளம்பரங்கள் ... 190

(ஈ) கடன் பத்திரங்கள் ... 198

(உ) *நகைச்சுவைக் கடிதங்கள் ... 199

(ஊ) நாமும், தபால் நிலையமும்

1. முக்கியமாகக் கவனிக்க வேண்டுவன... 201

2. தபால், தந்திக் கட்டணங்கள்

(1) உள்நாட்டுத் தபால் ... 210
(2) உள்நாட்டுத் தந்தி ... 221
(3) உள்நாட்டு ஆகாயத் தபால் ... 223
(4) வெளிநாட்டுத் தபால் ... 223
(5) வெளிநாட்டு ஆகாயத் தபால் ... 225

3. சென்னை நகரத்தில் விசேஷத் தபால் வசதிகள் ... 22[illegible]

4. தபால் ஆபீஸ்கள் அதிகரிப்பு ... 226

5. தபால், தந்தி விடுமுறை நாட்கள் ... 228

6. இந்தியன் மணியார்டர் பாரம் ஒன்றின் மாதிரி ... 229

7. இந்தியன் போஸ்டல் ஆர்டர் ஒன்றின் மாதிரி ... 231

8. வரிசையாக நிற்கப் பழகுங்கள்! ... 232

9. சென்னையில் தெருக்கள் வாரியாக உள்ள பேட்டைகளின் குறியீட்டு எண்கள் ... 233

10. சென்னையில் முக்கியமான டெலிபோன் எண்கள் ... 235

(எ) அரசாங்கப் பொது விடுமுறை நாட்கள் ... 236

(ஏ) கடிதங்கள் சம்பந்தமான சில கலைச் சொற்கள் ... 238

*இவை தினமணிக் கதிரில் வந்தவை.

ஸ்ரீ:

## “லிப்கோ”வின்

# கடிதம் எழுதுவது எப்படி?

## கடிதங்களின் வகைகள்

கடிதங்கள் பொதுவாக நான்கு வகைப்படும். அவை :

1. உறவுக் கடிதங்கள் (PRIVATE LETTERS);
2. வியாபாரக் கடிதங்கள் (BUSINESS LETTERS);
3. ஆட்சிநெறிக் கடிதங்கள் (OFFICIAL LETTERS);
4. பொதுக் கடிதங்கள் (PUBLIC LETTERS)

என்பன.

**1. உறவுக் கடிதங்கள் :**—எழுதுபவருக்கும், விலாசதாருக்கும் உள்ள சொந்த விஷயங்களைக் குறிப்பிடும் கடிதங்கள் இவ்வகையில் சேருவன. இவைகளை,

(அ) **குடும்பக் கடிதங்கள் :**—நண்பர்களுக்கும், சுற்றத்தினருக்கும் மகிழ்ச்சி தெரிவித்தும், நன்றி கூறியும், அறிவுரை புகட்டியும், ஆறுதல் கூறியும், குறிப்பிட்ட ஓர் பொருள் பற்றியும், மற்றும் தம் இல்லங்களிலும், பிற இடங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் எழுதுதலும்;

---

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

(ஆ) **அழைப்பும், வாழ்த்தும்:**—பிறந்த நாள் விழா, திருமணம், மணி விழா முதலிய சிறப்புக் காலங்களில் நண்பர்களுக்கும், பிறருக்கும் அழைப்பு அனுப்புதலும், இவ்வின்ப நிகழ்ச்சிகளுக்கும், இன்னும் பொங்கல், தீபாவளி, குடியரசுத் திருநாள் போன்ற நன்னாட்களுக்கும் வாழ்த்து அனுப்புதலும்;

(இ) **பிரிவும், அனுதாபமும்:**—ஒருவர் இறந்த செய்தியைத் தெரிவித்தலும், இத்துன்ப நிகழ்ச்சிக்கு வருத்தம் தெரிவித்தலும்

என மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளலாம்.

**2. வியாபாரக் கடிதங்கள்:**—வியாபாரத்தின் பொருட்டு எழுதப்படும் கடிதங்கள் வியாபாரக் கடிதங்கள் எனப்படும். பொருள்களைப் பற்றிய விவரங்கள் தெரிவித்தல், தேவையான சாமான்களுக்கு வியாபாரிகளுக்கு எழுதுதல் போன்றவை இப்பிரிவில் அடங்கும்.

**3. ஆட்சிநெறிக் கடிதங்கள்:**—அரசாங்க அதிகாரிகளுக்கும், அலுவலாளர்களுக்கும் எழுதும் கடிதங்களும், அவர்கள் பதிலுக்கு அனுப்பும் கடிதங்களும் இப்பிரிவில் அடங்கியவை. அதிகாரிகளிடம் புகார் செய்தல், ஓர் உத்தியோகத்தைப் பெற விண்ணப்பம் அனுப்புதல் போன்றவைகளும், நன்மதிப்புக் கடிதங்களும் இப்பிரிவின் கீழ் வருவனவாம்.

**4. பொதுக் கடிதங்கள்:**—மேலே கூறப்பட்ட மூன்று வகையிலும் அடங்காத பிற கடிதங்கள் பொதுக் கடிதங்கள் எனப்படும். வரவேற்புப் பத்திரங்கள், பள்ளிக்கூடங்களைப் போன்ற பொது இடங்களில் நடைபெறும் விசேஷங்களுக்குப் பாராட்டுரை எழுதுதல், பிரிவு உபசாரப் பத்திரங்கள், பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அனுப்புவது, பத்திரிகையாசிரியருக்குக் கடிதங்கள் என்பன இவ்வகையில் சேரும்.

---

# கடிதத்தின் உறுப்புகள்

---

சிறப்பான கடிதம் எவ்விதம் அமையவேண்டுமென்பதைப் பற்றிப் பேராசிரியர் ஒருவர் கூறுகிறார் :—

1. தெளிவான கையெழுத்து ;
2. எழுத்துப் பிழை இல்லாதிருத்தல்;
3. இலக்கணப் பிழை இல்லாதிருத்தல் ;
4. சட்டென கருத்து விளங்கக்கூடியதாக அமைத்தல் ;
5. சுருங்கக் கூறல் ;
6. நிறுத்தக் குறியீடுகளைத் தக்கபடி இடுதல்;
7. பக்குவமாகப் பிரிக்கப்பட்ட பத்திகள் ;
8. தக்க முறையில் ஆரம்பிக்கவும், முடிக்கவும், சரியானபடி இடம் விட்டு எழுதவும், ஒழுங்காக கடிதத்தை மடித்து, விலாசமிட்டு, தபால் தலை ஒட்டவும் அறிந்திருத்தல்.

தவிர, ஒரு கடிதம் கீழே கொடுக்கப்பட்ட ஆறு உறுப்புகளும் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும் :

1. எழுதுபவரின் இடமும், தேதியும் ;
2. முன்னிலை ;
3. உள்ளுறை ;
4. முடிவு ;
5. கையெழுத்து ;
6. விலாசம் அல்லது முகவரி.

இவற்றின் விளக்கத்தை அடுத்து வரும் மாதிரிக் கடிதத்தில் காணலாம். அதனதன் ஈற்றில் உள்ள நிறுத்தக் குறிகளையும் கவனியுங்கள்.

---

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.

எழுதுபவரின் இடமும், தேதியும் ← 82, மேட்டுத் தெரு, கடலூர், 11-12-1950. → 1

2 ← அன்புள்ள முத்து, → முன்னிலை

சென்ற வாரம் நடந்த சென்னை நகரசபைத் தேர்தலில் நீ வெற்றி பெற்றதாக இன்று பத்திரிகையில் கண்டு பரமானந்தம் கொண்டேன். எங்கே சிற்றுண்டி விருந்து? எல்லாம் தபாலிலேயே அனுப்புவதாக யோசனையா அல்லது நானே நேரில் வந்து விடலாமா?

உன் அறிவுக்கும் திறமைக்கும் இந்தப் பதவி பெரிதன்று. இன்னும் பல பெரிய பதவிகள் உனக்குக் காத்துக் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் நீ நம் மாகாணப் பிரதம மந்திரியாக வந்தால்கூட ஆச்சரியப்படமாட்டேன். உன் தகுதிக்குத் தக்க கடமையைச் செய்து பேரும், புகழும் அடைவாய் என்பது திண்ணம்.

இனி உன் வேலை நெருக்கடியில் எனக்குக் கடிதம் எழுத மறந்துவிடாதே. எங்கள் ஊரிலும் தபால் நிலையம் இருக்கிறது. உனக்கு என் அன்பான வாழ்த்துக்கள்.

உள்ளுறை → 3

முடிவு ← இங்ஙனம், உன் அன்புள்ள, → 4

கையெழுத்து ← த. துநாதன். → 5

6 ← திரு. க. முத்துசாமி அவர்கள்,
நகரசபை உறுப்பினர்,
6, சிதம்பரம் தெரு,
சென்னை-1. → விலாசம் அல்லது முகவரி

## உறுப்புகளின் விவரம்

1. **எழுதுபவரின் இடமும், தேதியும்:** எழுதுபவர் இருக்கும் இடமும், எழுதும் தேதியும் கடிதத்தின் தலைப்பக்கத்து வலப்புறத்து மூலையில் குறித்தல் வேண்டும். முதலில் இடத்தை எழுதி, அதன் இறுதியில் காற்புள்ளி (comma) வைத்தலும், அதன் அடியில் தேதியைக் காட்டி, அதன் இறுதியில் முற்றுப்புள்ளி வைப்பதும் வழக்கம்.

உதாரணம் :

33, பெரிய தெரு,
திருவத்திபுரம்,
5 - 10 - 1950.

2. **முன்னிலை:** கடிதம் யாருக்கு எழுதப்படுகிறதோ, அவரைக் குறிக்கும் சொல் **முன்னிலை** என்று கூறப்படும். கடிதத்தின் உள்ளே, அவருக்கும் எழுதுபவருக்கும் உள்ள உறவு முறை எதுவோ அதனை அன்பு அடைமொழி கொடுத்துக் கீழ்க்கண்டபடி இடப்புறத்தே எழுத வேண்டும். அன்பு அடைமொழி என்பது கடிதம் எழுதுபவர் தமது அன்பு விளங்குமாறு கூறும் சொற்களையும், சொற்றொடர்களையும் குறிக்கும்.

"குருவிக் குடில்,"
32, முல்லா சாகிப் தெரு,
சென்னை-1,
19 - 12 - 1950.

அன்புள்ள நண்ப,

குறிப்பு :— முன்னிலையின் இறுதியில் காற்புள்ளி வைப்பது அவசியம்.

**அஞ்சிலே விளையாதது ஐம்பதில் விளையுமா?**

**3. உள்ளுறை:** கடிதத்தின் உள்ளே எழுதப்படும் பொருள் உள்ளுறை ஆகும். இதற்குத் தொடக்கமாக விலாச தார் தம்மைவிடப் பெரியராயின் வணக்கம் தெரிவித்தும், இளையராயின் வாழ்த்து தெரிவித்தும் எழுதலாம்.

*உதாரணம் :*

(1) **வணக்கம்** (*தாய், தந்தை, மாமா போன்றவருக்கும், மற்ற பெரியோர்களுக்கும்*);

(2) **வாழ்க** (*தங்கை, தம்பி, மகன் போன்றவருக்கும், மற்ற சிறியவர்களுக்கும்*).

இப்படி எழுதிய பின்னர் பொருளை எழுதுவது நன்று கும். விஷயம் அந்தந்தக் கடிதங்களுக்குத் தக்கபடி பொரு ளுக்குப் பொருத்தமாக எழுத வேண்டும். வீணான வாக்கி யங்கள் கடிதத்தின் அழகைக் கெடுக்கும்.

**4. முடிவு:** கடிதம் எழுதுபவர் தாம் கையெழுத்திடு வதற்கு முன்னர் உள்ளுறையின் கீழ் கடிதத்தின் வலப் புறத்தே குறிப்பிடவேண்டிய பகுதியே முடிவு எனப்படும். இவ்விடத்தில் எழுதுபவர் தம்முடைய தொடர்பினை ஒரு வகையால் சுட்டிக் காட்டுவதுண்டு.

*உதாரணம் :*

(1)

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள மகன்,
.....................

(2)

இப்படிக்கு,
அன்புள்ள நண்பன்,
.................

(3)

தங்கள் பணிவுள்ள ஊழியன்,
.........................

இவற்றின் ஈற்றில் காற்புள்ளி வைப்பதற்கு மறந்து விடலாகாது.

**5. கையெழுத்து :** முடிவுக்குக் கீழே கடிதம் எழுதியவர் கையெழுத்திடுதல் வேண்டும். யாரேனும் புதியவருக்குக் கடிதம் எழுத நேருங்காலத்தில் தம் கையெழுத்து தெளிவாக இல்லாவிடின் அதன் கீழே கடிதம் எழுதுபவரின் பெயரைக் கொட்டை எழுத்துக்களில் தெளிவாக எழுதுவது நலம்.

உதாரணம் : தங்கள் அன்புள்ள,
வி. இளங்கோவன்.

கையெழுத்துக்குப்பின் முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும்.

**6. விலாசம் அல்லது முகவரி :** விலாசம் எழுதுவது கடிதம் எழுதுவதின் முக்கியமான பகுதியாகும். கடிதம் உரியவருக்குப் போய்ச் சேரவேண்டுமானல் தெளிவான விலாசம் எழுதுவது இன்றியமையாததாகும். முகவரியை ஒரு வரியின் கீழ் ஒன்ருக வலப்பக்கம் சிறிது இடம் தள்ளிப் படிப்படியாக எழுதி ஒவ்வொன்றின் இறுதியிலும் காற்புள்ளி வைத்தல் வேண்டும். விலாசதாரின் பெயருக்கு முன்னுல் மரியாதையைக் குறிக்கும் அடைமொழிகளை அமைத்து எழுதுவது வழக்கம். அம் மரியாதை அடைமொழியும் கீழ்க்கண்டபடி விலாசதாரின் வயது, உறவு, பதவி, தகுதி முதலியனவற்றுக்குப் பொருத்தமாக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| (1) உறவினருக்கும், நண்பர்கட்கும், வயதால் குறைந்தவர்கட்கும் : | திரு, திருவளர் செல்வன், திருவளர் செல்வி, குமாரி, (சிரஞ்சீவி, சௌபாக்கியவதி,) செல்வன், செல்வி முதலியவை. |
| (2) உறவினருக்கும், நண்பர்கட்கும், வயதால் முதிர்ந்தவர்கட்கும் : | திரு, திருவாளர், உயர் திருவாளர்,திருமதி, (ஸ்ரீ, ஸ்ரீமான், ம-ா-ா-ஸ்ரீ, ஸ்ரீமதி,) முதலியவை. |
| (3) சமயாசாரியர்கட்கும், துறவிகட்கும், சமயப்பற்றுள்ளவர்கட்கும் : | அருள் தங்கிய, சிவத்திரு, (ஸ்ரீமத், ஸ்ரீஜத், பிரம்மஸ்ரீ, விசுவ பிரம்மஸ்ரீ, ஸ்ரீலஸ்ரீ,) முதலியவை. |
| (4) அமைச்சர், பிரதமர் போன்ற அதிகாரிகளுக்கு : | கனம், கனம் பொருந்திய, பெருமை தங்கிய, மாண்புமிக்க முதலியவை. |

**(5) அரசர்கட்கு :** மாட்சிமை தங்கிய.
**(6) மடாதிபதிகட்கு :** மகாசந்நிதானம்.

குறிப்பு :—மேலே சொல்லியவற்றுடன், பெரியவர்களாயின், பெயருக்குப் பின்னர், **அவர்கள்** என்று எழுதுவது அவசியம்.

## ஸ்ரீமதி, குமாரி என்னும் அடைமொழிகள்

ஸ்ரீமதி (திருமதி), குமாரி என்னும் அடைமொழிகளை உபயோகிப்பது பற்றிய உத்தரவு (Public Works Department Information and Publicity):

தற்போது ஆட்சிநெறிக் கடிதங்களிலும், அரசாங்கத் தஸ்தாவேஜிகளிலும் உபயோகிக்கும் 'ஸ்ரீமதி' என்னும் அடைமொழியானது முஸ்லீம்கள், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் அல்லாத மாதர்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டது. ஸ்ரீமதி என்னும் சொல்லைத் திருமணம் ஆனவர், ஆகாதவர் என்னும் இருவருக்குமே வழங்கி வந்ததனால் ஆங்கிலத்தில் **மிஸர்ஸ்** (திருமணமானவர்) **மிஸ்** (திருமணமாகாதவர்) என்னும் சொற்களைப்போல் இருவருக்கும் வேற்றுமையைக் காட்டும் சரியான இந்தியக் **கலைச்**சொல் கூறுவது கடினமாய் இருந்தது. தகுந்த ஆலோசனைக்குப் பின்னர் திருமணமான பெண்களுக்குத் திருமதி (ஸ்ரீமதி) என்றும், திருமணமாகாத பெண்களுக்குக் குமாரி என்றும் அடைமொழி வழங்குவதெனவும், அவற்றையே இனிவரும் அரசாங்கக் கடிதங்களிலும் தஸ்தாவேஜிகளிலும் வழங்க வேண்டுமெனவும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

[26—12—1950 — 1703-ம் பக்கம் செயின்ட் ஜார்ஜ் கெஜட் — இரண்டாம் பாகம் - 51ம் எண்ணில் குறிப்பிட்ட உத்தரவின் மொழி பெயர்ப்பு இது.]

இதைப் பற்றி 1950 டிசம்பர் கடைசி வாரத்தில் 'ஹிந்து' போன்ற தினசரிகளில் **ஆசிரியர்களுக்குக் கடிதங்கள்** என்னும் தலைப்பில் பலவித மான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. சிலர் மணமாகாத பெண்களுக்குச் **சௌபாக்கியவதி** என்றும், சிலர் எல்லா மாதருக்கும் பொதுவாக **தேவி** என்றும், வேறு சிலர் ஆங்கில அடைமொழிகளையே வழங்கலாம் என்றும் தத்தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

# முகவரி எழுதும் முறை

ஒழுங்காக விலாசம் எழுதுவது பற்றி ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குப் பாடம் அமைக்குமாறு இந்திய அரசாங்கக் கல்வி இலாகாக் காரியதரிசி மாகாணக் கல்வி இலாகா டைரக்டர்களுக்கு அனுப்பிய கடிதத்தின் மொழி பெயர்ப்பு :

Govt. of India, Ministry of Education
நெ. D. 1430/51-B. I

புது டில்லி - 3,
2—5—1951.

ஐயா,

பொதுமக்களுக்குச் சரியான முறையில் விலாசம் எழுதத் தெரியாமையால் தபால்-தந்தி இலாகாவினர் திறமையுடன் வேலை செய்வதில் பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. அவற்றை நீக்குவதன் பொருட்டுப் பொது மக்கள் சரியானபடி விலாசம் எழுதப் போதிக்கும் திட்டங்கள் பலவற்றை இந்த இலாகா அதிகாரிகள் யோசித்து வருகின்றனர் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. பள்ளிக்கூடங்களில் படிக்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குச் சரியானபடி விலாசம் எழுதும் முறையைப் போதிப்பதும் இத்தகைய ஆலோசனைகளில் ஒன்றாகும். தபால்-தந்தி இலாகாவினரால் தயாரிக்கப்பட்ட மாதிரிப் பாடமொன்றும் இத்துடன் அனுப்பப்படுகிறது. பிரதேச அரசாங்கம் சம்மதப்பட்டால், ஆரம்ப வகுப்புப் பாடப் புத்தகங்களில் பிரதேச மொழியில் இத்தகைய பாடம் ஒன்றைச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யலாம். இத்துறையில் ஐக்கிய மாகாணத்தில் செய்யப்பட்ட முயற்சியில் வெற்றிகரமான பயன் ஏற்பட்டது என்பதையும் மாகாண அரசாங்கங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒப்பம்) கல்வி இலாகாக் காரியதரிசி.

குறிப்பு :—இக்கடிதத்தின் பிரதிகள் கல்வி அதிகாரிகளால் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

---

அடக்கம் இல்லாவிடில் பண்பாடில்லை.

## மாதிரிப் பாடம்

1. நாம் எல்லோரும் பிறருக்குக் கடிதங்கள் எழுதி அனுப்புகிறோம்; பிறரிடமிருந்தும் நமக்குக் கடிதங்கள் வருகின்றன. ஆனால் நம்மில் சிலருக்குத்தான் சரியான முறையில் முகவரி எழுதவும், சரியான இடத்தில் தபால் தலை ஒட்டவும் தெரியும்.

2. கடிதத்தின் முகவரி எழுதிய பக்கத்தின் வலப்புறத்தில் மேல்பாகத்து மூலையில் தபால் தலைகளை ஒட்ட வேண்டும் என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். முகவரியை எழுதும்போது நாம் மிகவும் தெளிவாகவும், முழுமையாகவும் எழுத வேண்டும். முதலில் நாம் யாருக்குக் கடிதம் எழுதுகிறோமோ அவருடைய பெயரும், அவசியமானால் பெற்றோர் பெயரும் குறிப்பிட வேண்டும். பிறகு அவர் தொழில், பட்டம் முதலியவற்றைக் குறிப்பிட வேண்டும். அதன் பின்னர் அவர் வசிக்கும் அல்லது வியாபாரம் செய்யும் வீடு அல்லது கடை முதலியனவற்றின் எண்களையும் எழுத வேண்டும். தபால் நிலையத்தில் உள்ளவர்களுக்கு நன்றாகப் புரிவதற்காகக் கடிதம் செல்ல வேண்டிய தபால் நிலையத்தின் பெயரைக் கீழே கோடிட்டு அனுப்ப வேண்டும். பம்பாய், கல்கத்தா, சென்னை, சிம்லா, டெல்லி முதலிய நகரங்களுக்கு அனுப்பும் கடிதங்களில் அந்தந்தப் பிரதேசத்தின் குறியீட்டு எண்ணைக் (Zonal Number) குறிப்பிட வேண்டும.

தபால் நிலையத்தில் உள்ளவர்கள் லட்சக் கணக்கான கடிதங்களைக் கவனிக்க வேண்டியவர்களாக உள்ளனர். உங்கள் கடிதம் எந்த ஊருக்குச் செல்ல வேண்டுமோ அந்த தபால் நிலையத்தின் பெயரைத் தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட்டால் அவர்கள் சிரமமும் குறையும்; உங்கள் கடிதமும் குறிப்பிட்ட இடத்துக்கு விரைவில் போய்ச் சேரும். தபால் நிலையத்தின் கீழே அது அடங்கி உள்ள ஜில்லாவின் பெயரையும் எழுத வேண்டும்.

இப்படித் தெளிவாக விலாசம் எழுதுவதால் உங்கள்

கடிதம் மிக விரைவாகவும், குறிப்பிட்ட நேரத்திலும் உரியவர்களிடம் போய்ச் சேரும். இல்லையேல், அவை தொலைந்து விடக்கூடும்; காலதாமதமும் ஆகும்.

---

## கடிதம் எழுதுவோர் கவனிக்க வேண்டுவன

1. கடிதம் எழுதுவதற்குமுன் என்ன எழுதப் போகிறோம் என்பதை மனதில் ஒழுங்கு படுத்திக் கொண்டு விலாசதார் நேரில் இருந்தால், எந்த முறையில் கூறுவோமோ அந்த அளவில் குறையாமலும், மிகாமலும் எழுதவேண்டும்.

2. எழுதும் நடை தெளிவாகவும், எளிதாகவும் இருக்கவேண்டும். நீண்ட வாக்கியங்களும், பொருளற்ற சொற்றொடர்களும், வர்ணனைகளும் விலக்குதல் வேண்டும்.

3. படிப்பவர் கண்ணுக்குப் புரியும்படி கையெழுத்து தெளிவாக எழுதுவது நலம். கடிதம் எழுதுவதற்கு எப்போதும் பேனாவையே உபயோகிப்பது நல்லது. பென்சிலால் எழுதும் கடிதங்கள் சில நாட்களில் எழுத்துக்கள் மறைந்து போவதுடன் வேறு எழுத்துக்களாக மாறி விபரீதமான பொருள் தரவும் ஏதுவாகும்.

4. ஒரு நல்ல கடிதத்துக்கு வேண்டிய உறுப்புகள் ஆறினையும் ஒரு போதும் மறந்து விடலாகாது.

5. பொருள் விளங்காத கடுஞ்சொற்கள், இருபொருள் படும் சொற்கள், வழக்காறு அற்ற மரபுத் தொடர்கள் முதலியன இல்லாமல் இலக்கணப் பிழையின்றி எழுதுதல் வேண்டும். கையில் எப்போதும் அகராதியை வைத்திருக்க இயலாது என்பதைக் கடிதம் எழுதுவோர் கவனித்தல் வேண்டும்.

6. சொல்ல வேண்டிய செய்தியை மட்டும் சுருக்கமாக எழுத வேண்டும். சம்பந்தமற்ற விஷயங்களை இடையிடையே புகுத்தலாகாது.

7. தமக்கு வந்த கடிதத்துக்கு உடனுக்குடன் பதில் எழுதும் வழக்கம் சாலவும் சிறந்தது.

8. கடிதம் எழுதுவோருக்கும், பெறுவோருக்கும் உள்ள தொடர்புக்குத் தகுந்தபடி மரியாதைச் சொற்களால் தொடங்கி மரியாதைச் சொற்களால் முடிக்க வேண்டும்.

9. ஒருவர் கடிதம் எழுதும்போது அதை மற்றவர் பார்ப்பது மிகவும் அநாகரிகமான செயல் ஆகும். அது போலவே ஒருவருக்கு வந்த கடிதத்தையும் அவர் அனுமதியில்லாமல் பிரிக்கவோ படிக்கவோ கூடாது.

10. அந்தந்த இடங்களுக்குத் தகுந்த காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, பிறைக் கோடுகள் முதலிய நிறுத்தக் குறிகளை மறவாமல் அமைத்துக் கடிதம் எழுதுவது நலம்.

11. ஆட்சிநெறிக் கடிதங்களிலும், வியாபாரக் கடிதங்களிலும் ஒரு குறிப்பிட்ட முறை மாறுமாதலும், அதில் தன் குடும்ப விஷயங்கள், வறுமையின் நிலைமை முதலியவற்றைக் குறிப்பிடாமலும் எழுதவேண்டும்.

12. கடிதத்தின் உள்ளுறை ஒரே தொடர்ச்சியாய் இல்லாமல், பத்தி பிரித்து எழுதுதல் வேண்டும்.

13. மொட்டைக் கடிதங்கள் எழுதுவது முழு மோசத்தனமும், அநாகரிகமானதுமாகும். இத்துறையில் பழக்கமானவர்கள் எப்படியும் மக்களால் கண்டுபிடிக்கப்பட்டு எள்ளி நகையாடப்படுவர்.

14. எழுதிய கடிதத்தை ஒரு முறையேனும் திரும்பப் படித்துப் பிழைநீக்கி அனுப்புதல் வேண்டும். உதாரணமாகக் குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளவும் என்பதற்குப் பதிலாகக் கொல்லவும் என்றிருந்தால் எவ்வளவு விபரீதமான அர்த்தம் ஏற்படும் என்பதை யோசித்துப்

பாருங்கள். இப்படியே, 'வீடு வீடாய்ச் சென்று இரந்தாள்' (யாசித்தாள்) என்பதில் இறந்தாள் என்றும், 'அம்மியின் மேல் விழுந்து மருமகளின் தவலை போயிற்று' என்பதில் தலை போயிற்று என்றுமிருந்தால் எப்படி இருக்கும்?

15. சொல்லுக்குச் சொல இடம் விட்டு எழுதாமையினாலும் விபரீதமான அர்த்தங்கள் ஏற்படுவதற்கு இடமுண்டாகும். உதாரணமாக, தலைவிதி வசம் என்பதைத் தலைவி திவசம் என்றும், சுக்கு, மிளகு, திப்பிலி என்பதைச் சுக்குமி ளகுதிப்பிலி என்றும், வாரும் கல்விக்கிருகமே என்பதை வாரும் கல்விக்கிருகமே என்றும், எனக்கு மாசம் பத்து வரும் என்பதை எனக்கு மா சம்பத்து வரும் என்றும் சில சமயங்களில் எழுதிப் பொருள் மாறுபட்டு இடர்ப்படுவதுமுண்டு.

---

# கடிதம் எழுதுதல்

(தினமணியில் வெளிவந்தது: ரா. நா. அவர்கள் எழுதியது.)

---

கடிதம் எழுதுவது ஒரு கலை என்பார்கள். சம்பாஷணை செய்வதும் ஒரு கலை தான். ஆனால், கடிதம் எழுதுவது ஒரு கலை என்று நிரூபிப்பதற்காகக் கடிதத்தைக் கட்டுரையாக எழுதிவிடுகிறார்கள் சிலர்.

காரியமோ காரணமோ இல்லாமல் கடிதம் எழுதுவதனால் கடிதங்கள் சம்பிரதாயமாக எழுதப்படுகின்றன. "க்ஷேமம். க்ஷேமத்திற்குப் பதில் எழுதவும்." என்பதைப் படித்தால் யாருக்குத்தான் எரிச்சல் வராது? இந்த 'க்ஷேமம்' வடமொழி வார்த்தையல்லவா? ஆகையால், சுத்தத் தமிழர்கள், "நலம் விரும்புவதும் அஃதே." என்று எழுதுகிறார்கள். அதுவும் 'க்ஷேமத்தை'ப்போல் எரிச்சலைத்தான் உண்டாக்குகிறது.

கடிதத்தில் முதல் வரி க்ஷேமத்தைப்பற்றி எழுதியாகி விட்டதல்லவா? அடுத்த வரி என்ன எழுதுவது? "நீ உடம்பு ஒன்றுமில்லாமல் இருக்கிறாயா?" என்பது ஒரு கேள்வி. உடம்பு ஒன்றுமில்லாமல் இருப்பது என்றால் என்னவோ கடவுளுக்குத்தான் வெளிச்சம். "நீ உடல் கோளாறு இல்லாமல் சுகமாக இருக்கிறாயா?" என்பதற்குத் தான் "உடம்பு ஒன்றுமில்லாமலிருக்கிறாயா?" என்று கேட்கிறது.

உண்மையிலேயே இந்த க்ஷேம சமாசாரம் விசாரிப்பதை நாம் கைவிட வேண்டும். வெள்ளைக்காரர்கள் ஒருவரையொருவர் சந்தித்தவுடன் "சௌக்கியமா?" என்று கேட்டுக் கொண்டு போவதுமாதிரி அர்த்தமற்ற பழக்கம்.

என் நண்பருடைய சகோதரன் ஒருவரை, "உங்கள் தம்பி டில்லியில் சௌக்கியமா?" என்று கேட்டேன். "சௌக்கியமாகத்தான் இருக்கவேண்டும். வேறு அசுபமாக இருந்தால் தகவல் கிடைத்திருக்கும்." என்று பதில் கூறினார். அவரை ஏன் இந்த கேள்வி கேட்டோம் என்றாகி விட்டது எனக்கு. பல மாதங்களாக ஒரு நண்பரிடமிருந்து கடிதமே வரவில்லை. "ஏன் கடிதமே உங்களிடமிருந்து வரவில்லை?" என்று எழுதிக் கேட்டேன். "வீட்டிலே ஒருவர் மாற்றி ஒருவருக்கு நோய் ஏற்பட்டது. அவர்களுக்கு சிகிச்சை செய்து கொண்டிருந்தேன். இந்த நிலையில் உட்கார்ந்து கடிதம் எழுதும் மனப்பாங்கு இல்லை. மேலும் இங்குள்ள நிலைமையில் என மனதும், உள்ளமும் சோக குண்டங்களாக இருக்கையில் உங்களுக்கு அந்த சோக நிலுவையைக் காட்ட நான் விரும்பவில்லை." என பதில் எழுதினார். இந்த கடிதம் எழுதியதற்கு நான் வருந்தவில்லை. நண்பரின் மனோ நிலையை அறிந்து, அவருக்கு ஆறுதல் கூறவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

சிலர் தற்பெருமைக்காகக் கடிதம் எழுதுவார்கள். "எனக்கு உத்தியோக உயர்வு ஆனதைப் பத்திரிகைகளில் பார்த்திருப்பாய்." என்று ஒருவர் கடிதம் எழுதுவார். பத்திரிகை மூலம் இவர் க்ஷேம லாபங்களை அறிந்திருக்கக் கூடுமானால் இவர் எதற்குக் கடிதம் எழுதவேண்டும்?

என் நண்பர் ஒருவர் ஒரு சமயம் புதிய புத்தகம் ஒன்றைப் படித்துவிட்டு எனக்கு எழுதினர். அந்தக் கடிதம் உயர்ந்த விமர்சனத்திற்கு எடுத்துக் காட்டாயிருந்தது. அந்தப் புத்தகத்தைப் பற்றிப் பத்திரிகைக்கு விமர்சனம் எழுதியிருந்தால் கூட அந்தக் கட்டுரை அவ்வளவு அற்புதமாக அமைந்திராது. ஒரு இலக்கியத்தின் சிறப்பைத் தனது நண்பருக்கு எடுத்துக் காட்டவேண்டும் என்னும் ஆர்வம், அந்தக் கடிதம அவ்வளவு அருமையாக வாய்ப்பதற்கு சந்தர்ப்பமளித்தது. வ. வே. சு. ஐயர் தமது 'பால பாரதி'யில் "ராஜகோபாலன் கடிதங்கள்" என்னும் தலைப்பில் பல கடிதங்கள் வெளியிட்டார். அக்கடிதங்கள் நம் நாட்டுக் கலை, கலாசாரம், பண்பாடு முதலியன பற்றிய வர்ணனைகள். நண்பனுக்குக் கடிதம் எழுதும் முறையில் எழுதியதால் நேருக்கு நேரே பேசுவதுபோல் நடை அமைந்திருந்தது. அம்மாதிரி நடையில் அதிக கவர்ச்சி இருப்பது இயல்புதான்.

ஆங்கிலத்தில் செஸ்டர்பீல்டு பிரபு தன் மகனுக்கு எழுதிய கடிதங்கள், டாக்டர் ஜான்ஸன், செஸ்டர்பீல்டு பிரபுவுக்கு எழுதிய கடிதம் முதலியவை இலக்கியப் பொக்கிஷங்களாகக் கருதப்படுகின்றன. முந்திய கடிதங்களில் ஒரு தந்தை மகனுக்குக் கூறிய புத்திமதிகள் அடங்கியுள்ளன; அவை உலக இளைஞர்களெல்லாம் படித்துப் பட்டம் பெறத் தக்கவை. டாக்டர் ஜான்ஸன், செஸ்டர்பீல்டுக்கு எழுதிய கடிதம் மமதை பிடித்தவர்களுக்குச் சுதந்திர எழுத்தாளன் கொடுத்த சூடு.

அர்த்தமில்லாமல் கடிதமெழுதுவதை நிறுத்தி எழுத வேண்டிய அவசியம் ஏற்படும்போது மனதிலுள்ளதைத் தெளிவாக நேருக்கு நேராகப் பேசுவதுபோல் எழுதினல், கடிதங்கள் கலைக்கு எடுத்துக்காட்டாக இருக்கும்.

---

# கார்டு, கவர்களின்
## மேல் விலாசங்கள்

### முக்கியம்!

**தபால்** நிலையத்தில் உள்ளவர்கள் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான கடிதங்களைக் கவனிக்க வேண்டியவர்களாக உள்ளனர். அவற்றில் அநேக கடிதங்கள் உள்நாட்டிலும் வெளி தேசங்களுக்கும், பல மைல்கள் செல்ல வேண்டியிருக்கின்றன.

எனவே, உங்கள் கடிதப் போக்குவரவில் எவ்வித தாமதமும், பிழையும் இல்லாமலிருக்க வேண்டுமானால், கார்டு, கவர்களின் மேல் முழுமையானதும், தெளிவானதுமான விலாசங்களை எழுதிய பின்னரே அவற்றைத் தபால் பெட்டியில் நீங்கள் போடுதல் வேண்டும்.

# 1. உறவுக் கடிதங்கள்

குறிப்பு: பின்வரும் கடிதங்களில் பெரும்பாலும் விலாசதாரின் முகவரிகள் குறிப்பிடப்படவில்லை; எனினும், கடிதம் எழுதுவோர் கடிதத்தின் தலைப் பக்கத்து வலப்புறத்து மூலையில் தம் முகவரியையும், எழுதும் தேதியையும் குறிப்பிடுவது மட்டுமன்றி, கடிதத்தின் முடிவில் இடப்பக்கத்தில் விலாசதாரின் முகவரியையும் எழுதுவது அவசியம்.

## (அ) குடும்பக் கடிதங்கள்

### 1. மகிழ்ச்சி தெரிவித்தல்

(1) தீராத நோயிலிருந்து குணமான நண்பனுக்கு எழுதிய மகிழ்ச்சிக் கடிதம்.

61, பெரிய கடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி,
7-7-1948.

அன்புருவமான ஆறுமுகம்,

வாழ்க.

நேற்று உன் தந்தை எழுதிய கடிதம் கிடைத்தது. படித்துப் பார்த்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தேன். நீ முழுவதும் குணமடைந்தது கேட்டு இங்கு என் அப்பா, அம்மா முதலியோரும் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தார்கள். அந்தப் பொல்லாத நோயால் நீ செத்துப் பிழைத்தாய் என்றே கருதுகிறேன்.

உன் தந்தையிடமிருந்து வந்த கடிதத்தை நான் பிரிப்பதற்கு முன் என் மனம் என்ன செய்தி வந்துள்ளதோ என்று படபடத்துக் கொண்டுதான் இருந்தது. நல்ல வேளையாக நீ முழுநலம் அடைந்து

விட்டாய் என்று கேள்விப்பட்டு இன்பத்தால் துள்ளிக் குதித்தேன்; என் நண்பனின் ஆருயிரைத் தந்த ஆண்டவனை என் இரு கைகளும் என் உத்திரவில்லாமல் வணங்கின; வாய் துதித்தது.

இங்குள்ள நம் தோழர்கள் எல்லாம் உன்னைப்பற்றியே தினமும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். உன் உடல் நலம் கேள்விப்பட்டு அவர்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. உன் தந்தை எழுதிய கடிதத்தில் நீ பள்ளியிறுதி வகுப்புத் தேர்வுக்குச் செல்லமுடியாமல் போனதற்காக நீ மிகவும் வருத்தப் படுகிறாய் என்று அறிந்தேன். சுவரை வைத்துக் கொண்டுதானே சித்திரம் எழுத வேண்டும்? நீ உன் உடல் நலத்தைத்தான் முதலில் கவனிக்க வேண்டும். உன்னைப்போன்ற அறிவாளிகளுக்குப் பள்ளி யிறுதி வகுப்பு என்ன, எந்தத் தேர்வாக இருந்தாலும் சிறிது காலம் படித்தால் போதுமே!

ஆறுமுகம், கழிந்தவை கருதிக் கவலைப்பட வேண்டாம். இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்காக உன் உடல் நலனைச் சரியாகக் கவனித்துக்கொள். தேகத்தில் முன்போல வலுவுண்டானதும் உன் கல்விப் பயிற்சியைத் தொடங்கித் தேர்வில் வெற்றிமாலை சூடுவாயாக.

விரைவில் அங்கு வந்து உன்னைச் சந்திக்க விரும்பும்,

உன் அன்புள்ள,
த. கேசவன்.

## (2) தேர்வில் வெற்றி பெற்ற நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம்.

33, பெரிய தெரு,
திருவத்திபுரம்,
30-5-1950.

**அன்பே உருவமான தேவசிகாமணி,**
வாழ்க.

நேற்று 'தினமணி' இதழில் உன் புலவர் தேர்வு முடிவு வெளி யிட்டிருப்பதைப் பார்த்தேன். உன் பதிவு எண் முதல் வகுப்பில் இருக்கக் கண்டு எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேன் தெரியுமா? உன் னுடைய அறிவுக்கும், முயற்சிக்கும் நல்ல பலன் கிடைக்காமற் போகுமா? ஆங்கிலத்தில் B. A. பட்டம் பெற்றதுடன் தமிழிலும் புலவர் பட்டம் பெற்ற உன்னை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். நேரில் கண்டு புலவர் தேவசிகாமணி என்று உன்னை அழைக்க மிகவும் ஆர்வமாய் இருக்கிறேன். உன்னைப் போன்ற அறிஞர்களின் சேவை நம் நாட்டு முன்னேற்றத்துக்குப் பெரிதும் வேண்டப்படுவதாகும். நீ

மேலும் மேலும் உயர்ந்த பதவிகளும், பட்டங்களும் பெற்று, உடல் வளமும், நீண்ட ஆயுளும் உடையவனுகி வாழுமாறு ஆண்டவனை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
உன் இன்பத்தின் பங்காளி,
த. துரைசாமி.

(3) மேற்படி கடிதத்துக்குப் பதில்.

கோவிலூர்,
2-6-1950.

அன்பே உருவமான நண்ப,

நான் சென்ற திங்களில் நடந்த புலவர் தேர்வில் வெற்றி பெற்றதைக் குறித்து நீ பாராட்டி எழுதிய கடிதம் கிடைத்தது. என் முன்னேற்றத்தில் நீ காட்டும் ஊக்கமே நான் எடுத்த காரியங்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெறுவதற்குச் சாதனமாக இருக்கிறது.

நீ தெரிவித்தபடியே நாட்டு முன்னேற்றத்துக்கு என்னல் இயன்ற தொண்டுகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே எங்களூரில் ஒரு படிப்பகமும், சமூக சீர்திருத்தக் கழகமும் அமைத்து அவற்றில் நான் அமைச்சனுகப் பணியாற்றுவதை நீ அறிவாய். விரைவில் முதியோர் கல்விக் கழகம் ஒன்று ஏற்படுத்தப் போகிறேன்.

உன் தம்பி செல்வமணி எப்படி இருக்கிறன்? அவன் மழலை மொழி கேட்டுப் பல நாட்களாயினவே. உன் பெற்றோருக்கு என் வணக்கமும் நலமும் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

அன்புள்ள,
ஆ. தேவசிகாமணி.

(4) நண்பனுக்குக் குழந்தை பிறந்தது கேட்டு எழுதிய மகிழ்ச்சிக் கடிதம்.

"குருவிக் குடில்,"
16, ரத்தின முதலித் தெரு,
சென்னை-1,
20-9-1950.

அன்புள்ள நடராஜ,

வணக்கம்.

எங்கே கற்கண்டு? உனக்குத் தங்கச் சிலைபோல் ஒரு பெண் குழந்தை பிறந்தது கேட்டு நானும், என் குடும்பத்தினரும் பேரானந்தம் அடைந்தோம். மூத்த குழந்தை பெண்ணுகப் பிறப்பது மிகவும் நல்லது என்றே பெரியோர்கள் சொல்லுவார்கள்.

குழந்தை உங்கள் குடும்பத்தின் பெருமையை விளக்கும் குலமணியாக வாழ்க. அறிவும், திருவும், ஆயுளும் நிறைந்து பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
அன்புள்ள,
டா. அ. தேவராசன்.

**(5)** இராமலிங்க சுவாமிகள் தம் நண்பர் உயர்திரு. இரத்தின முதலியார் அவர்கட்கு எழுதிய கடிதம்.

கல்வியிற் கேள்வியிற் கடலினுஞ் சிறந்து
அன்பறி வொழுக்கம் அமைந்தென் னிரண்டு
கண்போன் றென்பாற் கனிவுகொண் டமர்ந்த
குணரத் தினநீ குடும்பத் துடனே
தீர்க்க ஆயுளும் செல்வப் பெருக்கும்
நோயற்ற வாழ்வும் நுவலரும் கீர்த்தியும்
சிவந்திகழ் ஞானமும் சித்தியும் பெற்று
வாழ்க வாழ்க மகிழ்ந்தருட் டுணையால்
வாழ்க வாழ்க வளம்பெற வாழ்க.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தாங்கள் வரவிடுத்த கடிதத்தைக் கண்ணுற்றுக் களித்தேன். அந்தக் கடிதத்தில் தாங்கள் குறித்தபடி இன்னுஞ்சில காலத்துக்குள் திருவருள் கூட்டுவிக்கும். இது உண்மை, சந்தேகிக்க வேண்டாம்.

தங்களுக்குப் புத்திரப் பேறு உண்டாயிற்றென்று கேள்விப்பட்டு அளவு கடந்த சந்தோஷத்தை அடைந்தேன். குழந்தையை நன்றாகப் பாராட்டி ... சகல விஷயத்திலுஞ் சாக்கிரதையாய் இருக்கவேண்டும். நான் சுமார் அறுபது தினத்துக்குள் அவ்விடம் வருகிறேன் அல்லது பத்து தினம் அதிகப்பட்டாலும் அவசியம் வருவேன். நமது அன்பராகிய மகா-ஈ-ஈ-ஸ்ரீ வேலு முதலியார்...தற்கு ஆனி மாதம் பிரயாணப்படுவதாக எழுதியிருக்கிறார்கள். அவர்கள் வந்தால் என் பிரயாணம் எல்லோருக்கும் வெளிப்படும். வெளிப்பட்டால் அநேகர் என்னுடன் கூடிவர பிரயாணப்படுவார்கள். ஆரவாரப் பிரயாணமாக முடியும். ஆதலில் தாங்களும் அவர்களுக்கு இது விஷயத்தில் தெரிவிக்க வேண்டும். நான் மாத்திரம் ரகசியமாக வரும்படி நிச்சயித்திருக்கிறேன். அவசியம் வருவேன். தங்கள் மாமனர் மகா-ஈ-ஈ-ஸ்ரீ திருவேங்கட முதலியாரவர்களுக்கு ... அவர்கள் எழுதின கடிதங்களுக்குப் பதில் நான் அவ்விடம் வந்த பின்பு தெரிவிப்பதாகச் சொல்ல

வேண்டும். நமது நாயக்கரவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்க வேண்டும். வாழ்க.

இங்ஙனம்,

வைகாசி அஉ சி. இராமலிங்கம்.

## 2. நன்றி கூறுதல்

(1) பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி கூறும் கடிதம்.

"பாரதி இல்லம்,"
6, பவழக்காரத் தெரு,
சென்னை-1,
6-5-1950.

அன்புள்ள மாமா,
வணக்கம்.

என் பிறந்த தினத்தை முன்னிட்டுத் தாங்கள் அன்புடன் அனுப்பிய அழகிய பரிசு கிடைக்கப் பெற்றேன். அதுவும் நான் நினைத்தது போலவே தாங்கள் கைக்கெடியாரம் அனுப்பியமைக்கு நான் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். இத்தனை நாட்களாக நேரந் தெரியாததால் சில கடமைகளை நான் குறிப்பிட்ட காலத்தில் செய்யாமல் திண்டாடிப் போனேன். அடடா! தாங்கள் அனுப்பி இருக்கும் அன்புப் பரிசு இனிமேல் என்னைக் காலந்தவறுதவனாக ஆக்கிவிடும். இன்றையிலிருந்து என் தினசரி வேலைகளுக்கு ஒரு திட்டம் போட்டு அந்தந்தக் காலத்தில் அந்தந்த வேலையைச் சரியாகச் செய்து முடிப்பேன். தாங்கள் செய்த இந்தப் பேருதவியை நான் என்றைக்கும் மறவேன்.

மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாமிக்கும், குழந்தை புகழேந்திக்கும் என் அன்பைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
க. மணிவண்ணன்.

(2) நன்னுள் ஒன்றில் வாழ்த்து அனுப்பிய நண்பர் ஒருவருக்கு (பல தொல்லைகளில் உழலும் அந்நண்பருக்கு) எழுதிய நன்றி யறிவிப்புக் கடிதம்.

"குருவிக் குடில்,"
32, முல்லா சாயிப் தெரு,
சென்னை-1,
29-10-1951.

அன்புடையீர்,

வணக்கம் கணக்கில.

தங்கள் கடிதம் கிடைத்தது. இந்நன்னுளில் பொன்னுரை உங்கள் வாழ்த்தையும், பொருளுதவியையும் எண்ணி மகிழ்கிறேன்.

இடையருத தெய்வ பக்தியும், விடா முயற்சியும், ஓயா உழைப்புமே ஆபரணமாகப் பூண்ட தங்களுக்கு எல்லாக் காரியங்களிலும் பூரண வெற்றி கிடைக்க வேண்டுமென இறைவனை மனம் மொழி மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

நீங்கள் கூறும் பல தொல்லைகள் எல்லாம் அந்த வெற்றி மாடியின் படிக்கட்டுகள். 'இடுக்கண் வருங்கால் நகுக; அதனை அடுத்தூர்வ(து) அஃது ஒப்பதுஇல்' (துன்பம் வருங்கால் சிரியுங்கள்; இன்பம் எங்கிருந்தாலும் உங்களையே தேடி ஓடிவந்து சேரும்) என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் எவ்வளவு சிறந்த நீதியைச் சுருக்கமாகவே கூறி விட்டார் பாருங்கள். எனவே வருந்தற்க. இந்நாளிலிருந்து தம் வருத்தங்கள் குறைய ஆரம்பிக்கும். உங்கள் புத்திர ரத்தினங்களுக்கும், புதல்வியருக்கும், குடும்பத்தினருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
உலகு.

## 3. அறிவுரை புகட்டுதல்

### (1) தாய் மகனுக்கு எழுதிய புத்திமதிக் கடிதம்.

மேலைநாடு,
...............

செல்வன் குமரேசனுக்கு,

பல நன்மையும், மேன்மேலும் பெருகுக.

நாங்கள் இங்கு க்ஷேமம். இதுபோல நீயும் க்ஷேமமாய் இருப்பாய் என்றே எண்ணுகிறேம். நீ நல்ல பையனுக நடந்து கொள்வாய் என்றே நினைக்கிறேன். இருந்தாலும் புத்திமதி கூறுவது தாயின்

கடன் என்பது நீ அறிவாய். ஆகையால், யாருடனும் சண்டைக்குப் போகாதே. எவருக்கும் உண்மை உள்ளவனாக இரு. உன்மீது பல குற்றங்கள் முன்பு வந்தன. அவைபோல் மீண்டும் வராவண்ணம் பார்த்துக்கொள். பொருள் காரணமாக பொய்கூறாதே. அயலார் சொத்துக்கு ஆசை வையாதே. எவரிடத்தும் இன்சொல்லுடன் பேசு. வன்சொல் வழங்காதே. எது வேண்டும் என்று நினைக்கிறாயோ அதை உன் மாமாவிடம் கேள். வாங்கிக் கொடுக்கச் சித்தமாய் இருக்கிறார். நம் நிலைமையை நன்கு அறிந்து பெரியப்பா - விஜயவாணர் - பெயரையும் முன்கொண்டு வரவேண்டும் என்ற இரு இலட்சியங்களுக்காக நல்லமுறையில் படித்து நல்லவன் என்ற பெயரை எடுக்கவேண்டும் என்பதே என் விருப்பம். மற்ற எதுவும் நான் உனக்கு கூறத் தயாராக இல்லை.

உன் அன்புள்ள,
கிருஷ்ணவேணி.

(2) தந்தை கல்லூரியில் படிக்கும் மகளுக்கு எழுதிய அறிவுரைக் கடிதம்.

10, வடக்குத் தெரு,
கடலூர்,
20-3-1949.

அன்புள்ள தவமணி,

உன் கடிதம் கிடைத்தது. நீ கல்லூரிப் போட்டியில் பரிசுகளும் பதக்கங்களும் பெற்றாய் என்று கேட்ட உன் தாயும் நானும் நீ பிறந்த போது அடைந்த மகிழ்ச்சியை விடப் பெருமகிழ்ச்சி அடைந்தோம்.

உன் படிப்புக்குப் பின் நீ என்ன செய்வதாக விரும்புகிறாய் என்பதை எனக்குத் தெரிவி. இக்காலத்துப் படித்த பெண்களில் சிலரைப் போல் இல்லாமல் நீ நம் தாய்நாட்டு நாகரிகத்தில் தலை சிறந்து விளங்குவாய் என்று நினைக்கிறேன். உனக்குத் திருமணமாகி விட்டால் குடும்பப் பொறுப்பு ஏற்பவளாவாய். குடும்பத்தில் அன்பு, இன்சொல், தன்னலமின்மை என்னும் குணங்களையே நீ சிறந்த ஆபரணமாகக் கொள்ள வேண்டும். சமையல் செய்தல், கோலம் போடுதல் போன்ற தொழில்களில் நீ திறமை பெற்று விளங்க வேண்டும். ஏழைகளிடமும், வேலைக்காரர்களிடமும் அன்பாய் இரு. அவர்களுக்கு உன்னால் இயன்ற உதவிகளைச் செய்.

உன் அருங்குணங்களைக் காண்போர் உன்னைக் 'குடும்ப விளக்கு' என்று புகழுமாறு நடந்துகொள்ள வேண்டும். அடிக்கடி கடிதம் எழுது.

உன் அன்புள்ள அப்பா,
க. அப்பர்சாமி.

**(3) திருமணம் செய்து கொள்ளப்போகும் ஓர் இளைஞனைப் பாராட்டி நண்பன் ஒருவன் எழுதும் அறிவுரைக் கடிதம்.**

14, தம்புச் செட்டித் தெரு,
சென்னை-1,
3-1-1951.

அன்புமிக்க அரசு,

இன்று காலையில் நான் யார் முகத்தில் விழித்தேனோ அவர் மிகவும் நல்லவராகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால், இன்று தபால்காரன் உன் கடிதத்தை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நெடுநாட்களாக எதிர் பார்த்த உன் திருமணச் செய்தியைக் கேட்க நான் எப்படி மகிழாமல் இருக்க முடியும்?

அறிவிலும் அழகிலும் உனக்குப் பொருத்தமான பெண்ணையே தேர்ந்தெடுத்த உன்னைப் பாராட்டுகின்றேன். பெண் பார்க்கச் செல்லுமிடம் மாடுபிடிக்கச் செல்லும் சந்தையன்று. பிற்கால வாழ்க்கையில் வாழ்விலும் தாழ்விலும் மனம் ஒன்றுபட்டு வாழக்கூடியவரா என்று ஒருவரை ஒருவர் ஆராய்ந்து அறிந்து செய்துகொள்ளும் திருமணந்தான் நல்ல திருமணமாகும். அத்தகைய ஆராய்ச்சியில் உனக்குத்தான் முதற்பரிசு கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

நண்பன் என்னும் முறையில் நான் கூறும் சில அறிவுரைகளை நீ வரவேற்பாய் அல்லவா? குடும்ப வாழ்க்கை ஏற்கும் உன் பொறுப்பு இனி மகத்தானது. அன்பு, தியாகம், பிழை பொறுத்தல், முதலிய அருங்குணங்கள் ஏற்கனவே உன்னிடம் இருப்பினும் திருமணத்துக்கு முன் அவை அரும்புகள். அந்த அரும்புகள் குடும்ப வாழ்க்கையில் மலர்ந்து மணம் வீசுமாறு செய்தல் வேண்டும். எந்தக் காலத்திலும் உன் கடமையை மறக்கக்கூடாது. செலவு செய்வதிலும் இனிமேல் நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆடம்பரத்தை அறவே வெறுத்து நீக்கவேண்டும். உன்னிடத்தில் உள்ள சில வீண் செலவுகளை நீ இனி குறைத்துக் கொள்ளத்தான் வேண்டும். பொடி போடுவதையும், புகை பிடிப்பதையும் விட்டுவிட்டால் மனிதன் வாழவே முடியாதா? உன் இன்பத் திருமணத்தின் நினைவாகவாவது இவற்றை நீ விட்டுவிடுவாய் என்று நம்புகிறேன்.

திருமணக் கோலத்தில் உன்னையும், உன் அருமை துணைவியையும் காண விரும்புகிறேன். அந்த நல்ல நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். உன் திருமணக் கொண்டாட்டத்தில் எனக்கு அழைப்பு அனுப்ப மறந்து விடமாட்டாய் அல்லவா?

உன் அன்புள்ள,
த. தூ. திருநாவுக்கரசு.

(4) தவறான வழிகளில் செல்லும் தன் நண்பனைக் கண்டித்து எழுதிய கடிதம்.

43, தேவர் தெரு,
வில்லிவாக்கம்,
5-5-1951.

அன்புள்ள நண்ப,

கடமையை மறந்த உன்னுடன் நான் இனி பேசவும் கூடாது; பழகவும் கூடாது என்று நினைத்தேன். நண்பன் என்ற முறையில் கடைசியாக இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன். பல தடவைகளில் உன்னிடம் நேரில் பேசியதைத்தான் இப்போதும் எழுதுகிறேன். என் மேல் கோபம் கொள்ளாமல் இனியேனும் நல்ல வழிக்குத் திரும்புவாய் என்று நினைக்கிறேன்.

உன் தாய் தந்தையர் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி ஏங்கித் தவிக்கும் வேளையில் நீ கண்டதே காட்சி, கொண்டதே கோலமாகத் திரிகிறாய். மாதா வயிறு எரிய மகேசுவர பூஜை செய்யலாமா? தாய் தந்தையரைத் தவிக்கவைக்கும் நீ தேசிய வாதியைப் போல் பாசாங்கு செய்கிறாய். உன்னால் தேசியம் என்ற சொல்லே களங்கப்பட்டு விடும் போலிருக்கிறதே! உன்னிடம் சிறிதேனும் மனிதத் தன்மை இருக்கிறதா என்று யோசித்துப்பார்.

போனது போகட்டும். ஓடிச் சென்று உன் பெற்றோரிடம் மன்னிப்புக் கேள். அவர்களே உன் கண் கண்ட தெய்வங்கள். அவர்கள் பாதங்களை உன் கண்ணீரால் நனைத்து கீழே விழுந்து வணங்கு. அவர்கள் நல்ல எண்ணத்தினால் நீ நன்மைகள் பலவும் அடையலாம். இது திண்ணம்.

இங்ஙனம்,
உன் நண்பன்,
த. பாலமுருகன்.

(5) தற்பெருமை கொண்ட ஒரு சிநேகிதியைக் கண்டித்துக் கடிதம் எழுதுதல்.

22, சரோஜினி தெரு,
மாம்பலம்,
சென்னை-17,
5-10-1951.

அன்புள்ள இந்திரா,

வரவர உன் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. உன்னை நீயே பெரியவள் என்று கர்வம் கொள்கிறாய். நாம் இந்த உலகத்தில் கற்றது கைம்மண் அளவுதான். கல்லாதது உலகளவு இருக்கிறது. வீண் பெருமை உன் கேட்டுக்குத் தான் அச்சாரமாகும்.

நீ மட்டுமே சங்கீதத்தில் தலைசிறந்தவள் என்று நினைத்து விட்டாய். மற்ற சகோதரிகள் பாடுவதை, "கழுதைகள் கத்துகின்றன" என்று நீ கேலி செய்கிறாய். எல்லோரிடமும் ஏதேனும் குறை இருக்கக்கூடும். ஆனால் அவர்களிடத்தில் நல்ல தன்மைகளைத்தான் நாம் பாராட்ட வேண்டும். அழகிலும் நீதான் உயர்ந்தவள் என்று தற்பெருமை கொள்கிறாய்.

வேண்டாம். உனக்கு நான் மீண்டும் மீண்டும் கூறுகிறேன். மற்றவர்களையும் உன்னைப் போலவே மதித்து மரியாதையுடன் பழகு. அவர்கள் கருத்து வேறுபாடுகளுக்கும் காது கொடுத்துக் கேள். நீ பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதம் செய்யாதே.

உன் நன்மைக்காகவே இவ்வளவும் எழுதினேன். இன்றையி லிருந்து நீ புதிய இந்திராவாக மாறி எங்களை மகிழ்விப்பாய் என்று நினைக்கிறேன்.

உன் அன்புக்குரிய,

க. நா. அழகுஜடி.

**(6) ஹாஸ்லித் (HAZLITT) என்னும் ஆங்கில அறிஞர் தன் மகனுக்கு எழுதிய கடிதம்.**

**அன்புள்ள மகனுக்கு,**

நீ இப்பொழுது உன்னைப் போன்றவர்களும், உன்னைவிட வயது முதிர்ந்தவர்களும், வலியோருமாகிய சிறுவர்களுடன் சேர்ந்திருக்கிறாய். அவர்கள் உன் விருப்பத்தின்படி உன்னுடன் குதூகலமாய் இருப்பதுடன் வேறு காரியங்களையும் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தச் செயலானது உன் எண்ணத்துக்கு முரண்பட்ட அநீதியாகத் தோன்றுகிறது. எனினும் நீ கற்று உணரவேண்டிய முதல் பாடம் ஒன்று இருக்கிறது. அதுதான் இந்த உலகத்தில் உன்னைத் தவிர வேறுமக்களும் வாழ்கிறார்கள் என்பதாகும்.

நீ படிக்கும் பள்ளிக்கூடத்தில் பல பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பமும் வேலையும் - எவையாயினும் சரி - உன்னுடையவை உனக்குப் பயனளிப்பதைப் போலவே அவர்களுக்குப் பயன்படுவனவாக இருக்கின்றன. இதனால் தகுந்த சமயத்தில் நீயும் அவர்களுக்காக விட்டுக்கொடுக்க வேண்டியவனாக உள்ளாய். நீ குழந்தையைப் போலச் சுயநலம் உடையவனாக இருப்பின் எல்லோரும் உன்னை எள்ளி நகையாடும் நிலையை அடைவாய். உண்மையான சமத்துவமே சிறந்த ஒழுக்கமாகும்; உயர்ந்த ஞானம் ஆகும். நீயும் மற்றவர்களில் ஒருவன் என்பதை எப்போதும் நினைக்க வேண்டும். அப்போதுதான் சமூகத்தில் நீ உன் நிலைமையிலிருந்து தவறாமல் இருப்பாய். நீ உன் வீட்டில் வேண்டுமானால் உன் இஷ்டம்போல் நடந்து கொள்ளலாம். ஆனால் உலகத்தாருடன் ஈடுபடும்போது

ஒவ்வொரு துறையிலும் உன்னுடன் போட்டியிடுவோர் பலர் இருக்கக் காண்பாய். நீ லட்சக்கணக்கான மக்களை அதிகாரம் செய்யவோ அல்லது அழிக்கவோ வல்ல ராஜகுமாரனாகப் பிறந்து விடவில்லை. நீயும் அவர்களுடைய வினைப்பயனைப் பங்கிட்டுக்கொண்டு அவர்களோடு வேறுபாடு நீக்கி அமைதியாக வாழவேண்டும். இதனை நீ ஏற்கனவே உன் பள்ளிவாழ்வில் உணர்ந்திருப்பாய். ஆகையால் நீ விரைவில் உன் நிலைமையை உணர்ந்து அதற்குத் தகுந்தபடி உன்னைச் சரிப்படுத்திக் கொள்ளுமாறு விரும்புகின்றேன்.

உன் அன்புள்ள தந்தை,
*ஹாஸ்லித்.*

## 4. ஆறுதல் கூறுதல்

### (1) தேர்தலில் தேருதவன் தன் நண்பனுக்கு எழுதும் கடிதம்.

பெங்களூர்,
7-5-1949.

**அன்பு நிறைந்த செல்வமணி,**

இன்று காலை வந்த ஹிந்து பத்திரிகையில் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை முடிவுகள் வெளியிட்டிருக்கக் கண்டேன். நான் முன்னரே எதிர்பார்த்தபடி என் எண் அதில் காணப்படவில்லை. தேர்தலில் வெற்றி பெருமைக்காக நான் பெரிதும் கவலைப்படுகிறேன். தற்சமயம் ஏதேனும் வெளியூருக்குச் சென்று ஒரு வாரம் தங்கி இருந்தால் மனம் ஆறுதலாக இருக்கும்.

முன்பொருதடவை நீ உங்களூர் திருவிழாவைக்காண என்னை அழைத்ததாக நினைவு. அந்த அழைப்பை அப்போது ஏற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கு மன்னிக்கவும். வரும் திங்கட்கிழமை இரவு உங்களூருக்குப் புறப்படலாம் என்று நினைக்கிறேன். உன்னுடன் சிலநாள் தங்கி இருந்தால்தான் என் கவலையெல்லாம் ஒழியும் என்று நினைக்கிறேன். தேர்வில் தோல்வியுற்றதிலிருந்து என்னல் பெங்களூரில் இருக்க முடியவில்லை. உன் அன்பான பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேன்.

**உண்மை அன்புள்ள நண்பன்,**
ப. உலகவூழியன்.

(2) மேற்படி கடிதத்துக்குப் பதில்.

கோவை,
9-5-1949.

**பேரன்புள்ள நண்ப,**

வாழ்க.

உன் 7-5-1949 கடிதம் வந்தது. உன் தேர்வில் வெற்றி பெருமைக்காக நீ வருந்துவது தவறு. தேர்வின்போது உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட துன்பங்கள் எனக்குத் தெரியும். உங்களுக்கு ஆதரவாக இருந்த உன் அருமையண்ணன் இறந்த மறுவாரத்தில்தானே உனக்குத் தேர்வும் வந்துவிட்டது. அவ்வளவு வருத்தத்தில் நீ எப்படித் தான் படிக்க முடியும்? மேலும் பரீட்சையில் தோல்வியும், வெற்றியும் இயற்கையான நிகழ்ச்சிகள். அதற்காக வருந்தலாமா? சிறிது முயன்று படித்தால் வெற்றி தானகவே உன்னை வந்து சேரும். கவலே வேண்டாம்.

நிற்க, நீ எங்கள் ஊருக்கு வர விரும்புவதைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்த வாரம் கிரிக்கெட் பந்தயம் ஒன்றும், பொருட்காட்சி விழாவும் எங்கள் ஊரில் நடக்கப் போகின்றன. அவற்றையும் நீ பார்க்கலாம். நான் செவ்வாய் காலே 6 மணிக்கே புகை வண்டி நிலேயத்தில் உனக்காக வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருப்பேன். வருக. வருக. தவருது வருக.

இங்ஙனம்,
**உன் அன்புள்ள நண்பன்,**
வ. செல்வமணி.

## 5. குறிப்பிட்ட ஓர் பொருள் பற்றியவை

(1) கல்வி வளர்ச்சிபற்றி அண்ணன் தம்பிக்கு எழுதிய கடிதம்.

104, கிழக்கு ரத வீதி,
தஞ்சை,
6-4-1950.

**அன்புள்ள தம்பி,**

உன் கல்வி வளர்ச்சி அறிக்கை வரப்பெற்றேன். அதில் குறிப்பிட்டபடி தமிழில் உன் அம்சங்கள் குறைவாக இருப்பதுபற்றி அப்பாவும், நானும் மிகவும் வருத்தப்பட்டோம். தாய்மொழிக்குச் சிறப்பு மிறைந்த இக்காலத்தில் நீ அதை புறக்கணிக்காமல் நன்கு படித்து முன்னேற வேண்டாமா?

அப்பாடம் உனக்குக் கடினமாய் இருப்பின் உங்கள் பள்ளித் தமிழாசிரியர் யாரிடமாவது தனியாகப் படித்து அடுத்த தேர்வில் அதிக அச்சங்கள் வாங்க முயற்சி செய். அவருக்கு வேண்டிய ஊதியம் கொடுத்து விடலாம். பணத்தைப் பற்றிக் கவலை வேண்டாம். நீ தோல்வியடைந்தால், பணம் மட்டுமன்று; ஒரு வருஷ காலமும் வீணாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னும் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த இளம்பருவத்திலேயே நீ நற்குணங்களும், நல்ல பழக்கங்களும் உடையவனாக இருப்பது நல்லது. இளமைப் பருவமே கல்விக்கு ஏற்ற பருவம் என்பதை மறந்துவிடக் கூடாது. விடியற்காலையில் எழுந்திருப்பது மிகவும் நல்ல பழக்கமாகும். ஆசிரியருக்கும், பெற்றோருக்கும் அடங்கி நடக்க வேண்டும். நல்லவர்களோடு சிநேகம் செய். "கூழாயினும் குளித்துக் குடி", "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்னும் பழமொழிகள் உனக்குத் தெரியுமல்லவா? நீ எப்போதும் சுத்தமாய் இருக்கப் பழகிக் கொள். எப்போதும் உயர்ந்த எண்ணங்களையே நினைக்க வேண்டும். அற்பர் சிநேகத்தை அணுவளவும் விரும்பலாகாது. எப்போதும் பொறுமையாய் இரு. "பொறுத்தவர் பூமியாள்வார்" அல்லவா? தம்பி, இந்தப் புத்திமதிகளைத் தட்டாமல் நீ நடப்பாயாயின் உன்னை **'நல்ல மாணவன்'** என்று எல்லோரும் போற்றுவார்கள்.

நான் வியாபாரத்தின் பொருட்டு இன்னும் ஒரு மாதத்தில் அங்கு வரலாம் என்றிருக்கிறேன். உனக்கு வேண்டிய கதைப் புத்தகங்களும், ஒரு பேனாவும் நேரில் வந்து தருவேன்.

அடிக்கடி உன் நலத்தை அறிய விரும்பும்,

உன் அன்புள்ள அண்ணன்,
அம்பலவாணன்.

**(2) சாலை விதிகளைப் பற்றிச் சென்னையில் உள்ள தம்பிக்கு எழுதிய கடிதம்.**

புலவனூர்,
31-10-1951.

**அன்புள்ள தம்பி,**

வாழ்க.

இங்கிருந்து நீ சென்னைக்குச் சென்று இப்போது பதினைந்து தினங்கள் ஆவதால், நகர வாழ்க்கைக்கு அநேகமாய் உன்னைப் பழக்கிக் கொண்டிருப்பாய் என நினைக்கிறேன். நகரங்களில் உள்ள பொதுச் சாலைகளில் ஜன நடமாட்டமும், பலவித வண்டிகளும் அதிகம்; எனவே, பள்ளி செல்லும்போதும், பள்ளியிலிருந்து வீடு திரும்பும்

**ஆசையும், பற்றும் மயக்கத்தை உண்டாக்கி, வேலையைக் கெடுக்கும்.**

போதும், இன்னும் சாலையில் செல்லும்போதெல்லாம் நீ சாலை விதிகளை நன்கறிந்து, அவற்றைப் பின்பற்றி நடப்பது வெகு முக்கியம். ஆகையால், நகரத்தில் வாழவேண்டிய முறைகளில் முதன்மையான தான சாலை விதிகளை அனுசரித்து நடத்தலைப் பற்றி இக்கடிதத்தில் நான் சில கூற விரும்புகிறேன்.

சாலை விதிகளில் நீ கவனிக்க வேண்டிய விஷயங்கள்:—

1. நீ நடக்கும்போது வண்டிகள் ஓடும் மார்க்கமாக நடக்காமல் எதிரிடையாக நடத்தல் நல்லது.

2. பாதைகளைக் குறுக்கே கடக்கும்போது அனுசரிக்க வேண்டியவை: (1) நில். (2) இரு பக்கமும் பார். (3) கவனி. (4) வலது பக்கம் பார். (5) பாதையின் மத்திக்குச் செல். (6) இடது பக்கம் பார். (7) நடைபாதைக்குச் செல்.

3. குறுக்குப் புறமாக இரண்டு பாதைகள் சந்திக்கும் இடங்களில் மூலைப்பக்கமாக கடந்து செல்லக் கூடாது.

4. சாதாரண வண்டிகள் அல்லது மோட்டார் வண்டிகள் நிற்கும் இடங்களில், மறைவிடமாக அல்லது வண்டிகளுக்குப் பின்னல் நிற்கவும் கூடாது, நடக்கவும் கூடாது.

5. பாதைகளில் நிற்கக் கூடாது.

6. வண்டிகளில் ஏறும்போதும், இறங்கும்போதும் வெகு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

7. வண்டிகள் தங்கும் இடங்களிலேதான் ஏறவும், இறங்கவும் வேண்டும்.

8. பாதைகளில் போலீஸ் சேவகர் கையாலாவது, பச்சை, சிவப்பு நிற விளக்குகளின் மூலமாவது சைகை காண்பித்தால், உடனே அக்கட்டளைக்கு உட்பட வேண்டும். இக்கட்டளைகள் வண்டி ஓட்டுகிறவர்கள் மட்டும் அல்ல, நடந்து போகும் மக்களும் கவனிப்பதற்கு உரியவை.

9. பாதைகளில் வண்டிகளின் பின்னல் திருட்டுத்தனமாகவாவது, தெரிந்தாவது தொத்திச் செல்வது கூடாது.

10. நடைபாதை அல்லது பாதைகளில் வாழைப் பழத் தோல், ஆரஞ்சுப் பழத் தோல் அல்லது வழுக்கக் கூடிய மற்ற வஸ்துக்களை எறிதல், சளி சிந்துதல் அல்லது துப்புதல், புகையிலையும், வெற்றிலையும் மென்று பாதைகளில் துப்புதல் முதலியவைகள் பாதையில் நடப்பவர்களுக்கு ஆபத்து விளைவிக்கும். கண்ணாடித் துண்டுகள், ஆணிகள், பெரிய கற்கள் முதலியன பாதையில் கிடந்தால் அப்புறப்படுத்த வேண்டும்.

11. குடைகளை உபயோகித்தல்: நடக்கும்போதோ அல்லது வண்டிகளில் ஏறும்போதோ குடைகளைக் குறுக்கே பிடித்துக்கொள்ளக் கூடாது. ஏனெனில் அப்படிச் செய்வது நமக்கும், பிறருக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடியது. தோளுக்கு மேல் பிடித்துச் செல்வதும் ஆபத்தானதே. கைப்பிரம்பைப் போல் பிடித்துச் செல்ல வேண்டும்.

மேற்கூறிய சாலை விதிகளைக் கவனித்து நடப்பாயாயின், நீ தினசரி கேள்விப்படும் பலவித ஆபத்துகளினின்றும் தப்பலாம்.

மாமாவிற்கு என் வணக்கத்தைத் தெரிவி.

உன் அன்புள்ள,
பாலன்.

## (3) அமெரிக்க உணவுச்சாலைகளைப்பற்றிச் சகோதரிக்கு எழுதிய கடிதம்.

கொலம்பியா பல்கலைக் கழகம்,
நியூயார்க், 27 N. Y.,
நவம்பர் 7, 1949.

**அன்பு நிறைந்த சகோதரியார்க்கு,**

வணக்கம் பல.

தங்கள் கடிதம் கண்டு அளவிலா இன்பமடைந்தேன். தாங்கள் குற்றாலம் சென்று, ஓய்வு எடுத்து, உடல் முற்றும் நலம் பெற்றுச் சென்னை திரும்பிய நற்செய்தி பெருமகிழ்ச்சியை அளித்தது.

இங்கு மக்களின் சுறுசுறுப்பும், உழைப்பும், அளவிலா இன்ப நிகழ்ச்சிகளும் வெளிநாட்டார்க்கு ஒரு பெரும் படிப்பு. அமெரிக்க மக்களின் சரித்திரத்தில் அவர்கள் வெறுங்கையோடு சுதந்திர வாழ்க்கையை விரும்பித் தாய் நாட்டைத் துறந்து கப்பலேறி வந்து காடு மலையாக இருந்த இப்பூமியை நாடினார்கள் என்று அறிகிறோம். காட்டை வெட்டுவதும், நிலத்தை உழுவதும், வீட்டைக் கட்டுவதும் ஆகிய தொழிலைச் செய்த இவர்களின் முன்னோர்கள் எந்த வழியில் இந்த நாட்டைச் சீர்திருத்தினார்கள் பாருங்கள். 150 வருடங்களில் — ஒன்றுமில்லாத ஒரு தேசம் — ஒரு தலைமைப் பதவியை இன்று அடைந்து பொருளாதார நிலையில் தங்களை ஒப்பாரும், மிக்காரும் இல்லையென நிலைநாட்டி வாழ்கிறார்கள். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்ற தமிழரின் வாக்கின் உண்மையைக் காணவேண்டில் அமெரிக்காவில் காணலாம். படிப்பு, கைத்தொழில், விவசாயம், மக்கள் பொதுவாழ்க்கை, மனப்பான்மை, பிறர்பால் அன்பு, இன்சொல் எல்லாம் இங்குத் தாண்டவமாடுகின்றன. 'எதையும் தாங்கள் அடைய முடியும்; செயற்கரிய செய்கையைச் செய்யவல்லார் அமெரிக்கரே' என்ற எண்ணம் அவர்களிடம் காணலாம். அது ஒரு குற்றமாக எனக்குத் தோன்றவில்லை.

அவர்கள் உணவு: சிறந்த உணவை நியூயார்க்கில் காணலாம். பால், பழம், இறைச்சி, கேக் முதலியவை கணக்கில்லாதிருக்கும். எங்குப் பார்த்தாலும் மதுபானக் கடைகள் இரவும், பகலும் தேநீர்க்கடைபோல் திறந்து வைக்கப்பட்டிருக்கும். உணவுச்சாலைக்குச் சென்றதும் நாம் ஒரு தட்டை எடுத்துக்கொள்ள வேண்டும். தேக்கரண்டி, முள்கரண்டி, முதலியவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு ஒருவர் பின் ஒருவராய் வரிசையாக நிற்க வேண்டும். உணவுப் பொருள்களை நாமாக எடுத்துக் கொண்டுபோய் கடைசியில் ஓர் இடத்தில் நின்றால் அங்கே பில் கொடுப் பார்கள். அதையும் எடுத்துக் கொண்டு மேஜையை அடுத்து அமர்ந்து நண்பர்களோடு ஆண், பெண் வேற்றுமையின்றி முன்பின் தெரியாத வர்களிடமும் "அலோ" என்று ஆரம்பித்து எல்லாப் பேச்சுகளையும் பேசி, உணவை உண்டு தட்டுகளையும் கரண்டிகளையும் எடுத்து மற்றொரு இடத்தில் வைத்துவிட்டு, நண்பர்களோடு வெளியில் செல்லும்போது அவரவர்கள் தொகையைச் செலுத்தி விடுவார்கள். இப்படிப்பட்ட உணவுச்சாலைகள் கல்லூரிகளிலும், தெருக்களிலும் இருக்கும்.

'ஆடோமேடிக்' (Automatic) என்று மற்றொரு வகையான உணவுச் சாலையும் உண்டு. அங்கு எல்லாம் யந்திரங்கள். காபி வேண்டுமென்றால் 5 சென்ட்ஸ் பணத்தைக் குறிப்பிட்ட யந்திரத்தில் போட்டுக் குழாயை அழுத்தவேண்டும். காசைப் போட்ட பிறகே யந்திரம் வேலை செய்யும். இப்படியே நமக்கு வேண்டிய ரொட்டி, வெண்ணெய், சாதம், மோர் எது எது வேண்டுமோ அந்தந்த யந்திரங்களில் வெளியே அவை எழு தப்பட்டிருக்கும். குறித்த தொகையைப் போட்டு வேண்டியதைப் பெற்று, இடந்தேடி, விரும்பும் தோழர்களோடு உல்லாசமாக உண்ண லாம்; மௌனமாகவும் உண்ணலாம்; வேகமாகவும் உண்ணலாம்.

இன்னும் பெரிய மதிப்பிடத்தக்க உணவுச்சாலைகளும் உண்டு. நாம் அங்குச் சென்றதும் உணவுச்சாலைப் பணியாளர் நம்மை இன் சொல் கூறி, புன்னகை புரிந்து, நம் மேல் சட்டையைக் கழற்றி அமர வைத்து அன்றைய உணவுப் பொருள்களின் பெயர் அச்சடித்திருக்கும் அட்டையை நம் கையில் கொடுத்து வாய்ச் சொல்லை எதிர்பார்த்திருப் பார்கள். இப்படி ஆண்களும் உண்டு; பெண்களும் உண்டு. வரும் போது அவர்களுக்கு நாம் சாப்பிட்ட தொகையில் 10% இனம் கொடுக்க வேண்டும்.

இவைகளேயன்றி இந்திய உணவின்மீதே பித்தம் பிடித்தலையும் என் போன்றவர்களுக்கும் இந்திய உணவுச்சாலைகள் இருக்கின்றன. இவைகளில் 1½ டாலரிலிருந்து 3 டாலர் வரைக்கும் உணவுகள் கிடைக் கும். சாதம், பருப்பு, காய்கறிகள், இறைச்சி, ஐஸ்கிரீம், காபி முதலி யவை யெல்லாம் இங்கே கிடைக்கும். இந்திய உணவுச்சாலையினர் நம்மை அன்புடன் வரவேற்று முகமலர்ச்சியுடன் அமுதளிப்பார்கள். **'சிலோன் இந்தியா'** என்னும் உணவுச்சாலையில் நடராஜரின் நடனம், தஞ்சாவூர்க்கோபுரம், இந்தியப் பெண்ணின் பரதநாட்டியம் முதலியன

சுவர்களில் அழகாக வர்ணச் சித்திரங்களால் காட்டப்பட்டிருக்கின்றன. மூன்று டாலர் ஒரு வேளைக்குச் செலவு செய்வது நம் ரூபாயில் நினைத்தால் 15 ரூபாய் ஒரு வேளை சாப்பாட்டிற்கா என்ற எண்ணம் வரும். இங்குள்ள ரொட்டி, ஐஸ்கிரீம், மோர் முதலியவற்றைப் பார்க்கும் போதெல்லாம்—உண்ணும்போதெல்லாம் இந்தியாவின் தரித்திரநிலை கண்முன் தோன்றும். நம் குடும்பங்களை நினைத்துக் கொள்வேன். ஒரு வேளைக்கு உண்ண உணவில்லாது உறங்கும் நம்மவர்களை நினைத்தால், உண்பது எப்படி? உண்டபின் இன்புற்றிருக்க எவ்வாறு இயலும்? நீங்கா அன்புடையீர், இக்கடிதம் முழுவதும் உணவுச்சாலை வர்ணனையாகவே முடிந்தது. மனிதனுக்கு இன்றியமையாதது உணவுதானே? இங்கே கனி வர்க்கங்கள் — நம் நாட்டுக் காய்கனிகள் நிரம்ப உண்டு. மொலாம் பழம், வெள்ளரிப் பழம், வாழைப் பழம், கத்தரிக்காய், வெண்டைக்காய், வெள்ளரிக்காய், கோஸ், மொச்சைக்காய் எல்லாம் உண்டு. இவை தென் அமெரிக்காவிலும், இன்னும் தெற்கேயும் விளைகின்றன. ஆகாய விமானங்களில் தினந்தோறும் இவை கொண்டு வரப்படுகின்றன.

நான் இருக்கும் அறையிலிருந்து ஹட்சன் ஆற்றினிலே வாஷிங்டன் வாராவதிக் காட்சியைக் காணலாம். என் அறைக்குக் குடிக்கூலி மாதத்துக்கு 52 டாலர்கள். அதாவது 210 ரூபாய். ஒரு நாளைக்கு எப்படியும் 2½ டாலர்கள் செலவாகின்றது. எனக்கு மாதம் 150 டாலர்கள் கிடைக்கிறது. இதில் வீட்டு வாடகை, உணவு, புத்தகம், வண்டிச் செலவு யாவும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இவை யாவும் என் பெற்றோர் செய்த தவமும், அண்ணன்மார் உழைப்பும், தங்களைப் போன்ற உத்தம சகோதர சகோதரிகளின் நல்லெண்ணமும் எனக்கு அளித்தவை. சகோதரர் உயர்திரு. மயிலை சிவ, முத்து அவர்கட்கும் இக்கடிதத்தைக் காட்டவும். சிற்சபை, சமரசம் முதலானவர்களுக்கு என் அன்பு.

தங்கள் அன்புள்ள,
டிணி. கோட்டீஸ்வரன்.

**(4) தான் படித்த ஒரு நூலைப்பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுதல்.**

7, முருகேச முதலித் தெரு,
திண்டிவனம்,
25-6-1949.

**என் அன்புள்ள சோமு,**

இரண்டு மாதங்களாகக் கடிதமே எழுதவில்லையே. ஏன்? உங்களூரில் கார்டுகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? சென்ற வாரத்தில் நான் படித்த ஒரு புத்தகத்தைப்பற்றி உனக்குத் தெரிவிக்க நான் மிகவும் ஆவலாய் இருக்கிறேன்.

என் பாடசாலை நூல் நிலையத்திலிருந்து பல புத்தகங்களைப் படித்திருக்கிறேன். அவற்றில் நான் பெரிதும் விரும்புவது **பாரதியார்** இயற்றிய **"தேசீய கீதங்கள்"** என்பதாகும்.

இந்நூலில் பாரதியாரின் சுவைமிக்க பாடல்கள் பல காணப்படுகின்றன. உரிமை உணர்ச்சியை ஊட்டி, உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கும் செந்தமிழ்ப் பாடல்கள் என் மனதைக் கவர்ந்து விட்டன. 'பாப்பாப் பாட்டு', 'தாயின் மணிக்கொடி', 'விடுதலை, விடுதலை', 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்னும் பாடல்கள் பாடப் பாடத் தெவிட்டாத பண்பு வாய்ந்தவை.

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!' என்று ஒரு புலவர் பாராட்டியது அவ்வளவும் உண்மையே என்று கூறலாம். பாரதியாரின் பாடல்கள் மிகவும் எளிய நடையில் அமைந்தவை; பாமரரும், பண்டிதரும் விரும்பிக் கற்கத் தகுந்த உயர்ந்த நீதிகளை உடையவை. அவர் பாடலுக்கு அகராதி வேண்டியதில்லை. பாரதியார் கூறும் உவமைகள் அத்தனையும் நமது கண் முன்னே கொண்டுவந்து நிறுத்துவதுபோல் இருக்கும்.

பாரதியார் பாடல்களின் அருமை பெருமைகளை உணர்ந்தே அரசியலார் அவற்றின் உரிமையை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள் போலும். நான் அவருடைய தேசிய கீதங்களைப் படித்தது ஒரு முறையல்ல; இரு முறையல்ல; பல முறையும் படித்திருக்கிறேன்.

நாம் பாரதியார் பாடல்களைப் படிப்பதோடு நின்றுவிடாமல் அவற்றின் கருத்துக்களை உணர்ந்து, அவற்றின் வழியே நாட்டுக்குச் சேவைபுரிவது நமக்குற்ற கடமையல்லவா?

உன் பிறந்த நாள் பரிசாக இந்தப் புத்தகம் ஒன்று வாங்கி அனுப்புகிறேன். நீயும் படித்துப் பார்த்து இன்பமடையலாம்.

அன்புள்ள,
மா. வ. மாணிக்கவாசகன்.

(5) இந்தியக் கோயில்களின் சிறப்பைப்பற்றித் திருமதி ருக்மணி தேவியின் சொற்பொழிவைக் கேட்ட ஒரு பெண் தன் சிநேகிதைக்கு எழுதிய கடிதம்.

கும்பகோணம்,
1-3-1951.

என் அன்புள்ள கமலா,

ஏன் உன்னிடமிருந்து பல நாட்களாகக் கடிதமே இல்லை? தேர்வில் நீ நன்ருகப் படித்து நிறைய மார்க்குகளை வாங்குவாய் என்று நினைக்கிறேன். நிற்க, நேற்று எங்களூரில் ஸ்ரீ சாரங்கபாணி கோயிலில் இந்தியக் கோயில்களின் சிறப்பைப்பற்றிச் சென்னை அடையாறு கலா க்ஷேத்திரத் தலைவி திருமதி அருண்டேல் ருக்மணி தேவியார் பேசிய சொற்பொழிவைப் பற்றிச் சுருக்கமாக உனக்குத் தெரிவிக்க விரும்பி இக்கடிதத்தை எழுதலானேன். இதிலிருந்து நம் பண்டைக்கால கலைத் திறமையையும், நமது தற்காலக் கடமையையும் நீ நன்கு உணரலாகும்.

அவர் தம் சொற்பொழிவில், "அயல்நாடுகளைக் காட்டிலும், சகல கலைகளும் நிறைந்து ஜீவாதார பீடமாய் உள்ளது தேவாலயங்கள். நம் நாட்டின் வாழ்வையே சித்தரித்து நாகரீக கல்ப தருவாய் விளங்குவது கடவுளருள் நிறைந்த ஷை ஸ்தாபனங்கள்தான். கலை என்ருல் சங்கீதம் நிறைந்த நாதவெள்ளம் நிறைந்து விளங்குவதும் அதன் பயனுக மக்கள் பக்தி பரவசமாகி கடவுளை வழிப்படுவதுமாகும். மனேதர்மத்தில் அமைக்கப்படும் சங்கீத இசைப்பும், அசைப்பும் போன்று நெஞ்சை அள்ளும் வகையில் அழகு நிறைந்த கவர்ச்சிகரமான சிற்பிகளின் வேலைகள் கோயில்களில் பிரகாசிக்கின்றன. சிலைகளில் சிங்காரம் நிறைந்து வசியப்படுத்துகிறது. அயல் நாடுகளில் அழகான கட்டிடங்களையும், ரயில்வே ஸ்டேஷன்களையும் காணலாமேயன்றி கலையையும், கடவுளை வழிபடுவதையும் ஒரே காலத்தில் காணும் சிறப்பு இந்தியாவைத் தவிர எங்குமே காணமுடியாது. அயல் நாடுகளில் சென்ற அனுபவத்தில் கண்டவைகளை எல்லாம் இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நம் நாட்டின் நாகரீகம், கோயில்களின் சிறப்பு முதலியவை மிகவும் உயர்ந்ததென்ற முடிவுக்கு வர முடிந்தது. இதை எல்லாம் கண்கூடாக நாம் பார்த்தும், கேட்டறிந்தும், நவீன நாகரீகத்திலும், சினிமாவின் சீலத்துவமற்ற வழிகளிலும் மனதைத் திருப்பிவிடுகிருேம். இந்த நவீன நாகரீக விபரீதங்கள் எந்த அளவில் கொண்டுவிடுமோ என்ற அச்சம் பிறக்கிறது. கடவுளுக்கு அந்தக்காலம் முதல் அணியாக அலங்கரிக்கும் முறையையும் கைவிட்டு, இனி கடவுளுக்கு சீமையிலிருந்து உடைகள் தைத்து போடும்படியாகுமோ என்றுகூட நினைக்க வேண்டியிருக்கிறது. நாகரீகத்திற்கு அடிப்படையாக உள்ள தேவஸ்தானங்களில் புராதன காலங்களில் புராணங்கள், புதிய நூல்கள் எல்லாம் (நாட்டியக் கலை உள்பட) அரங்கேற்றப்பட்டு வந்தன. ஆனல் இவைகளுக்கு இந்தக்

காலத்தில் இடமில்லை. நம் நாட்டில் கலையுள்ளவிடம் தலை என்றே கூற வேண்டும். "கலை" என்ற அழகிய தமிழ்ச் சொல் ஆங்கில பாஷையில் கிடையாது. இப்பெருமை நம் தேசத்திற்கே உரியது. சகல நம்பிக்கை களாலும் ஜீவாதார தெய்வீக பீடங்கள் நிறைந்த தேவாலயத்தினிடம் தேச மக்களின் நம்பிக்கை பரவவேண்டும். அப்பொழுது தான் நம் தேசக் கலை சிறந்து பிரகாசிக்கும். அதனால், அயல் நாடுகளும் நம் நாட்டைக் கண்டு பிரமிக்கும். கண்யம், பக்தி, தர்மம் சிறந்தது நம் நாடு என்று காட்டவேண்டும். கோயில்களில் உள்ள உயர்ந்த சிற்பச்சாலைச் செல்வங்களை சுண்ணாம்பு வர்ணங்களைப் பூசி இயற்கை அழகை அழிப்பது நாகரீகமென இக்காலத்தில் கருதப்பட்டுச் செய்வது வருந்தத்தக்கதாகும்" என்று குறிப்பிட்டார்.

நீ கும்பகோணத்துக்கு வருவதாகத் தெரிவித்தாய்; என்றைக்கு எந்த வண்டியில் புறப்படுகிறாய் என்று தெரிவித்தால் புகைவண்டி நிலையத்துக்கு வந்து உன்னை என் வீட்டுக்கு அழைத்துச் செல்வேன். உன் தங்கை கலைவாணிக்கு என் பேரைச் சொல்லி இரண்டு முத்தங் கள் கொடு.

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
*சுந்தராமபாள்.*

## (6) ரஷ்ய மக்களைப்பற்றி ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணனின் பேச்சைக் கேட்டு நண்பனுக்கு எழுதிய கடிதம்.

43, ரங்கநாதன் தெரு,
சென்னை-17,
31-10-1951.

அன்புள்ள குமாரசுவாமி,

வாழ்க.

உன் கடிதம் கிடைத்தது. ரஷ்யா சென்று திரும்பிய ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் ரஷ்ய மக்களைப்பற்றி என்ன கூறுகிறார் என்பதை உனக்குத் தெரிவிக்கும்படி கேட்டிருந்தாய் அல்லவா? எனவே, நேற்று மாலை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடைபெற்றதோர் பிரம்மாண்டமான கூட்டத்தில் அவர் பேசியதின் சுருக்கத்தை உனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர் பேசியதாவது: "ரஷ்யாவில் கலைகளுக்கிடமில்லை என்ற அபிப்பிராயம் தவறானது. அங்கு நாடகம், சினிமா முதலியவற்றிற்கு மிகுந்த முக்யத்வமளிக்கப்படுகிறது. சினிமாவிற்கென்று ஒரு மந்திரி இருக்கிறார். சினிமாவும், நாடகமும் பிரசார சாதனங்களாக விளங்கு கின்றன.

"ரஷ்யாவில் எல்லோருக்கும் ஒரே மாதிரி சம்பளம், உடை, வீடு என்று நினைப்பது தவறு. இதில் வித்யாசங்கள் உண்டு. ஆனால்,

உழைப்புக்குத் தகுந்த மாதிரி பாகுபாடு உள்ளது. ரூ. 600 முதல் ரூ. 2000 வரை சம்பளம் வேறுபடுகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண், பெண் அனைவரும் உழைத்துச் சம்பாதிக்கின்றனர். சோம்பேறி களுக்கு அங்கு இடமில்லை. பிச்சைக்காரர்களே அங்கு கிடையாது.

"எங்களுக்கிஷ்டமான இடங்களை எல்லாம் நாங்கள் பார்க்க அனுமதிக்கப் பட்டோம். 'இரும்புத் திரை' என்று சொல்கிறார்களே அது அங்கு கிடையாது"

"சேர்த்து வைப்பது என்ற வழக்கம் அந்நாட்டு மக்களிடம் இல்லை. தேசமக்களுக்கு வேண்டிய பொருள்களனைத்தையும் சர்க்காரே சேமித்துள்ளனர். பிறநாட்டினரிடம் கையேந்துவதில்லை. சர்க்காரே தமது தந்தை என்று நினைக்கின்றனர் மக்கள். சர்க்காரிடம் அவர்களுக்குள்ள பிரியத்துக்கு அளவேயில்லை. அங்குள்ள மக்களுக்கு அரசியல் விஷயங்களில் அக்கரை கொள்ள அவகாசமில்லை; அவாவுமில்லை".

கடிதம் நீண்டுவிட்டது; எனவே, இன்னும் பிற இடங்களில் அவர் பேசியவற்றை எனது அடுத்த கடிதத்தில் தெரிவிக்கிறேன்.

உன் அன்புள்ள,
ராமசாமி.

(7) "மொழி வேற்றுமை அகல வேண்டும்" என்பதைக் குறித்து ஸ்ரீ சி. எஸ். சீனிவாச முதலியார் பேச்சைக் கேட்டு நண்பன் ஒருவனுக்கு எழுதிய கடிதம்.

164, பெரிய கடைத் தெரு,
சீர்காழி,
11-10-1951.

அன்புள்ள பாலா,

உயர்திரு.சி.எஸ். சீனிவாஸ முதலியார் அவர்கள் நேற்று எஸ்.எம். இந்து உயர்தரப் பாடசாலையில் விஜயதசமியை முன்னிட்டு, தலைமை வகித்துக் கூறியவற்றை உனக்குத் தெரியப்படுத்தவே இக்கடிதத்தை எழுதுகிறேன். "மொழி வேற்றுமை அகல வேண்டும்" என்பதைப் பற்றி பேசும்போது அவர், "உலக சரித்திரத்தில் எந்த மொழியாக இருப்பினும் அதன் வளர்ச்சியின் தன்மை மத சம்பந்தமான தத்துவங்களைக் கொண்டு, அம்மொழியில் இலக்கிய, இலக்கணங்கள் அபிவிருத்தியடைந்ததேயாகும். உதாரணமாக, தமிழ் சைவத்தையும், வட மொழி வேதாந்த சாரங்களையும் துணையாகக்கொண்டு வளர்ந்து வந்திருக்கின்றது. ஒவ்வொரு மொழியும், அவ்வவ்வற்றின் ஆத்மீகக் கருமத்தை வெளியிடும் கருவியாய் ஓங்கி வந்திருப்பதன் விஷயம் ஆராய்ச்சியில் புலனாகும். இத்தகைய மொழிகள் பற்பல இலக்கிய களஞ்சியங்களைத் தந்திருப்பதில், மொழித் துவேஷம் கொள்வது முறையல்ல. மொழிகளில், ஒன்றைத் தூற்றுவதும், மற்றொன்றைப் போற்றுவதும்

கலாசார வளர்ச்சிக்குத் தடையாகும். அஃதேபோல், இப்பரந்த பூமியில், மனித கோடிகள் யாவும் ஒரே குலமாக வாழ இடமுண்டு. ஒருவர் மற்றொருவரைத் துவேஷ புத்தியுடன் தூஷிப்பது வாழ்க்கையில் உயர் லட்சியத்திற்கு முரண்பாடாகும். துவேஷத்தினல் பயம் உண்டாகின்றது. ஒருவருக்கொருவர் உள்ள நல்லுணர்ச்சி, நம்பிக்கை கெடுகின்றது. இதற்கு இடந்தராது சமரச புத்தியுடன் அன்பெனும் தளையால் மனித சமூகம் கட்டுண்டு வாழவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

அவர் கூறிய உண்மையை நீயும் அறிந்து கொள்வாய் என நினைக்கிறேன். நண்பன் மாணிக்கவாசகனுக்கு என் வாழ்த்துக் களைத் தெரிவி.

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
டி. ஜயராமன்.

## (8) வீர கட்டபொம்மனைப்பற்றி நண்பனுக்கு எழுதிய கடிதம்.

142, சாலைத் தெரு,
திருவாரூர்,
21-9-1950.

அன்புமிக்க நடேசா,

என் சென்ற கடிதத்தில் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களைப்பற்றி எழுதியிருந்தேன் அல்லவா? இக்கடிதத்தில் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மனைப்பற்றிச் சில எழுத விரும்புகிறேன்.

மன்னனாகயிருந்தும் மக்கள் பெருமைக்காக, மண்ணின் விடுதலைக்காகப் போராடிய பெருமை வீர கட்டபொம்மனுக்கே உரியது. அவன் துவக்கி வைத்த புரட்சியை பிறர் பின்பற்றினர்கள். ஆங்கிலேயன் அந்த கட்டபொம்மன் பேச்சைக் கேட்டாலுமே நடுநடுங்கினன். அவன் சிந்திய இரத்தம் இன்று தேசீயக் கொடியாக நம் நாட்டில் பறக்கிறது. எதிர்காலச் சமுதாயம் வாழ வேண்டுமென்பதற்காகவே அவனைப் போன்றவர்கள் தங்கள் உயிரைப் பலி கொடுத்தார்கள்.

வீர கட்டமொம்மனின் பெயரைச் சொல்லும்போதே நமது நரம்புகள் முறுக்கேறுகின்றன; புதிய உணர்ச்சி பெருக்கு எடுக்கின்றது. எனவே, தமிழகத்தின் வீரத்திற்குச் சான்ருக நிற்கும் அம்மன்னனது நினைவு நாளை இந்தியா முழுவதும் கொண்டாட வேண்டும். இந்நாட்டிலே விடுதலைக்காக முதல் பலியானவன் வீர பாண்டிய கட்டபொம்மன் என்பதை நாம் உணரவேண்டும்.

என் அடுத்த கடிதத்தில் மகாகவி பாரதியாரைப்பற்றி எழுதுகிறேன்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள,
ராமமூர்த்தி.

## (9) கடிதம் எழுதுவதைப் பற்றி செஸ்டர்பீல்டு என்னும் ஆங்கிலப் புலவர் தம் மகனுக்கு எழுதிய கடிதம்.

லண்டன்,
ஜூலை 24, 1739.

**என் அருமைச் செல்வ,**

சில நாட்களுக்கு முன் நான் உன்னுடன் வந்து இருந்த சமயம், கடிதம் எழுதும் பழக்கத்தை நான் ஏன் விட்டுவிட்டேன் என்று நீ கேட்டாய் அல்லவா? அந்தக் கேள்வி உண்மையாகவே எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. நான் எழுதும் கடிதங்கள் உனக்கு உற்சாகத்தை அளிக்கின்றன; அவற்றை நீ பொருட்படுத்திப் படிக்கிறாய் என்பது இதனால் தெரிகிறது. அப்படியானால் இனிமேல் நான் நிச்சயமாக உனக்கு அடிக்கடி கடிதம் எழுதுவேன்.

என் கடிதங்களை நீ கருத்தாகவும், ஆர்வத்துடனும் படிப்பாயானால் அவை உண்மையில் உனக்கு மிகவும் பயனுடையவையாய் இருக்கும். ஆனால் நீ அவற்றைப் படிக்காவிட்டால் அக்கடிதங்கள் எழுதியதனால் என் உழைப்பும், நேரமும் வீணாகும் என்பதைத் தெரிந்துகொள். அத்துடன் நீ வாசித்த செய்திகள் அவற்றைக் கருத்தாகப் படிக்காத காரணத்தால் உன் மனதில் நிலைக்கமாட்டா. அவற்றை எழுதியதனால் நான் நினைத்த பலனும் ஏற்படாமல் போகும்.

என் கடிதங்களை நீ கருத்தாகப் படிக்காவிட்டால், அவற்றைப் படிக்காமல் இருப்பதே நல்லது. நீ படிக்கவில்லையானால் நானும் சிரமப்பட்டு எழுதாமல் இருக்கலாமல்லவா? கடிதங்கள் புத்தகங்களைப் போலத் திரும்பத் திரும்ப படிக்கத் தகுந்தவையல்ல. அதனால்தான் அவற்றை முதலிலேயே மனதில் பதியும்படிக் கருத்தாகப் படித்துவிட வேண்டும். ஒரு தடவை படித்த செய்தி என்றென்றும் பயன்படுமாறு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

படித்தல், விளையாடுதல் போன்ற உன்னுடைய மற்ற வேலை நேரங்களில் அவற்றை நீ படிக்கவும் கூடாது; அவற்றுக்குப் பதில் எழுதவும் கூடாது. நீ படிக்கும்போது விளையாடுதலைப் பற்றியோ, விளையாடும் போது படிப்பைப்பற்றியோ நினைக்கக் கூடாதல்லவா? அதுபோலவே கடிதம் படிக்கும்போதும், எழுதும்போதும் நீ வேறு எதுவும் செய்யக் கூடாது.

நீ எந்த வேலையையாவது கவனமில்லாமல் செய்வாயானால் அதனைச் சாதாரணமாகச் செய்து முடிக்க வேண்டிய நேரத்தில் இரு மடங்கு நேரம் வீணாகும். காரணம் அப்போது நீ செய்த வேலையை மறுபடியும் செய்தாக வேண்டும். முதலில் செய்ததைவிட அதிக சிரமம் இல்லாமல் இரண்டாம் தடவை ஒரு காரியத்தைச் செய்ய முடியாது.

**உன் அன்புள்ள தந்தை,**
..............................

**(10)** கடிதம் எழுதுவதைப் பற்றி செஸ்டர்பில்டு தம் மகனுக்கு எழுதிய மற்றொரு கடிதம்.

லண்டன்,
ஜூலை 20, 1747.

**என் அருமைச் செல்வ,**

இந்தக் கடிதத்துடன் உன் தாயின் கடிதம் சேர்த்து அனுப்பி இருக்கிறேன். அதன் உள்ளே என் அக்காள் உனக்கு ஒரு கடிதம் அனுப்பி இருக்கிருர். அவர்கள் இருவரும் தம் கடிதங்களை எனக்குக் காண்பிக்கவில்லை. ஆயினும் உன் பதில் கடிதத்தை அவர்கள் எனக்குக் காட்டுவது நிச்சயம். ஆகையால் உன் பதில் கடிதத்துக்கு முன் மாதிரியாக ஒரு பிரதி அனுப்பியுள்ளேன். நீ பெண்களுக்குக் கடிதம் எழுதும் அளவுக்கு இன்னும் பயிற்சி பெற்றுவிடவில்லை. எனவே இப்படி உனக்கு நான் உதவி செய்ய முன் வருவதை நீ பொறுத்துக்கொள்ள வேண்டும். இதில் ஆரம்ப உதவியொன்று மின்றி நீ தேர்ச்சி பெற முடியாது.

கடிதம் எழுதுதல் ஒரு சிறந்த கலை. கடிதங்கள் பல வகைப்படும். இலத்தீன் எழுத்தாளரும், சொற்பொழிவாளரும் ஆகிய ஸிஸரோ தம் நண்பர் அட்டிகஸ்ஸுக்கு எழுதிய கடிதங்கள் எளிய, அன்பு கனிந்த நடையில் அமைந்தவை; எனினும், அவை சிறந்த இலக்கியமாகும். மற்றும் சில கடிதங்கள் தொழில் சம்பந்தமாக எழுதப்பட்டவை. தொழில் சம்பந்தமான கடிதங்கள் எப்படி எழுத வேண்டுமென்பதை நீ தனியாகப் பயிற்சி செய்துதான் தெரிந்து கொள்ளலாம். தொழிற் கடிதத்தில் இலக்கிய நடை, கனிவு, ஹாஸ்யம் முதலியன இல்லாமல் இருக்க வேண்டும். உணர்ச்சிகளை அடக்கி நாகரீகமான முறையில், விளக்கமான நடையில் தொழில் மரபுக்குரிய சொற்களும்,சொற்றொடர் களும் இதில் முக்கியமானவை. மேலும் சில கடிதங்கள் மகிழ்ச்சியுடன் பொழுது போக்குதற்கு அமைந்தவை. இவற்றையும் சிலர் இலக்கியம் போல படித்து ஆராய்ச்சி செய்கிருர்கள். இது சரியன்று. பிரயாணங் களின் போதும் ஓய்வு நேரத்தின் போதும் இன்பமாகப் பொழுது போக்குதற்காகவே இவை படிக்கத்தகுந்தவை.

இக்கடிதத்தை மேலும் தொடர்ந்தெழுத நேரமில்லை. நிறுத்திக் கொள்கிறேன். உனக்கு நன்மை உண்டாகுக.

உன் அன்புள்ள தந்தை,

..............................

---

இட்டுக் கேட்டார் எவருமிலர்.

## 6. தம் இல்ல நிகழ்ச்சிகள்

(1) பத்து வயதுத் தங்கைக்குத் திருமணம் என்று கேள்விப் பட்ட அண்ணன் ஒருவன் மனம் பதறித் தந்தைக்கு எழுதிய கடிதம்.

15, புதுத் தெரு,
கும்பகோணம்,
6-7-1950.

அன்புள்ள அப்பா,

வணக்கம்.

என்ன கொடுமை இது! பத்து வயதும் நிரம்பாது பள்ளியிற் படிக்கும் பெண் குழந்தையாகிய என் தங்கை செல்வி குணமணிக்கு இதற்குள்ளாகவா திருமணம்? திருமணம் என்றாலே என்னவென்று தெரியாமல் முற்றத்தில் பொம்மைகளை வைத்து விளையாடும் இப் பருவத்தில் அவள் தலையில் குடும்ப பாரத்தைச் சுமத்துவது தருமமா? மேலும் பிள்ளைக்கு வயது முப்பத்தாறுக்குமேல் ஆகிறதாமே! இந்தப் பொருந்தாத் திருமணத்தைக் கேட்டால் நம் உறவினர்கள் ஒப்பு வார்களா? நண்பர்கள் நகைக்கமாட்டார்களா? பணத்தாசையினால் நம் உயிருக்கு உயிரான செல்வியை இழப்பதா? கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுப்பதா? சட்டமும் இதற்கு இடம் தரவில்லையே!

குணமணி மேலும் படிக்கட்டும். அவள் படிப்புக்குத் தடையாய் இராதீர்கள். படித்த பெண்களால்தான் இந்த நாடு முன்னேறும். நம் குடும்பமும் பெருமையடையும். ஏதோ உளறி இருக்கிறேன் என்று என் எண்ணத்தை மண்ணுக்க வேண்டாம். பிறர் காதுக்கு இச்செய்தி எட்டுவதற்கு முன்னதாகவே இந்த ஏற்பாட்டைக் கலைத்து விடுங்கள். உங்களுக்குப் புண்ணியம் உண்டு.

இங்ஙனம்,
அன்புள்ள மகன்,
ஆ. சண்முகம்.

(2) பல நாட்களாகக் கடிதம் எழுதாத நெருங்கிய நண்ப னுக்கு வருந்தி எழுதிய கடிதம்.

50, வேளாளத் தெரு,
விழுப்புரம்,
10-10-1951.

அன்பு நிறைந்த மணிவண்ணு,

ஏன் மூன்று மாதங்களாகக் கடிதமே எழுதவில்லை? உன் கடிதம் காணுத நாட்கள் எல்லாம் எனக்கு யுகம் போலக் கழிகின் றன. கடிதம் வராததால் உனக்கு உடல் நலமில்லையோ என்றும் கவலைப்படுகிறேன். அல்லது வேண்டுமென்று என் அன்பைச்

சோதிக்க இவ்வளவு மௌனமோ? விரைவில் உன் கடிதம் வராவிட்டால் என் எண்ணங்கள் என்னைப் பைத்தியக்காரனாக்கி விடும்.

நீ எதை எழுதினாலும் அது எனக்கு இலக்கிய இன்பமாக இருக்கும். உன் தம்பி மணிப்பயல் பரீட்சையில் வெற்றி பெற்று இருப்பான் என்று நினைக்கிறேன்.

இந்தக் கடிதம் கண்ட மறு தபாலிலேயே நீ பதில் எழுத வேண்டும் தெரியுமா? இல்லையேல், தபால் நிலையத்துக்கு எதிரில் இருந்து கண்ணீர் விடுவேன். ஒரு நாளைக்கு உண்ணாவிரதமும் இருக்க நேரும் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்.

உன் அன்புள்ள,
கோ. ராமன்.

(3) ஒரு சிறுவன் தனக்குத் தம்பி பிறந்திருக்கும் செய்தியைத் தன் நண்பனுக்குத் தெரிவிக்கும் கடிதம்.

ஈஸ்வரபுரம்,
10-4-1950.

**என் அன்புள்ள பிச்சுமணி,**

எனக்குத் தம்பி பிறந்திருக்கிறானே! தெரியுமா? நேற்றுக் காலையிலேயே என் பாட்டி என்னைப் பார்த்து, "உனக்குத் தம்பி பிறக்கப் போகிறான்" என்று சொன்னாள். வீட்டில் யார் யாரோ வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு லேடி டாக்டர் கூட வந்து கூடத்தில் நின்று கொண்டு ராணியைப்போல் அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்தாள். அறையில் என் அம்மா என்னமோ கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் "குவா...குவா..." என்ற அழுகை கேட்டது. என் பாட்டி ஓடிவந்து என்னிடம், "உன் தம்பி பிறந்துவிட்டாண்டா" என்று சொன்னாள். டாக்டர் அம்மா தான் செய்யவேண்டிய சிகிச்சைகளைச் செய்துவிட்டுப் போய்விட்டாள்.

நானும் என் தம்பியைப் பார்க்கலாமென்று எவ்வளவோ ஆசையாய்த்தானிருந்தேன். என் பாட்டியும் என்னை அழைத்துக்கொண்டு போய் அறையில் இருந்த அந்தக் குழந்தையைக் காட்டினாள். பிச்சு, நான் என்னவென்று சொல்வேன்! என் தம்பியைப் பார்க்கும் போதே வேடிக்கையாக இருக்கும். அவன் கைகால்கள் சின்னஞ் சிறியவை! சின்னக் கண்கள்! நாக்கை அடிக்கடி நீட்டுகிறான்! உதட்டைச் சப்புகிறான்! கையைக் கட்டிக் கொள்கிறான்! தலையை அப்படியும் இப்படியும் உருட்டுகிறான்! அவன் முகம் செக்கச் செவேலென்று மிளகாய்ப் பழம் போல இருக்கிறது. இவன் சீக்கிரத்திலே பெரியவனாய்ப் போய்விடுவான் என பாட்டி சொல்கிறாள். அவனுக்கு என்ன பேர் வைக்கலாம். நீ சொல்வாயா?

உன் அன்புள்ள,
மு. பாலன்.

**(4) தான் பார்த்த ஒரு திருமண நிகழ்ச்சிகளைத் தன் நண்பனுக்குத் தெரிவித்தல்.**

6, நம்பியாண்டார் தெரு,
காஞ்சி,
13-7-1951.

**அன்பும் அருங்குணங்களும் நிறைந்த ஆறுமுகம்,**

என்னை இப்படி ஏமாற்றுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சென்ற வாரம் செங்கல்பட்டில் நடந்த நண்பன் கண்ணனின் தங்கை திருமணத்துக்கு நீயும் வருவாய் என்று நினைத்தேன்.

திருமணம் மிகமிகச் சிறப்பாக நடந்தேறியது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். திருமணம் நம் கருத்துக்குப் பொருத்தமாக நடந்தது என்பதைக் கேட்க நீ களிப்படைவாய் என்று நினைக்கிறேன். இத்திருமணத்தில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய செய்திகள் இரண்டு. மணமகன் பி. ஏ. வரையில் படித்துப் பட்டம் பெற்றவன்; நல்ல அறிவாளி; தமிழிலும் புலமை உடையவன்; மாகாணத்தில் பி. ஏ.வில் முதலாவதாகத் தேறியுள்ளவன்.

மற்றொரு மகிழ்ச்சியான செய்தி இந்தத் திருமணத்தில் வரதட்சணைக் கொடுமை இல்லை. திருமணத்தில் வீண் ஆடம்பரச் செலவுகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. வந்திருந்த விருந்தாளிகள் எல்லோரும் முகம் மலர வரவேற்கப்பட்டார்கள். எங்களுக்கென்றே ஓர் அழகிய தனி வீடு தங்குவதற்காக வசதி செய்யப்பட்டிருந்தது.

திருமண நாட்கள் இரண்டும் எப்படித்தான் கழிந்தனவென்றே தெரியவில்லை. அவ்வளவு இன்பமாக எல்லோரும் அந்த நாட்களைக் கழித்தோம். திருமண நிகழ்ச்சிகள் எல்லாம் ஒழுங்காக நடைபெற்றன. விருந்துக்குக் கேட்க வேண்டுமா? அறுசுவை உணவுடன் அன்புச் சுவையும் சேர்த்து உண்டு களித்தோம். சாப்பிடும்போது உன்னை நினைத்தேனா என்று யோசிக்கிறாயா? உன்னை எப்படி மறந்துவிடுவேன்? தம்பதிகளுக்குப் பல விலையுயர்ந்த, கவர்ச்சியான மணப்பரிசுகள் கிடைத்தன. திருமணத்தின் கடைசி நாளில் நான் மணமக்களின் பெற்றோர்களிடம் பிரியாவிடை பெற்று வீடு திரும்பினேன்.

மணமக்கள் பலவளமுடன் பல்லாண்டு வாழ வேண்டும் என்னும் என் பிரார்த்தனையில் நீயும் பங்கு கொள்வாய் என்று நினைக்கிறேன்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள,
ச. விஸ்வநாதன்.

**இன்பம் வரினும் மகிழாதே; துன்பம் வரினும் கவலாதே.**

## 7. பிற வெளி நிகழ்ச்சிகள்

(1) *ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகளின் சொற்பொழிவைக் கேட்டுத் தன் நண்பனுக்கு அதன் சாரத்தைத் தெரிவித்தல்.

திருவிடமருதூர்,
3-1-1950.

அருமை நண்பன் அன்புமணி பலவளமுடன் பல்லாண்டு வாழ்க.

உன் பொன்னான கடிதம் கிடைத்தது. நான் என் பிறவிப் பயனை நேற்றுத்தான் அடைந்தேன் என்று கூறவேண்டும். நேற்றுடன் இங்கு திருவெம்பாவை, திருப்பாவை மகாநாடு முடிவு பெற்றது. இறுதி நாளில் ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகளின் சொற்பொழிவைக் கேட்கும் பேறு பெற்ற நான் சென்ற பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். அவர்களுடைய சொற்பொழிவை நீயும் வந்து கேட்டிருப்பின் மிகவும் நலமாக இருந்திருக்கும். உனக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவே அவர் பேசியதின் சாரத்தை மட்டும் இந்தக் கடிதத்தில் எழுதுகின்றேன்.

அவர்கள் கூறியருளியதாவது: "புனிதமான கங்கை நதி கிழக்கு நோக்கி ஓடுகிறது. நர்மதை மேற்கே செல்கிறது. மகாநதி தெற்கிலிருந்து வடக்கே செல்கிறது. பல நதிகள் விந்திய மலையிலிருந்து உற்பத்தியாகின்றன. பல திசைகளில் ஓடுகின்றன, எல்லாம் முடிவில் கடலில் கலக்கின்றன. சேரும் இடம் ஒன்று என்ற எண்ணம் நதிகளுக்கு இல்லை. அவை எங்கு போனாலும் சமுத்திரம் அதைச் சூழ்கிறது. அதேபோல் நாம் பலவழிகளில் இறைவனை போற்றுகிறோம்; பாதைகளில் வேற்றுமை உளது. ஆனால் ஆட்கொள்ளும் வஸ்து ஒன்றே. இறைவனை அடைய நாம் பல வழிகளில் செல்லலாம். ஆனால் வேற்றுவழிகளில் செல்லுகையில் ஒற்றுமையை மறந்து கடவுளின் ஏகத்வத்தை கைவிடக்கூடாது. வேற்றுமையை நினைத்தால் ஆனந்தம் இல்லை.

"இம்மகாநாட்டில் சைவர்களும், வைணவர்களும் கலந்துகொண்டது எனக்கு மிகவும் சந்தோஷத்தை கொடுக்கிறது. இதுபோல் மகாநாடுகள் எங்கும் நடக்க வேண்டும். எல்லோரும் ஒருங்குகூடி இறைவனை நினைத்து நம் துக்கத்தையும், கஷ்டத்தையும் சற்று மறந்து இருப்போம். நாடெங்கும் தெய்வீக ஒளி வீசட்டும். பண்டை நாட்களில் நம் நாட்டில் லஞ்சம், பொய் என்பது ஒருவருக்கும் தெரியாது. தற்சமயம் அவைகள் எங்கும் காணப்படுகிறது. இக்நிலைமாற இதைப் போன்ற மகாநாடு உதவும்.

"ஆலய வழிபாடு நம் நாட்டில் தொன்றுதொட்டு இருக்கிறது. எல்லாம் கடவுளின் ஸ்வரூபம் என்ற பக்குவநிலை ஞானிகளுக்குத்தான்

* இச் சொற்பொழிவு 4-1-1951 சுதேசமித்திரனில் வெளிவந்தது.

கிட்டும். ஸாமான்ய ஜனங்கள் கடவுளை நினைக்க ஒரு ஊன்றுகோல் வேண்டும். தத்வம் அறிந்த ஞானிகள் கூட தங்களுக்கு ஞான நிலையை அடைவித்த விக்ரகங்களை வணங்குகிறார்கள்.

"எல்லாவற்றையும் மறந்து பொய்யே இல்லாமல் ஆனந்தமாக இருந்த நமது நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் ஸ்மரிப்போம். அவர்கள் வார்த்தைகள் தெய்வீக வார்த்தைகள்; முற்றிலும் உண்மையானவைகள். ஆகவே, அவை இன்னும் அழியாமல் இருக்கின்றன. நல்வழியில் ஈடுபட்ட அப்பெரியார்களின் ஆனந்த வாழ்க்கையை அனுபவிப்போம். கடல் ஒன்றே; பல இடத்தில் பல பல பெயர்கள் உண்டு. அதேபோல் எல்லாம் வல்ல கடவுள் ஒருவரே; நாமரூபங்கள் பல உள. சில நாட்களாவது நாம் இக்கடவுள் ஒற்றுமையைக் காண்போம். இவ்வொற்றுமையை உணர்ந்த மகான்களை வணங்குவோம்; அவர்களுடைய அன்பு ததும்பும் பாடல்களை பாடுவோம்; ஆழமானதும் மலைபோன்றும் திடமான ஞானம் படைத்த அவர்கள் திருவாக்கை அனுபவிப்போம்; உண்மை ஆனந்தம் நமக்குக் கிட்டும்.

"திருமுறைகளிலும், திவ்ய பிரபந்தத்திலும் வேதங்களைப்பற்றியும் வேத ஆறு அங்கங்களைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. நான்மறைகள், ஆறங்கங்கள், நான்கு உப அங்கங்கள், நான்கு உப வேதங்கள் ஆக பதினெட்டு வித்தைகள். நம்முன்னோர் அப்பியஸித்தவைகள் தனுர்வேதம் (ராணுவ சாத்திரம்), அர்த்த சாத்திரம், ஆயுர்வேதம் முதலியவை. உபவேதம் காந்தர்வ உபவேதம் (கலை சாத்திரம்). இது சாமவேதத்தின் உபவேதமாகத் திகழ்கிறது. இவ் வித்தைகளை கற்றுணர்ந்தவர்கள் ஆண்டவன் அருள் என்ற விலாசத்தை அடையவேண்டும் என்ற எண்ணம் கொள்ளவேண்டும். எல்லா சக்திகளுக்கும் காரணமானது பராசக்தி. மேகத்திற்கு சமுத்திரம் காரணமாக இருப்பதுபோல் பராசக்தி எல்லா மனித இயற்கை சக்திகளுக்கும் காரணமானவள். மாபெரும் சக்தி என்று நாம் நினைப்பவை கூட பராசக்தியின் ஒரு அணுவே. கடவுள் இல்லை என்று சொல்வது நுனிக்கிளையிலிருந்து அடி மரத்தை வெட்டுவது போல் ஆகும். நம் நாட்டில் பக்தி வளரவேண்டும்; ஞானம் கமழ வேண்டும்; ஆஸ்திகம் தழைத்தோங்கவேண்டும்.

"தில்லையில் ஒரு மூர்த்தி விளங்குகிறார். மெய்மறந்து ஆனந்த நடனம் புரிந்து கொண்டிருக்கிறார். நடன வேகத்தில் விரிந்த சடைகளோடு ஆனந்த மூர்த்தியாகக் காட்சி அளிக்கிறார். அணுக்கள் எல்லாம் ஏக தாளத்தில் ஆடிக்கொண்டிருக்கின்றன; அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன; அண்டம் இயங்க ஆண்டவன் அவ்வேகத்தில் நடனமாடுகிறார். ஆனந்த நடனம் புரிவதால், ஆனந்த ஸ்வரூபியாய் இருக்கிறார் என்பது விளங்குகிறது. அவரது வலது கையில் உள்ள

இன்றைக்கு என்பதும் நாளைக்கு என்பதும் இல்லை என்பதே.

உடுக்கையிலிருந்து வரும் ஒலியால் பதினன்கு சப்தங்கள் தோன்றின. பாணினி அவைகளை ஆதாரமாகக் கொண்டு வியாக்ரண சூத்திரங்களை வெளியிட்டார். ஊன்றிய வலக்காலின் கீழ்க்காணும் அரக்கன் அக்ஞானம். அதை ஈசன் அடக்கியிருப்பதை இது காட்டுகிறது. பேரானந்தம் அடைந்தவர்கள் ஆனந்த நடனம் செய்வார்கள். அல்லது சாந்தமே உருவாகி காட்சியளிப்பார்கள். அஞ்ஞான அரக்கனை காலால் அமுக்கிக் கொண்டு நடராச பெருமான் போல் தென்திசை நோக்கி காட்சி அளிக்கும் மற்றெரு மூர்த்தி பேரானந்தத்தில் சாந்தஸ்ரூபமாக இருப்பவர். அவர்தான் தக்ஷிணமூர்த்தி. இவ்விரு ஆனந்த மூர்த்திகளை வணங்குவோருக்கு எமபயம் இல்லை. பேரானந்தம் கிட்டும்.

## திருமாலின் யோகநித்ரை

"இதுபோல திருமாலும் யோக நித்திரையில் காட்சியளிக்கிறார். சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் உருவங்கள் வேறு; வாகனங்கள் வேறு; ஆயுதங்கள் வேறு; நிறம் வேறு; பெயர் வேறு; ஆனல் உண்மை உணர்ந்தோருக்கு வஸ்து ஒன்றே. இந்த உண்மையை சங்கரநாராயண உருவத்தில் காணலாம். இம்மகா நாட்டின் நோக்கமும் சங்கர நாராயணர் தத்வத்தை உணர்த்தி நாம் சாந்தியடைய வழிகாட்டுவதே யாகும். நம்மதங்களில் காணப்படும் வேற்றுமைகளில் ஒற்றுமை உணர்ச்சி ஊடுருவிச் செல்கிறது; அதை உணர்ந்து அனுபவிப்போம். பல வழிபாடுகள் இருப்பினும் எல்லாவற்றின் முடிவும் ஒன்றே. அவரவர் அறிவகையில் பக்தி செய்யவேண்டும். எல்லா நதிகளும் பல திசைகளில் ஓடவேண்டும். அப்பொழுதுதான் எல்லோருக்கும் க்ஷேமம். முடிவில் எல்லாம் கடலில் கலந்தாக வேண்டும்". அன்புள்ள மணி, இங்ஙனம் சுவாமிகள் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது போல் சொற்பொழிவாற்றியதைக் கேட்டு மக்கள் தெய்வத் திருவருள் நயம் உணர்ந்து மகிழ்ந்தனர்.

பின்னர் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் வர்ணமெட்டுகள் அமைத்து பக்க வாத்தியங்களுடன் சிறப்பாகப் பாடப்பட்டன. இரவில் திருப்பாவை, தேவாரம் முதலிய நூல்கள் யானைமீது அம்மாரி வைத்து முக்கியமான தெருக்களின் வழியே ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. மகாநாடுகள் மிகவும் சிறப்பாக நடந்தேறின. உனக்கு எப்போது விடுமுறை? விடுமுறைக்கு அவசியம் நீ எங்களுடன் சிலநாள் தங்கிச் செல்லவேண்டும்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள,
க. சங்கர நாராயணன்.

(2) *ஜவஹர்லால் நேருவின் சொற்பொழிவைக் கேட்ட மகன் ஒருவன் தன் தந்தைக்கு அதன் சுருக்கத்தைக் கூறுதல்.

பம்பாய்,
4-3-1950.

அன்புமிக்க அப்பா,

வணக்கம். இங்கு நான் நலமாகவே இருக்கிறேன். தங்கள் கட்டளைப் படியே நேற்று நான் பம்பாய் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் நேருவின் சொற்பொழிவைக் கேட்கச் சென்றேன். அதன் சுருக்கத்தைத் தங்களுக்கு எழுத விரும்புகின்றேன்.

"ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் கொள்கைகள் இந்தியாவின் பழைய பண்பாட்டை மேம்படுத்தியுள்ளது. ஆகவே மக்கள் அனைவரும் அவற்றை மறக்காது பின் பற்றுவது கடமையாகும். கடமையை கைக்கொள்வதிலும் சற்று மாறுதல் காணவேண்டும். ஏனெனில் இறந்த காலம் இறந்த காலம்தான்; நிகழ் காலமாக ஆகிவிடப் போவதில்லை. எதிர்கால வாழ்வுக்கும் அதனால் அதிக பிரயோஜனமிராது. கடந்து சென்ற காலத்தில் நிலைமைக்கு தக்கபடி மாறி நடந்து கொள்ளாதவர்களின் கதி மோசமாக இருந்தது. ஆகவே, எல்லோரும் நடவடிக்கைகளிலும் சரி, சிந்தனை விஷயத்திலும் சரி ஓர் உத்வேகத்தை காட்டவேண்டும். இறுதிக் காலத்தைக் காட்டிலும் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் அதிக சம்பந்தப்பட்டவைகளாக அவை அனைத்தும் இருக்கவேண்டும்" என பிரதம மந்திரி நேரு இன்று இங்கு பம்பாய் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த மாணவர் இல்லம் ஒன்றை திறந்து வைக்கையில் குறிப்பிட்டார்.

கடந்து சென்ற காலத்தின் உயர்ந்த லக்ஷ்யங்களை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது தான். ஆனால் அவற்றை பிரமாதப் படுத்தி பெருமிதப்படுவது பேராபத்தாகும் என்றும் அவர் எச்சரித்தார்.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பள்ளிகளை தாம் நேரில் பார்த்தவரை அவற்றின் பகட்டில்லாத, திறமை மிக்க காரியங்கள் தம்மை கவர்ந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்திய பண்பாட்டை நாம் மறக்கலாகாது என்றும் நேரு வற்புறுத்தினர்.

பெரியார்கள் வந்துபோகின்றனர். பெரும் தத்வங்களை நமக்கு விட்டுச் செல்கின்றனர். அவர்களுக்கு பின்வரும் சிறியவர்களோ அந்த தத்வங்களை அப்படியே பின்பற்றுமல் அவற்றிற்கான லக்ஷியத்தை நிர்ணயிக்க முயல்கின்றனர். ராமகிருஷ்ண மிஷன் இதற்கு ஒரு விலக்கு. அந்த தத்வங்களை நடை முறைக்குக் கொணர்ந்து அது சேவை புரிந்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

* 4-3-1951 சுதேசமித்திரனில் வந்த செய்தியைத் தழுவி இக்கடிதம் எழுதப்பட்டது.

பூனா சர்வகலாசாலை உப அத்யட்சகர் டாக்டர் எம். ஆர். ஜெயகர் பிரதம மந்திரியை வரவேற்றுப் பேசுகையில் மத, கலாசார சமூக துறைகளில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் செய்துள்ள அபார சாதனைகளை பாராட்டினர்.

நம் பிரதமர் நேருவின் பேச்சை கேட்கத் திரளான மக்கள் வந்திருந்தனர். அவர் தம் சிறந்த கருத்துக்களைக் கேட்டு மகிழ்ந்தனர்.

அப்பா, அடுத்த மே மாதத்துடன் என் பயிற்சி முடிகிறது. மே மாதக் கடைசியில் நான் ஊருக்குப் புறப்பட்டு வருகிறேன். தம்பி மணிமொழியும், தங்கை மலர்விழியும் சரியாகப் பள்ளிக்கூடத்துக்குப் போகிருர்களா? அவர்கள் கேட்ட விளையாட்டுப் பொருள்களை நான் ஊருக்கு வரும்போது கட்டாயம் வாங்கிவருவதாகத் தெரிவிக்கவும். அம்மாவுக்கு என் வணக்கம்.

இங்ஙனம்,
பணிவும் அன்பும் உள்ள,
க. பலராமன்.

## (3) மகாகவி பாரதியார் தம் மனைவிக்கு எழுதிய கடிதம்.

ஓம்

ஸ்ரீகாசி,
ஹனுமந்த கட்டடம்,

எனதருமைக் காதலி செல்லம்மாளுக்கு ஆசீர்வாதம். உன் அன்பான கடிதம் கிடைத்தது. நீ எனது காரியங்களில் இத்தனை பயப்படும்படியாக நான் ஒன்றும் செய்யவில்லை. விசுவநாதன் அனாவசியமாக உனக்கு பயத்தை விளைவித்திருக்கிருன். நான் எப்போதுமே தவருன வழியில் நடப்பவன் அல்ல. இதைப்பற்றி உன்னைச் சந்திக்கும் சமயங்களில் விவரமாகக் கூறுகிறேன். நீ இந்த மாதிரி கவலைப்படும் நேரங்களில் தமிழை நன்ருகப் படித்து வந்தாயானல், மிகவும் சந்தோஷமுறுவேன்.

உனதன்புள்ள,
சி. சுப்பிரமணிய பாரதி.

### (4) கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் கடிதம்.

திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவுற நிற்குமென் மாசிலா மனைவியே!
என்னரும் உயிரினும் என்னுயர் உளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்
பின்னுளப் பாதியைப் பெரியநம் தேயத்தின்
தன்னடிக் களித்தேன். சத்தியம் இஃதே.
சிறியவிரு சட்டைகள் தேகத்தில் புனைந்துளேன்
சிறியவோர் குல்லாச் சிரத்தினில் தரித்துளேன்
வெற்றியே தவத்தினும் வேறுள எஃதினும்
பெற்றிடச் செய்திடும் பெருமையொடு மற்றுள
நலமெலாம் எளிதினில் நல்கிடுங் கழலொன்று
வலதுதாள் மேலே மாணுற யாத்துளேன்
சிவனடித் தொண்டர்கள் சிறப்புற அணிந்திடும்
நவமறு மணிநாண் நற்களம் பூண்டுளேன்
தவத்தினில் சிறிது சரீரம் இளைத்துளேன்
உவப்பொடு கண்டெனை உயர்வெலாம் பெருவையே.

### (5) மேற்படியாரின் மற்றொரு கடிதம்.

சுவாமியே! தந்தையே! தூயநற் பெரியோய்!
அவாவியே வந்தெனை ஆண்டருள் ஈசா!
மூன்றிரு திங்கள் முரண்சிறை இருந்தேன்
இந்த வாரம் எடுத்த நிறுவையில்
ஐந்தி லொன்றாக அருகிய தென்னுடல்,
அரிசி உணவுக்கு அளித்தனன் அனுமதி
பெரியவன்; மற்றவன் பேசான் என்னொடு.
சீரிய நின்னடி சிரமேற் கொண்டுயான்
பாரிய என்னுளப் பாரதத் தாய்க்கும்
உரிமையொடு பெற்றெனை உவப்பொடு வளர்த்த
பெருமைசேர் அன்னைக்கும் பிறர்க்கும் எனது
மெய்மன வாக்கால் விரும்பி இன்றளித்தேன்.
தெய்வ வணக்கமும் சீர்தரும் வாழ்த்துமே.

---

உண்மை பேசுவதும், பேசியபடியே செய்வதும் வீரனுக்கு அடையாளம்

# (ஆ) அழைப்பும், வாழ்த்தும்

## 1. அழைப்பு

### (1) புதுமனை புகுவிழா

**புதுமனை புகுவிழா அழைப்பு**

சென்னை-7,
25-2-1950.

அன்புடையீர்,

வணக்கம்.

நிகழும் விரோதி ஆண்டு, மாசித் திங்கள், 22-ம் நாள் (5-3-1950) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மேல், சென்னை சூளைப் பெருவீதியில் புதியதாக அமைத்திருக்கும் 55-வது எண்ணுள்ள 'சாந்தி நிலையம்' என்னும் என் இல்லத்தில் நடைபெறும் புதுமனை புகுவிழாவிற்குத் தாங்கள் சுற்றமும், நட்பும் சூழ வந்து சிறப்பித்து வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
அன்புள்ள,
N. கோலப்பாப் பிள்ளை.

### (2) பிறந்த நாள் விருந்து

**பிறந்த நாள் விருந்து அழைப்பு**

"தென்றல் நிலையம்,"
சென்னை-1,
10-10-1950.

திரு........................................அவர்கட்கு

அன்புடையீர்,

வணக்கம்.

நிகழும் விக்ருதி ஆண்டு ஐப்பசித் திங்கள் முதல் நாள் (17-10-1950) மாலை 6 மணிக்கு என் மகன் நச்சினார்க்கினியன் பிறந்த தினத்தை முன்னிட்டு என் இல்லத்தில் நடக்கும் விருந்துக்குத் தங்கள் குடும்பத்துடன் வந்து மகிழ்விக்க வேண்டுகின்றேன்.

தங்கள் வருகையை ஆவலுடன்
எதிர்நோக்கும் அன்பன்,
ச. சடிரசம்.

## பிறந்த நாள் விருந்து அழைப்புக்குப் பதில் (ஒப்புக் கொள்ளல்)

32, நம்மாழ்வார் தெரு,
சென்னை-1,
13-10-1950.

அன்புள்ள சமரசம் அவர்கட்கு,

தங்கள் மகன் பிறந்த நாள் விருந்து அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி. தவறாமல் நானும், என் மனைவியும் விருந்தில் கலந்து கொள்வோம்.

அன்புள்ள,
த. தநாதன்.

## பிறந்த நாள் விருந்து அழைப்புக்குப் பதில் (வர இயலாமை)

51, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-5,
12-10-1950.

அன்புள்ள சமரசம்,

வணக்கம்.

17-10-1950-ல் நான் கோவையில் நடக்கும் ஒரு கூட்டத்துக்குப் பேச்சாளனாகச் செல்லவேண்டி இருப்பதால், தங்கள் விருந்தில் கலந்து கொள்ள இயலாதவனாக இருக்கிறேன்.

செல்வன் நச்சினார்க்கினியன் நீடூழி வாழ்க.

அன்பன்,
ரா. சுந்தரம்.

உண்மையினாலும், அன்பினாலும் உலகம் முழுவதையுமே வென்று விடலாம்.

## (3) காதணி விழா

### காதணி விழா அழைப்பு

திருவாளர்....................................................அவர்கட்கு

**அன்பு நிறைந்த ஐயன்மீர்,**

நிகழும் சர்வதாரி ௵ ஆவணி ௴ 21௳ (5-9-1948) ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்குமேல் 11-மணிக்குள்,

என் மக்கள்,

**செல்வன் அண்ணுமலை, செல்வி திலகவதி ஆகியோருக்குச்**

சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை, கொண்டலையர் தெரு, 15-ம் எண்ணுள்ள என் இல்லத்தில் நடக்கும் **காதணி விழா**வுக்குத் தங்கள் சுற்றமும், நட்பும் சூழ வந்திருந்து விழாவைச் சிறப்பித்துக் குழந்தைகளை வாழ்த்தியருள வேண்டுகின்றேன்.

சென்னை,
1-9-1948.

அன்பன்,
பு. இராமநாதன்.

## (4) குழந்தை தாலாட்டு விழா

### குழந்தை தாலாட்டு விழா அழைப்பிதழ்

2, நம்புலையர் தெரு,
சென்னை-1,
20-9-1949.

**அன்புடையீர்,**

கனிந்த கைகூப்பு. நிகழும் விரோதி ஆண்டு புரட்டாசித் திங்கள் 9-ஆம் நாள் (25-9-1949) ஞாயிறு மாலை 6 மணிக்குச் சென்னை முல்லா சாயிபு தெரு 20-ஆம் எண்ணுள்ள **நித்திய கல்யாணி** இல்லத்தில்

என் இளவல் நம்பி சிட்டிபாபுவின் செல்வப் புதல்வி

**உருத்திர குமாரியை**

தொட்டிலில் இட்டுத் தாலாட்டு விழா நடத்தவிருப்பதால், தாங்கள் சுற்றமும், நட்பும் சூழ வந்து குழந்தையை வாழ்த்தியருள வேண்டுகின்றேன்.

இங்ஙனம், அன்பன்,
ரா. சீனிவாச நாயுடு.

## (5) திருமணம்

*மாதிரி 1*

# வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு

அன்பரீர்,

வணக்கம். நலம். நிகழ் விக்ருதி, ஆனி 19-ம் நாள் (3-7-1950) திங்கட்கிழமை காலே 5-30க்கு மேல் 7-30 மணிக்குள்,

| | |
|---|---|
| என் இளவல் மா. குருநாத முதலியார் மூத்த மகன் **செல்வன்** **வேல்முருகனுக்கும்** | மதராஸ் திரு. கா. திருநாவுக்கரசு முதலியாா சிறிய தந்தை திரு. ஆறுமுக முதலியார் மகள் **செல்வி** **காமாட்சிக்கும்** |
| ஷையார் இளேய மகன் **செல்வன்** **மாணிக்கவாசகத்திற்கும்** | என் மைத்துனர் திரு. மொ. க. முத்து தாண்டவராய முதலியார் இளவல் சுப்பிரமணிய முதலியார் மகள் **செல்வி** **பேபிக்கும்** |

**திருவத்திபுரம்**, செல்வவிநாயகர் கோயில் தெரு 48-ம் எண்ணுள்ள மா. குருநாத முதலியார் இல்லத்தில் நடைபெறும் **வாழ்க்கை ஒப்பந்தத்திற்குத்** தாங்கள் சுற்றம் சூழ வந்திருந்து, மணமக்களை வாழ்த்த வேண்டுகிறேன்.

திருவத்திபுரம்,
**23-6-1950.**

இங்ஙனம், அன்பன்,

*மா. ஆறுமுக முதலியார்.*

மாதிரி 2

ஓம்

# திருமண அழைப்பு

சென்னை, 23-4-1948.

**இன்ப அன்பினீர் !** கனிந்த கை கூப்பு.

நித்தம் மணாளரது நிரம்பிய அருளால் என் தம்பி திண்டுக்கல் நகராட்சி ஆணையாளர் (முனிசிபல் கமிஷனர்) திரு. கி. இராமலிங்கத்தின் ஒரு தனித் திருமகளை, ஓய்வு பெற்ற மாவட்டப் பதிவாளர் (ஜில்லா ரிஜிஸ்திரார்), சிதம்பரம் உடையூர் உயர்திரு. சு. ஞானதேசிகம் பிள்ளை பி. ஏ. அவர்களின் மூத்த திருமகனுருக்கு வாழ்க்கைத் துணை நலமாக்க உறுதியாயிருக்கிறது.

**மணமக்கள் :**

| நலம்வளர் நங்கை : | நலம்வளர் நம்பி : |
|---|---|
| சிவன் அருள் | மேஜர்: ஞா. சேதுராம், பி. எஸ்ஸி. |

மணவிழா வாலாஜாபாத் இந்துமதப் பாடசாலை வள்ளலார் இல்லத்தில், நாளது சர்வதாரி ஆண்டு சித்திரைத் திங்கள் 18-ம் நாள் (30-4-1948) வெள்ளிக்கிழமை காலை பின்வரும் நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும். தாங்கள் உற்றார் உறவினர் சூழ வந்து சிறப்பித்து, மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,<br>
தங்கள் அன்பார்ந்த,<br>
கீ. சோமசுந்தர முதலியார்,<br>
மிராசுதார், கீழச்சேரி.

## நிகழ்ச்சி நிரல்

### வெள்ளிக்கிழமை 30-4-1948

காலை

| | | |
|---|---|---|
| 5 | மணி | வள்ளலார் இல்ல மாணவரது, மணநாள் விடியல் வழிபாட்டில் கலந்து கொள்ளல். |
| 9 | ,, | திருமண விழா. |
| 10 | ,, | வாழ்த்துரை வழங்கல். மாணவர் மன்றத்தின் அறிவுசால் நிகழ்ச்சிகள். |
| பகல் 12 | ,, | மண விருந்து. |

பிற்பகல்

| | | |
|---|---|---|
| 3 | ,, | மணமக்களோடு பள்ளியின் கைத்தொழிற் கோயில், நெசவுக் கூட்டம், முதலியன பார்வையிடல். |
| 4 | ,, | மணமக்கள் தலைமையில், மாணவரது பீமன் வெற்றிப் படை, விரதசாரிப் படை இவற்றின் வீரஞ்சால் நிகழ்ச்சிகள். |

மாலை

| | | |
|---|---|---|
| 5 | ,, | இன்னிசை. |
| 6 | ,, | மணமக்களோடு காஞ்சிபுரம் சென்று கோயில் வழிபாடு. |

ஓம்.

# திருமண அழைப்பு

**அன்பு கனிந்த ஐயா !**

நீலமேனி வாலிழை பாகத்தொருவன் திருவருள் துணைகொண்டு நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1981 ஆவணித் திங்கள் 14-ஆம் நாள் (30-8-1950) புதன் கிழமை விடியற்காலை 4 மணிக்கு மேல் 5 மணிக்குள் அலவன் நல்லோரையில்

என் இளவல் திரு. புலவர் மயிலை சிவமுத்துக்குமாரசாமி அவர்கள் திருமகள்

**கன்னிகா பரமேஸ்வரிக்கும்**

மயிலை திரு. கி. அமிர்தலிங்க முதலியார் அவர்கள் திருமகன்

**கா. சுப்பிரமணிய முதலியாருக்கும்**

சென்னைத் திருமயிலாப்பூர் பிரசன்ன விநாயகர் கோயில் தெரு 15-ஆம் எண்ணுள்ள திருமாளிகையின் கண், தமிழ்ப் பேராசிரியர் திரு. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்களால் செய்விக்கப்பெறும் திருமணத்திற்குத் தாங்கள் சுற்றம் சூழ எழுந்தருளி மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகின்றேன்.

சென்னை-4,<br>**20-8-1950.**

இங்ஙனம்,<br>தங்கள் அன்புள்ள,<br>மயிலை சிவநேச முதலியார்.

# மன்றல் மலர்

"சாந்தி இல்லம்,"
44, பெரிய தெரு, சேலம்,
30-8-1949.

அன்பு திகழும் பெருந்தகையீர்!

கனிவு நிறைந்த கை கூப்பு.

திருவருள் பெருந்துணையையும், எனது அரும்பெறல் தந்தையார் உயர்திரு மாணிக்க வாசக முதலியாரவர்களது அன்புசால் திருவுள்ளம் நிரம்பிய வாழ்த்தினையும் போற்றிச் செய்து, எனது அன்பின் இளவல் திருவாளர் நம்பி: மா. நடேசனுக்கு சென்னை உயர்திரு ச. தங்கவேலு முதலியாரவர்களது மகள் திருவளர் நங்கை: கமலாவை வாழ்க்கைத்துணை நலமாகக் கொள்ளப் பெரியோர்கள் உறுதி செய்தபடி நாளது விரோதியாண்டு ஆவணித் திங்கள் ௨௰-ம் நாள் (5-9-1949) திங்கட்கிழமை காலை 5-30 மணிக்குமேல் 7 மணிக்குள் சென்னை மாம்பலம் சரோஜினித் தெரு, 96-ம் எண் மணமாளிகையில் திருமணம் நடைபெறும்.

தாங்கள் உற்றார் உறவினருடன் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்பினுக்கு உரிய,
*மா. சண்முகம்.*

நிகழ்ச்சி நிரல்

| | | | |
|---|---|---|---|
| **4-9-1949 ஞாயிறு** | — | *மாலை 7-00 மணி* | மணமகன் அழைப்பு |
| **5-9-1949 திங்கள்** | — | *சிறு காலை 5-30—7-00 மணி* | திருமணம் |
| | — | *மாலை 6-00* | நாட்டியம் |

மாதிரி 5

ரெ. பரமசிவன்,
ஓவியன்.

213, தங்கசாலை,
சென்னை-1,
10-5-1950.

பெருந்தகையீர்,

வணக்கம்.

எங்கள் இருவருக்கும் நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1981 வைகாசி 15-ஆம் நாளாகிய 28-5-1950 ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்குமேல் 10-மணிக்குள் சென்னையைச் சார்ந்த திருவொற்றியூர் பழைய இராமலிங்க சுவாமிகள் சமாஜ நிலையத்தில் திருமணம் நிகழும்.

அதுபோழ்து தாங்கள் தங்கள் குடும்பத்தோடு வந்திருந்து திருமணத்தினைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தங்கள் வருகை'அன்புடன் விழையும்,
மு. சுசீலா—ரெ. பரமசிவன்,
மணமக்கள்.

மாதிரி 6

## மன்றல் அழைப்பு

அன்புடையீர்!

வணக்கம்.

திருவள்ளுவர் ஆண்டு 1980 தைத் திங்கள் 20-ம் நாள் (2-2-1949) புதன்கிழமை காலை 9 மணியளவில் புலவர் மயிலை சிவ-முத்து அவர்கள் தலைமையில் முன்னாள் அமைச்சர் உயர்திரு V. பாலகிருஷ்ணன் அவர்கள் இல்லத்தில் (மார்த்தாண்டபுரம்-புதுக்கோட்டை) நடைபெறும் எங்கள் திருமணத்திற்குத் தங்கள் நல்வரவைப் பெரிதும் விரும்புகிறோம்.

கலைச்செல்வி,
முடியரசன்.

புலவர் த. மா. திருநாவுக்கரசு
தமிழாசிரியர்
பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளி, புத்தூர்

திருச்சிராப்பள்ளி,
21-8-1950.

அன்புடையீர்,

1950 ஆகஸ்ட் 31-ம் நாள் வியாழன் காலை 9—11 மணி அளவில், சிதம்பரம் 'பிருத்வி பில்டிங்ஸில்' தோழியர் ருக்மணியை என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் பதிவுத் திருமணத்திற்குத் தங்கள் நல்வரவைப் பெரிதும் விரும்புகிறேன்.

தங்களன்புள்ள,
த. மா. திருநாவுக்கரசு.

வரவேற்பு : மாலை 4 மணி.

## (6) பூச் சூட்டல்

### பூச்சூட்டல்

24, ராமநாதன் தெரு,
வண்ணாரப்பேட்டை,
சென்னை-21.
3-6-1951.

பேரன்புடையீர்!

வணக்கம் பல.

எல்லாம் வல்லவன் பேரருளால் சேலம் திரு. மா. குமாரசாமி அவர்களின் தம்பி மா. நடேசன் துணைவியும், எனது ஒரு தனித் திருமகளுமான செல்வி: கமலாவுக்கு நாளது வைகாசித் திங்கள் 25-ம் நாள் வெள்ளிக்கிழமை (8-6-1951) காலை 9 மணிக்குமேல் எனதில்லத்தில் பூச்சூட்டல் நடைபெறும். தாங்கள் யாவரும் வந்திருந்து செல்வியை வாழ்த்த வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,
ச. தங்கவேலு முதலியார்.

## (7) கருவளர் சிறப்பு

# கருவளர் சிறப்பு

"சாந்தி இல்லம்,"
44, பெரிய தெரு,
சேலம்,
3-6-1951.

அன்புமிக்க பெருந்தகையீர் !

அகங்கனிந்த கை கூப்பு. எனது இளவற் செல்வன்: மா. நடேசனது வாழ்க்கைத் துணை நலமும், சென்னை திரு. ச. தங்கவேலு முதலியார் அவர்களது மகளுமான திருநிறைச் செல்வி: கமலாவுக்கு கர ஆண்டு ஆவணித் திங்கள் உக-ம் நாள் (6-9-1951) வியாழக்கிழமை காலை 9-மணிக்குமேல் ஆத்தூர் மாரியம்மன் தெரு, 36 எண் இல்லத்தில் கருவளர் சிறப்பு நடத்த திருவருள் துணை புரிந்திருக்கின்றது.

தாங்கள் தமரோடு வந்து சிறப்பிற் கலந்து மகிழ்ந்து செல்வியை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்பினுக்கென்றும் உரிய,
மா. குமாரசுவாமி.

## (8) மணி விழா

உ

தணிகைநாதன் தண்ணருள் வெல்க.

# அறுபதாம் ஆண்டு நிறைவு
# மணி விழா அழைப்பு

அன்புடையீர்!

நாளது விக்ருதி, ஆனி 2-ம் நாள் 16-6-1950 வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்குமேல் 10-30 மணிக்குள் திருத்தணிகையம்பதியில் தணிகைப் பெருமான் சந்நிதியில் எனக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா நடக்கப்போகின்றது. அவ்வமயம் யாவரும் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

C/o மயில்வாகன மண்டபம்,
எச்சானகோத்திர மடம்,
உச்சிமலை, திருத்தணி P.O.,
சித்தூர் ஜில்லா,
11-6-1950.

இங்ஙனம்,
தி. அ. சண்முகம்,
பிரசாரகர், மேனேஜர்,
தென்னிந்திய செங்குந்த
மகாஜன சங்கம்,
சென்னை.

## (9) முத்து விழா

உ முருகா

ம. மதுசூதனசிவம்
ம. கிருபானந்தவாரி

காங்கேயநல்லூர்,
16-5-1950.

திருவுடையீர்!

திருமுருகன் திருவருளால், நிகழும் விக்ருதி ஆனி 15-ம் நாள் (29-6-1950) வியாழக்கிழமை காலை 9 மணிக்குமேல் 11 மணிக்குள் சிம்ம ஓரையில்

**ஆயிரம் பிறை கண்ட அருட் செல்வராகிய**

எமது தந்தையார் சிவத்திரு **மல்லையதாஸ் பாகவதர்** அவர்கட்கு **முத்து விழா** (சதாபிஷேகம்) காங்கேயநல்லூரில் பழநி, சிவத்திரு சித்தாந்த சரபம் **ஈசான சிவாச்சாரிய சுவாமிகள்** அவர்கள் இனிது நிகழ்த்தி வைப்பார்கள். அவ்வமயம் அறிஞர் பலர் அறவுரை செய்வார்கள். தாங்கள் தமருடன் வந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

அன்பு நிறைந்த,
ம. மதுசூதனசிவம்,
ம. கிருபானந்தவாரி.

## (10) நவராத்திரி விழா

ஸ்ரீ:

# நவராத்திரி விழா

---

க்ஷேமம்.

எங்கள் கிருஹத்தில் நடைபெறும் நவராத்திரி கொலுவிற்கு வெள்ளிக்கிழமையும் (5-10-51), சனிக்கிழமையும் (16-10-1951) மாலையில் 5 மணி முதல் 9 வரை வந்து மஞ்சள் குங்குமம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"சுதர்சன்,"
11, ராமானுஜம் செட்டித் தெரு,
நுங்கம்பாக்கம்,
3-10-1951.

ருக்மணி,
பத்மா, புஷ்பா.

# 2. வாழ்த்தும், பாராட்டும்

## (1) புது மனை புகுவிழா

மாதிரி 1

திரு.........................................................அவர்கள்
விக்ருதி வருஷம்.........நாள் தமது புது மனையில்
புகுந்த ஞான்று அன்புடன் அனுப்பிய

# மகிழ்ச்சிக் கடிதம்

எனது இனிய அன்பரே!

நலம். தாங்கள் பல நாட்களாக சென்னையில் சொந்த மனையில் தங்கள் அனுபவமும், ஆற்றலும் மிகுந்த அலுவலகத்தை செம்மையுற நடத்த வேண்டும் என்று முயன்று வந்தீர்கள். முயன்று இன்று வெற்றியைக் கண்டுள்ளீர்கள். தங்கள் தளரா உழைப்பும் - அன்புசால் எழுத்தும் - பேச்சுமே தங்கள் வெற்றிக்கு முதல்படி என்று சொன்னால் மிகையாகாது என எண்ணுகிறேன். தங்கள் புது மனை புகுகின்ற செய்தி எனக்கு எட்டியதும் அளவிலா மகிழ்வெய்தினேன்.

தங்கள் வணிகைத் துறையில் தங்களுக்கு ஆர்வம் மிகும்படி இறையருள் புரிவானாக! உள்ளத்தில் அன்பும், அறனும் அருள அவனருள் புரிவானாக! தாங்களும், தங்கள் வாழ்வரசியாரும் மக்களும், சுற்றமும் மேன்மேலும் நலன் பல பெற்று நம் தமிழ் நாட்டிற்கு உதவும் வகையில் பண்பும், பயனும் உற்றுச் சிறக்க அருள்வானாக! புது மனை தங்கட்குச் செய்தொழில் வெற்றியும், நலம் பலவும் பொருந்த வைப்பதாக என வாழ்த்துகிறேன். வாழி! வாழி பல்லாண்டு!! வாழி நீடூழி!!!

தங்கள் நலன் கோரும்,
த. து. திரு. அரசு.

புது மாளிகையில் குடிபுகுந்த ஞான்று வாசித்தளித்த

# மகிழ்ச்சிப் பாராட்டு

## உயர்நலம் பலபெறு உத்தம!

வாழ்க! வளர்க! இன்று தங்களது உரிமை மனையில் உற்றாரும் மற்றாரும் போற்றும் வகையில் குடிபுகும் காட்சி எங்கட்குக் குறைவற்ற பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. தங்கள் உழைப்பும், உறுதியும், உற்ற நற்பண்புகளும் வளர்பிறையென வளர்ந்து வருவதுபோன்றே தங்களது செல்வ வளனும் சிறந்து வருவது கண்டு நாங்கள் பெருமகிழ் வெய்துகிறோம். 'புது மனையில் தங்கள் வாழ்வு மேன் மேலும் சிறந்தோங்குக' என்று வாழ்த்துகின்றோம். வாழி! நீடூழி!

## தன்முயற்சியால் தகைசான்ற தக்கோய்!

இளமைப் பருவத்திலேயே தாங்கள் கற்பன கற்றுக் கடவுள் நெறி நின்று நம்பிக்கையும், நாணயமும், அறிவும், திறமையும் பொருந்த வாணிபம் செய்யும் வழி அறிந்தீர்கள். வாக்குத் தவறாமையும், விடாமுயற்சியுமே துணையாகக் கொண்டு சிறு அளவில் துவக்கிய தங்கள் கம்பெனி இன்று ஆல்போல் தழைத்து, அரசு போல் ஓங்கி விளங்கும் காட்சி கண்டு களிப்பும், வியப்பும் அடையாதார் யார்? தங்களுடைய வாழ்க்கைக்கும், தளரா உழைப்பினால் - தன்னம்பிக்கையினால் - முன்னுக்கு வந்த காஞ்சி குமரன் அச்சகம் நிறுவிய தோன்றல் உயர்திரு. தவசி. குப்புசாமி முதலியார் அவர்கள் வாழ்க்கைக்கும் நிறைந்த ஒப்புமை இருப்பது கண்டு நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

## ஆற்றலும் அறிவும் நிறைந்த அண்ணல்!

இளமை தொடங்கி இன்றுவரை எங்களிடம் தாங்கள் நீங்கா அன்புகொண்டு ஆதரவுகாட்டி வருகின்றீர்கள். ஒருவர் உயர உயர, அந்த உயர்ச்சி கண்டு மகிழ்பவர்களுள் நண்பர்களே முன் நிற்பர் என்பதை உலகறியும். எனவே, இன்று தாங்கள் தங்கள் புது மனையில் குடிபுகும் இன்ப வேளையில் எங்கள் உள்ளம் இன்பத்தால் துள்ளுகிறது; வாய் வாழ்த்துகிறது; கைகள் இதோ இந்த வாழ்த்து மலரை தங்கட்கு அளிக்கின்றன. தாங்கள் குடிபுகும் புதுமனையில் பல்லாண்டு நல்வாழ்வு வாழ்ந்து சுற்றமும், பிறரும் போற்றும் நெறியில் அறம் ஓம்பி எல்லா வகையிலும் சிறந்து ஏற்றம் பெற வேண்டுமென இறைவனடிகளை வேண்டுகின்றோம்.

அன்பு நனியார்ந்த,

C. R. ஸ்ரீபதி, M. தாமோதரம் கம்பெனி,
R. K. சிட்டி பாபு, புஷ்பா மில்ஸ்.

ஓம்

காஞ்சி, குமரன் அச்சக உரிமையாளர் தவசி. குப்புசாமி முதலியாரின் பேரச் செல்வங்களும், த. கு. திரு. அரசு அவர்களின் தவச் சேய்களுமான

செல்வன். **முருகனும்**

செல்வி. **செல்வ நாயகியும்**

சிறுகரும்பூரில் (7-11-1945) காதணி பூண்டபோது வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார் வாசித்தளித்த

# காதணி விழா வாழ்த்து

**காதணி பூணும் கவினுர் செல்வங்களே வாழி, வாழி.**

என்றும் உள்ள செந்தமிழ் பயின்று, சான்ருண்மை செறிந்த ஆன்றோர்கள் பலர் நிறைந்த தொண்டை வளநாட்டின் தெய்வத் தலைமைப் பதியாம் காஞ்சியில் அறிவாற்றலும், ஆன்ற பிறபண் புகளும் அமையப்பெற்ற அந்தணாளர்க்குப் பேரச் செல்வங்க ளாய், இனிய செயல்களும், எழிலார் பண்புகளும் நிரம்பப் பெற்றுள்ள அரசரின் நற்றவ மணிகளாய்த் தோன்றித் திகழும் செல்வங்களே !

**பெருங்குடி வந்த திருநிறை மணிகளே வாழி!**

'எவ்வகை வளனும் பெற்று, எங்நாட்டவர்க்கும் உதவி புரிந்து ஏற்றத்துடன் விளங்கும் காஞ்சி நகரில் புகழாலும், பொரு

ளாலும் சிறந்தவை என்று குறிப்பிடற்குரிய சில பெருங்குடிகளில் தாங்கள் தோன்றிய நற்குடியும் ஒன்று' என எண்ணித் தங்களை வாழ்த்தும் பேறு பெற்றமைக்குப் பெருமிதம் எய்துகின்றோம். தங்கள் பாட்டனார் - தவசி வீட்டுத் தலைவர் - குமரன் அச்சக உரிமையாளர்-உழைப்பால் உயர்ந்த உத்தமர்-முயற்சியில் சிறந்த மூதறிஞர்-அறிவும், ஆற்றலும் அமைந்தவர்-யாவரும் விரும்பும் பண்பினர் - தங்கள் தந்தையார் - எங்கள் பள்ளியின் பழைய மாணவர்-இன்முகமும், நற்பண்பும், மென்மொழியும், திண் செயலும் பொருந்திச் சிறக்கும் செல்வர்-திருநிறை திருநாவுக்கரசர், சிறந்தவர்களின் செல்வங்களே! சிறப்புடன் வாழி!

## காதணி பூண்டு, கலைபல நிறைந்து, களிப்புடன் வாழி!

பெற்ற நல்லாரும், நெருங்கிய உறவினரும், நண்பர்கள் யாவரும், நல்லார்கள் பலரும் வாழ்த்த காதணி பூணும் கவினர் செல்வங்களே! நீங்கள் இருவீரும் காதணி பூண்டு இளமையின் இனிய செயல்களால் யாவரையும் மகிழ்வித்து கலைபல பயின்று, இனிய உள்ளமும், தூய எண்ணமும், மகிழ்ந்த முகமும், பயனுள்ள சொற்களும், திறமையார் செயல்களும், என்றும் பெற்று யாவர்க்கும் உதவும் நல்வாழ்வு வாழ்வீர்களாக.

. உங்களுக்கு எல்லா நலங்களும் அருளிச் செய்ய இன்ப அன்பு வடிவான இறைவனை இந்துமத பாடசாலையின் 700 சிறுவர் சிறுமிகளும், வள்ளலார் இல்லத்தின் 400 குழந்தைகளும் வாழ்த்துகின்றனர். திருவருள் துணை நிற்க.

சிறுகரும்பூர், 7-11-1945. }

தங்கள் அன்பு நனியார்ந்த,
வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார்.

## (3) திருமணம்

### மாதிரி 1

**அன்புடையீர்!**

திருமணம் வாழ்வின் மலர்ச்சி. இருபாலாருக்கும் இன்ப நுகர்ச்சி தரும் ஒரு கூட்டுறவு. இல்லறத்தின் நல்லற ஒப்பந்தம். இல்லற வாழ்க்கையே மனிதனுக்கு உவகையளித்து மனிதவியல்பின் அற்புதங் களைக் காட்டும் அனுபவசாலை. அன்பும், அறமும், அறிவும், அருளும் நிறைந்த இல்லறம் பண்புள்ள பயனளிக்கும்.

இடமும்,<br>தேதியும். }

அன்புள்ள,

.....................

### மாதிரி 2

இடமும், தேதியும்.

**அன்புடையீர்!**

தமிழ் மணம் கமழும் திருமண இதழ் வரப் பெற்றேன். காதலர் இருவரும் அன்பே அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை வாழ் வார்களாக! அன்பே உயிர் ஊற்று! அன்பே இன்பம்! அன்பே உண்மை! அன்பே கடவுள்! அன்பே அனைத்தும்! இதை அறிந் தோரே அறிந்தார்! அறியாதார் அறியாதாரே!!

மணமக்கள் இருவீரும் ஒருவிராய், ஈருடலும் ஓருயிருமாய், மலரும், மணமுமென, ஒன்றுபட்டு, அன்பும், அறனும் கலந்த இல்லற வாழ்க்கை நடாத்த இறைவன் துணைபுரிவாராக! வள்ளுவர் வகுத்துக் காட்டும் வழியினைப் பின்பற்றுவீர்களாக!

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

அன்புள்ள,

.....................

### மாதிரி 3

இடமும், தேதியும்.

**அன்பரே,**

நான் இங்கு இருப்பினும் என் மனம் அங்குத்தான் இருக்கிறது; திருமணக் காட்சியைக் காண்கிறது. தமிழ்க் கூட்டங்கள் பல கூட்டித் தமிழ் விருந்து வழங்கிய தொண்டராகிய நீங்கள் பெருவிருந்து வழங்கத் திருமணக் கோலம் கொள்ளும் காட்சி மிக மிக இனிக்கின்றது.

மணமக்கள் நலம் விழையும்,

.....................

மாதிரி 4

முத்தமிழ் முழங்குக!

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது."
—திருவள்ளுவர்.

மணமகன் :
திருவளர் நம்பி.........

மணமகள் :
திருவளர் நங்கை.........

உயர்திரு......அவர்கள் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் புரிந்து கொண்டபோது நண்பர்கள் மகிழ்ந்து படித்தளித்த

# மன்றல் வாழ்த்து மலர்

உலகிலுயிர் இயக்கமெலாம் ஒன்றையொன்று சார்ந்தே
உறையும்நெறி அன்புவழி செல்லும்இல் லறமே
இலகுபல அறங்கட்கும் அச்சாணி இஃதே
என்றிதனை உளங்கொண்டே இன்பநெறி செல்லும்
பலவளமும் கொளும் செல்வ மணமக்காள் ! பாங்காய்
பண்பு பயனெனப் போற்றும் அன்பறமும் கொண்டு
மலரினிலே மணம்போலும் மணியிலொளி போலும்
மாண்பு செறிந்தின்புடனே பல்லாண்டு வாழி.

"அத்தான் என் றழைக்காத நேரமுந்தான் உண்டா?
அத்தைமக ளைப்பிரிவா ரா அந்தப் பிள்ளை?
ஒத்தஉளம் உடையவராய் வாழ்கின்றார் இவர்கள் ;
ஒப்பற்ற தம்பதிகள்" எனப்பலரும் புகழ
மெத்தநலம் பிறர்க்குதவி மேன்மையுடன் வாழி!
மிகுசுற்றம் காணிமனை செழித்து நனிவாழி!
எத்தினமும் தமிழுக்கும் தமிழ்நாட்ட வர்க்கும்
ஏற்றபல பணியாற்றி இயல்புடனே வாழி!

இன்பமுடன் மணங்கொண்ட இருவீரும் வாழ்வில்
எத்தகைய நிலையினிலும் சமஉரிமை கொள்க ;
அன்பகலா நெஞ்சினராய் அறம்பொருளின் பத்தில்
அருமையுயிர்த் துணைவரென வாழ்ந்திடுக உங்கள்
பன்னலமார் குடும்பந்தான் பைந்தமிழ்நாட் டினிலே
பலருக்கும் எடுத்துக்காட் டாய்த்திகழ்தல் வேண்டும் ;
கன்னலென இனியமொழிக் குழந்தைகளைப் பெற்றே
கவினுரும் தமிழேபோல் பல்லாண்டு வாழ்க!

இங்ஙனம்,
மணமக்கள் நலம் விழையும்,

இடமும், }
தேதியும். }

1. ...............................
2. ...............................
3. ...............................

ஓம்

புலவர் மயிலை சிவமுத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள்

திருமகளார் திருவளர் செல்வி

# கன்னிகா பரமேஸ்வரி அம்மையை

## திரு. சி. அமிர்தலிங்க முதலியார் அவர்கள்

திருமகனர் திருவளர் செல்வர்

# சுப்பிரமணிய முதலியார் அவர்கள்

தமிழ்ப் பேராசிரியர் பாரிப்பாக்கம்

## கண்ணப்ப முதலியார் அவர்கள் திருமுன்னர்

## திருமயிலையில் (30-8-1950-இல்)

**நன்மணம் கொண்டபோது**

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார் வாசித்தளித்த

# திருமண நல் வாழ்த்து

**திருமணங் கொள்ளும் நறுமணத் திருவினீர் வாழி! வாழி!!**

ஆன்றமைந்த சான்றோர்கள் நிறைந்த தொண்டை நாட்டிலே திருவும், கல்வியும் நிறைந்து, திருவருள் நெறியில் வழுவாது ஒழுகும் நற்குடிகளில் தோன்றி, அன்புடன் வளர்ந்து, இன்புடன் கலை பயின்று, பண்புடன் திகழ்ந்து, தென்புடன் திருமணங்கொள்ளும் திருவினீர்! வாழி! வாழி! இதுவரை தனித்தனி வாழ்ந்த இருவீரும் இன்று முதல் சேர்ந்து வாழும் சிறப்புப் பெற்றீர்கள். இறைவன் திருவருளாலும், பெரியோர் வாழ்த்துகளாலும் நன் மணமக்களாக விளங்குகிறீர்கள். இருவீரும் இனிது நீடு வாழி! வாழி!

## அன்பை மணக்கும் அழகுநிறை நங்காய் !

அருட்செல்வமும், பொருட்செல்வமும் நிறைந்த அறிஞர் பெற்ற செல்வி ! பண்புகள் நிறைந்த நல்வாழ்க்கை வாழ்ந்து பலருக்கும் எடுத்துக் காட்டாக இல்வாழ்க்கை நடாத்துதற்குத் திருமணம் கொள்ளும் பெருமணச் செல்வி ! பொதுவாகக் கல்வி பாலும், சிறப்பாக நம் இந்துமத பாடசாலை பாலும் வழிவழியாக அன்பு செலுத்திவரும் பண்புள்ள நின் திருமணத்தில் கலந்து கொண்டு வாழ்த்தும் பேறு பெற்றமைக்கு மகிழ்கின்றோம். திருமணங் கொண்டு வளமிக்க வாழ்க்கைத் துணைவருடன் ஒற்றுமையாய் நல்லறம் நடாத்தி இருவீரும் புகழுடன் இனிது விளங்குவீர்களாக என உளமார்ந்து வாழ்த்துகிறோம்.

## பண்பார் நற்குடி வந்த நலம் நிறை நம்பி !

வாலாஜாபாத் குருகுலத்தின் மாணவர்கள் வளமுடன் வாழ நாடொறும் வாழ்த்தும் நற்குடிவந்த நல்லாரைத் திருமணங் கொண்டு நாங்கள் இருவீரும் நல்லறம் நடாத்துகையில் ஒற்றுமையுடைய அன்பினராய், அருள்வழிச் செல்லும் அறிவினராய், சான்றோர் போற்ற வாழும் திருவினராய், இறைவன் திருவருட் குறிப்பின் வண்ணம் வாழ்க்கை நடாத்தும் இயல்பினராய், வருவிருந்தினரை உபசரித்து, பெரியோர்களிடம் பணிவுடன் நடந்து, பேரும் புகழும் பெற்றுச் சிறப்புடன் வாழ்வீர்களாக என உள்ளங்களித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## வையத்துள் வாழ்வாங்கும் வாழவல்லீர் !

தாங்கள் இருவரும் திருமணம் கொண்டீர்கள் ; கணவனும் மனைவியும் ஆனீர்கள் ; தங்களை அன்பரும், அறிஞரும் வாழ்த்து கிறார்கள் ; ஆன்றோரும் சான்றோரும் வாழ்த்துகிறார்கள் ; வாலாஜா பாத் இந்துமத பாடசாலையின் 750 சிறுவர் சிறுமியரும், வள்ளலார் இல்லத்தின் 550 குழந்தைகளும் வாழ்த்துகிறார்கள். தங்களுக்கு நலங்களெல்லாம் நிறையவும் நன்மக்கட் பேறு சிறக்கவும், எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த பரம்பொருளைப் பணிகின்றோம்.

திருமயிலை.
30-8-1950.

தங்கள் அன்பு நலியார்ந்த,

**வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார்.**

மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம்

உயர்திரு..................அவர்கள் திருமகன்
திருவளர் செல்வன்...............
உயர்திரு......................அவர்கள் திருமகள்
திருவளர் செல்வி...............

ஆகிய இருவரும்........-இல் மணம் புரிந்துகொண்டபோது
மகிழ்ந்தளித்த

# திருமண வாழ்த்துப்பா

நல்லார் போற்றும் அறிவழகும்
நலமார் அன்பும் மிகப்பெற்றே
எல்லாப் பொருத்தங் களுமுடையீர்!
எழிலார் இன்பத் தம்பதிகாள்!
வல்லார் சொல்லும் வகைநின்றே
வளமாற் இல்லற நெறியதனில்
செல்லும் உங்கள் செயல் கண்டே
சிந்தை மிகவும் களிக்கின்றோம். 1

காதல் வாழ்வும் கலையறிவும்
கமழப் பெற்றீர் மணமக்காள்!
மோதும் துன்பம் வந்தாலும்
முறியா அன்பில் வாழியவே
சாதித் தெந்தச் செயலினையும்
சலியா தாற்றி வாழியவே!
ஓதும் இறைவன் அருள் வலியால்
உலகில் என்றும் நலமாக. 2

கண்கள் இரண்டும் ஒன்றினையே
காணும் காட்சி யதுபோல
எண்ணும் நினைவும் சொல்செயலும்
இருவர் பாலும் ஒருமித்தே
பண்ணுர் அமுத மொழியிலும்
பாலர் தம்மைப் பயந்திடுக
நண்ணும் எல்லா வளமுற்றே
நாளும் நலமாய் வாழியவே. 3

சென்னை எம். தாமோதரம் கம்பெனி பார்வையாளரும், மருகருமாகிய

திருவளர் செல்வர் **ஸ்ரீபதிக்கும்**

சென்னை மேயர். தாமோதர நாயுடு அவர்கள் இளைய மகள்

திருவளர் செல்வி **இராசீவலோசனிக்கும்**

தாரண....................கக-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை சென்னை தியாகராயநகரில் நடைபெற்ற திருமணத்திற்கு வரைந்தனுப்பிய

# வாழ்த்துரைக் கடிதம்

காஞ்சி,
4-5-1944.

**அன்புசால் நண்ப,**

வாழி! அருங்குணங்களெல்லாம் ஒருங்கமையப்பெற்று, அன்புநிலை மூண்டு நண்பிற்குரிய நலமெல்லாம் நிறைந்த நல்லவ! உன்னை நண்பனாகப்பெற்ற நாள்தொட்டு, இன்றுவரை உனது அரிய பண்புகளால் எங்களை மகிழ்வித்தாய். நீண்ட நாட்களாக நின் திருமணம் என்று என்று என விரும்பி இருந்த எங்கட்கு இச்செய்தி அளவிலா மகிழ்ச்சியைத் தந்தது. நீயும் ஆனந்தக் கடலில் மூழ்கி இருப்பாய் என்று எண்ணி இன்புறுகிறோம். உன் வாழ்க்கையில் இம்மணவிழா ஒரு இன்ப நாள். இத்திருநாளில் உன் மணக்கோலத்தைக் கண்டு மகிழும்பேறு எங்கட்கு இல்லை. வேலை மிகுதியும், வேறு செயல்களும் எங்களை இங்கே இருக்க வைத்துவிட்டன. எனினும், எங்கள் மனக் கண்கள் உன் திருமணக் காட்சியிலேயே ஒன்றிவிட்டன. உயர்வுடை ஒருவ, வாழ்க.

உன் உற்றார் உறவினர் சூழ நிற்கின்றனர்; அறிவுடைச் சான்றோர்கள் ஆசி கூறுகின்றனர்; மங்கல வாத்தியங்கள் இன்னிசை பொழியும்; எங்கள் வாழ்த்தும் உன் கையிடை நிற்கும். மணமகன் **ஸ்ரீபதியும்**, மணமகள் **இராசீவலோசனியும்** செந்தமிழும், சுவையும்போல், நிலவும் ஒளியும்போல், வீணையும் நாதமும்போல் இணைந்து மங்கல நலன்கள் பொங்கப்பெற்று வாழ்க என வாழ்த்துக் கூறுகின்றோம். உளமார வாழ்த்துவது உயர்வுடை வாழ்த்தன்றோ? ஐம்பது கல் தாண்டி, நாங்கள் காஞ்சியிலிருந்து வாழ்த்தியபோதும், உன் மணவினை குறித்து நாங்கள் இருவரும் ஒன்றிய உணர்வினராய் வாழ்த்து வழங்குகின்றோம். வாழ்த்தினை ஏற்று வாழி பல்லூழி, வாழி நின் மனை கலன், வாழி நின் மனை யறன். வாழிய வாழி வளமெலாம் நிறைந்தே.

இங்ஙனம்,
உன் அன்பு மறவாத,

*த. த. திரு. அரசு, தி. நா. நடேசன்.*

மாதிரி 8

## திருமண வாழ்த்து

நம்பி............... நங்கை............

திருமணம் கொண்ட ஒருமன மக்காள்,

வாழ்க வாழ்க. உங்கள் திருமணம் காண உள்ளம் பூரிக்கின்றோம்; உவகை கொள்கிறோம்; வாயார மனமார வாழ்த்துகின்றோம்.

நீங்கள் காதற் கோயிலில் அன்பு விளக்கேற்றி இல்லறமென்னும் நல்லறச் சோலையில் பல்லறமியற்றிப் பல்லாண்டு வாழ்க.

நீங்கள் இன்பத் தமிழும், இனிமையும் போலவும், நீலவானும், நிலவும் போலவும் அன்புற்று இன்புற்று வாழ்வீர்களாக.

"நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்" என்று கவிஞர் பாரதிதாசர் கூறியபடி உங்கள் குடும்பம் ஆல்போல் தழைத்து அரசுபோல் ஓங்கி பலவளமுடன் வாழ்க வாழ்க.

இடமும், தேதியும். அன்பன்.

மாதிரி 9

அன்பு

## மணமக்களுக்கு ஒரு வார்த்தை

மண்ணவர் வேந்தன் சென்னை-1,
ஆசிரியர் 25-2-1951.

அன்பும், அருங்குணங்களும் நிறைந்த கிருஷ்ணமூர்த்தி, வாழ்க!

தாங்கள் 25-2-1951 ஞாயிற்றுக்கிழமை எப்போது வருமோ என்று 'குமரன்' காலண்டரைப் புரட்டிக் கொண்டிருந்த அந்த நல்ல நாள் இன்று வந்து விட்டது! என் ஆருயிர் நண்பர், அன்பின் உருவம், உயர்திரு. C. R. ஸ்ரீபதி அவர்கள் ஒவ்வொரு நாளும் என்னைப் பார்த்து 'என் மருகன் திருமணத்துக்கு வரவேண்டும், தேதி ஞாபகமிருக்கட்டும்' என்று அடிக்கடி கூறியதால் நானும் காலண்டரைப் புரட்டிக் கொண்டுதான் இருந்தேன். இப்படித்தான் தங்கள் தவப் புதல்வியின் திருமண நாளை எண்ணி உயர்திரு. இராவ் சாகிப் K. முத்துகிருஷ்ண நாயுடு அவர்களும் இருந்திருப்பார்கள். ஏன்? தங்கள் துணைவியாரும் இப்படித்தான் இருந்திருப்பார்கள். மற்றும் உள்ள உற்றார் உறவினரும் இந்த நல்ல நாளை எண்ணிக்கொண்டுதான் இருந்திருப்பார்கள். ஆகையால் எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும் இந்நாள் ஒரு நன்னாள் என்பதில் சந்தேகமே இல்லை. இந்நாளில் திருமணம் செய்து கொள்ளும் உங்களை நான் மிகவும் பாராட்டுகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

திருமணம் உங்கள் வாழ்க்கையில் ஒரு திருப்பு மையம் (Turning point) ஆகும். உங்களைப்போலவே உங்களுக்கு மனைவியாகப் பொருந்திய திருமதி. பாஸ்கரி தேவியும் கல்வி, அறிவு, அன்பு, இன்சொல் முதலிய அருங்குணங்கள் நிறைந்தவர். உங்களுடைய இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாகத் திகழும் என்பதற்கு இதுவே போதிய சான்றாகும். நேர்மின் ஆற்றலும், எதிர் மின் ஆற்றலும் சேர்ந்தால்தான் மின்சார விளக்கு ஒளி வீசும். அதுபோலக்கணவனும், மனைவியும் கருத்தொருமித்து வாழ்ந்தால் தான் குடும்பம் பிரகாசிக்கும். இந்தச் சுருக்கமான தத்துவத்தை இந்தச் சமயத்தில் உங்களுக்கு நினைவூட்டலாம் என்று நினைக்கிறேன்.

அருமை நண்ப! இல்வாழ்க்கையென்பது ஓர் இன்பச் சோலை மட்டுமா? அது பரோபகாரம், தியாகம், சகோதரத்துவம், சமரசம், விருந்தோம்பல் முதலிய நற்பண்புகளில் பயிற்சி தரும் ஓர் அனுபவச் சாலையாகும். எனவே, இனி உங்கள் பொறுப்பு மகத்தானது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

நீங்களும், உங்கள் துணைவியாரும் அறிவிலும், ஆற்றலிலும் தலைசிறந்தவர்கள். படித்த குடும்பத்தினராக அமைந்த நீங்கள் 'தன் மனை, பிள்ளை, வீடு, சம்பளம்' என்று இருந்துவிடாமல் நாட்டுக்கும், மொழிக்கும், சமூகத்துக்கும் பணியாற்ற முற்பட வேண்டும். விடுதலைபெற்ற நம் குடியரசு நாடு அதைத்தான் உங்களிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. தாங்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அறிவு நிரம்பியவர்; தங்கள் துணைவியார் ஆங்கிலத்திலும், தெலுங்கிலும் அறிவு நிரம்பியவர். உங்கள் இருவரிடையே அமைந்த இந்தப் பொருத்தம் இருமொழி வழங்கும் நம் தென்னாட்டுக்கே நன்மை அளிப்பதாகும். மணமகனாகிய தாங்கள் மக்களுக்குப் பணியாற்றுவதன் மூலம் சிறந்த மருத்துவத் திலகமாக விளங்கவேண்டும் என்பதே என் ஆசை.

அகம் மலர்ந்து அன்புத் திருமணம் பூண்ட நீங்கள் இருவரும் கண்ணிரண்டும் ஒன்றையே காணுவது போலவும், "அத்தான் என் நிறைக்காத நேரமுந்தான் உண்டா? அத்தை மகளைப் பிரிவாறு அந்தப் பிள்ளை?" என்னும் கவிஞர் பாரதிதாசரின் இனிய பாட்டுக்கிணங்கவும் மனம் ஒருமித்த மணமக்களாக வாழ்வீர்களாக! உங்கள் குடும்பம் பல வளங்களும் பெற்றுத் திகழ்க! நீங்கள் உடல் நலமும், இடையறாத இன்பமும் பெற்று நீடூழி வாழ்வீர்களாக.

இங்ஙனம்,
உங்கள் அன்புள்ள,
டிண்ணவர் வேந்தன்.

## வாழ்த்து விருந்து

**பேரன்பினீர்!**

பணிவு பல. எங்கள் அன்பின் அத்தான் W. சக்கரபாணி நாயுடு அவர்கள் மூத்த புதல்வன் செல்வன்: W. C. கிருஷ்ண மூர்த்திக்கும், திரு. முத்துகிருஷ்ண நாயுடு அவர்களின் மூத்த புதல்வி செல்வி: பாஸ்கரி அம்மாளுக்கும் நடைபெற்ற திருமணத்தை யொட்டி நாளது மார்ச்சு 11வ ஞாயிற்றுக்கிழமை பகல் 11-மணிக்கு ஓர் வாழ்த்து விருந்து பாரிஷ் வெங்கடாசலய்யர் தெரு, 21-ம் எண்ணுள்ள இல்லத்தில் ஏற்பாடு செய்துள்ளோம். தங்கள் வருகையை பெரிதும் விரும்புகிறோம். வணக்கம்.

சென்னை-1,
7-3-1951.

தங்கள் அன்புள்ள,
C. பத்மநாப நாயுடு, C. R. ஸ்ரீபதி.

(4) புத்தாண்டு

## புத்தாண்டு வாழ்த்து

கர வருகை

60-B, நெல்லுக்காரத் தெரு,
காஞ்சிபுரம்,
14-11-1951.

**கவலையிலா:வாழ்க்கை வருக!**

**இன்ப அன்பினீர்!** கனிந்த கை கூப்பு.

“வயதாய் விட்டது. ஆனால், நரையில்லையே; இது என்ன விந்தை! இதற்கு என்ன காரணம்?” என்று கேட்டார் ஒருவர், பிசிராந்தையார் என்ற தமிழ்ப் பெரும்புலவரைப் பார்த்து. அதற்கு அப்புலவர் சொன்னார்; “எனக்கு மனைவியால் கவலையில்லை, மக்களால் கவலையில்லை. நான் சொன்னபடி கேட்கிருர்கள் எனது இளையவர்களும். மன்னனும் அறம் அல்லாதவற்றை என்றும் செய்வதில்லை; உணவு, உடை முதலிய எல்லா நலன்களையும் போதிய அளவு கூட்டுவித்து, எவராலும், எதனாலும் தீங்கு நேரிடாதபடி காத்து வருகிருன். உலக மக்கள் அனைவரும் அமைதியாக இன்ப அன்பு வாழ்வு வாழ வேண்டும் என்ற சிறந்த சிந்தனையுடைய தன்னலம் பேணுத் தண்ணளி நல்லோர் பலர் என் ஊரில் வாழ்கிருர்கள்” என்று விடை பகர்ந்தார்.

நாமும், நமது ஊரும், நாடும், உலகமும் இங்ஙனம் இனிக் கவலையிலாப் பெருவாழ்வு வாழ கர ஆண்டு வழிகோலவேண்டும் எனக் கருத்தார நினைக்கிறேன்.

தங்களன்புள்ள,
த. த. திரு. அரசு,
D. K. சாமி சன்ஸ், பங்குதார்கள்,
**குமரன் அச்சகம், குமரன் காலண்டர் தொழிற்சாலை,**
**காஞ்சீபுரம்.**

## (5) மணி விழா

*மாதிரி 1*

முத்தமிழ் முழங்குக

மாணவர் மன்றத் தலைவர்

### திரு டாக்டர் S. தருமாம்பாள் அம்மையாரின்

அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழாவன்று
மன்றத்தினர் மகிழ்ந்தளித்த

## வாழ்த்துப்பா

---

தமிழர் நாட்டிற் பிறப்பதுதான் தனிப்பே ருகும் எனமகிழும்
தமிழர் தலைவி தருமாம்பாள் தகைசால் செல்வி எந்நாளும்
அமுத மாகும் நம்மொழியும் அரிய கலையும் வளர்ந்திடவே
அமைவாய்ப் பற்பல பணியாற்றி அறுப தாண்டுகள் எய்தினரே.

எங்கள் மன்றத் தலைவியராய் இருந்தே யுழைக்கும் தருமாம்பாள் !
மங்கல மணிவிழா கொள்வதனுல் மனத்திற் கின்பம் நிறைந்ததுவே
சங்கத் தமிழ்வல்லவர் திரு வி. க. தலைமை தாங்கிப் பேசுகிருர்
எங்கும் புகழே கொண்டாடும் இந்நாள் நன்னுள் ஆனதுவே.

நோயால் வாடும் ஏழைகளின் நோயைப் போக்க மருந்தீவார்
'தாயே வந்து தடுத்தாலும் தமிழைப் பழிக்கும் தறுகணர்தாம்
நோயே கொள்ள இடிந்துரைப்பார் நுவலும் மைந்தர் இலரெனினும்
தாயே யாகி யாவரையும் தாங்கும் பண்பே வாய்ந்தவராம்.

மன்றங் கண்ட முதுபுலவர் மாண்பார் மயிலை சிவமுத்து
என்றும் வேண்டும் உதவிகளை இதயம் மகிழ்ந்தே புரிந்திடுவார்
குன்றே போலும் குணமுடையார் குறைபா டின்றி பெண்ணினத்தை
நன்றே போற்றும் நலமுடையார் நங்கையர் திலகம் தருமாம்பாள்.

முதுமை அவரை என்செய்யும்? முத்தமிழ் உணர்வே கொண்டதனுல்
அதிரும் துன்பம் வந்தாலும் அசட்டை செய்தே மன்றத்தின்
கதியாய் இருந்தே காத்திடுவார் கவலை ஒன்றும் இல்லாமல்
மதிபோல் விளங்கும் கலைச்செல்வி மாதர் நல்லாள் தருமாம்பாள்.

தாயே எங்கள் தலைவி, நின் தகைசால் தலைமையில் மன்றந்தான்
ஆயும் கட்டட மொன்றின்றி அமையும் நிலையினை நீயறிவாய்
மேய குறையதை நீக்கிடவும் மேலும் நின்றுணை வேண்டுகிரேம்
ஏய நிதிபல திரட்டிடுவாய் எண்ணத் தனைநிறை வேற்றிடுவாய்.

தம்மாலான உதவியெலாம் தமிழர்க் கெனவே ஈந்துவிடும்
எம்மா ணவர்மன் றத்தலைவி, ஈடில் நின்புகழ் ஓங்குகவே,
'அம்மா' என்றே அனைவோரும் அன்பாய் அழைக்கும் அன்னுய்நீ
இம்மா நிலத்திற் பல்லாண்டு இன்பத் தமிழ்போல் வாழியவே!

இங்ஙனம்,

சென்னை கோகலே மண்டபம்,
5-1-1952.

*மாணவர் மன்றத்தினர்.*

புலவர் - மயிலை சிவமுத்து அவர்களின்

## அறுபதாண்டு நிறைவு மணிவிழாவில்

அவர் உறவினர் பாராட்டியளித்த

# நல் வாழ்த்து

---

**எங்கள் குடும்ப மணிவிளக்கே !**

— ஒருகுடிப் பிறந்த பலரோருள்ளும் அறிவுடையோன் வழியே அரசும் செல்லுமென்றால் தங்கள் நெறிவழியே யாங்களும் நடக்கத் தடையோ? தாங்கள் காட்டிய தமிழ் நெறியில்—சீர்திருத்தத் துறையில் தமிழ்ப் பணியில் யாங்களும் என்றும் தொண்டாற்றுவோம் என்று இந்நன்னாளில் உறுதிமொழிகின்றோம்.

**முத்தமிழ் போற்றும் முத்துக்குமாரசாமியே !**

பளிங்கு உள்ளம் படைத்த தாங்கள் குழந்தையுள்ளங் கொண்டீர். குழந்தைகளுக்காகவே பல அரிய நூல்களை ஆராய்ந்து அவர்கள் பண்பறிந்து எளிய முறையில் விழுமிய கருத்துக்களை இளமை மனம் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைத்தும் பாடங்கற்பித்தும் வந்துள்ளீர். எளிய இனிய தமிழ் நடைக்கு நல்ல எறும்பே நற்சான்றாகும், மேலும் திருவாசகம், தேவாரம், திருப்புகழ் பாடி இன்னிசை வளர்த்தீர். நம்பியாண்டார்நம்பி, கண்ணப்பர் வரலாறு போன்ற கதைகளை நாடகமாக்கி நடித்து நாடகத் தமிழ் வளர்த்தீர். பேச்சாலும், பாடநூல்களாலும், பாடல்கள் இயற்றுவதாலும் இயற்றமிழ் வளர்த்தீர். இவை யாங்கள் அறிந்த உண்மையாதலால் உரிமையோடு எடுத்து மொழிகின்றோம். இன்றும் தாங்கள் மாணவர் மன்றத்தின் வாயிலாக முத்தமிழையும் போற்றி வளர்க்கும் முறைமை தமிழகத்தில் தங்களையன்றி வேறெவரும் ஆற்றாத அரும்பணி என்றால் மிகையாகாது. தங்கள் பணிக்கும் ஏனைய பெரியார்கள் பணிக்கும் உள்ள வேறுபாடு ஒன்றே ஒன்று. தாங்கள் இளைய மூங்கிலைப் பயன் உறும் வகையில் பக்குவமாக வளைக்கிறீர்கள். ஏனையோர் முதிர்ந்த மூங்கிலை முழுவலிமையோடும் வளைக்கின்றார்கள். அவ்வளவே.

## பொதுநலத் தொண்டே பொருளெனக் கொண்ட புண்ணியரே !

பெரும் பொருள் திரட்டுவதற்கான வாய்ப்புக்கள் எத்தனையோ வலிய வாய்த்தும் அவற்றைப் பொருட்படுத்தாது மக்களுக்கு ஆற்றும் சேவையே பெரும்பொருளாகக் கொண்டுள்ளீர். தியாக உள்ளம் கொண்ட தாங்கள் ஒருவர் எம் உறவினராக அமைந்தமை கண்டு மகிழ்வு அடைகின்றோம்.

நும்போன்று மக்கள் பணியாற்றுதற்கே இறைவனால் அனுப்பப் பட்ட தமிழ்ப் பெரியார்—மணிவிழாக் கொண்ட தலைவர் திரு. வி. க. தலைமை தாங்க; திருமதி டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையாருடனாக மணிவிழா நிகழ்வதை காணக்காணா அளக்கலாகா ஆனந்தம் அடைகின்றோம்.

## அருங்குணம் படைத்த அண்ணலே !

இவர் சுற்றத்தார், இவர் அயலார் என்று வேறு பிரித்துப் பார்க்கும் தன்மை உங்களிடத்தில் காணாத ஒன்று. குறைந்த தங்கள் வருவாயிலும் பிறர்க்குதவி புரியும் நிறைந்த உள்ளமுடையீர், தாங்கள் ஆராய்ந்து கண்ட அருந்தமிழாசான் ஆருயிர்த் தோழர் திரு. மணி-திருநாவுக்கரசரென்றால் அஃதொன்றே தங்கள் குண நலன்களுக்குப் போதிய சான்றாகும். தங்கள் அருங்குணங்கள் தமிழகமெல்லாம் மேலுஞ் சிறக்க விரும்புகிறோம்.

## பெரியார் மயிலை - சிவமுத்து அவர்களே !

தங்கள் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழாக் கண்டு பெரு மகிழ்வு அடைகின்றோம். நாட்டுக்குழைக்கும் நல்ல பெரியார் மயிலை சிவமுத்து அன்புற்று, இன்புற்று பன்னலங்களும் புகழும் நிறைந்து உடல் நலத்தோடு இன்னும் பல்லாண்டு இனிதே வாழ்ந்து வருங்கால் இளைஞர்கள் பல்லோரை இத்தகைய பணியில் பயிற்றுவித்துத் தமிழ் நாட்டைச் சிறப்பிக்கும்படி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

சென்னை,
5-1-1952.

தங்கள் அன்புள்ள,
*உறவினர்.*

## பொங்கலன்று!

மாடும் விடுதலை யோடு குதித்திடும்
மாட்டுப் பொங்கலி லே!
நாடும் விடுதலை யோடு மகிழ்ந்திட
நாமும் நலம்பெறு வோம்
சூரியன் தன்வழி மாறுகின்றான்; நீ
சோர்வெனும் வழி நீங்கி,
வீரியப் பாதையில் விரைந்திடடா நம்
விடுதலை ஓங்கு மடா.

இடமும்,
தேதியும்.
— " சுடரொளி."

## தமிழ்ப் பொங்கல்!

வாழிய பொங்கல்! வாழிய தமிழகம்!
மஞ்சளும் இஞ்சியும் வானுயர் கரும்பும்,
செந்நெல் அடிசிலும் தீங்கனி பிறவும்
நிலமகள் தந்த வளனெனப் போற்றும்,
செந்தமிழ்த் திருநாள் சிறப்புற வந்ததால்
பொங்குக பொங்கல் எங்கணும் நன்றே!

இடமும்,
தேதியும்.
—கி. அ. பெ.

## புதுப் பொங்கலிலே!

தமிழர் தம் புத்தாண்டுத் தொடக்க நாள் பொங்கல் புது நாள். இன்று இன்பமும், இசையும் யாண்டும் முழங்க, புத்தரிசியும், புது மணமும், புதுப் பொங்கலும், புது வாழ்வும் இன்ப நகை செய்ய, தமிழர் இல்லந்தோறும் மகிழ்ச்சி ஒளி வீசும் திருநாள்.

உழைப்பின் மேன்மையை, உழவின் சிறப்பை, பகுத்தறிவின் உயர்வை, தமிழரின் பண்பாட்டை அழகுற விளக்கும் நன்னாள். இந்நாள் போல் தங்கள் வாழ்க்கையில் எந்நாளும் இன்பமும், புதுமையும் இணைந்து ஒளி வீசுமாறு வாழத்துகிறேன்.

இடமும்,
தேதியும்.
அன்புள்ள,
..........................

மாதிரி 4

## பொங்கல் வாழ்த்து

அன்புடையீர்,

வணக்கம். உங்கட்கு எங்கள் பொங்கல் நல்வாழ்த்து.

தமிழர்களின் திருநாளாகிய பொங்கற் புதுநாளில் உங்கள் உள்ளங்களில் உவகை பொங்குக. வாழ்வில் வளமை பொங்குக. நாட்டில் உள்ள கல்வி வறுமையும், செல்வ வறுமையும் நீங்கி, பஞ்சமும், பசியும், துன்பமும் அகன்று இன்பம் சிறக்கவும், தமிழ் மொழி ஓங்கவும், ஆசிரியர் நிலை உயரவும், தமிழர் தம் கலை, நாகரிகம், பண்பாடு முதலியன பிற நாட்டவரால் மதிக்கப் பெறவும் பணியாற்ற நாம் நம் புத்தாண்டுத் தொடக்க விழாவிலே உறுதி கொள்வோமாக.

வாழ்க வாழ்க வளம்பல செழித்தே.

சென்னை-1,<br>14-1-1949.

திருவள்ளுவர் கழகத்தினர்.

மாதிரி 5

வாழ்க தமிழ் ! வெல்க தமிழகம் !!

## பொங்கல் வாழ்த்து

செங்கதிர்ச் செல்வனின் திகழ்மை செயலால்
மங்கல வாழ்வுடன் மாநிலம் தழைக்கவும்
துன்பமும் நீங்கிட இன்பமே பொங்கிடத்
தொன்மை சேர்முயற்சிகள், தூய்மையாம் தொண்டுகள்
தன்னிகரில்லாத் தமிழ் நலப்பணிகள்
நன்மையும் வன்மையும் நாடோறும் பயின்றிடப்
பொங்குக தீம்பால்; புரட்சி சேர் வெற்றி !
பொங்குக தைமுதல் பொலிவுடன் பொங்குக.

இடமும்,<br>தேதியும்:

அன்புள்ள,<br>......... ...........

## பொங்கல் வாழ்த்து

பொங்கலோ பொங்கலென வந்தது நம் திருநாள்
புதுநாளில் பூரிப்புக் கொள்கின்றார் தமிழர்
அங்கங்கே புத்துணர்வும் புத்தொளியும் கண்டோம்;
அரும்பஞ்சம் பட்டினியும் அடியோடு மாய்ந்தே
செங்கரும்பும் செந்நெல்லும் செழித்தோங்கி வளர்க
செந்தமிழின் சுவையமுதம் செழிக்க வுலகெங்கும்
உங்களுக்கெம் நல்வணக்கம் வாழ்த்து நவில்கின்றோம்
உயரன்பீர், வாழிபல வளமெல்லாம் பெற்றே!

இடமும், } இங்ஙனம்,
தேதியும். } ..............

ஓம்

# தமிழ்த் திருநாள் வாழ்க

1. உலகுக்கோர் திலகமென உயர்ந்ததமிழ் நாட்டில்
ஒவ்வோராண்டும் இந்தப் பொங்கலெனும் புதுநாள்,
கலகலென வந்திடும்நம் கவலையெலாம் நீக்கும்,
கறையற்ற தமிழ்நாட்டில் புதுமலர்ச்சி தோன்றும்;
புலவரெலாம் பலபொருளால் போற்றுகின்ற ஒருசொல்
பொங்கலென நினையுங்கால் பூரிப்பு மிகுமே!
நிலமீந்த புதுச்செந்நெல் உலைமீதிற் பொங்கும்
நெறிநின்ற தமிழ்த்திருநாள் வாழியவே வாழி!

2. மேற்சொன்ன வகையின்று தமிழ்நாட்டில் உண்டா?
வேந்தர்களாய் வாழ்ந்தபெரும் மாந்தர்நிலை என்னே!
காற்பங்கு வயிறேனும் நிரம்பாதே எச்சிற்
கலைநாயி னுடனுண்பார் நிலையென்று நீக்கும்?
தோற்பைபோல் சிலர்கொழுத்துத் துரும்பாக நினைக்கும்
தொழிலாளர் துயர்நீக்கும் நாளெந்நாள்? தமிழின்
பாற்பட்டமாந்தர் க, ச, த, பச் சண்டை நீங்கிப்
பல்லோரும் ஒருவரெனப் பயனுறும்நாள் எந்நாள்?

3. மெய்யாகப் பொங்கலினைக் கொண்டாடவேண்டும்;
விசையற்ற தேகத்தில் வீரம்மிக வேண்டும்;
ஒய்யாரப்பேச்சுக்கள் ஒழித்துநனி யுழைத்தே
ஒற்றுமையாய் வாழ்ந்துநம் துரிமையினைப் பெறுவோம்;
பெய்யாத மழைபெய்து பெருவளமும் பெற்றே
பெருமையுறு தமிழ்மான நெறிநிற்போம்; எவரும்
செய்யாத செயலாற்றித் திருநாட்டைக் காப்போம்;
திடமான உறுதியினை இந்நாளே கொள்வோம்.

16, இரத்தின முதலித் தெரு, } இங்ஙனம்,
சென்னை-1, } அன்புள்ள,
14-1-1950. } தணிகை உலகநாதன்.

# பொங்கல் வாழ்த்து

வந்ததுகாண் பொங்கலெனும் மாத்தமிழர் நன்னாள்!
  மகிழ்ச்சி யெனும் வெள்ளத்தில் மக்களெலாம், ஆழ்ந்தார்.
செந்தமிழர் விடெங்கும் வெண்ணிலவு காயும்;
  சீர்திருத்தம் வந்துபுகும்; சிறப்பெல்லாம் தோன்றும்;
கந்தலுடை பழஞ்சட்டிப் பானைவெளி ஏகும்;
  கவினெழுகும் புத்தாடை புதுப்பொருள்கள் சேரும்;
செந்நெல்மணிப் புத்தரிசி செழும்பாலில் பொங்கும்;
  தெருவெல்லாம் பொங்கலொலி வானத்தும் பரவும்!

* * *

உருண்டனவே பனிரண்டு மாதங்கள் அதற்குள்
  உதித்ததுவே புதுப்பொங்கல் திருநாளும் முன்போல்
இருண்டமனம் விளக்கமுறும்; இருட்டறைகள் ஒளிரும்;
  இனியசுவைக் கரும்புமுதல் எப்பயிரும் பயனும்;
வரண்டவர்தம் வயிற்றுக்கும் ஈரமுண்டாம்; நல்ல
  வகையான பாற்பொங்கல் காய்கறிகள் சுவைப்பார்!
திரண்டமணிக் காளைகளை வண்டியிலே பூட்டிச்
  சிறுவரெலாம் "பொங்கலோ பொங்க"லெனச் செல்வார்.

* * *

"பொங்கிற்றே பாலுங்கள் விட்டி"லென்பாள் பூவை;
  "பொங்கலொடும் எம்முளத்தில் பொங்கிற்று இன்பம்
இங்கெ"ன்பாள் மற்றொருத்தி; "இப்படிவா தோழா,
  எத்தனைசட்டை தைத்தாய்?" எனக்கேட்பான் சிறுவன்!
"எங்களத்தான் கொண்டுவந்தான் இருபட்டுச் சட்டை;
  என் தந்தை தந்தனவும் இரண்டெ"ன்பான் ஒருவன்!
அங்கவர்தம் ஆடலினும் பாடலினும் மிக்க
  ஆனந்தம் பூத்திடுமே! பொங்கிடுக பொங்கல்!

* * *

பொக்கைவாய்ப் பாட்டனொரு புறமிருப்பான்; நல்ல
  பூவோடு தாம்பூலம் பழங்களெதிர் தோன்றும்;
மிக்கவணக்கம்செய்து புதுமணப்பெண் நிற்பாள்;
  மேவியருகே நிற்பான் மாப்பிள்ளை தானும்;
"தக்கபெருஞ் செல்வமாகப் பேறுடனே ஆயுள்
  தழைக்க"வெனத் தாம்பூலம் தந்திடுவார் தாத்தா!
ஒக்கஇரு காதலரும் புன்முறுவல் செய்வர்;
  ஒளித்திடுவாள் ஒளிமுகத்தை நாணத்தால் நங்கை.

* * *

புறத்தழுக்கை மட்டுந்தான் நீக்குதற்கோ பொங்கல்?
  புதைந்தஅகத் தழுக்கினையும் போக்கிடவே வேண்டும்!
அறநெறியே உலகெங்கும் ஊரெங்கும் ஓங்க
  அன்புவிதை விதைத்தென்றும் ஆக்கமுற வேண்டும்,
மறத்தமிழர் மானநெறி மாண்டமிழும் போற்றி
  மாநிலத்திற் தமிழரெல்லாம் வாழ்ந்திடுதல் நன்றே!
திறத்துயரும் பொங்கல்விழா செழித்திடுக எங்கள்
  செந்தமிழ் நாட்டின்பவிழா, பொங்கிடுக பொங்கல்!

இடமும், }
தேதியும், }

அன்புள்ள,
...............

## தீபாவளித் திருநாள் வாழ்த்து

தமிழகத்துக்கு எம் தீபாவளித் தின நல் வாழ்த்துகளைக் கூறுகிறோம். மங்கள ஸ்நானம் செய்து, புத்தாடை பூண்டு, குடும்பத்துடன் சேர்ந்து கொண்டாடி எல்லோரும் இன்புறும் நந்நாள் தீபாவளி. சிறுவர் சிறுமியர்க்கு இது சிறந்த இன்பத் திருநாள்!

மறம் மடிவுற்று அறம் வளர்த்த இந்நன்னாளில் மக்கள் எங்கும் குதூகலத்துடன் அளவளாவி அன்புற்று இன்புற்று எல்லா வளமுடன் என்றும் வாழவேண்டும் என்றே எமது பிரார்த்தனை.

இடமும், }
தேதியும். }
அன்புள்ள,
.................

## தீபாவளி வாழ்த்துக்கள்

இலட்சக்கணக்கான தீபங்களின் ஜோதி வீசும் இத்தீபாவளி தினத்திலிருந்து நாட்டில் எங்கும கல்வியும், அறிவும் வளர்ந்து மக்கள் எல்லோரும் வளமும், நலமும் வாய்ந்து இன்பமுடன் வாழ்வார்களாக என்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

இடமும், }
தேதியும். }
இங்ஙனம்,
...............

## தீபாவளித் திருநாள்

குழந்தைகள் ஓடி விளையாடும் பாத ஒலி கேட்கிறது. ஒருவரை ஒருவர் 'கங்கா ஸ்நானம்' ஆயிற்று என்று விசாரித்து மகிழ்ச்சி ததும்பப் பேசுகிறார்கள். எங்கும் ஒரே சிரிப்பும், குதூகலமுமான காட்சி. இலட்சக்கணக்கான மங்கள தீபங்கள் குளிர்ச்சி மிகுந்த வெளிச்சத்தை அள்ளி அள்ளி வீசுகின்றன.

இந்த இன்பத் திருநாளில் உங்களுக்கு என் அன்புள்ள வாழ்த்துக்கள்.

இடமும், }
தேதியும். }
இங்ஙனம்,
...............

# வாழ்த்து

இன்றே நன்னாள்! இன்றே நன்னாள்!
பொன்திகழ் நாடு பூரண உரிமையை
அடைந்தே நாட்டில் அனைவரும் ஒன்ருய்
நம்மை நாமே ஆண்டிடப் பொருந்தும்
இன்றே இன்பநாள்! இன்றே இன்பநாள்!
அயலான் ஆட்சியில் அடிதடி பட்டும்
துப்பாக்கி முனையில் துன்பத் தாழ்ந்தும்
செல்வம் இழந்தும் சிறையில் கிடந்தும்
பேசவும் பாடவும் உரிமை இன்றியும்
அல்லல் உழந்து அஹிம்சா நெறியில்
பெற்ற இச்சுதந்திரம் பெரிதே! அரிதே!
இதனைக்
கட்டிக் காத்து நாம் கண்ணிய மாக
ஒருமனப் பட்டு உழைத்துத் தழைத்து
செல்வமாய் வாழ்ந்து சிறப்புற வேண்டும்;
இந்தியத் தலைவர் இராஜன் பாபு
முதன் மந்திரியார் மாண்புறு ஜவஹர்
துணை மந்திரியார் தூயநற் பட்டேல்
முதலிய தலைவர் முன்னிய ஆட்சியில்
அமைதியாய் இருந்து அன்புடன் வாழ்வோம்;
பஞ்சமும் பசியும் பறந்துபோய் நாட்டில்
செந்நெலும் பொன்னும் திரண்டு விளங்கத்
தொழிலும் கல்வியும் வணிகமும் கலையும்
எந்த நாடும் ஈடிலை எனும்படி
வளர்ந்தே வளமுடன் வாழுவோம் நம்மை
ஆளும் தலைவர்கள் ஆயுளும் நலமும்
எய்தியே என்றும் வாழிய வாழி!
தாயின் மணிக்கொடி தாழா தென்றும்
வாழி வாழியே! வாழி வாழியே!

இடமும், }
தேதியும். }

அன்புள்ள,
....................

## (இ) பிரிவும், அனுதாபமும்

### 1. பிரிவு

மாதிரி 1

### இறுதிக் கடன்

பரிதிபுரம் திருநாவுக்கரசு மடாலயத் தருமகருத்தரும், மொ. அ. சடையாண்டி முதலியாரின் தந்தையாரும், என் சிறிய தகப்பனருமான **மொ. அய்யாதுரை முதலியார்** சிலநாள் உடல் நலிவுற்றிருந்து நிகழும் சுபானு ஆண்டு கார்த்திகைத் திங்கள் 16-ம் நாள் புதன்கிழமை இரவு 2 மணிக்கு இறைவன் திருவடியிற் கலந்தனர். அது குறித்து நாளது கார்த்திகைத் திங்கள் 29-ம் நாள் இரவு நடப்பும், மறுநாள் புதன்கிழமை (15-12-1943) காலை கோனேரிராயர் குளக்கரையில் இறுதிச் சடங்கும் நடைபெறுவதால் தாங்கள் போந்திருந்து அலுவலை நடத்தி வைக்குமாறு வேண்டுகிறேன்.

திருவத்திபுரம்,
5-12-1943.

**இங்ஙனம்,**
மொ. க. முத்துத்தாண்டவராய முதலியார்.

மாதிரி 2

உ அருட்பெருஞ்ஜோதி

### சமாதி பூஜை பத்திரிகை

| தோற்றம் | அருட்பெருஞ் செல்வி | மறைவு |
|---|---|---|
| 17-9-1932 | மங்களம் | 22-9-1951 |

**அன்புடையீர்!**

நிகழும் கர ஆண்டு புரட்டாசித் திங்கள் 6-ஆம் நாள் (22-9-51) சனிக்கிழமையன்று காலை 9-மணிக்கு, எனது அருட்பெருஞ் செல்வியும், திரு. ராமசாமிப் பிள்ளை அவர்களின் மருமகளும், திரு. ரா. முருகனின் மனைவியுமான **திருவருட் செல்வி மங்களம்** அருட்பெருஞ்ஜோதியில் கலந்ததை முன்னிட்டு நாளது 3-10-51 புதன்கிழமை காலை 7-மணிக்குப் புறப்பட்டு 10-மணிக்குள் **திருவொற்றியூரில் சமாதி பூஜையும்**, அன்று மாலை 7/99, அம்மன் கோயில் தெரு, அருட்பெருஞ்ஜோதி நிலையத்தில் **திருவருட்பா பாராயணமும்** நடைபெறும். தாங்கள் வந்திருந்து செல்வியின் ஆன்மா பரிபூரண சாந்தியையடைய இறைவனை வழிபட வேண்டுகின்றனம்.

45, பெரிய தெரு,
சென்னை-21,
30-9-1951.

**தங்கள் அன்புள்ள,**
மா. மாணிக்கராஜன்

'தவசி வீடு'

60-B, நெல்லுக்காரத் தெரு,
காஞ்சிபுரம்,
24-12-1948.

அன்பு சால்பெருந்தகையீர் !

கனிவு சால் கை குவிவு.

எனது அரும் பெறல் தந்தையார் உயர் திரு. தவசி குப்புசாமி முதலியார் அவர்கள் இவ்வுலகு நீத்து சர்வதாரி மார்கழி உக (4—1—1949) செவ்வாய் அன்று, ஓராண்டு ஆகிறது. பின்வரும் நிகழ்ச்சி முறை யின்படி அன்று நினைவு நாள் போற்றப் பெறும்.

அன்பு பெருக்கி வந்து உடனிருந்து நடத்துவிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்பினைப் போற்றும்,
த. து. திரு. அரசு,
குமரன் அச்சகம்,
குமரன் காலண்டர் தொழிற்சாலை
உரிமையாளன்.

## நிகழ்ச்சி முறை

**இடம் :**
தவசி வீடு 60-B, நெல்லுக்காரத் தெரு, காஞ்சிபுரம்.

**காலம் :**
சர்வதாரி மார்கழி உக செவ்வாய் (4-1-1949).
மாலை 4-00 மணி.

**நினைவுக் கூட்டம் :**

**தலைவர் :**
திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L.

**படத் திறப்பு :**
திரு. மொ. அ. துரையரங்கனார், B.O.L., M.O.L.

**நாள்காட்டி வழங்கல் :**
திரு. அ. மு. பரமசிவானந்தம், B.O.L., M.Litt., M.R.A.S.

**நீத்தார் பெருமை :**
திரு. வி. திருஞானசம்பந்த முதலியார்
திரு. க. வச்சிரவேலு முதலியார், B.A., L.T.

பெருந்தகையீர்,

என்னுடைய பெரிய மாமனார் புழல் குருசாமி முதலியார் அவர்கள் 13-3-1949 ஞாயிற்றுக்கிழமை பகல் 10-மணிக்கு உயிர் நீத்தமை காரணமாக 27-3-1949 ஞாயிறு அன்று மாலை 4-மணிக்குமேல் நிகழ்ச்சிக் குறிப்பில் காட்டியுள்ள வண்ணம் சென்னை பெத்து நாயகன் பேட்டை, இரத்தின முதலித் தெரு, 17-ஆம் எண்ணுள்ள என் இல்லத்தில் நீத்தார் வழிபாடு நிகழும். அப்போது தங்கள் வருகை வேண்டப்படுகிறது.

இடமும், }
தேதியும். }

இங்ஙனம்,
மயிலை—சிவ. முத்து.

---

## நிகழ்ச்சிக் குறிப்பு

1. **தமிழ் இசை :**
   இசைப் புலவர் திரு சிதம்பரம் செல்வம் அவர்கள்
2. **புழல் குருசாமி முதலியார் படத் திறப்பு :**
   தமிழ்ப் பேராசிரியர் - பாரிப்பாக்கம்
   திரு. கண்ணப்ப முதலியார் அவர்கள்
3. **இரங்கற்பா அரங்கேற்றம் :**
   தமிழ்ப் பெரும் புலவர் - திரு மணி.
   திருஞான சம்பந்த முதலியார் அவர்கள்
4. **சொற்பொழிவு :**
   திரு. முடிச்சூர் - இராமச்சந்திரன்
   திரு. வல்லை - பாலசுப்பிரமணியம், B. A.
   திரு. R. அங்கமுத்து
   திரு. M. V. சிவானந்தம்
   திரு. ஆசிரியர் - தணிகை. உலகநாதன்
   திரு. புலவர், கோ. வில்வபதி
5. **நன்றி கூறல் :**
   திரு. M. R. சண்முகம் அவர்கள்

## 2. அனுதாபம்

தாயை இழந்த நண்பருக்கு ஆறுதல் கடிதம்

மாதிரி 1

அன்புடையீர்.

தங்களருமைத் தாயார் இயற்கையடைந்தமை கேட்டு மிகவும் வருத்தமடைந்தேன். தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்னும் சொல்லை எண்ணுந்தோறும் எழும் கவலை எண்ணுதற்கும் அரிதாம். ஆயினும், ஆக்கை நிலையாமையை நூலறிவானும், உலகியலறிவானும் உணர்ந்த தங்கள் உளத்தை உறுதி செய்து கொண்டு தம் பணியில் நாளும் ஊக்கம் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அன்னையார் ஆன்மா இறையடியில் இன்புற்றிருப்பதாக.

இடமும், }
தேதியும். }

தங்கள் துன்பத்தின் பங்காளி,
....................

மாதிரி 2

அருமை நண்பரே,

"..........தாயார் தமக்குற்ற பிணியினின்றும் தப்பி உய்யவேண்டும் என்று நீங்கள் பரிவுடன் பல பணி புரிந்தும், பரமன் அவர்களைத் தன்னுலகிற்கழைத்துக் கொண்டான். மனித வாழ்வில் பெருந் துன்பந் தரத்தக்க நிகழ்ச்சிகளுள் பெற்ற தாயைப் பிரிதலும் ஒன்றாதலின், உங்கட்குற்ற துன்பங் கேட்டு யானும் வருந்துகின்றேன். உங்கட்கும், தமது வாழ்க்கைத் துணைநலத்தைப் பிரிந்து வாடியிருக்கும் உங்கள் அருமைத் தந்தையாருக்கும் என் மனமார்ந்த பிரிவினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனந்த வடிவினனாகிய அம்பலவாணன் உங்கள் அன்னையாருக்குத் தண்ணருளைத் தந்து அருள்வானாக.

இடமும், }
தேதியும். }

அன்புள்ள,
....................

## தந்தையைப் பிரிந்த நண்பனுக்கு ஆறுதல் கடிதம்

**அன்புமிக்க கணபதி!**

தங்களின் தந்தையாரின் பிரிவுச் செய்தி எங்களைத் திடுக்குறச் செய்தது! மகனுக்கு தந்தை ஆற்றும் உதவி யாவும் செய்த உமது தந்தை மறைந்தமை உங்கள் உள்ளத்தை அதிகம் வாட்டும். எனினும், பிறந்தவர் இறத்தல் இயற்கை என்பதை எண்ணி, ஆறுதல் பெற்று, தந்தைக்கு மகன் ஆற்றும் செயலை - அதாவது, இவனைப் பெற்ற சீரிய தந்தை யாரோ எனப் போற்றும்படி, தக்க வழியெலாம் தமருக்கும், மற்றோருக்கும் ஆவன புரிந்து சிறப்பெய்தும்படி கோருகிறோம்.

**கணவரைப் பிரிந்த அம்மா!**

இன்ப துன்பம் என்றும் இரவு பகல்போல் மாறித்தான் வாழ்க்கையில் வந்தே தீரும். துன்பம் வந்தகாலை துன்பத்திலேயே மூழ்கியிருந்தால், அது தங்களை வாட்டுவதோடு, சூழ்ந்திருப்பவரையும் வாட்டும் என்பதை எண்ணி, துன்பத்தைப் போக்கி, தங்கள் திருக்குமாரர் - எங்களது அருமைத் தோழர் - சிறந்த வழியே சென்று வாழ்க்கையில் மேலும் வளமிக வாழ உறுதுணையாயிருந்து, அவர்தம் இன்பத்தில் தாங்களும் பங்குகொண்டு, குடும்பத்தை இன்பத் தோணியாக நடத்திச் செல்வீராக.

**தக்கவரைப் பிரிந்த தமர்!**

உங்கள் சுற்றத்தில் ஒரு சீரிய பெரியவரை - அன்பின் மிக்கவரை - இன்ப வார்த்தையே என்றும் புகல்பவரை - உங்களுக்கு உறுதுணையாயிருந்தவரைப் போன்று, அன்பின் அண்ணல் கணபதிக்குத் தேறுதல் கூறி உறுதுணையாய் இருந்து, உளம் ஒன்றி வாழ்வதே, நீங்கள் இறந்தவர்க்குச் செய்யும் நன்றியாகும் என்பதைக் கூறி, இறந்தவரின் குடும்பத்திற்கு எங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

காஞ்சி முல்லை அச்சகத் தோழர்கள்.

இடமும்,
தேதியும்.

அண்ணனை இழந்த நண்பருக்கு ஆறுதல் கூறுதல்
உயர்திரு. டாக்டர். மலைமாணிக்கம் செட்டியார் அவர்கள்
மூத்த மகனாரும், சென்னை மாணவர் மன்ற அமைச்சர்
A. M. கணபதி, M. A. அவர்கள் தமையனாரும் ஆகிய
டாக்டர் A. M. தெய்வசிகாமணிச் செட்டியார், L. M. P. அவர்கள்
மறைந்தமை குறித்து சென்னை மாணவர் மன்றத்தினர் கூறிய

# இரங்கல் உரை

பெறுதற்கு அரிய பெருமை பெற்ற உடன் தோன்றலை இழந்து உளம் துடிக்கும் நண்பர் கணபதி அவர்களே! உங்களுக்கு உற்ற பேரிடிபோன்ற இப்பெருந்துன்பம் கேட்டு எல்லையில்லாத துன்பம் அடைந்தோம்.

டாக்டர் தெய்வசிகாமணி அவர்கள் உயரிய ஒழுக்கமும், உத்தம குணங்களும் நிரம்பப் பெற்றவர். மலைமாணிக்கம் செட்டியார் அவர்களின் அருமைப் புதல்வராய்த் தோன்றி யமைக்கு ஏற்பத் தாமும் அத்தொழிலையே மேற்கொண்டு தந்தையின் புகழையும், குறிக்கோளையும் காத்த தகைசால் பண்பினர்; அன்பு, அருள், பெருந்தன்மை, இன்சொல், முதலாக நல்ல மருத்துவர் ஒருவருக்கு இன்றியமையாத பண்புகள் எல்லாம் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர்; தமிழ்ப் பண்பாட்டின் உருவமாய் விளங்கும் பேராசிரியர் மயிலை. சிவமுத்து அவர்களின் அன்புக்குரிய மாணவ மணியாய் விளங்கித் தமிழ்ப் பண்பாடு சிறக்க வாழ்ந்த தலைசிறந்த தமிழர்; பல ஆண்டுகளாகச் சென்னை நகராண்மைக் கழகச் சுகாதாரப் பிரிவில் மருத்துவராயமர்ந்து தொண்டாற்றிப் பொது மக்களின் அன்பும், ஆதரவும் பெற்றவர்.

தம் உடன் பிறந்தோரிடம் அவர் கொண்டிருந்த பேரன்பை என்னென்று எடுத்தியம்புவது! அவர்களுடைய நல்வாழ்வே குறிக்கோளாய்க் கொண்டு அவர்களைக் கல்வியில் சிறந்தோராய் — அறிவாற்றல்களில் வல்லவராய் ஆக்கி அகங் குளிர்ந்தவர்; "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி

ஊசியைக் காந்தம் இழுக்கும், உத்தமனை சிநேகிதம் இழுக்கும்.

அவையத்து முந்தியிருப்பச் செயல்'' என்று வள்ளுவர் தந்தையின் கடமையாகக் கூறியதைத் தந்தைக்குப் பின் தன் கடமையாய்க் கொண்டு காத்த கடமை வழுவாப் பண்பினர்; ''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்'' என்ற அநுபவ உரையை மாற்றித் 'தாய்க்குப் பின் தான்' என்று தம் தம்பியர் தம் அறிவு நலம் கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்ற தாயுள்ளம் படைத்த தக்கவர்.

இவ்வாறு எல்லா வகையிலும் சிறந்து குடும்பத்தின் தலைவராய் - குடும்பப் புகழுக்கெல்லாம் மூலமாய் விளங்கிய பெருந்தகையைப் பூத்துக் காய்த்துப் பழுத்துப் பயன்தரக் கூடிய தக்க பருவத்தில் இழந்த உங்களுக்கு நாங்கள் எவ்வகையில் ஆறுதல் கூறுவது என்று அறியாமல் கலங்கு கின்றோம். எனினும், நாம் யாவருமாகச் சேர்ந்து நம்மை நாமே தேற்றிக் கொண்டு ஒருவகையாக ஆறுதல் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

**அன்புடையீர்!**

'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வாரார்' என்பது நம் நாட்டு நரை மூதாட்டியின் உண்மையுரை. வாழ்க்கை மேடு பள்ளம் நிறைந்ததே யாகும். முதலியார் டாக்டர் அவர்கள் எத்தகைய குறிக் கோளுடன் வாழ்ந்தாரோ அக்குறிக்கோள் வெற்றி பெற உழைப்பதே உங்கள் கடமையாகும். தீன தயாளர் அறிவாற்றல்களில் சிறந்த அன்பர் கணபதி அவர்களே! தாங்கள்தாம் மற்றவர்கட்கெல்லாம் ஆறுதல் கூறி அவர் தம் துன்பம் துடைத்துப் பண்டுபோல் குடும்பம் புகழொளி வீசப் பாடுபட வேண்டும். அதுவே தாங்கள் தங்கள் உடன் தோன்றலுக்குச் செய்யும் கைமாறாகும். அறிவு நலம் வாய்ந்த தாங்கள் தங்கள் கடமையைத் தவறாது செய்வீர் கள் என்ற நம்பிக்கையுடையோம். ஆகவே, தாங்கள் வெற்றிப் பாதையை நோக்கி முன்னேறுங்கள் என்று உள்ளம் கலந்த அன்புடன் நாங்கள் ஆறுதல் கூறுகிறோம்.

சென்னை, இங்ஙனம்,
14-10-1950. மாணவர் மன்றத்தினர்.

## மனைவியை இழந்த நண்பருக்குக் கடிதம்

### * மாதிரி 1

சுவாமி வேதாசலம்: திருமுருகன் அச்சுக்கூடம்,
மறைமலையடிகள், பல்லாவரம்,
பொதுநிலைக் கழக ஆசிரியர். 29-12-1933.

அன்புமிக்க கண்ணப்ப முதலியாருக்கு அம்பலவாணர் அம்மை திருவருளால் எல்லா நலங்களும் மேன்மேற் பெருகுக! 23-ஆம் நாள் நீங்களெழுதிய கடிதத்தால் நுங்கள் அருமை மனைவி சடுதியில் இம்மை வாழ்வு நீத்தமை தெரிந்து இங்கு எல்லோரும் மிக வருந்தினேம். ஊழ்வினையும் நம்மவர் நன்கு வாழத் தெரியாமையுமே இங்ஙனம் நேரும் முதிராச் சாக்காடுகட்குக் காரணமாகும். உயிரோடிருக்கையிலேயே தெரிவித்திருந்தால் போய் முகத்தையாவது காணலாமே என்று இங்கே வீட்டம்மை சொல்லித் துயருறுகின்றாள். தாயில்லாக் குழந்தைகளுடன் தனியே வருந்தும் நுங்கள் நிலையை நினைந்து எமது நெஞ்சம் நெக்குருகுகின்றது! நம் ஆண்டவன் நுங்கட்கும் நுங்களருமைக் குழந்தைகட்கும் ஆறுதல் அளித்து நுங்கள் வாழ்க்கையை இனிது நடத்துகவென்று அவன் திருவடிகளை இறைஞ்சுதும்.

அன்புள்ள,
மறைமலையடிகள்.

---

* இக்கடிதத்தைச் சேர்த்துக்கொள்ள அனுமதியளித்த உயர் திரு புலவர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாருக்கு எங்கள் நன்றி.

மாதிரி 2

**திருவாளர் க. திருவேங்கட முதலியார் அவர்கள்**
**அருமை வாழ்க்கைத் துணைவியார்**
**திருமதி சாரதாம்பாள் அம்மையார்**
**பிரிவுகுறித்து வருந்திக் கூறிய**

# ஆறுதல் உரைகள்

குறுகுறு நடந்தும், சிறுகை நீட்டியும், அமிழ்தினும் இனிய மழலை மொழிந்தும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வைக்கும் நன்மகன் பிறக்கவேண்டும்—நீண்ட நாள் குறைவை நிறைவாக்க வேண்டும்—அறிஞர் பலரும் ஒருங்கு கூடி அந்நன் மகனை வாழ்த்தவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்திலே மனத்தாலும் எண்ணமுடியாத இத்துன்ப நிகழ்ச்சி ஏற்பட்டுவிட்டது என்று கேட்ட போதே துடிதுடித்து நின்றோம்; செய்வதறியாது திகைத் தோம். அன்பர் திருவேங்கடனார்க்குற்ற இவ்வளப்பெருந் துன்பத்தை எண்ணி எண்ணி உள்ளம் உருகினோம். எதிர் பாராத இந்நிகழ்ச்சி எங்கள் உள்ளத்தை உலுக்கிவிட்டது. என் செய்வோம்!

அன்பர் திருவேங்கடனார் அறிஞர்; அமைதி கலந்த வாழ்வினர்; அன்பும், அருளும், பெருந்தன்மையும் நிறைந்த பெட்பினர்; தன்னலம் கருதாமல் தொண்டாற்றும் தகை சால் உள்ளம் வாய்க்கப்பெற்றவர்; தாய்மொழியி னிடத்தும், தாய் நாட்டிடத்தும் அளவிறந்த அன்புடை யவர்; தாய்மொழிக்குற்ற இடுக்கணைச் சிறை புகுந்தேனும் காப்பேன் என்ற தியாக உள்ளமுடையவர். இத்தகைய அரும்பெருங் குணங்கள் ஒருங்கமைந்த நம் அன்பருக்கு அருமைத் துணைவியாராக வாய்த்த சாரதாம்பாள் அம்மை யாரும் எல்லா வகைகளிலும் அவர்க்கேற்ற துணைவியா ராகவே சிறந்து விளங்கினர். அன்பும் அறனும் உடையவ ராய் இல்லற வாழ்வைப் பண்பும், பயனும் உற ஆற்றியவர், விருந்துபோற்றும் விழுமிய குணமும், சுற்றம் ஓம்பும் தூய்மையும், இன்சொல்லும், நன்முகமும் வாய்க்கப்

பெற்றவர்; ஆடம்பர வாழ்வை வெறுத்து அமைதி கலந்த வாழ்வில் சிறந்தவர்; இல்லாளுக்குரிய இவ்வுயர் குணங்கள் எல்லாம் இனிதின் அமையப்பெற்ற இவ்வம்மையார் இவ்விளம் வயதில் இயற்கை எய்தியது அன்பருக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்பது மட்டுமல்ல நம் தமிழ்நாட்டிற்கும் ஒரு சிறந்த நன்மகளை-தமிழ் மகளை-தமிழ்ப் பண்பாடு ஊறிய உயர்குண மகளை இழந்தமையால் பேரிழப்பேயாகும். இவ்வாறு கையற்ற நிலையில் வருந்தும் நம் அன்பருக்கு நாம் எங்ஙனம் ஆறுதல் மொழிவது? எனினும் கடமைக்காகச் சில கூறுவோம்:

அறிவும் அநுபவமும் அமையப் பெற்ற அன்பரே! அவர்தம் குடும்பத்தினரே! வாழ்க! வாழ்க!

"உறங்குவதுபோலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்பது வள்ளுவர் வாய்மொழி. இறப்பு உறக்கத்தைப்போல் அவ்வளவு இயற்கையானது; அது குறித்து வருந்துதல் ஆகாது என்பது அப்பாட்டின் கருத்து. 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ' என்பது நம் நாட்டு நரை மூதாட்டியின் ஆறுதல் கலந்த அறிவுரை. இவ்விரு உரைகளையும் உங்கட்கு நினைப்பூட்டி நீங்களும் ஆறுதல் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறோம். நடந்ததை எண்ணிக் கவலை கொள்ளாமல் வருவதை எண்ணி வாழ்வதே அறிவுடைமையாகும். அம்மையார் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த அரிய பண்புகளை நாமும் கடைப்பிடித்து ஒழுகுவதும், அவர் உள்ளத்தில் ஊறிச் செயலில் நடைபெறாமல் விட்டுப்போன செயல்களைச் செவ்விய முறையில் செய்து முடித்தலுமே அம்மையாரின் நினைவுக்குரியதாக நாம் செய்யத் தகுந்த சேவைகள். ஆகவே, கவலையை ஒழித்துக் களிப்படையுங்கள்; புதிய ஊக்கத்துடன் செயலாற்றுங்கள்; வாழ்க்கையில் ஏற்படும் இத்தகைய சரிவுகளை வென்று வெற்றி காணுங்கள் என்று கூறி உங்களுடைய துன்பத்தில் உங்கட்குற்ற தோழர்களாகிய நாங்கள் அனைவரும் பங்கு கொள்கிறோம்.

இங்ஙனம்,
சென்னை, மாணவர் மன்றத்தினேம்.

சென்னை-1,
18-12-1949.

### ஆதரித்தவர் பிரிவுக்கு எழுதும் இரங்கல் உரைகள்

மாதிரி 1

காஞ்சி "குமரன் அச்சக" உரிமையாளர்
தவசி. குப்புசாமி முதலியார் அவர்கள்
இயற்கை எய்திய ஞான்று வாசித்தளித்த

# கையறு நிலை

**இன்றைய நிலைக்கு என்னை உயர்த்தினய்,**

இளமையிலே பெற்ற தந்தையை இழந்து வாழ்வுக்கு வழிகாட்டி காணுது வருந்திய நிலையில் தந்தையென வந்து வாய்த்து என் வாழ்விலும், தாழ்விலும் துணையாக இருந்து, என் துன்பங்களைத் துடைத்து, வேண்டுங்கால் அறிவுரை கொளுத்தி, வழுக்கி விழும் காலத்தில் ஊன்று கோல் போல் உதவி, நான் வாழ வேண்டும் என்ற எண்ணத்திலே என்றும் உதவி வந்த அண்ணுவோ! இன்று என்னை, எங்களை, உற்றவரை, மற்றவரை விட்டு மறைந்தாயே! உன் பிரிவை எவ்வாறு ஆற்ற வல்லோம்.

வியாபாரத் துறையில் நான் எவ்வெவ்வகையில் முன்னேற வேண்டும் என்பதை அடிக்கடி அறிவுறுத்தித் தன் உழைப்பே வாழ்வு நல்கும் என்பதை சொல்லிலும், செயலிலும் நன்கு அறிந்து நலம் பெறுமாறு காட்டி என்னை இன்றைய நன்னிலைக்குக் கொண்டுவந்த நல்லோய்; **'குமார விகடன் நாட்குறிப்பு'** தோன்றிய நாள் தொட்டு, சென்னையின் விற்பனையாளஞக என்னை ஏற்றுக்கொண்டு, அத்துறையில் நான் முழு வெற்றி பெறுவதற்கு வேண்டும் வழியில் உதவிய உத்தமரே! பெற்ற தந்தையினும் பேராதரவு காட்டி வளர்ப்புத் தந்தையாய் விளங்கிய, தாங்கள் இன்று எங்களை விட்டுப் பிரிந்தீர்கள். தங்கள் பிரிவு உள்ளத்தைச் சுடுகின்றது; உணர்வை அழிக்கின்றது; செய்வதறியாது சிந்தை தடுமாறுகிறது; அருமைத் திருமுகம் அடிக்கடி என் மனக் கண்முன் வருகிறது; மணிமொழிகள் காதுகளில் ஒலிக்கின்றன; அன்புள்ளம் அணைக்கின்றது.

**அண்ணல்!**

மறைந்த தங்களை மறப்பது இல்லை. தங்கள் உடல் மறைந்தாலும் உயிர் என்னை வாழ்த்தும் என்னும் உறுதியுடையேன். வாழ்நாளில் காட்டிய அன்பு நெறியைப்பற்றி வாழ என்றும் உன் அருளாட்சியால் காக்க வேண்டுகின்றேன். தங்கள் அருமைப் பணிவழியே என் வாழ்நாளைக் கழிக்கின்றேன். அதுவே என் வாழ்வின் குறிக்கோளாக அமைய அருள்வாய்.

காஞ்சி,
1-1-1948.

C. R. ஸ்ரீபதி,
தாமோதரம் கம்பெனி,
புத்தக வாணிபம், சென்னை-1.

*மாதிரி 2*

குன்றகம்பூண்டி புதூர் செங்குந்தர் குலச் செம்மல்

### பெருநிலக் கிழவர் துணி வணிகர்

## உயர்திரு. ந. குமாரசாமி முதலியார்

மறைந்தமை கேட்டு இரங்கிப் பாடிய

# துன்ப மாலை

---

சிந்தையினை வருத்துகின்ற செய்திவரக் கேட்டேன்
    திகைத்திட்டேன் அட்டாநகற் சீர்மிக்க பெரியோன்
எந்தையினும் என்வளத்தில் கருத்துடைய செம்மல்
    எழிற்**குமர சாமி**யெனும் அன்புருவம் நல்ல
குந்தர்குல விளக்கனைய குணக்குன்று மறைந்தான்
    குலத்துக்கும் நாட்டுக்கும் குறையாத துன்பம்
வந்ததனால் மனமுடைந்து எல்லாரும் இன்றே
    வருந்துகின்ற நிலைகாணின் மனம்வெடிக்கு தையோ.

அன்றொருநாள் திடுமென்று நடராசன் மறைந்தான்
    அழுந்தியவத் துன்பந்தான் இன்னுமெனை நீங்கா
தொன்றியுள நிலையினிலே உயர்பெரியோய் நீயும்
    உன்னருமை மனைவிக்கும் உற்றார்க்கும் மக்கள்
கன்றியழும் கணபதியும் கனகவல்லி தமக்கும்
    கவலைமிக மறைந்தனையே கருணைமிகு வள்ளால் !
என்றினியுன் வேதாந்த இன்னுரைகள் கேட்பேன்
    என்வாழ்விற் குறிக்கொண்ட இன்பவறி வூற்றே.

சீலமிகு பெருங்குடியில் செல்வமும்நல் லறிவும்
    தெவிட்டாத செந்தமிழில் திளைக்கின்ற உறவும்
ஏலத்தன் னருங்கிளையாய் இருப்போர்க்கும் மற்றும்
    ஏழையர்க்கும் உதவுகின்ற எண்ணமிகக் கொண்டே
ஆலமர மாய்த்தழைத்த அழகென்ன சொல்வேன்
    அண்ணலுடல் மறைந்தாலும் அருப்புகழால் என்றும்
கோலமுடன் நம்மிடையே வாழ்கின்றான் காணீர்
    குணப்பெரியோன் பெயர்வாழ்க குலம்விளங்க நன்றே.

இடமும், }
தேதியும். }

அன்புள்ள,
*தணிகை உலகநாதன், திருவத்திபுரம்.*

---

எய்தவனிருக்க அம்பை நோவானேன் ?

மாதிரி 3

வேதாந்தப் புலவர்,

## உயர்திரு. ந. குமாரசாமி முதலியார்

இறைவன் திருவடியடைந்தமை கேட்டு வருந்திப் பாடிய

# கையறு நிலைக் கவிகள்.

1. வாய்மைதவ ருமையடக் கம்பொறுமை பணிவுடைமை
தூய்மைதவ முடைமைநல்ல சொல்புகலல் முதலியவாம்
நோய்மைதராக் குணங்கள்மிக நுணுகியறிந்(து) ஒழுகியநீர்
சேய்மையுற பிணிபற்றிச் சென்றதுமோர் வியப்பன்றோ ?

2. "ஆல்எனவே கிளைத்தரசு போற்செழித்தென்(று)" அறிஞரெலாம்
சாலவும்வாழ்த்தெடுக்கு(ம்)நெறித் தாழ்(வு)அறியாமனை வாழ்க்கை
சீலமுடன் நடத்தியநீர் திடீரென்று பிரிந்ததென்ன
ஓலமிட நும்கிளைஞர் உரையீரோ பெரியீரே !

3. சுற்றத்தைப் பேணியநும் சுடர்வாழ்வு மங்கியதோ?
குற்றத்தைப் பொறுந்திடும்நும் குணவாழ்வு மங்கியதோ ?
பற்றற்றோர் தமக்கன்பு பற்றியுத வியபெரியீர்
எற்றுக்கும் உயர்வாழ்வை இனிவெறுத்து மறைந்தீரோ ?

4. தண்டமிழில் நல்லறிவும் தணியாத காதல் உண்மை
கொண்டவே தாந்தத்தும் குன்றாத அன்(பு)உலகம்
கண்டகலை களிலும்மிகக் கருத்தாக் கொண்(டு) உயிர்வாழ்ந்தீர்;
பண்டிறைவன் பதம்சேரப் பற்றியதோ உமக்குணர்வே !

5. மறைந்துவிட்டீர் எமையெல்லாம் மறந்துவிட்டீர் இறைவனடி
நிறைந்தஇன்பத் துறைநின்ற நிகரில்லாப் பெரியீர்கேள் !
சிறந்தஉங்கள் திருவாழ்வைப் பின்பற்றி ஒழுகிடுவோம்
உறைந்தெம்முள் அவ்வழியில் ஊக்கியருள் புரிவீரே !

6. வாழியநும் திருப்பெயரே ! வாழியநும் திருப்புகழே !
வாழியநீர் மகிழ்ந்தளித்த வண்மைமிகு கணபதியே !
வாழியநீர் வளர்த்த உறவாளர்குடி மென்மேலும்
வாழியநீர் இறைவனடி மகிழ்ந்தமைதி பெற்றினிதே.

இடமும்,
தேதியும். }

**இங்ஙனம்,**
டா. அண்ணாமலை முதலியார்,
ஜவுளி வியாபாரம், திருவத்திபுரம்,

# 2. வியாபாரக் கடிதங்கள்

## முன்னுரை

"வியாபாரத்தின் பொருட்டு நீ எழுதும் கடிதத்தைப் பெறும் ஒருவர் எங்ஙனம் நீ உன் கோடை விடுமுறையைக் கழிக்கத் திட்டமிட்டிருக்கின்றாய் என்பது போன்ற உனது சொந்த விஷயங்களில் அக்கரை கொண்டிருப்பதில்லை" என்று J. E. மேஸன் என்ற ஓர் ஆங்கிலப் பேராசிரியர் கூறுகிறார்.

மற்றோர் ஆசிரியர் கூறுவதாவது: 'உன் வியாபாரக் கடிதங்களை சுருக்கமானவைகளாகச் செய். வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நீண்டதும், கூறின விஷயத்தைப் பற்றியே மீண்டும் மீண்டும் கூறுவதுமான வாக்கியங்களைப் படிப்பதற்குப் போதிய நேரமில்லை; கூறவேண்டியவற்றைச் சட்டெனக் கூறுக.''

வியாபாரத்தின் புகழைக் கெடுப்பதற்கு வாடிக்கைக்காரர்களுக்கு எழுதும் கடிதங்களிலுள்ள இலக்கணப் பிழையுள்ளதும், பொருத்தமற்றதுமான ஓரிரண்டு சொற்களே போதும்; சிரத்தையற்ற ஏற்பாடுகளைப் பற்றியும், சாமர்த்தியமில்லாத காரியாலயத்தைப் பற்றியும் அவ்வளவு எளிதில் ஓர் கெட்ட எண்ணம் பிறர் மனதில் பதிந்துவிடும்.

ஒரு வியாபாரத்தில் வெற்றி காண வேண்டுமாயின், மிக ஜாக்கிரதையாகவும், மரியாதையுடனும், உடனுக்குடனும் கடிதப் போக்குவரவை நடத்துவது அவசியம்; சிறந்த நடையானது உன் கடிதத்திற்கு ஓர் கௌரவத்தைத் தேடித் தருகின்றது. இவ்வாறு வசீகரிக்கத்தக்க முறையில் எழுதுவதற்கு சுலபமான வழிகள் எதுவும் இல்லை; உயர்தரத் தமிழ் எழுத்தாளர்களின் கட்டுரைகளையும், சிறந்த பேச்சாளர்களின் சொற்பொழிவுகளையும்,

பத்திரிகைகளின் தலையங்கங்களையும் நன்கு படித்துப் படித்துத்தான் இவ்விதமான கடிதங்களை எழுத முடியும்.

சிறந்த நடையில் எழுதப் பழக்கிக் கொள்வதைக் காட்டிலும், கற்பனை செய்து பார்க்கும் திறன்தான் இன்றியமையாதது; உன் கடிதத்தைப் பெறுபவரின் நிலையை நினைத்துப் பார்; உன் கடிதம் தெளிவாகவும், மரியாதையுடனும் உள்ளதா என்பதை நிச்சயம் செய்து கொள்; விலாசதாரின் மனதைப் புண்படுத்த வேண்டும் என்ற ஓர் உறுதியான மனப்பான்மை இருந்தாலொழிய, அத்தகைய வாக்கியங்களை பயன்படுத்துதல் கூடாது — — ஆனால், தொந்தரவு விளைவிக்கும் அத்தகைய கடிதங்களை எழுதி விட்டுப் பின்னர் அநேகர் வருத்தமுற்றிருக்கின்றனர். எனவே, கோபமுண்டாக்கக் கூடிய கடிதங்களை எழுதுவதற்கு முன்னர் பல முறை சிந்தித்துப் பார்த்தலவசியம். அபவாதத்திற்காகவும், தூஷணைக்காகவும் அத்தகைய கடிதங்கள் சட்ட நடவடிக்கைக்குக் காரணமாகவும் கூடும்.

வியாபார மார்க்கத்தில் சில சமயங்களில் "கண்டிப்பான கடிதங்கள்" எழுதச் சந்தர்ப்பங்கள் எழுவது வழக்கமே; ஆனால், அவ்வாறு நாம் எழுதும்போது தகுந்த சான்றுகள் கிடைக்காமற் போகக்கூடுமாதலால், நாம் வெகு ஜாக்கிரதையாகவும், பத்திரமாகவும் இருப்பது நலம்.

உதாரணமாக, வாய் மொழியாக இரண்டணா விலையுள்ள 1,000 அறுபது பக்க நோட்டுப் புத்தகங்களை நாம் அனுப்பச் சொல்லியிருக்க, ஓர் ஸ்தாபனம் 1,000 நாற்பது பக்க நோட்டுப் புத்தகங்களை நமக்கு அனுப்பிவிட்டதாகக் கொள்வோம்; இச்சந்தர்ப்பத்தில் உண்மையில்லை என்பதாகக் கூறும் கோபமுண்டாக்கக் கூடிய கடிதத்தை எழுத முற்படுவது தவறு; நாம் அறுபது பக்க நோட்டுப் புத்தகங்கள்தான் கேட்டோம் என்பதற்கு எழுத்து வாயிலாக எவ்விதச் சான்றுமில்லை; தவிர, ஒருக்கால் தவறுதலாக 60 பக்கத்திற்குப் பதிலாக 40 பக்க நோட்டுப் புத்தகங்கள் அனுப்பப்பட்டிருக்கலாம்; எனவே, நம்முடைய முதற் கடிதம் கண்யமான முறையில் இருத்தல்

அவசியம்; பின்வருமாறு கடிதத்தையும், கவரையும் **"சொந்தப் பார்வைக்கு"** எனக் குறிப்பிட்டு, ஸ்தாபனத்தின் மானேஜருக்கே விலாசமிட்டனுப்புவது இன்னும் சிறந்த முறையாகும்.

<u>பத்திரமான முறை:</u>

## சொந்தப் பார்வைக்கு

(கவரின் மேலும் இவ்வாறு குறிப்பிடுக)

15, பெரிய தெரு,
திண்டிவனம்,
15-5-1951.

உயர்திரு. R. செல்வரங்கம் அவர்கள்,
மானேஜர்,

S. R. முதலியார் அண்ட் சன்ஸ்,
காகித வியாபாரிகள்,
சென்னை-1.

**ஐயா,**

சென்றவாரம் தங்கள் பிரதிநிதியொருவர் இரண்டணா விலையுள்ள 1,000 அறுபது பக்க நோட்டுப் புத்தகங்களை அனுப்புவதாக என்னிடம் கூறிச் சென்றார். ஆனால், எனக்கு நாற்பது பக்க நோட்டுப் புத்தகங்கள்தாம் அனுப்பப்பட்டுள்ளன; வேலை மிகுதியினால் தவறு ஏற்பட்டிருக்குமென நினைக்கிறேன்.

எனவே, அறுபது பக்க நோட்டுப் புத்தகங்களுக்கு தற்போதுள்ள நோட்டுப் புத்தகங்களை மாற்றிக்கொள்ளவோ அல்லது எனக்கு வந்துள்ள 40 பக்க நோட்டுப் புத்தகங்களுக்கு நியாயமாக விலையில் குறைத்துக் கொள்ளவோ கோருகிறேன். இல்லாவிடில், தாங்கள் சம்மதப்படின், சரக்கைத் திருப்பவும் தயாராக இருக்கிறேன். அவசரமான தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
*K. இராமன்.*

இவ்வாறின்றி மேற்படி கடிதத்தைப் அடுத்த பக்கத்தில் உள்ளதுபோல் எழுதினால், ஏராளமான தொந்தரவுகளில் நாம் சிக்கிக்கொள்ள நேரிடும்.

பத்திரமில்லாத முறை:

15, பெரிய தெரு,
திண்டிவனம்,
15-5-1951.

S. R. முதலியார் அண்ட் சன்ஸ்,
காகித வியாபாரிகள்,
சென்னை-1.

ஐயா,

தங்கள் ஸ்தாபனம் மிகமிக வேடிக்கையாக இருக்கிறது; வாடிக்கைகாரர்களிடம் மலிவான விலைகளைக் கூறிவிட்டுப் பின்னர் சரக்குகளை அனுப்பும்போது அவர்களைப் பெரிதும் ஏமாற்ற முயற்சிக்கிறீர்கள். உதாரணமாக, தங்கள் பிரதிநிதியொருவர் இரண்டணா விலையில் 1,000 அறுபது பக்க நோட்டுப் புத்தகங்களை அனுப்புவதாகக் கூறியிருக்க, தற்போது தாங்கள் என்ன எண்ணத்துடன் அதே விலையில் 1,000 நாற்பது பக்க நோட்டுப் புத்தகங்களை அனுப்புகிறீர்கள்? இந்நாணயங்கெட்ட செய்கையை நினைக்கும்பொழுது என் தலை சுற்றுகின்றதே! தக்க பரிகாரத்தை உடனடியாகச் செய்யுங்கள். தங்களிடம் வியாபாரம் செய்யும்பொழுது முன் ஜாக்கிரதையாக நடந்து கொள்வதற்காக இச்செய்கையைப்பற்றி நான் என் நண்பர்களிடமும் கூற எண்ணியுள்ளேன்.

இங்ஙனம்,
K. இராமன்.

மேற்படி கடிதம் மிகவும் அபாயகரமானது எனலாம். ஓர் ஸ்தாபனத்திற்கு விலாசமிடப்பட்டுள்ளதால், அங்குள்ள பலராலும் அக்கடிதம் பார்க்கப்படும், மேலும், தக்க சான்றுகளும் நமக்கில்லையாதலால், அக்கடிதத்தைப் பெற்ற அந்த ஸ்தாபன உரிமையாளர்கள் மான நஷ்டத்திற்காகச் சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டால், பின்னர் நாம் வருந்த நேரிடும். எனவே, மிகவும் பத்திரமான முறையில் கடிதங்களில் எல்லாச் சொற்களும் பயன்படுத்தப்பட வேண்டும்.

**சுருங்கக் கூறின், பிழை இல்லாதிருத்தல், சுருங்கக் கூறல், தெளிவாகக் கூறல், மரியாதை, விரைவு இவைகளே வியாபாரக் கடிதத்திற்கு வெகு முக்கியமாகத் தேவை.**

வியாபாரக் கடிதங்கள் எழுதும் தாள்களில் கம்பெனியின் பெயர், முகவரி, தந்தி எண், டெலிபோன் எண் முதலியவை அச்சிட்டுக் கொள்வது உண்டு. அவ்வாறு அச்சிடப்படும் செய்திகள் கடிதத்தின் இடத்தையும். அழகையும் கெடுத்துவிடாதபடி அந்தத் தாளின் அளவுக்குத் தக்கபடி பெரிய எழுத்துக்களிலோ, சிறிய எழுத்துக்களிலோ அச்சிடுவது நல்லது. வியாபாரக் கடிதங்கள் அனுப்பும் உறைகளிலும், கார்டுகளிலும் அனுப்புவோர் முகவரிகளை அச்சிட்டு வைத்துக் கொள்வதும் வழக்கம்.

வியாபாரக் கடிதங்களில் அந்தந்த இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை (Punctuation Marks) இடுவதுடன் ரூ. அ. பை. என்னும் கட்டங்களில் குறிக்கவேண்டிய எண்களைத் தெளிவாக எழுதவேண்டும். சரக்குகளின் எண்ணிக்கையைச் சரியாக எழுத வேண்டும். இதனைக் கவனிக்காமல் இருப்பின் கடைக் கணக்குகளில் விபரீதங்கள் ஏற்படுவதுண்டு. விலை விவரங்களும், சாமான்களின் பெயரும் தொடர்ந்து எழுதாமல் ஒன்றன்கீழ் ஒன்றாக வரிசையாக எழுதுதல் வேண்டும். இல்லையேல் ஒரு பொருளின் விலை மற்றொரு பொருளுக்கு உரியதுபோல் படிப்பவருக்குக் குழப்பத்தை உண்டாக்கும்.

---

**1. புதிய கடை வைத்திருப்பது பற்றி அறிவிப்புக் கடிதம்.**

# குமார விலாஸ்,

**242, தங்கசாலைத் தெரு, சென்னை - 1.**

டெலிபோன் :
4263

உயர்ந்த
பட்டு ஜவுளி
ரகங்களுக்கு
சிறந்த இடம்

தந்தி :
குமார்

நெ. : 9/51. தேதி : 6-10-1951.

உயர்திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
15, மேட்டுத் தெரு,
சென்னை - 1.

அன்புடைய ஐயா,

வணக்கம்.

நன்னாளாகிய இன்று மேலே குறிப்பிட்ட விலாசத்தில் நாங்கள் ஒரு ஜவுளிக் கடை ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எங்கள் கடைக்குத் தங்கள் மேலான ஆதரவை அடிக்கடி எதிர்பார்க்கிறோம்.

எங்களிடம் உள்ள சரக்குகள் யாவும் உயர்தரமாகவும், நூதனமாகவும் தருவிக்கப்பட்டவை. சேலம், திருப்பூர், கரூர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கொள்ளேகால், காசி, காஷ்மீர் போன்ற இடங்களிலிருந்து வரும் பலவகையான கண்ணைக் கவரும் ஜவுளித் தினுசுகள் எம் கைவசம் உள்ளன. ஏற்கனவே ஜவுளி வியாபாரத்தில் இருபது வருஷங்களுக்கு மேல் எமக்குள்ள அனுபவத்தைக் கொண்டு உத்தரவாதமான கெட்டிச் சாயமுள்ள சரக்குகளே வாங்கி விற்பனை செய்து வருகிறோம். எங்களிடம் உள்ள சிப்பந்திகள் நேர்மையும், நாணயமும் மிகுந்தவர்கள்.

---

தடி எடுத்தவனெல்லாம் வேட்டைக்காரனா?

தாங்கள் ஒரு முறை நேரில் வந்து எம் கடையைப் பார்வையிட்டு ஆதரிக்க வேண்டுகின்றோம். தற்போது எங்கள் கைவசமுள்ள ஜவுளி வகையறுக்களின் விலைப்பட்டி ஒன்றை இத்துடன் அனுப்பியுள்ளோம்.

வந்தனம் பல.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள,
சி. வே. சுப்பராயன்,
உரிமையாளர்,
குமார விலாஸ்.

இணைப்பு :
1 விலைப்பட்டி.

## 2. விலைப்பட்டி (Catalogue) அனுப்பும்படி கேட்டல்.

25, காளித் தெரு,
கள்ளிக்கோட்டை,
4-6-1951

எம். தாமோதரம் கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
9/286, எஸ்பிளனேட்,
சென்னை-1.

அன்புள்ள ஐயா,

வணக்கம்.

நான் எங்கள் ஊரிலிருக்கும் நூல் நிலையத்துக்காக சில புத்தகங்கள் வாங்க விரும்புகிறேன். தங்கள் கைவசமுள்ள புத்தகங்களைப்பற்றி முடிவாக வெளியிட்டுள்ள விலைப்பட்டியொன்றினை என் முகவரிக்கு அனுப்பியுதவ வேண்டுகின்றேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
ஆர். சிட்டிபாபு.

### 3. மேற்படி கடிதத்துக்குப் பதில்.

எம். தாமோதரம் கம்பெனி
புத்தக வியாபாரிகள்

நெ.: 847

9/286, எஸ்பிளனேட்,
சென்னை-1,
6-6-1951.

திரு. ஆர். சிட்டிபாபு,
25, காளித் தெரு,
கள்ளிக்கோட்டை.

**அன்பு நிறைந்த ஐயா,**

வணக்கம்.

தங்கள் 4-6-1951 கடிதத்துக்கு நன்றி. எங்கள் கம்பெனிப் புத்தக விலைப்பட்டி—முடிவாக வெளியிடுவது—அச்சில் இருக்கிறது. அச்சிலிருந்து வெளியானவுடன் தங்களுக்கு ஒரு பிரதியைத் தவறாமல் அனுப்புவோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
அன்புள்ள,
சி. ஆர். ஸ்ரீபதி,
எம். தாமோதரம் கம்பெனி.

### 4. வி. பி.-பி.யில் சில புத்தகங்கள் அனுப்புமாறு ஒரு புத்தகக் கம்பெனிக்குக் கடிதம் எழுதுதல்.

**A. கந்தசாமி**
புத்தக வியாபாரி
நெ. 23/வி. பி. பி.

75, ஐயன் கடைத் தெரு,
தஞ்சாவூர்,
5-8-1950.

**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,**
தியாகராயநகர்,
சென்னை-17.

**ஐயா,**

வணக்கம்.

தாங்கள் வெளியிட்டுள்ள கீழ்க்காணும் நூல்கள் எங்கள் ஊரில் பலருக்குத் தேவையாக இருப்பதால், அவற்றை விரைவில் ரயில்வே பார்சலில் அனுப்பி, ரயில்வே ரசீதை, பில்லுடன் வி. பி. பி.-யில் அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

(1) தி லிட்டில் லிப்கோ டிக்ஷனரி
(இங்கிலீஷ்-இங்கிலீஷ்-தமிழ்) ... 100 பிரதிகள்
(2) பொது விற்பனை வரி (தமிழில்) ... 50 ,,
(3) எட்டாம் வகுப்புத் தமிழ் உரை நூல்... 150 ,,
(4) ஜெய் ஹிந்த் வாய்பாடு (தமிழில்) ... 200 ,,

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
A. கந்தசாமி.

## 5. தம் கைவசமுள்ள சரக்குகளின் விலை விபரத்தை மொத்த வியாபாரி சில்லரை வியாபாரிக்குத் தெரிவித்தல்.

சி. மோகனசுந்தரம்,
மளிகைக் கடை.

154, ராசப்ப செட்டித் தெரு,
சென்னை-3,
24-9-1951.

திரு. A. இராமலிங்கம் அவர்கள்,
கண்ணன் கம்பெனி,
காஞ்சி.

அன்புடையீர்,

வணக்கம்.

தங்கள் 28-9-1951 கடிதத்தில் கேட்டுள்ளபடி எங்கள் கைவசமுள்ள சரக்குகளின் விலை விவரம் கீழே கொடுத்துள்ளோம். அவற்றைப் பார்த்துத் தங்கள் தேவைக்கு கடிதம் எழுதுமாறு வேண்டுகின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மிளகாய் (82 ராத்தல் கொண்ட பாரம் 1-க்கு) | ... | ரூ. | 59 | 0 | 0 |
| தனியா (80 ராத்தல் கொண்ட பாரம் 1-க்கு) | ... | ரூ. | 60 | 0 | 0 |
| புளி (500 ரா. புதியது முதல் தரம்) | ... | ரூ. | 80 | 0 | 0 |
| ஷை (500 ரா. இரண்டாவது தரம்) | ... | ரூ. | 70 | 0 | 0 |
| மஞ்சள் (500 ரா. கொண்ட பாரம் 1-க்கு) | ... | ரூ. | 135 | 0 | 0 |
| உளுத்தம் பருப்பு (60 படி கொண்ட மூட்டை 1-க்கு) | | ரூ. | 75 | 0 | 0 |
| வெள்ளைப் பூண்டு பாரம் 1-க்கு | ... | ரூ. | 165 | 0 | 0 |

தங்கள் தேவைக் கடிதம் கிடைத்ததும் உடனடியாகச் சரக்குகளை அனுப்ப ஏற்பாடு செய்கிறோம். மேற்கண்ட பொருள்கள் யாவும் புதியவை; உயர்தரமானவை. குறைந்த விலையில் தற்போது கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் மேலான ஆதரவை நாடும்,
சி. மோகனசுந்தரம்.

தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும்.

**6.** அனுப்பிய சரக்குகளை கெட்டுப்போனதென்று புகார் செய்தல்.

உரிமையாளர்,
மாணிக்கம் மளிகைக் கடை,
மண்ணடி,
சென்னை-1.

56, மண்டித் தெரு,
இராணிப்பேட்டை,
6-6-1950.

**ஐயா,**

தாங்கள் சென்ற வாரம் ரெயில்வே பார்சலில் எனக்கு அனுப்பிய சரக்குகள் மிகவும் மட்டரகமான நிலைமையில் இருக்கின்றன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவுமல்லா மல் சரக்குகள் சரியாக அடுக்கிக் கட்டப்படவும் இல்லை. பார்சலின் ஒரு பக்கம் சரிந்து சரக்குகள் சிதைந்து விட்டன. இந்தச் சரக்கை எங்கள் வாடிக்கைக்காரர்கள் ஒருவரும் வாங்கமாட்டார்கள். எனவே இக்கடிதம் கண்டதும் தாங்கள் அதற்குப் பதிலாக வேறு உயர்ந்த சரக்குகளை அனுப்பி வைக்கவும். இல்லையேல் நான் வேறு ஒரு கம்பெனிக்கு ஆர்டர் அனுப்ப நேரும் என்பதை இதன் மூலம் தெரி வித்துக் கொள்கிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
சி. முருகேச முதலியார்.

**7.** மேற்படி கடிதத்துக்குப் பதில்.

## மாணிக்கம் மளிகைக் கடை,

14, கஜேந்திர முதலித் தெரு,
**மண்ணடி, சென்னை-1.**

உரிமையாளர்:
**எ. வேதாசலம் செட்டியார்.**

எண் : 22/51
தேதி : 7-6-1950.

உயர்திரு. சி. முருகேச முதலியார் அவர்கள்,
56, மண்டித் தெரு,
இராணிப்பேட்டை.

**அன்புடைய ஐயா,**

தங்கள் 6-6-1950 கடிதத்துக்கு மிகவும் நன்றி.

தங்களுக்கு அனுப்பிய சரக்குகள் மட்டரகமானவை என்று அறிந்து வருந்துகிறோம். தயவு செய்து அவற்றைத் திருப்பி எங்க ளுக்கு அனுப்பி வைக்கவும். வண்டிச் செலவு, பாக்கிங் செலவு

எல்லாவற்றையும் எங்கள் கணக்கில் குறைத்துக் கொள்ளவும். தங்கள் பார்சல் வந்தவுடனே புதிய உயர்ந்த சரக்குகள் அனுப்பி வைக்கிறோம். முன்னர் தவறுதலாக அனுப்பியதற்குப் பொறுத் தருளுக.

வந்தனம் பல.

அன்புள்ள,
எ. வேதாசலம் செட்டியார்,
உரிமையாளர்,
மாணிக்கம் மளிகைக் கடை.

8. லஞ்சம் கொடுத்த ஒரு வியாபாரியின் பிரதிநிதியைப் பற்றி அந்த வியாபாரிக்குத் தகவல் அறிவித்தல்.

ஸ்ரீராம் எலக்டிரிகல் கம்பெனி,
15, மௌண்ட் ரோட்,
சென்னை-2.

தந்தி :
ஸ்ரீராம்.

856074.

எண் : 104-A. தேதி : 17-6-1946.

தி. மகாதேவன் எலக்டிரிகல் கம்பெனி,
128, எஸ்பிளனேட்,
சென்னை-1.

அன்புடைய ஐயா,

உங்கள் பிரதிநிதி திரு. உமாபதி என்பவர் நேற்று இங்கு வந்தார். தாங்கள் அனுப்பிய சரமான்கள் சென்ற தடவை அனுப்பியதுபோல் இல்லாமல் மட்டரகமாக இருந்தன என்று 5-6-1946-ல் (நெ. 43-A) நாங்கள் எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து ஒன்றும் நடவடிக்கை எடுக்காதிருக்கும்படி வேண்டினார். அதற்காக ரூ. 200 லஞ்சம் கொடுக்க முன் வந்தார். நாங்கள் அதை மறுத்துவிட்டோம்.

தங்கள் பிரதிநிதியை இனி எங்களிடம் அனுப்பாமல் இருப்பதே அவர் மதிப்புக்குத் தக்கதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களுக்குச் சேரவேண்டிய தொகைக்கு இத்துடன் N. 06856 எண்ணுள்ள செக் ஒன்று அனுப்பியுள்ளோம். இதனை எங்கள் கணக்கில் வரவு வைத்துக்கொண்டு எம் கணக்கைத் தீர்த்துவிட வேண்டுகின்றோம்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
உங்கள் உண்மையான,
ஏ. சந்திரசேகரன்,
ஸ்ரீராம் எலக்டிரிகல் கம்பெனி.

இணைப்பு: N. 06856 எண்ணுள்ள ரூ. 500-6-9-க்கு சென்னை இந்தியன் பாங்க் செக் ஒன்று.

தலை இடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.

**9. புத்தகங்களின் விலையேற்றத்தைக் குறித்து ஒரு கம்பெனி தமது ஏஜெண்டுக்கு எழுதிய கடிதம்.**

## தி லிட்டில் பிளவர் கம்பெனி

புகழ்பெற்ற லிப்கோ புத்தகங்கள் வெளியிடுவோர்

ஸ்தாபிதம்: 1929

தந்தி: லிப்கோ, சென்னை
"பூரங்கம்,"
8, ரங்கநாதன் ரோட்,
சென்னை-17,

எண் : 44. 4-6-1951.

உயர்திரு. எஸ். ராஜகோபாலன் அவர்கள்,
புத்தக வியாபாரி,
48, பெரிய கடைத்தெரு,
தஞ்சாவூர்.

ஐயா,

நாங்கள் சமீபத்தில் தங்களுக்கு அனுப்பியிருந்த சில புத்தகங்களின் விலைகளைப்பற்றிய தங்களின் 1-6-1951 கடிதம் கிடைக்கப்பெற்றோம். நன்றி பல.

காகித விலையேற்றமும், அச்சடிக்க ஆகும் செலவு, பைண்டிங் செலவு முதலியன அதிகமானதும்தான் சென்ற ஆண்டைவிட இவ் வருடம் சில புத்தகங்களின் விலைகள் கூடுதலாக இருப்பதற்குக் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எடுத்துக்காட்டாக, சென்ற வருடத்தில் காகித விலை பவுண்டு சுமார் 6½ அணா என்றும், தற்போது பவுண்டு 11 அணாவிற்கு மேற்படி காகிதம் கிடைப்பதரிதாக இருப்பதும் தாங்கள் அறிந்ததே. இதன்படி கணக்கிட்டால், இம்முறை நாங்கள் எங்கள் புத்தகங்களின் விலைகளைச் சற்றே அதிகரித்திருப்பது மிக நியாயமானதே என்பது தங்களுக்கு நன்கு விளங்கும் என நினைக்கிறோம்.

தங்களின் தொடர்ந்த ஆதரவை என்றும் நாடுகிறோம்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
கே. நடமூர்த்தி,
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி.

**10.** தமக்குச் சேரவேண்டிய தொகையை விரைவில் செலுத்தும்படி ஒரு வியாபாரி மற்றொரு வியாபாரிக்குக் கடிதம் எழுதுதல்.

வே. சோமசுந்தரம்
காகித வியாபாரம்

13, இராஜ வீதி,
மதுரை,
6-8-1950.

உரிமையாளர் அவர்கள்,
சுகுமார் கம்பெனி,
காகித வியாபாரிகள்,
வந்தவாசி.

அன்புள்ள ஐயா,
வணக்கம்.

எங்கள் 15-4-1950 கணக்குப்படி எங்களுக்குச் சேரவேண்டிய தொகை ரூ. 250/-ஐ சென்ற நான்கு மாதமாகக் கொடுக்காமல் காலதாமதம் செய்து வருகிறீர்கள். அதனால் எங்கள் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படக்கூடும். ஆகையால், தயைசெய்து இன்னும் இரண்டொரு வாரங்களில் கடனைத் தீர்க்க வேண்டுகின்றோம்.

வந்தனம் பல.

தங்கள் பதிலை எதிர்பார்க்கும்,
*வே. சோமசுந்தரம்.*

**குறிப்பு :**

கடனைத் தீர்க்கும்படி வாடிக்கைக்காரருக்கு எழுதும் கடிதங்களில் முதன்முதலாக எழுதும் கடிதங்களை எத்தகைய பயமுறுத்தலும் இல்லாமல் நயமாக எழுத வேண்டும். சட்ட சம்பந்தமான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலொழிய அதுபோன்ற சொற்களைக் கொண்டு பயமுறுத்துவது நாகரிகமன்று. கடன்காரர் உண்மையாகவே கடனை மொத்தமாகச் செலுத்தும் நிலைமையில் இல்லாவிடில், சில குறிப்பிட்ட தவணைகளில் அதைச் செலுத்தும்படி அவருக்குத் தெரிவிப்பது நல்லது.

கடன்காரர்களில் மூன்று வகையினர் உண்டு. வாங்கிய கடனை உடனடியாகத் திருப்பிக் கொடுப்பவர்களும், மெதுவாகக் கொடுப்பவர்களும், கடனைத் திரும்பக் கொடுக்க விரும்பாதவர்களும் உண்டு. மெதுவாகக் கடனைத் திருப்பிக் கொடுப்பவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க

வேண்டும். கடனைத் தீர்க்கும்படி எழுதுவதற்கும் சிலர் வருத்தப்படுவதுண்டு. ஆகையால், கடனைத் தீர்க்கும்படி எழுதுங் கடிதங்களில் அவரவர்கட்குத் தக்கபடி மரியாதைச் சொற்களும் நயமான வாக்கியங்களும் கலந்திருக்க வேண்டும்.

உதாரணமாக, முதல் தடவையில்

"………தாங்கள் எங்களுக்கு 15-4-1950 தேதி கணக்குப்படி ரூ. 250 தரவேண்டியதாக இருக்கிறது என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேம், விரைவில் ஆவன செய்யும்படி வேண்டுகிறேம்."

என்றும், அடுத்த தடவையில்

"…………தாங்கள் எங்களுக்குச் சேரவேண்டிய ரூ. 250-க்கு இத்துடன் கணக்குப்பட்டியை அனுப்பியுள்ளோம். எங்கள் வியாபாரத்துக்கு பணமுடை அதிகமாக இருப்பதால் தயை செய்து விரைவில் பணத்தை அனுப்ப வேண்டுகின்றேம். ஒரே தடவையில் தங்களால் இத்தொகையை அனுப்பமுடியாவிடில் ரூ. 125/- வீதம் இரண்டு தவணைகளில் செலுத்திவிட வேண்டுகின்றேம்."

என்றும் எழுதுவது நலம்.

மற்ருெரு விதம் :

"வணக்கம்.

சென்ற 15-4-50-ல் தங்கள் பேருக்கு அனுப்பிய பட்டி எண் 250-ல் குறிப்பிட்டபடி தங்களால் எங்களுக்குச் சேரவேண்டிய தொகை ரூ. 250-0-0. இது விஷயமாகத் தங்களுக்குப் பல தடவைகள் கடிதம் எழுதியும் இன்னும் காலதாமதம் செய்து வருகிறீர்கள். கடந்த பன்னிரண்டு மாத காலமாக தாங்கள் கணக்கை தீர்த்துக் கொள்ளாததுபற்றி மிகவும் வருத்தப்படுகிறேம். இந்தக் கடிதம் கண்ட ஒரு மாத தவணைக்குள் தங்கள் கடனைத் தீர்த்துக் கொள்ளாவிடில் சட்ட பூர்வமான நடவடிக்கைக்குள்ளாவீர்கள் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேம்."

---

# 3. ஆட்சிநெறிக் கடிதங்கள்

## முன்னுரை

அரசாங்கத்தாரிடமிருந்து ஒரு சலுகையைப் (உரிமையைப்) பெறுவதற்கும், குறிப்பிட்ட ஒரு பொருள்பற்றிப் புகாரைத் தெரிவிப்பதற்கும், பொது மக்கள் சம்பந்தமான செய்திகளை அரசாங்கத்தாருக்குத் தெரிவிப்பதற்கும் எழுதும் கடிதங்கள் **ஆட்சிநெறிக் கடிதங்கள்** எனப்படும். பொது மக்களின் கடிதங்களுக்கு அதிகாரிகள் தெரிவிக்கும் பதில்களும், ஓர் அதிகாரி மற்றோர் அதிகாரிக்கு எழுதும் அலுவற் கடிதங்களும், வேலைக்காக எழுதும் விண்ணப்பங்களும் இப்பகுதியில் அடங்கும்.

ஆட்சிநெறிக் கடிதங்கள் நம் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவை. அவை நன்கு கவனித்தும், யோசித்தும் எழுதப்படல் வேண்டும்; கால தாமதமின்றி, உடனுக்குடன் எழுதப்பட வேண்டும்.

சில சமயங்களில் மனிதன் தன் உரிமை பிறரால் பாதிக்கப்படும்போது, அரசாங்கத்தின் பாதுகாப்பை நாடுகின்றான். அரசாங்கத்தார் மக்களுக்குச் செய்யும் பொதுக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மனிதன் அரசாங்கத்தாருக்கு எழுத நேருகிறது.

எனவே, ஒவ்வொருவரும் சமூகத்தில் தம் உரிமைகள், கடமைகள் பற்றிய சட்ட திட்டங்களை அறிந்திருக்கக் கடமைப்பட்டவராவர். அத்தகைய அறிவே தன்னுரிமையைப் பிறர் பாதிக்காதிருப்பதற்கும், தான் பிறருக்குரிய கடமைகளைச் செய்வதற்கும் உதவி புரியும் கருவியாகும். அரசாங்கத்துடன் செய்யும் கடிதப் போக்குவரவில் வெற்றி பெறுவதற்கு இவ்வறிவு மிகவும் இன்றியமையாததாகும்.

ஆட்சிநெறிக் கடிதங்களை எழுதும்போது, பின்வரும் குறிப்புகளை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் :

1. கடிதங்கள், சுற்றறிக்கைகள், நமூனக்கள், மேற்பதிவுகள், உத்தரவுகள் முதலியவை கடிதம் பெறுவோர் அனுப்பிய கடிதத்தின் தேதியும், மேற்குறிப்பு எண்ணும் (reference number) தெளிவாக இருக்கும்படி குறிப்பிடப்பட வேண்டும்.

(உ-ம்.)

(i) உங்கள் கடிதம் எண் 1525 அ.1. 15-1-1951 தேதியிட்டது.

(ii) உங்கள் மேற்பதிவு எண் 3345 இ. 3. 4-6-1952 தேதியிட்டது.

(iii) உங்கள் சுற்றறிக்கை எண் 38(1)/51 அ. பிரிவு. 6-7-1951 தேதியிட்டது.

எனவே, மேற்படி கடிதங்களுக்கு நாம் எழுதும் பதில் கடிதங்களிலும் அக்கடிதங்களின் மேற்குறிப்பு எண்களையும், தேதியையும் மறவாமல் சரியாகக் குறிப்பிட வேண்டும்.

2. ஓர் அரசாங்க அலுவலகத்தினின்று அனுப்பப்படும் கடிதத்தில் பின்வருமாறு அனுப்புவோரின் பெயரும், பதவி முதலியனவும் குறிப்பிடப்பட வேண்டும் :

அனுப்புதல் :
**ப. முருகன், எம்.ஏ.,**
மாவட்ட ஆணையாளர்,
தஞ்சை.

நகலுக்களிலும், மேற்பதிவுகளிலும் (endorsements) எழுதுபவரின் பெயர் பெரும்பாலும் குறிப்பிடப்படுவதில்லை.

3. நாம் ஒரு அதிகாரிக்குக் கடிதம் எழுதுவதாயின், அன்னாரின் பதவியொன்றையே குறிப்பிட வேண்டும்; பெயரைக் குறிப்பிடலாகாது.

(உ-ம்.)

மாவட்ட ஆணையாளர் அவர்கள்,
தஞ்சை.

**குறிப்பு** :— அதிகாரிகள் அல்லாத ஏனையோருக்கு அனுப்பப்படும் கடிதங்களில் அவர் பெயரே அவசியம் எழுதப்படல் வேண்டும்.

4. கடிதத்தில் எழுதவேண்டிய செய்தியைத் தெளிவாகக் கடிதத்தின் தொடக்கத்திலேயே எழுதிவிடுவது நல்லது.

5. ஓர் அலுவலகத்தினின்று அனுப்பப்படும் கடிதத்தில் அதிகாரியின் கையெழுத்தின் கீழே அவரது பதவியையும் குறிப்பிடுதல் வேண்டும்.

6. கடிதத்துடன் வைத்து அனுப்பப்படும் மற்ற விஷயங்களின் (enclosures) விவரமும் எழுதுபவரின் கையெழுத்தின் கீழே இடது பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றுவோர் தமது நேரத்தைப் பொன்போல் போற்றிக் கொள்ள வேண்டும்; அவர்களது நேரம் பொது மக்களின் நிதிக்குச் சமமாகும். எனவே, அவர்கள் அலுவலகத்துக்கு வரும் பொது மக்களின் கடிதங்களை அனாவசியமான காலதாமதமின்றி, உடனுக்குடன் கவனிப்பது சிறந்த பொறுப்பும், கடமை

யுமாகும். அதுபோலவே, பொது மக்களும் தத்தமக்கு வரும் அரசாங்கக் கடிதங்களுக்குக் காலம் தாழ்த்தாமல் பதில் எழுதி அரசிய லாருடன் ஒத்துழைக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். சிறுசிறு அற்ப விஷயங்களுக்காக அவர்களுக்குக் கடிதம் எழுதித் தொல்லை கொடுக்கக் கூடாது.

இன்று நம் நாடு விடுதலை பெற்ற திருநாடு; எல்லோரும் இந் நாட்டு முடிசூடா மன்னர்கள். இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமக னும் தான் ஒழுங்கான முறையில் ஆளப்படவேண்டுமென்றும், தன் உரிமைகள் யாவும் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் விரும்புவான். எனவே, இவற்றைப் பாதிக்கக்கூடியனவற்றைப்பற்றிய புகார்களை யும், குறைபாடுகளையும் ஒழுங்கான முறையில் குறிப்பிட்ட அதிகாரி களுக்குக் கடிதத்தின் மூலம் முறையிட வேண்டும்.

**இத்தகைய கடிதங்கள் தெளிவாகவும், சுருக்கமாகவும், உறுதியுடையன வாகவும், மரியாதையடங்கியதாகவும் அமைந்திருக்க வேண்டும்.** எல்லாச் செய்திகளும் தொடர்பாகக் குறிப்பிடப்பட வேண்டும். பொதுவாக, அரசாங்கத்தாரிடமிருந்து நமக்குப் பதில் கிடைக்கச் சற்றுக் கால தாமதம் ஆகலாம். ஆகையால், அவர்களுடைய பதிலைப் பெறுவதில் பொது மக்கள் நிதானம் கொள்ள வேண்டும்.

ஆட்சியாளருக்குக் கடிதம் எழுதுவோர் பொறுமையை அனுசரிப் பதுடன், தம் கொள்கையில் விட்டுக் கொடாமல் உறுதியுடையவராக வும், கடிதத்தில் கெஞ்சிக் கேட்கும் தன்மையில்லாமல் பெருமிதமும், மரியாதையும் தோன்ற எழுதுபவராகவும் விளங்க வேண்டும். தன் காரியத்தைத் தவறுமல் சாதித்துக் கொள்ளும் சாமர்த்தியமும், நுண்ணறிவும் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆட்சியாளருக்கு எழுதும் கடிதத்தில் சொற்களைக் கவனித்து எழுத வேண்டும். அச்சொற்கள் நம் கொள்கையை வெற்றிபெறச் செய்வனவாக அமைதல் நலம். பிழைபடச் சொற்களை எழுதுவது நம் காரியத்திலும் பிழையை உண்டாக்கும். நமது திறமைக்கும், கல்வியறிவுக்கும் எத்தகைய இழிவும் உண்டாகாதபடி முன்னரே ஒரு முறை எழுதி ஒழுங்குபடுத்திப் பின்னர் வேறு தாளில் அதனைப் பெயர்த்தெழுதியனுப்புவது நல்லது.

ஓர் அதிகாரிக்கு எழுதும் முதல் கடிதம் எப்போதும் சுருக்கமாக விஷயத்தை எடுத்துக் கூறக்கூடியதாக இருக்க வேண்டும். நடையும் மிகவும் மரியாதையும், நிதானமும் பொருந்தியதாக இருத்தல் வேண்டும். அவ்வதிகாரியிடமிருந்து உனக்குப் பதில் வரவில்லையேல், மீண்டும் கடிதம் எழுத வேண்டும். இம்முறை சற்று உறுதியுடன் எழுதலாம். நீ வேண்டும் விஷயம் மிக முக்கியமானதாக இருப்பின் பதில் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, அதற்கு முடி

வான தீர்ப்பைப் பெறும் வரையில் கடிதம் எழுதிக் கொண்டே இரு; அதைப்பற்றி உனக்குத் தெரிந்த முழு விவரங்களையும் குறிப்பிடு.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் உன்னையொத்த மற்றொருவனுக்குக் கிடைக்கும் உரிமைகள் உனக்கு இல்லையேல், சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் முறையிடுதல் வேண்டும். முறையிடும் போது சரியாக நடத்தப்படும் மனிதனின் பெயரைக் குறிப்பிடலாகாது; அதற்காக மேலதிகாரிகளைப் பேட்டி காண்பதற்கும் விண்ணப்பிக்கலாகாது; உன் காரியம் நேரிய முறையில் வெற்றிபெறும் வரையில் உன் வழக்கைக் கைவிடலாகாது.

ஓர் இலாகாவிலிருந்து உனக்குத் திருப்திகரமான பதில் கிடைக்காத பட்சத்தில் வேறு வழியை நாட வேண்டும். உன் வழக்கை இன்னும் மேலதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமாயின், உன் வழக்குக்கு ஆதாரமான அத்தாட்சிகளையும் புலப்படுத்த வேண்டும். பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் இவ்விஷயம் சட்ட சபையிலும் எடுத்துக் காட்டப்படும் நிலைமை உண்டாகும் என்று தெரிவிக்கலாம். உன் தொகுதியில் உள்ள சட்ட சபை அங்கத்தினருக்கும் இதனைத் தெரியப்படுத்தி ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். இத்தகைய நிலைமையை அற்பமான - உபயோகமற்ற விஷயங்களில் உண்டாக்கிக் கொள்ளலாகாது. உன் அடிப்படையான உரிமையைப் பாதிக்கும் விஷயங்களிலேயே இச்செயலை மேற்கொள்ளலாம்.

மற்றொரு வழியிலும் ஒருவன் தான் கோரும் உரிமையைப் பெறுவதற்கு வழியுண்டு. குறிப்பிட்ட அதிகாரியிடம் எப்படிப்பட்ட விரோத மனப்பான்மையும் கொள்ளாமல் நீ விரும்புவது நேர்மையான உரிமை என்பதை அவருக்கு விளக்கி அவ்விஷயம் பத்திரிகையிலும் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்னும் தலைப்பில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவிக்கலாம்.

மேற்கூறிய எல்லாத் தன்மைகளும், உண்மையும், உறுதியும் பொருந்த எழுதுபவனே காரியத்தில் வெற்றி பெறலாகும். அரசியல் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளும் தமக்கு வரும் கடிதங்களை அநுதாபத்துடனும், விரைவாகவும், சரியாகவும் கவனித்து வேண்டியனவற்றை செய்யக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அத்தகைய மனப்பான்மையில்தான் நாட்டு மக்கள் நலமாகவும், இன்பமாகவும் வாழ முடியும். பொது நலத் துறையில் ஏற்படும் துன்பமும், கால தாமதமும் இதனால் நீங்கும். பொது மக்களின் நேரத்தை வீணாக்காத **'துரித ஆட்சிநெறிக் கடிதங்கள்'** வழங்கும் பொற்காலமும் உதயமாகும்.

---

**1.** பள்ளிக்கூடத்தில் தன் மகனைச் சேர்த்துக் கொள்ளுமாறு தலைமையாசிரியருக்கு விண்ணப்பம்.

இடமும், தேதியும்.

தலைமை ஆசிரியர் அவர்கள்,
நகராண்மைக் கழகப் பள்ளி,
கொண்டித்தோப்பு, சென்னை-1.

ஐயா,

என் மகன் இளங்கோ என்பவனைத் தங்கள் பள்ளியில் சேர்க்க நான் மிகவும் ஆவலாய் இருக்கிறேன். தங்கள் பள்ளியின் சிறும், சிறப்பும் நன்கு அறிவேன். அவனுக்கு வீட்டிலேயே இரண்டு ஆண்டு களாய் அவன் தாயார் பாடம் கற்பித்திருக்கிருள். இன்று அவன் மூன்ரும் வகுப்புக்குத் தகுதியுள்ளவனுக இருப்பான் என்று நினைக் கிறேன். அவன் வயது ஆறு.

தங்கள் அன்பான பதிலைப் பார்த்து அவனை நேரில் அழைத்து வரலாம் என்றிருக்கிறேன். தயை செய்து அவனை என்றைக்குப் பள் ளிக்கு அழைத்து வரலாம் என்பதைத்தெரிவித்தருள வேண்டுகின்றேன்.

வந்தனம் பல.

தங்கள் உண்மையுள்ள,
M. சதாசிவம்.

**2.** தாய் தன் மகளுக்கு உடல் நலமின்மையால் விடுமுறைக்கு விண்ணப்பம் எழுதுதல்.

இடமும், தேதியும்.

தலைமை ஆசிரியை அவர்கள்,
இராமகிருஷ்ண பெண்கள் பள்ளி,
வெங்கட்டராமய்யர் தெரு, சென்னை-1.

அம்மையீர்,

தங்கள் பள்ளியில் ஆரும் வகுப்பில் படிக்கும் என் மகள் கே. என். இந்திராவுக்கு இரண்டு நாட்களாய் ஜுரமும், தலைவலியும் ஏற்பட்டிருப்பதால் இன்று அவளைப் பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை. தயை செய்து அவளுக்கு இன்றையிலிருந்து மூன்று நாட்களுக்கு விடு முறை அளிக்க வேண்டுகின்றேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
கே. என். பத்மாவதி,
பெண்ணின் தாயார்.

**3. தன் மகன் பள்ளிப் படிப்புக்குப் பின் செய்ய வேண்டிய தொழிலைப்பற்றித் தலைமை ஆசிரியரை ஆலோசனை கேட்டல்.**

இடமும், தேதியும்.

தலைமை ஆசிரியர்,
போர்டு உயர்நிலைப் பள்ளி,
போளூர்.

அன்புமிக்க ஐயா,

என் மகன் ஆர். குணசேகரன் தங்கள் பள்ளியில் ஆறும் பாரத்தில் படித்தவன். சென்ற அரசாங்கப் பொதுத் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் மிகச் சிறந்த வகையில் பதில் எழுதி இருக்கிறான் என்பது என் அபிப்பிராயம். தேர்வில் நிறைய மார்க்குகளுடன் வெற்றி பெறுவான் என்று நினைக்கிறேன்.

தங்கள் அரிய போதனா சக்தியே அவன் அபிவிருத்திக்குக் காரணமாகும். அவன் ஆறு வருஷங்களுக்குமேல் தங்கள் பள்ளியில் படித்திருக்கிறான். அவன் மனப்போக்கையும், அறிவின் வளர்ச்சியையும் தாங்கள் நன்கு அறிவீர்கள். அவனுடைய பள்ளிப் படிப்பு இவ்வாண்டுடன் முடிவதால், அவனை எந்தத் துறையில் பயில வைக்கலாம் என்பதைத் தெரிவித்துதவ வேண்டுகின்றேன்.

என் மகனுடைய கல்வி வளர்ச்சியில் கருத்துக்கொண்ட தங்கள் அன்பான பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

வந்தனம் பல.

தங்கள் உண்மையுள்ள,
எஸ். ராமநாதப் பிள்ளை.

**4. உபகாரச் சம்பளத்துக்காகத் தலைமையாசிரியருக்கு விண்ணப்பக் கடிதம்.**

இடமும், தேதியும்.

தலைமை ஆசிரியர்,
இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளி,
சௌக்கார்ப்பேட்டை, சென்னை-1.

ஐயா,

வணக்கம்.

நான் தங்கள் பள்ளியில் ஐந்தாம் பாரம் படிக்கும் மாணவன். சென்ற மாதத்தில் எங்கள் தந்தை இறந்த செய்தி தங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். எங்கள் குடும்பத்தின் தலைவராகவும், காப்பாளராகவும் இருந்த அவர் பிரிவால் நாங்கள் மிகவும் வறுமையை அடைந்தோம். எங்களுக்கு ஒரு சிறிய வீடும், இரண்டு ஏக்கர் வயலும் இருக்கின்றன. அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் எங்கள் குடும்பச் செலவுக்கே போதவில்லை; கடன் தொல்லை வேறு.

இந்த நிலையில் ஆதரவற்றவனக இருக்கும் எனக்குத் தாங்கள் அருள்கூர்ந்து இலவசக் கல்வி போதனை அளிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

எங்கள் ஏழ்மையைக் காட்டுவதற்கு அண்மையில் வசிக்கும் ஒரு பிரமுகரிடமிருந்து ஒரு சான்றிதழ் வாங்கி இத்துடன் அனுப்பியுள்ளேன்.

வந்தனம் பல

இங்ஙனம்,
தங்கள் கீழ்ப்படிந்துள்ள மாணவன்,
எஸ். தலசேகரன்.

## 5. பாரதி நாள் கொண்டாட மாணவர்கள் விடுமுறை கேட்டல்.

ஈரோடு,
10-8-1951.

தலைமை ஆசிரியர்,
மகாஜன உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு.

**அன்புடைய ஐயா**

நாளை நமது தமிழ்நாட்டுத் தனிப்பெருங் கவிஞர் பாரதியாரின் திருநாளாகும். நாடு விடுதலைபெறச் சுதந்திர கீதங்கள் இயற்றி எல்லோருக்கும் நாட்டுப்பற்றை ஊட்டிய அப்புலவனின் திருநாளை நம் பள்ளியில் எல்லோரும் கொண்டாடி மகிழ்வது நலமாகும். எனவே, அருள்கூர்ந்து, நாளைமட்டும் நமது பள்ளிக்கு விடுமுறையளித்து விழாவைக் கொண்டாடுமாறு செய்ய வேண்டுகின்றோம்.

வந்தனம் பல

இங்ஙனம்,
வணக்கமுள்ள,

1.

2.

3.

—பள்ளி மாணவர்கள்.

## 6. ஊதியம் அதிகரிக்க வேண்டி தலைவருக்கு விண்ணப்பம்.

தலைவர், இடமும், தேதியும்.

அருட்பெருஞ்சோதி அச்சகம்,
100, அம்மன் கோயில் தெரு,
சென்னை-1.

ஐயா,

அடியேன் தங்கள் அச்சகத்தில் கடந்த 3 வருஷங்களாக அச்சுக் கோர்க்கும் தொழிலாளி. நான் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் இது வரையில் ஊதியம் பெற்று வந்தேன். இத்தனைக் காலமாகத் தங்கள் அச்சகத்தில் என் கடமையைத் தங்களுக்குத் திருப்திகரமாகவே ஆற்றி வந்தேன் என்பதை அறிவீர்கள்.

எனக்கோ நான்கு குழந்தைகள். பெரிய பையன் உயர்நிலைப் பள்ளியொன்றில் படிக்கிறான். விலைவாசிகள் விஷம்போல் உயரும் இக்காலத்தில் தாங்கள் தரும் ஊதியம் எங்களுக்குப் போதவில்லை. என்பதை மிகவும் வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகையால், தயை செய்து என் சம்பளத்தை ரூ 50-லிருந்து ரூ. 60 ஆக உயர்த்தி உதவ வேண்டுகின்றேன். இந்தப் பேருதவிக்கு அடியேன் என்றென்றும் நன்றியறிதலுடையவனாவேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் வணக்கமுள்ள ஊழியன்,
த. சொக்கலிங்கம்.

## 7. வேலைக்கு விண்ணப்பம் எழுதுதல் (1).

5, புலவர் நமசிவாயர் தெரு,
வண்ணாரப்பேட்டை,
சென்னை-21,
15-8-1950.

மானேஜர்,

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
சென்னை-17.

ஐயா,

வணக்கம்.

தங்கள் கம்பெனியில் ஓர் எழுத்தாளர் (குமாஸ்தா) தேவை என்று கேள்விப்பட்டு இந்த விண்ணப்பத்தை எழுதி அனுப்பலானேன்.

நான் பள்ளி இறுதித் தேர்வில் (S. S. L. C.) 1949-ல் வெற்றி பெற்ற வன். அதற்கு மேல் படிக்க எனக்கு வசதி இல்லை. எனக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் பேசவும், எழுதவும் நல்ல பயிற்சி உண்டு. அரசாங்கத் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் நல்ல அம்சங்கள் பெற்றிருக்கிறேன்.

'டைப் ரைடிங் லோயர்' தேறி இருக்கிறேன்; சுருக்கெழுத்திலும் பயிற்சி பெற்று வருகிறேன். சென்னை இராஜன் கம்பெனியில் எழுத்தாளனாக ஆறு மாதம் தற்காலிக அனுபவம் பெற்றுள்ளேன். என் நற்சாட்சிப் பத்திரங்களை இத்துடன் தங்கள் பார்வைக்கு அனுப்பியுள்ளேன்.

என்னைத் தாங்கள் தங்கள் கம்பெனியில் ஓர் எழுத்தாளனாக வேலைக்கு அமர்த்திக் கொள்ளின், தங்களின் உண்மையுள்ள ஊழியனாக நடந்து கொள்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
மா. வேல்முருகன்.

## 8. வேலைக்கு விண்ணப்பம் எழுதுதல் (2).

அனுப்புதல் :
சி. த. சாமிநாதன்,
6, பிள்ளையார் கோயில் தெரு,
கிரிதரன்பேட்டை.

பெறுதல் :
தலைவர்,
வடாற்காடு ஜில்லா போர்டு நிலையம்,
வேலூர்.

ஐயா,

வடாற்காடு மாவட்ட ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பணியாற்றச் சில ஆசிரியர்கள் தேவை என்று சென்ற 5-6-1949 சுதேசமித்திரனில் பார்த்தேன். அப்பதவிக்கு நானும் ஒருவனாக விண்ணப்பித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

நான் ஆறும் பாரம் வரையில் படித்திருக்கிறேன். ஆரம்ப ஆசிரியர் பயிற்சி பெற்று நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றுள்ளேன். சாரண ஆசிரியனாகவும், இளைஞர், செஞ்சிலுவை இயக்க ஆசிரியனாகவும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சேவை புரிந்துள்ளேன். கல்வி போதிப்பதில் இதுவரையில் எனக்கு ஆறு ஆண்டுகள் அனுபவம் உண்டு.

சங்கீதம், சித்திரம், உடற்பயிற்சி போன்ற துறைகளில் நான் பெற்ற நன்மதிப்பிதழ்களைத் தங்கள் பார்வைக்காக இத்துடன் அனுப்பியுள்ளேன். பள்ளிப் போட்டிகளில் நான் பல பதக்கங்களும், பரிசுகளும் பெற்றுள்ளேன்.

எனக்கு இப்போது வயது 24. நான் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவன். நல்ல ஆரோக்கியமும், உடல் உரமும் உள்ளவன்.

தாங்கள் இந்த விண்ணப்பத்தைப் பார்த்த பிறகு என்னையும் ஒரு ஆசிரியனாக நியமிப்பின், என்னால் இயன்ற சேவையை அதிகாரிகளுக்குத் திருப்திகரமான முறையில் செய்து பள்ளியின் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவேன் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் கீழ்ப்படிந்த ஊழியன்,
சி. த. சாமிநாதன்.

கிரிதரன்பேட்டை,
15-1-1950.

## 9. வேலைக்கு விண்ணப்பம் எழுதுதல் (3).

அனுப்புவோர்;
சி. வேல்குமார்,
25, சின்னத் தெரு,
பரிதிபுரம்.

பெறுபவர்:
தலைமை அதுவலாளர்,
.........ஸ்டுடியோ,
.......................

ஐயா,

அண்மையில் தாங்கள் தயாரிக்கப்போகும் சமூகப் படமொன்றுக்கு அனுபவம் வாய்ந்த நடிகர்கள் தேவையென்று பத்திரிகைகளில் படித்தேன். படக்கலை உலகில் நீங்கள் ஆற்றிவரும் அரிய பெரிய சேவைகளைக் கண்டு தாங்கள் தயாரிக்கும் படங்களில் நடிகனாகச் சேரவேண்டுமென்ற ஆசை நெடுநாட்களாக எனக்கு உண்டு. ஆகையால், அருள் கூர்ந்து, என் விண்ணப்பத்தையும் கவனிக்குமாறு வேண்டுகின்றேன்.

நான் பள்ளியிறுதி வகுப்புவரையில் படித்திருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் எங்கள் பள்ளியில் நடக்கும் நாடகங்களில் கதாநாயகனாகத் திறம்பட நடித்திருக்கிறேன். இனிமையாகப் பாடும் குரலும் உடையவனாக இருக்கிறேன். நாடகத்தில் என் நடிப்பின் திறமையைப் பாராட்டிப் பலர் அளித்த பதக்கங்களும், பாராட்டுரைகளும், நற்சாட்சிப் பத்திரங்களும் என்னிடம் இருக்கின்றன.

ஒரு சில நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதியும், என் நாடகப் பாத்திரப் புகைப் படங்களும் இத்துடன் தங்கள் பார்வைக்கு அனுப்பியுள்ளேன். தங்கள் அன்பான உத்தரவை ஆர்வமுடன் எதிர்பார்க்கிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள
சி. வேல்குமார்

பரிதிபுரம்,
13-5-1949.

### 10. கல்விக் கழகத்தில் உறுப்பினராகச் சேர விண்ணப்பம்.

தலைவர்,
மாணவர் மன்றம்,
சென்னை-1.

ஐயா,

வணக்கம்.

கல்வி உலகில் தங்கள் மன்றம் மாணவர்களுக்காகச் செய்யும் அரிய சேவைகளைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என்னையும் மன்ற உறுப்பினருள் ஒருவனைச் சேர்த்தருள வேண்டுகின்றேன். உறுப்பினர் ஆண்டுக் கட்டணம் ரூபாய் 3-0-0 இன்று மணியார்டர் மூலம் தங்கள் பெயருக்கு அனுப்பியுள்ளேன்.

மன்றத்தின் சட்ட திட்டங்கள் எல்லாவற்றுக்கும் கட்டுப்பட்டு நடக்க நான் சித்தமாய் இருக்கிறேன் என்று உறுதி கூறுகிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள அன்பன்,
அ. இராஜகோபாலன்.

சென்னை-4,
7-7-1950.

### 11. வீட்டுக் குடிக்கூலியைக் குறைக்கும்படி சொந்தக்காரருக்குத் தெரிவித்தல்.

6, இரத்தின முதலித் தெரு,
திருப்பத்தூர்,
6-7-1947.

திரு. சி. ரங்கநாத முதலியார் அவர்களுக்கு.

அன்புடைய ஐயா,

நான் தங்கள் வீட்டில் ஆறு வருஷங்களாகக் குடியிருந்து வருகின்றேன். மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் குடிக்கூலி செலுத்தி வருகிறேன். இவ்வருஷத்தில் என் குடும்பத்தில் ஏற்பட்ட சில எதிர்பாராத சம்பவங்களால், இனிமேல் என்னால் ரூ. 20 குடிக்கூலி செலுத்த இயலாது என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால், குடிக்கூலியை இனி ரூ. 15 ஆகக் குறைத்துக்கொள்ள வேண்டுகின்றேன். தங்களால் இவ்வுதவி செய்ய இயலாவிடின், என் விருப்பத்துக்கு மாறாக நான் வேறு இடத்துக்கு என் குடியிருப்பை மாற்றிக் கொள்ள நேருமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வந்தனம் பல.

தங்கள் உண்மையுள்ள,
கோ. சண்முகம்.

தும்பை விட்டு வாலைப் பிடிக்கலாமா?

**12. வீட்டைப் பழுது பார்க்கும்படி சொந்தக்காரருக்குத் தெரிவித்தல்.**

இடமும், தேதியும்.

திரு. அப்பாசாமிப் பிள்ளை அவர்களுக்கு,
வடக்குத் தெரு,
குற்றாலம்.

**அன்புடைய ஐயா,**

சென்ற வாரம் முழுவதும் மழை பெய்த நேரத்தில் தங்கள் வீட்டில் நாங்கள் குடியிருந்த பரிதாப நிலைமையைத் தெரிவிக்க மிகவும் வருத்தப்படுகின்றேன். தாங்கள் அதனைப் பழுதுபார்த்து பத்து வருஷங்கட்கு மேலாகின்றது. கூரையில் எங்கு பார்த்தாலும் ஓடுகள் சரிந்து மழை நீர் ஒழுக்கு ஏற்படுகிறது. தரையிலும் அங்கங்கே பள்ளமும், பிளவுகளுமாக இருப்பதால், நீர் தேங்கி வீட்டில் வசிப்பவரின் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது. தங்கள் மேற்பார்வையில் வீட்டைப் பழுதுபார்க்க வசதி இல்லாவிடின், தயைசெய்து என் கண்காணிப்பில் இரண்டு தொழிலாளர்களை வைத்து வீட்டைப் பழுதுபார்க்க அனுமதியளிக்க வேண்டுகின்றேன். இதற்காகச் செலவாகும் தொகையை அடுத்த மாதத்துக் குடிக்கூலியில் கழித்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். இக்கடிதத்திற்குத் தங்கள் அன்பான பதிலை மறு தபாலில் எதிர்பார்க்கிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
சி. மோகனசுந்தரம்.

**13. வீட்டைக் காலி செய்வதாகச் சொந்தக்காரருக்குத் தெரிவித்தல்.**

25, மேட்டுத் தெரு,
கடலூர்,
20-3-1950.

ஸ்ரீ சுந்தரேச உடையார் அவர்கட்கு.

**அன்பீர்,**

தங்களுக்குச் சொந்தமான 25, மேட்டுத் தெருவில் உள்ள வீட்டை தங்கள் விருப்பப்படியே நான் அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து காலி செய்துவிடுகிறேன். நாங்கள் வசிக்கும் இடத்துக்குப் புதிதாகக் குடியிருக்க விரும்புவோர் காலை 8 மணியிலிருந்து 10-க்குள் வந்து

பார்வையிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாத முடிவுடன் தங்களுக்குச் சேரவேண்டிய குடிக்கூலி முழுத் தொகையையும் இத்துடன் அனுப்பியுள்ளேன். பெற்றுக்கொண்டு ரசீது அனுப்பவும்.

வந்தனம் பல.

தங்கள் உண்மையுள்ள,
வே. வீரராகவன்.

## 14. குடிக்கூலி ரசீது.

எண் ———— தேதி.........1950.

சென்னை............... தெரு......... எண்ணுள்ள என் வீட்டில் குடியிருக்கும் ஸ்ரீ......................... அவர்களிடமிருந்து.........௵ ......௴த்துக்குச் சேரவேண்டிய குடிக்கூலி ரூ.......யும் நன்றியறிதலுடன் பெற்றுக் கொண்டேன்.

...................................
வீட்டின் சொந்தக்காரர்.

## 15. வீட்டுக் குடிக்கூலி உயர்வைப்பற்றிக் குடித்தனக்காரருக்கு அறிவித்தல்.

இடமும், தேதியும்.

ஸ்ரீ சொக்கலிங்கச் செட்டியார் அவர்களுக்கு.

அன்புள்ள ஐயா,

சென்ற 31-6-1949-லிருந்து தாங்கள் குடியிருக்கும் எங்கள் வீட்டுக்கு நகர சபை வரி விதிப்போரால் வீட்டு வரி உயர்த்தப்பட்டிருக்கிறதென்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதனால் தாங்கள் அடுத்த மாதத்திலிருந்து ரூ. 45-லிருந்து ரூ. 50 ஆக குடிக்கூலி தரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். உயர்த்தப்பட்ட குடிக்கூலி தருவதுபற்றி தங்கள் சம்மதத்தை விரைவில் தெரிவிக்கவும்.

வந்தனம் பல.

தங்கள் உண்மையுள்ள,
முத்துசாமி.

தேளுக்கிடம் கொடுத்தால் நிமிஷத்திற்கு நிமிஷம் கொட்டும்.

## 16. வீட்டைக் காலி செய்ய குடித்தனக்காரருக்கு அறிவிப்பு.

6, இராகவாச்சாரி தெரு,
சென்னை-5,
6-7-1949.

ஸ்ரீ ராமசாமிச் செட்டியார் அவர்கட்கு.

அன்புடையீர்,

நமது ஒப்பந்தத்தின்படி அடுத்த 1-8-1949-ந் தேதியுடன் நான் தங்களுக்கு பெரம்பூர் மன்னர் தெரு 15 இலக்கமிட்ட வீட்டைக் குத்தகைக்கு விட்ட வகையில் குறிப்பிட்ட காலம் முடிவடைகிறது. மேலும் குத்தகைக்குவிட எனக்கு விருப்பமில்லாமையாலும், அவ்வீடு என் சொந்த உபயோகத்துக்கே வேண்டி இருப்பதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் வீட்டைக் காலிசெய்து விடும்படி வேண்டுகின்றேன்.

தாங்கள் எந்தத் தேதியில் வீட்டினைக் காலி செய்வீர் என்ற விவரம் தெரிவிக்கவும்.

வந்தனம் பல.

தங்கள் உண்மையுள்ள,
ஏகாம்பர முதலியார்.

## 17. மேற்படி வேறுவிதம்.

இடமும், தேதியும்.

திரு. குப்புசாமி நாய்க்கர் அவர்கள்,
7, பொன்னப்பன் தெரு,
சென்னை-3.

அன்புடைய ஐயா,

தாங்கள் ஷை எண்ணுள்ள என் வீட்டின் குடிக்கூலி செலுத்தாமல் மூன்று மாதமாகக் காலதாமதம் செய்து வருகிறீர்கள் என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டப்படி தாங்கள் என் வீட்டை இந்த அறிக்கை கண்ட ஒருமாத காலத்திற்குள் காலி செய்து விடுமாறு கேட்டுக் கொள்கிறேன். தவறினால், தங்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இதனால் தெரிவித்துக் கொள்கிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
பெ. சோமசுந்தரம்.

## 18. நன்மதிப்பிதழ் (1).

தலைமை ஆசிரியர் அலுவலகம்,
மகாஜன உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு, 6, ஜூலை 1944.

திரு. T. மோகனன் என்பவர் எங்கள் பள்ளியில் 25-6-1943-லிருந்து ஓராண்டு துணையாசிரியராகப் பணியாற்றியவர். அவர் தொழில் திறமையும், நற்குணங்களும் எமக்குப் பெரிதும் இருப்தியளித்தன.

M. R. பெருமாள்,
தலைமையாசிரியர்,
மகாஜன உயர்நிலைப் பள்ளி.

## 19. நன்மதிப்பிதழ் (2).

திரு ........................ என்பவர் எங்கள் அச்சகத்தில் ஆறு ஆண்டுகளாக அச்சுக் கோப்பாளராக வேலை செய்தவர்; இவர் நற்குணங்கள் பலவும் நிறைந்தவர்; கடமை தவறுதவர்; காலந் தவறுமல் நிலையத்துக்கு வந்து தன் பணிகளை ஒழுங்காகச் செய்து எனக்கு மிகவும் திருப்தியை அளித்தவர்; ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சுக் கோக்கும் திறமை உடையவர்; எங்கள் அச்சகத் தொழிலாளர்களில் தலைசிறந்தவராக விளங்கியவர். இவர் தொழில் வளமும், நல்வாழ்வும் மேலும் சிறக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றேன்.

திருப்புகழ் அமிர்தம் அச்சகம்,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2,
5-5-1951.

கோதண்டபாணி,
உரிமையாளர்.

## 20. நன்மதிப்பிதழ் (3).

N. ராமநாதன், B.A., L.T.,
விஞ்ஞான ஆசிரியர்.

போர்டு உயர்நிலைப் பள்ளி,
சேயாறு,
22-6-1950.

சிரஞ்சீவி ..................... என்னும் இளைஞன் உயர்நிலைப் பள்ளியில் மூன்று ஆண்டுகள் என்னிடம் பயின்றவன்; நல்ல உழைப்பாளி; செய்யும் வேலையைத் திருத்தமாகவும், ஒழுங்காகவும் செய்பவன். விஞ்ஞான மாணவனுயிருந்து அப்பாடத்தில் நல்ல அக்கறை காட்டியவன். ஐயம் திரிபு இல்லாமல் கற்றவன்; விளங்காத விஷயங்களை

தெளிவாகக் கேட்டு உணர்ந்தவன். பரிசோதனை வகுப்புகளில் மிகவும் திறமையாக இருந்து என்னைக் கவர்ந்தவன். தன்னுடன் படித்த மாணவர்களில் இவனே முதன்மையானவன். இவன் நற்குணங்களும், நடவடிக்கைகளும் எனக்குப் பெரிதும் திருப்தியளித்தன.

N. ராமநாதன்,
விஞ்ஞான ஆசிரியர்.

## 21. ஒருவரை வேலையில் நியமிக்கும் கடிதம்.

ஹிந்து தியாலாஜிக்கல் உயர்நிலைப் பள்ளி,
சௌக்கார்ப்பேட்டை, சென்னை-1,
4, ஜூலை 1943.

எண் : 153/43-44.

செகண்டரி கிரேடு ஆசிரியரான ஸ்ரீ ..........................என்பவர் இந்தப் பள்ளிக்கூடத்தின் நடுநிலைப் பள்ளி ஆசிரியராக 1943 ஜூலை 7-ந் தேதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். அவர் சம்பளம் மாதம் —— ரூபாயாகப் பெற்று வருவார். அவர் ஒரு வருஷம் தற்காலிக மாக வேலை பார்த்து வரவேண்டும். இந்த 3 ஆண்டு காலத்தில் அவர் தொழிலும், நடவடிக்கையும் திருப்திகரமாய் இல்லாவிடில் முன்னறி விப்பு ஏதும் இன்றி அதிகாரிகளின் உசிதப்படி வேலையினின்று நீக்கப்படலாம். பள்ளிச் செயற் குழுவினரின் உசிதம்போல் அவர் நியமனம் ஊர்ஜிதம் செய்யப்படும். 1943 ஜூலை 7-ந் தேதியிலிருந்து அவர் உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளுமாறு இதனால் அறிவிக்கப்படு கிறார்.

..........................................
முகவர் (Correspondent).

## 22. ராஜிநாமாக் கடிதம் (1).

5, சிதம்பரம் பிள்ளைத் தெரு,
ஈஸ்வரபுரம்,
4-7-1951.

தென்னாற்காடு ஜில்லா மராமத்து இலாகாத் தலைவர் அவர்கட்கு.

ஐயா,

சென்ற இரண்டு மாதங்களாக நான் உடல் நலமில்லாமல் விடு முறையில் இருந்தேன். மேலும் உத்தியோகம் செய்ய என் உடல்

நலம் இடம் தராது என்ற நம்பிக்கையினுல் தங்கள் நிலையத்தில் நான் வகித்துவந்த தலைமை அலுவலர் (Head Clerk) பதவியை நான் இன்றையிலிருந்து ராஜிநாமாச் செய்துவிடுகிறேன். தயைசெய்து என் ராஜிநாமாவை ஏற்றுக் கொள்வதுடன் என் அனுபவம் பற்றியும், நடவடிக்கை பற்றியும் ஒரு நற்சாட்சிப் பத்திரம் அளிக்குமாறு வணக்கத்துடன் வேண்டிக் கொள்கிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
ஏ. மெய்யப்பன்.

## 23. ராஜிநாமாக் கடிதம் (2).

இடமும், தேதியும்.

வடாற்காடு ஜில்லா போர்டு தலைவர் அவர்கட்கு.

**அன்புடைய ஐயா,**

இதுகாறும் எங்கள் பிர்க்காவின் முன்னேற்றத்திற்காக நான் கூறிவந்த ஆலோசனைகள் ஜில்லா போர்டாரால் ஏற்றுக்கொள்ளப் படாத காரணத்தினுலும், இனிமேலும் அவ்விஷயம் கவனிக்கப்படும் என்னும் நம்பிக்கை எனக்கு இல்லாததாலும், இதுவரையில் நான் வகித்துவந்த ஜில்லா போர்டு உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்துவிடுகிறேன். தாங்கள் அருள்கூர்ந்து என் ராஜிநாமாவை ஏற்றுக் கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
வீ. வேதாசலம்.

## 24. விலாச மாற்றம்பற்றித் தபால் நிலையத்துக்கு அறிவித்தல்.

5, மாசிலாமணித் தெரு,
வேலூர்,
19-7-1951.

ஆற்காடு தபால் நிலையத் தலைவர் அவர்கட்கு.

**ஐயா,**

நான் வியாபார விஷயமாய் ஆகஸ்டு மாதம் 1-ந் தேதியிலிருந்து செப்டம்பர் 30-ந் தேதி வரையில் வேலூரில் தங்கி இருக்க வேண்டிய தனுல், தயைசெய்து ஆற்காட்டில் சாரதி அண்டு கம்பெனி என்று வரும் என் கடிதங்களையும், மணியார்டர்களையும் மேலே கொடுக்கப்பட்

டிருக்கும் என் வேறூர் முகவரிக்கு மாற்றியனுப்ப வேண்டுகின்றேன். இவ்வுதவிக்கு நான் பெரிதும் நன்றியறிதலுள்ளவனவேன்.

வந்தனம் பல.

தங்கள் உண்மையுள்ள,
ஏ. வீராசாமிப் பிள்ளை.

## 25. புத்தகக் கட்டு கிடைக்காமைபற்றிப் புகார் செய்தல்.

இடமும், தேதியும்,

சென்னைத் தலைமை அஞ்சல் நிலையத் தலைவர் அவர்கட்கு.

ஐயா,

சென்ற 5-2-1951-ல் திருவாரூர் போர்டு உயர்நிலைப் பள்ளியிலிருந்து என் நண்பர் திரு. பாலதண்டாயுதபாணி என்பவர் புத்தக அஞ்சலில் அனுப்பிய புத்தகக் கட்டு எனக்கு இன்னும் வந்து சேரவில்லை. அந்தத் தேதியில் அவர் எனக்கு அந்தக் கட்டை திருவாரூர் அஞ்சல் நிலையத்தின் மூலமாக அனுப்பிவிட்டதாக எழுதி இருக்கிறார். அந்தப் புத்தகக் கட்டு வேறு இடங்களில் தவறி இருப்பின், என் முகவரிக்குத் திருப்பியனுப்ப வேண்டுகின்றேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
ஆ. தம்பிரான்.

## 26. மணியார்டர் சேராமைபற்றிய புகார் தெரிவித்தல்.

"பாரி நிலையம்,"
32, முஸ்லாசாகிப் தெரு,
சென்னை-1,
20-7-1951.

சென்னைத் தலைமை அஞ்சல் நிலையத் தலைவர் அவர்கட்கு.

ஐயா,

சென்ற 7-7-1951-ல் திருவத்திபுரம், 33, பெரியத் தெருவில் இருக்கும் என் தகப்பனார் திரு. சி. தணிகாசல முதலியார் அவர்கள் பெயருக்கு ரூ. 75 மணியார்டர் செய்தேன். அந்தத் தொகையை அவர் பெற்றுக் கொண்டதாக எனக்கு இன்னும் ரசீது வந்து சேரவில்லை. இச்செய்தியைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவந்து ஆவன செய்துதவ வேண்டுகின்றேன்.

வந்தனம் பல.

குறிப்பு :—மணியார்டர் ரசீது விவரம் :
ஜார்ஜ் டவுன் அஞ்சல் நிலையம் ;
7-7-1951 மாலை 2-30 மணி; நெ. 065.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
சி. சாமிநாதன்.

27. ஊருக்குப் புதிய தபால் பெட்டி வைக்க விண்ணப்பம் செய்தல்.

முருக்கேரி கிராமம்,
கோவிலூர்,
7-5-1951.

வடாற்காடு ஜில்லா வேலூர் தபால் நிலைய ஜில்லா அதிகாரி அவர்கட்கு.

ஐயா,

ஷை முருக்கேரி கிராம மக்களாகிய நாங்கள் கீழ்வரும் விஷயத்தைத் தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வந்து ஆவன செய்தருள வேண்டுகின்றோம்.

எங்கள் கிராமம் வந்தவாசிக்கு 8 கல் தொலைவில் உள்ளது; நெசவுத் தொழிலாளர்கள் நிறைந்தது. ஏறக்குறைய 3,000 மக்களைக் கொண்ட ஜனத்தொகையுடையது. ஒரு நாளைக்கு எங்களூரில் உள்ள வர்கள் சுமார் எழுபது கடிதங்களுக்குமேல் எழுதுகிறார்கள். தபால் நிலையம் எங்கள் கிராமத்துக்கு 2 மைல்களுக்கு அப்பால் உள்ளது. அடிக்கடி அங்கே சென்று கடிதம் அனுப்புவது எங்களுக்கு மிகவும் துன்பமாய் இருப்பதால், தயைசெய்து எங்கள் கிராமத்திற்கென ஒரு தனியான தபால் பெட்டி வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு கின்றோம்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
1. ..........................
2. ..........................
3. ..........................
முருக்கேரி கிராமவாசிகள்.

28. காணுமற்போன சாமான்களைப்பற்றிப் புகைவண்டி நிலைய அதிகாரிக்குக் கடிதம்.

"கோகுலம்",
7, நெல்லிக்காரத் தெரு,
திருவொற்றியூர்,
7-10-1950.

திருவொற்றியூர் புகைவண்டி நிலையத் தலைவர் அவர்கட்கு.

ஐயா,

நான் சென்னை A. R. C. பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவி. நான் தினந்தோறும் திருவொற்றியூரிலிருந்து

சென்னையிலிருக்கும் எங்கள் பள்ளிக்கு ரெயிலில் செல்வது வழக்கம். நேற்று வெள்ளிக்கிழமை 6-10-1950 அன்று வண்டியில் ஒரே கூட்டம். நான் வண்டியை விட்டு கீழே இறங்கியபோது அடியிற் கண்ட புத்தகங்களைக் கைதவறுதலாக நான் உட்கார்ந்திருந்த வண்டியிலேயே விட்டுவிட்டேன். அவற்றைத் தாங்கள் கண்டுபிடித்து மேலே கண்ட என் முகவரிக்குத் தெரிவிப்பின் மிக்க நன்றியறிதலுள்ளவளாவேன். புத்தகங்களில் எல்லாம் என் பெயர் எழுதப்பட்டிருக்கும். தவறிய புத்தகங்களின் விவரம்:

1. 'லிப்கோ' டிக்ஷனரி: இங்கிலீஷ்-இங்கிலீஷ்-தமிழ்.
2. திருக்குறள் தெளிவுரை.
3. 'லிப்கோ' S. S. L. C. தமிழ் 'மூவர்' உரைநூல்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
த. நாகமணி.

## 29. திருமண ஊர்வலத்துக்குப் போலீஸ் உத்தரவுக்கு விண்ணப்பித்தல்.

50, பெத்துநாய்க்கன் தெரு,
சென்னை,
7-7-1949.

போலீஸ் ஆணையாளர் அவர்கள்,
எழும்பூர்,
சென்னை-8.

பேரன்புடைய ஐயா,

நாளது 15-7-1949-ந் தேதியன்று நடக்க இருக்கும் என் மகன் திரு. இராமசாமியின் திருமணத்தை முன்னிட்டு அன்று இரவு சென்னை பெத்துநாய்க்கன் தெருவிலிருந்து தங்கசாலை வழியாக காட்டுப் பிள்ளையார் கோயில் தெரு வரையில் ஓர் ஊர்வலம், இரவு 8-லிருந்து 10 மணி வரையில் செல்வதற்குத் தயைசெய்து உத்தரவு அளிக்குமாறு வேண்டுகின்றேன். இத்துடன் ஊர்வலம் செல்வதற்குரிய கட்டணம் அனுப்பி இருக்கிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
வணக்கமுள்ள,
ம. துரைசாமி.

**30.** ஊரில் உள்ள போக்கிரிகளைப்பற்றித் தகவல் அறிவித்தல்.

இடமும், தேதியும்.

உதவி போலீஸ் ஆணையாளர் அவர்கள்,
C-3 பிரிவு போலீஸ் நிலையம்,
சென்னை.

**அன்புள்ள ஐயா,**

மேலே குறிப்பிட்ட எங்கள் தெருக்கோடியில் இரவில் சோம்பேறிகளின் தொல்லை பொறுக்க முடியவில்லை. அங்குள்ள பிள்ளையார் கோயிலுக்குச் செல்ல விரும்பும் மக்களுக்குத் திருடர் பயம் அதிகரித்து வருகிறது. ஏற்கனவே எங்கள் தெருவில் சிலர் வீடுகளில் விலையுயர்ந்த சாமான்கள் சில களவாடப்பட்ட செய்தியைத் தாங்கள் அறிவீர்கள்.

சோம்பேறிகளில் சிலர் வாயில் வந்தபடியெல்லாம் கேவலமாகப் பேசித் திரிகிறார்கள். இரவில் 8 மணிக்குமேல் பெண்களும், ஆண்களும் இந்தத் தெருவில் நடமாட முடிவதில்லை. இதுபற்றிப் போலீஸாருக்குத் தகவல் கொடுப்பவர்களையும் அப்போக்கிரிகள் கடுமையாகத் தாக்குவோம் என்று அச்சுறுத்தி வருகிறார்கள்.

இந்த நிலைமையில் தாங்கள் எங்கள் தற்காப்புக்கான எல்லா நடவடிக்கைகளையும் உடனே மேற்கொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
எம். பாலவேலன்.

**31.** நகை திருடப்பட்டதைப்பற்றித் தகவல் கொடுத்தல்.

இடமும், தேதியும்.

போலீஸ் உதவி ஆணையாளர்,
ஹைகோர்ட் போலீஸ் நிலையம்,
சென்னை.

**ஐயா,**

நேற்று மாலை நானும், என் 10 வயது பெண்ணும் கடற்கரைக்குச் சென்று திரும்பும்போது ஹைகோர்ட்டுக்கருகில் மோட்டார் வண்டி நிற்குமிடத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. திடீரென்று என் பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி காணாமற் போய் விட்டது. குழந்தையை விசாரித்ததில் யாரோ கருத்த நடுத்தரமான மனிதன் தன் தோளின்மேல் அடிக்கடி கையை வைத்ததாகவும் அவன் தான் எடுத்துவிட்டதாகவும் கூறுகிறாள். தயைசெய்து இது பற்றிப் புலன் விசாரித்து ஆவன செய்தருள வேண்டுகின்றேன்.

வந்தனம் பல.

உண்மையுள்ள,
த. மரகதம்மாள்.

## 32. பையன் காணமற் போனதுபற்றிப் போலீஸுக்குத் தகவல்.

16, இராமசாமி தெரு,
ஆடுதுறை,
18-4-1950.

போலீஸ் அதிகாரி அவர்களுக்கு,
ஆடுதுறை,
தஞ்சை ஜில்லா.

ஐயா,

என் மகன் வேலாயுதன் என்பவன் காணமற்போய் ஒரு வாரம் ஆகிறது. அவன் மாநிறம் உடையவன்; சுமார் நான்கடி உயரம் இருப்பவன்; அவனுக்கு வயது ஒன்பது ஆகிறது. அவன் சுருட்டைத் தலைமயிர் உடையவன்; வலப் பக்கத் தோளில் அவனுக்கு ஒரு மச்சம் உண்டு. அவன் வெள்ளை நிஜாரும், மஞ்சள் நிறமான சட்டையும் தரித்துக்கொண்டு சென்றான். அவன் காதில் சிவப்புக்கல் கடுக்கனும், கையில் பொன் காப்புகளும் அணிந்திருந்தான். காணமற்போன என் மகனைத் தயைசெய்து தேடிக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுகின்றேன்.

வந்தனம் பல.

அன்புள்ள,
அ. முத்துசாமிப் பிள்ளை.

## 33. கைத்துப்பாக்கி வைத்துக் கொள்வதற்காக அனுமதி கேட்டல்.

இடமும், தேதியும்.

சென்னை போலீஸ் கமிஷனர் அவர்களுக்கு.

ஐயா,

நான் ஒரு செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்தவன். வருஷம் ஒன்றுக்கு அரசாங்கத்துக்கு ரூ. 400 வருமான வரி செலுத்தி வருகிறேன். என்னுடைய நிலபுலங்கள் ஊருக்குத் தொலைவில் இருப்பதால், சில சமயங்களில் நான் வீடு திரும்புவதற்கு முடியாமல் இரவுக் காலங்களில் அங்கேயே தங்கும்படி நேரிடுகிறது. ஆகையால், என் தற்காப்புக்காக ஒரு கைத்துப்பாக்கி வைத்துக் கொள்வதற்கு உத்தரவு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அனுமதிச் சீட்டுக்குரிய கட்டணத்தை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
D. ஆனந்தன்,
மிராசுதார்.

**34. சிறையிலிருக்கும் குற்றவாளியைப் பார்க்க அனுமதி வேண்டுதல்.**

21, செல்வ விநாயகர் தெரு,
வந்தவாசி,
5-8-1933.

சிறை அதிகாரி அவர்கள்,
தலைமைச் சிறைக் கூடம்,
வேலூர்.

ஐயா,

என் மகன் கே. என். அம்பலவாணன் என்பவன் வேலூர் சிறைக் கூடத்தில் முதல் வகுப்பில் இருப்பவன், அவன் சாத்துவீகச் சட்ட மறுப்பு இயக்கத்தில் சேர்ந்து 25-3-1933ல் கைதியாகி வேலூருக்குக் கொண்டு வரப்பட்டான். நான் என் மகனைப் பார்த்து மூன்று மாத காலமாகிறது. நான் அவனை மீண்டும் சந்திப்பதற்குரிய நாளும், நேரமும் தெரிவித்துதவுமாறு வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
சி. திருமலை முதலியார்.

**35. நந்தவனங்கள் வளர்ப்பதுபற்றி நகர சபைக்குக் கடிதம் எழுதுதல்.**

12, குப்பண்ணன் தெரு,
மதுரை,
27-10-1951.

கமிஷனர் அவர்கள்,
நகரசபைக் காரியாலயம்,
மதுரை.

அன்பு நிறைந்த ஐயா,

மரம் நடுவிழாக்கள் கொண்டாடும் இக்காலத்தில், நாட்டின் பல விடங்களிலும் நந்தவனங்கள் அமைப்பதின் அவசியம் மக்களால் நன்கு உணரப்படுகிறது. சென்னை நகரமானது மூலை முடுக்குகளெல்லாம் நந்தவனமாகவே விளங்க வேண்டுமென்று முயன்று வருகின்றது.

பழங்காலப்பெருமையும், நவீனகால நாகரிக வளர்ச்சியும் மிகுந்த நமது மதுரை நகரம் மக்கள் தொகை நிறைந்தது. இந்நகரத்தின் பல பகுதிகளில் மக்கள் மிக நெருக்கமாகவும், புழுக்கமாகவும் வாழ

வேண்டியிருக்கிறது. நகரத்தின் நாற்புறங்களிலும் நான் பெரிய நந்தவனங்களை அமைப்பது மக்கள் வாழ்வுக்கு அவசியமென்று நினைக்கிறேன். மாலை நேரங்களில் வேலை முடிந்து வருவோர் நல்ல காற்று பெறுவதற்கும், உலாவுவதற்கும் இவை வசதியாக இருக்கும்.

மூன்றாண்டுத் திட்டமொன்று தயாரித்து இவ்விஷயமாக அடுத்த நகரசபைக் கூட்டத்தில் பிரேரேபணை செய்வீர்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

வந்தனம் பல.

தங்கள் உண்மையுள்ள,
ப. கிருஷ்ணசாமி சர்மா.

## 36. வீட்டுவரி உயர்வைப்பற்றி நகரசபை வரி அதிகாரிக்கு முறையிடுதல்.

இடமும், தேதியும்.

வரிவிதிப்பு அதிகாரி அவர்கட்கு,
நகரசபை அலுவலகம்,
சென்னை.

அன்புள்ள ஐயா,

சென்னை, முருகேச முதலித் தெரு 27-ம் எண்ணுள்ள என்வீட்டிற்குத் தாங்கள் அண்மையில் விதித்திருக்கும் வரி விஷயமாகக் கீழ்வரும் செய்தியைத் தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டுவந்து ஆவன செய்தருள வேண்டுகின்றேன்.

கடந்த இரண்டு வருஷங்களாக ஷை என் வீட்டிற்கு வரும் குடிக் கூலித்தொகை ரூ. 500-க்குத் தகுந்தபடி எனக்கு வீட்டு வரி விதிக்கப்பட்டிருந்தது. போதுமான காரணம் எதுவும் இல்லாமல், இப்போது திடீரென்று வீட்டு வரியை உயர்த்திவிட்டீர்கள். ஆனால் எங்கள் வீட்டுக் குடிக்கூலி வருமானம் இன்னும் ரூ. 500 ஆகவே இருக்கிறது என்பதை மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வரி உயர்வைப் பற்றித் தாங்கள் மீண்டும் ஆலோசித்துப் பழைய வரியையே விதிப்பின், மிகவும் நன்றியறிதலுள்ளவனவேன். வீட்டுக் குடிக்கூலி வருமானம் பற்றிய விவரத்தை இத்துடன் தங்கள் மேலான பார்வைக்கு அனுப்பியுள்ளேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
R. தப்புசாமிப் பிள்ளை.

**37. தெருவில் உள்ள அசுத்தங்களைப் பற்றிச் சுகாதார அதிகாரிக்குக் கடிதம்.**

16, இரத்தின முதலித் தெரு,
சென்னை-1,
10-10-1951.

சென்னை நகராண்மைக் கழக 7-வது பிரிவு சுகாதார அலுவலர் அவர்கட்கு.

**ஐயா,**

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டையில் இருக்கும் இரத்தின முதலித் தெரு ஒரு முக்கியமான தெருவாகும். இங்கு 'மாணவர் மன்றம்' என்ற ஒரு பெரிய கழகம் இருக்கிறது. பல அலுவலர்களும் வசிக்கிறார்கள். அருகில் மூன்று நகராண்மைக் கழகப் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. இப்படி இருந்தும் இந்தத் தெருவில் சுகாதார வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. தினந்தோறும் இந்தத் தெரு இரண்டு முறை சுத்தம் செய்யப்படுகிறது. எனினும், குப்பைக் கூளங்கள் சரியாக அப்புறப்படுத்தப்படுவதில்லை. மற்ற தெருக்களைப்போல் இங்குச் சரியான குப்பைத் தொட்டிகள் கட்டப்படாதது ஒரு பெரிய குறை என்றே சொல்ல வேண்டும். தெருவின் மூலைமுடுக்குகளெல்லாம் நாற்றம் மூக்கைத் துளைத்து விடுகிறது. இங்கு வசிக்கும் சிலர் தெருச் சுத்தியை அவ்வளவாகக் கவனிப்பதும் இல்லை. குப்பை கூளங்களைக் கண்ட இடங்களில் கொட்டுகிறார்கள். அந்த ஆபாசக் காட்சியைக் கண்கொண்டு பார்க்க முடிவதில்லை. சிலர் குழந்தைகளைத் தெருவில் மலஜலம் கழிக்கப் பழக்கி விடுகிறார்கள். எங்கள் தெருக் கோடியில் வசிக்கும் சிலர் வண்டி மாடுகளையும், குதிரைகளையும் வீட்டின் முன்புறத்திலேயே கட்டித் தெருவை அசுத்தப்படுத்துகிறார்கள். அதனால் ஈ, கொசு முதலியவற்றின் தொந்தரவை எங்களால் பொறுக்க முடியவில்லை.

இத்தகைய காரணங்களினால் மேற்படி தெருவில் தொத்து நோய்கள் எளிதில் பரவ நேருமே என்று அச்சப்படுகிறோம். சுகாதார அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகள் எடுத்தாலன்றி, மேற்படி தெருவின் சுகாதார வசதியைப் பாதுகாக்க முடியாது. தெருவை அசுத்தப் படுத்துபவரைச் சட்டப்படி நடவடிக்கை எடுத்துத் தண்டிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இவ்விஷயத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தி எங்கள் தெருவின் சுகாதார வசதிகளைப் பாதுகாக்குமாறு தங்களைப் பெரிதும் வேண்டிக் கொள்கிறேன்.

**வந்தனம் பல.**

**இங்ஙனம்,**
**தங்கள் உண்மையுள்ள,**
**அ. இராமலிங்கம்.**

**38.** சில குறிப்பிட்ட இசைத் தட்டுகளை ஒலிபரப்புமாறு வானொலி நிலையத்தாருக்கு விண்ணப்பித்தல்.

7, சின்னப்பன் தெரு
பெருங்கட்டூர்,
5-7-1950.

வானொலி நிலையத் தலைவர்,
வானொலி நிலையம்,
திருச்சி.

அன்புள்ள ஐயா,

கீழே குறிப்பிட்டுள்ள இசைத் தட்டுகளைக் கூடிய சீக்கிரத்தில் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்புமாறு கேட்டுக் கொள்கிறேன். எங்கள் கிராமத்து மக்களில் பலரும் இப்பாட்டுகளைக் கேட்க மிகவும் விருப்பமாய் இருக்கிறார்கள் என்பதையும் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

1. 'செந்தமிழும் சுவையும் போல' என்னும் வாழ்க்கைப் பாட்டு.
2. 'பார் முழுவதும் ஏர்முனையிலே' என்னும் நல்ல தம்பிப் பாட்டு.
3. 'சுதந்திரக் கொடி பறந்திடப் பார்' என்னும் பாகவதர் பாட்டு.
4. 'காற்றினிலே வரும் கீதம்' என்னும் எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் பாட்டு.

வந்தனம் பல.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
து. நரசிம்மன்.

**39.** வானொலியில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்குமாறு நிலைய அதிகாரிக்கு விண்ணப்பக் கடிதம்.

50, பாம்பன் தெரு,
பல்லாவரம்,
7-7-1951.

வானொலி நிலைய அதிகாரி,
அகில இந்திய வானொலி நிலையம்,
எழும்பூர்,
சென்னை-8.

அன்பு மிக்க ஐயா,

நான் இவ்வூர் உயர்நிலைப் பள்ளியில் சேவை புரிந்துவரும் ஒரு தமிழாசிரியன். எனக்கு ஆசிரியர் தொழிலில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் உண்டு. **'சிரிக்க வைக்கும் திருவள்ளுவர்'** என்பதுபற்றி

ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை இத்துடன் தங்கள் பார்வைக்கு அனுப்பி யுள்ளேன். அப்பொருள்பற்றி வானொலியில் பேசுவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுகின்றேன்.

அன்றியும் கல்வி சம்பந்தமாகத் தாங்கள் குறிப்பிடும் வேறு எப்பொருள் பற்றியும் நான் பேசுவதற்குச் சித்தமாய் இருக்கிறேன். இசையிலும் எனக்குச் சிறிது பயிற்சி உண்டு.

வந்தனம் பல.

தங்கள் அன்பார்ந்த பதிலை எதிர்பார்க்கும்,

உண்மையுள்ள,

சி. சோமசுந்தரம்.

அடக்கம் :

'சிரிக்க வைக்கும் திருவள்ளுவர்' என்னும் கட்டுரை.

**40.** நாடகம் ஒன்றை நடித்துக் காட்ட அனுமதிக்குமாறு வானொலி நிலையத்தாருக்குக் கடிதம் எழுதுதல்.

இடமும், தேதியும்.

தலைவர்,

வானொலி நிலையம்,

திருச்சி.

அன்பு நிறைந்த ஐயா,

வணக்கம். நானும், என்னுடன் படிக்கும் நான்கு நண்பர்களும் சேர்ந்து 'கூலிக்காரன்' என்னும் 15 நிமிஷ நாடகம் நடித்துப் பயிற்சி பெற்றிருக்கிறோம். கதை இதுவரையில் வெளிவராத புதுமை யுடையது. இந்நாடகம் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்தது. இதன் கையெழுத்துப் பிரதியைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியுள் ளேன். அதைப் பார்வையிட்டு வசதியான நாளும், நேரமும் தெரி விப்பின், நாங்கள் நேரில் வந்து நடித்துக் காட்டுகிறோம்.

வந்தனம் பல.

தங்கள் அன்பான பதிலை எதிர்பார்க்கும்,

உண்மையுள்ள,

ஏ. ஆனந்தன்.

நாயீ விற்ற காசு குரைக்குமா?

**41.** வானொலி நிகழ்ச்சியொன்றைப் பாராட்டி வானொலி நிலையத் தலைவருக்குக் கடிதம் வரைதல்.

இடமும், தேதியும்.

தலைவர்,
வானொலி நிலையம்,
சென்னை-8.

**அன்பு கனிந்த ஐயா,**

வணக்கம். சென்ற 10-1-1950 அன்று மாலை 4 மணியிலிருந்து 4-15 வரை நடந்த வானொலி சிறுவர் நிகழ்ச்சியைக் கேட்டு என் குடும்பத்தினரும், நானும் மிகவும் மகிழ்ந்தோம். **'தலையிருக்க வாலாடுமா?'** என்று சென்னை இந்து தியாலாஜிகல் ஆசிரியர் ஒருவர் பேசிய கதை கேட்கக் கேட்க மிகவும் இன்பமாக இருந்தது. நல்ல நீதியுள்ள கதையை எளிய நடையில் தெளிவாக அவர் பேசி முடித்தார். கதையை முடிக்கும்போது 'தலையிருக்க வால் ஆடாது ஆடாது என்று உங்கள் தலையை ஆட்டுங்கள்' என்று கூறியது கேட்டுக் கொல்லென்று எல்லோரும் சிரித்தோம். இப்படிப்பட்டவர்களைக் கொண்டு அடிக்கடி சிறுவர் நிகழ்ச்சிகளை நடத்துவது நல்லது.

வந்தனம் பல.

அன்புள்ள,
*மாணிக்கவாசகம்.*

**42.** சென்னை நகரசபைத் தேர்தல் விண்ணப்பம்.

இடமும், தேதியும்.

**அன்புடையீர்,**

வணக்கம். நிகழும் 30-9-1948-இல் நடைபெறும் சென்னை நகர சபை உறுப்பினர் தேர்தலில் 7-வது வட்டாரத்தில் நானும் ஒரு அபேக்ஷகனாக நிற்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

என்னைத் தாங்கள் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பின், நம் பேட்டையில் கல்வி, சுகாதாரம் முதலிய துறைகளில் உள்ள குறைகளை நீக்குவேன். சிறப்பாக நமது பேட்டைக்கு ஒரு படிப்பகமும், நந்தவனமும் அமைக்க ஏற்பாடு செய்வேன்.

அருள்கூர்ந்து தங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பேசின் பாலத்துக்குச் சமீபத்திலிருக்கும் ஸ்டான்லி நகர் நகரசபைப் பள்ளிக்கூடத்துக்கு வந்து என் பேருக்கே தங்கள் வாக்குரிமையை அளித்து ஆதரிக்க வேண்டுகின்றேன்.

வாக்குரிமைச் சீட்டை **வெள்ளைப்** பெட்டியில் போடும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
அன்புள்ள,
*மு. ராமலிங்கம்.*

**43. தேர்தலுக்கு நிற்கும் அபேக்ஷகர் தம்மை ஆதரிக்கும்படி வாக்காளர்களுக்கு விண்ணப்பக் கடிதம் அனுப்புதல்.**

இடமும், தேதியும்.

**அன்புடையீர்,**

வணக்கம். வரப்போகும் சென்னை சர்வகலாசாலை செனட் உறுப்பினர் தேர்தலில் நானும் ஒரு அபேக்ஷகனாக நிற்க விரும்புகின்றேன்.

நான் 1908-ம் ஆண்டில் எம். ஏ. பட்டம் பெற்று ஏழு ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளேன். 1915-இல் சட்டப் படிப்புக் கல்லூரியில் சேர்ந்து பயின்று வெற்றிபெற்று இரண்டு ஆண்டுகள் வழக்கறிஞராகவும் சேவை புரிந்தேன். சென்னை ஜார்ஜ் டவுன் வரி கொடுப்போர் சங்கச் செயலாளனாகப் பத்து ஆண்டுகள் ஊழியம் செய்துள்ளேன். சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் பலவற்றிலும் பங்கு கொண்டு என்னால் இயன்ற தொண்டுகளை எப்போதும் புரிந்து வந்துள்ளேன்.

என்னைத் தாங்கள் ஓர் சர்வகலாசாலை செனட் உறுப்பினனாகத் தேர்ந்தெடுப்பின், நமது மாகாணத்தில் கல்வி முன்னேற்றத்திற்காக அரிய பணிகள் பலவாற்றி என் கடமையை ஒழுங்காகச் செய்து வருவேன் என்று உறுதி கூறுகிறேன்.

வந்தனம் பல.

இங்ஙனம்,
**தங்கள் அன்பான வாக்குரிமையை வேண்டி நிற்கும்,**
த. வேதாசலம்.

---

# 4. பொதுக்

## (அ) வரவேற்

*மாதிரி*

சென்னை மாணவர் மன்றப் புரவலரும், தேர்வுக் குழுத் தலைவரும்
சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவருமாகிய

முதுபெரும்புலவர் பேராசிரியர்

**மயிலை சிவ-முத்து அவர்கள்**

அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழாவின்போது
மன்றத்தினர் மகிழ்ந்தளித்த

### ★ வரவேற்பு வாழ்த்துரை ★

---

**தமிழுக்கு வரவேற்பு !**

'வாழ்த்துவதும் தாம் வாழ்வான்' என மொழிந்த மாணிக்கவாசகரின் மாண்புறு மொழிப்படி இன்று யாங்கள் பெரியார் புலவர் மயிலை, சிவ முத்து அவர்களை வாழ்த்துவதும் வரவேற்பதும் எம் மன்றம் வாழவும் வரவேற்கப்படவுமேயாகும். புலவரவர்கட்குக் கூறும் வரவேற்புத் தமிழுக்குக் கூறும் வரவேற்பேயாகும். தமிழ் வாழ்க; புலவர் மயிலை. சிவ-முத்து வாழ்க! என வாழ்த்துகின்றோம் உளம் நிரம்பிய உவகையோடு வரவேற்கின்றோம்.

**செந்தமிழ் நாட்டின் செழுந்தமிழ்க் கொண்டலே! சீர்திருத்தச் செம்மலே !**

தங்கள் தமிழாசிரியப் பணியால் தழைத்த தமிழ்ப் பயிர்களுக்கும் அளவுண்டோ! மாணவர் நிலையறிந்து உளமறிந்து கல்வி கற்பித்த தங்கள் ஆற்றல் தனிச் சிறப்புடையதாகும். தாங்கள் எழுதி வெளியிட்ட 'நித்தில வாசகம்' போன்ற தமிழ்ப் பாட நூல்கள் தமிழ் மாணவருலகில் ஒரு புத்துணர்ச்சியை ஊட்டின. பாட நூல்கள் எழுதுவோர்க்குத் தக்க வழிகாட்டியாய் அமைந்தன என்று கூறுதல் மிகையாகாது எனக் கருதுகின்றோம். பத்திரிகையுலகில் தாங்கள் பணியாற்றியபொழுதும் தமிழ் நாடு அத்துறையில் புதுமையை - சீர்திருத்தத்தைக் கண்டது. குழந்தைகளுக்கெனத் தாங்கள் எழுதிய எளிய-இனிய - பொருள் பொதிந்த பாடல்கள் குழந்தைகளை மட்டுமா கவர்ந்தன! தமிழ் நாட்டின் சிறந்த அறிஞர்களையெல்லாம் கவர்ந்தன அன்றோ! தமிழ் நாட்டில் திருமண முறையில் முதன் முதலில் சீர்திருத்தத்தைக் கண்டது தாங்களேயன்றோ! தங்களால் சீர்திருத்த முறையில் — தமிழர் மணமுறையில் செய்து வைக்கப்பட்ட திருமணங்களுக்கு அளவுமுண்டோ! தங்களால் திருமணம் செய்து வைக்கப்பட்ட மணமக்கள் சிறப்பாக வாழ்ந்து நன்மக்களை ஈன்று செல்வத்தில் செழித்து அடிக்கடி வந்து தங்களைக் கண்டு நன்றி நவில்வதைக் காணும்போது எங்கள் உள்ளம் பூரிப்பதை எடுத்தியம்பவும் முடியுமோ!

# கடிதங்கள்

## புரை

1

### தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராம் பெருந்தகையீர் !

தாங்கள் சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவராயிருந்து ஆற்றிய-ஆற்றிவரும் அரும்பணிகள் தமிழாசிரியர்களும், தமிழ் நாடும் என்றும் மறத்தற்கியலாதனவாகும். 'தமிழ்ப் புலவர் ஒன்றுபடும் நன்னாளே தமிழர்க்குப் பொன்னாளாகும்' என்ற புரட்சிக் கவிஞர் பாரதி தாசனின் உண்மையுரைக்கிலக்கியமாய்ச் சென்னை மாநிலத் தமிழ்ப் புலவர்களை ஒன்றுகூட்டி அவர்கள் தகுதியையும், திறமையையும் அரசியலார் உணரச் செய்து அவர்கள் ஏனைய ஆசிரியர்களைப் போல ஓரளவாவது ஊதியத்தில் உயர்வுபெற வழி செய்தீர்கள். தமிழாசிரியராக இருந்தபோது ஊதிய உயர்வு கருதி ஒரு வார்த்தையும் கேட்டறியாத தாங்கள் தமிழாசிரியர் நலம் கருதி இரவு பகல் ஓயாதுழைத்தீர்கள். இத்தகைய தங்கள் பெருங் குணத்தை என்னென்று புகழ்வோம்!

### தமிழே வாழ்வின் உயிரெனக்கொண்ட தகைசால் பெரியீர் !

உங்கள் வாழ்வும் வளமும் மங்காத செந்தமிழாக் கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றீர்கள். தமிழ் மொழிக்கு இடுக்கணுற்ற ஞான்றெல்லாம் மடிதற்று முன் வந்து உடல், பொருள், ஆவியெல்லாம் தமிழ் வளர்ச்சிக்கே செலவிட்டுத் தமிழை வாழ்வித்த தங்கள் அரும்பெரும் உழைப்பினைத் தமிழ் நாடு நன்கறியும். சிறப்பாகச் சென்னையிலுள்ளார் அதனை மறந்திருக்கமாட்டார்கள். உண்ணுறும் போதும், உறங்கிடும்போதும், உயிருளம் துடித்திடும்போதும் கண்ணினும் அரிய தமிழையே கருதிக் காரிய உறுதிகொண்டெழும் உம் போன்ற வீரர்களைச் சிந்தனை சிற்பிகளைத் தமிழகத்தில் பலராகத் தோற்றுவித்துள்ளீர்கள். வாழ்க உங்கள் தமிழ்ப் பணி என்று வாழ்த்துகிறோம்.

### மாணவர் மன்றத்தின் மாண்புறு புரவலரே !

இருபது ஆண்டுகளுக்கு முன் சில இளைஞர்களால் தோற்றுவிக்கப் பட்டது இம்மன்றம். இம்மன்றத்தின் தோற்றத்திற்குக் காரணமே தாங்கள். இம்மன்றம் தோன்றிய இருபது ஆண்டுகளாகத் தாங்களும் இளைஞர்களுள் ஒருவராய் இருந்து உழைத்தும், ஊக்க மொழிகள் கூறி எங்களை ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தியும் உள்ளம் சோர்வடையும் போது எழுச்சியூட்டும் ஆர்வ மொழிகள் கூறியும் இம்மன்றத்தை இத்தகைய பேரளவில் வளர்த்த பெருமை தங்களைச் சார்ந்ததேயாம். இம்மன்றம் இன்று ஒரு 'சிறிய பல்கலைக் கழகம்' என்று அறிஞர் பாராட்டும் அளவுக்கு வளர்ந்து தமிழ் மாணவ மாணவியர்க்குப் பெரும் பயன் விளைத்து வருவதை யாவரும் நன்குணர்வர். கட்டடமின்றிக் கைப் பொருளின்றித் தமிழகம் முழுவதும் பயன்பெறத்தக்க இத்தகைய ஒரு பெரும் பணியை ஏற்று நடத்திவரும் தங்களின் அறிவாற்றலுக்கு ஈடும் எடுப்புமுண்டோ? தாங்கள் வகுக்கும் வழி ஒரு புதிய பாதை! எவரும் சென்றிராத செந்நெறி! தங்கள் நெறி வெல்க! வாழ்க!

[அடுத்த பக்கம் பார்க்க.

## மணிவிழாக் கொண்ட மாபெருந் தலைவரே !

அறுபதாண்டு தமிழ் நாட்டில் தமிழ் மொழியின் உயர்வுக்காக, தமிழர்களின் தலை நிமிர்ந்த வாழ்வுக்காக, தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்காக வாழ்ந்த தங்கள் வாழ்க்கை எங்களைப் போன்ற இளைஞர்க்குச் சிறந்த வழிகாட்டியாகும். அமைதி, ஆரவாரமின்மை, அசைவிலா ஊக்கம், துன்பத்தையும் இன்பமாகக் கொள்ளும் பெருந்தகைமை, இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யும் தமிழ்ப் பண்பு, 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற உரிமை உணர்ச்சி, 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற தொண்டு நெறி, பெற்ற செல்வத்தினைப் பலர்க்கும் பகுத்துண்டு வாழும் தமிழ் வாழ்வு ஆகிய தங்கள்பால் அமைந்த பல அரும் பெருங் குணங்கள் எதிர்காலத் தமிழ் இளைஞர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து பின்பற்ற வேண்டிய உயரிய நெறிகளாம். அத்தகைய அரும் பெருங் குணங்களைக் கொண்டு எதிர்காலத் தமிழிளைஞர்கள் சிறந்து வாழ வாழ்த்துமாறு இந்நன்னாளில் தங்களை வேண்டிக் கொள்கின்றோம்.

## ஞாயிறன்ன புகழோய் ! பெருந்தகாய் !

நும் வாழ்வு தமிழ் வாழ்வு ! நும் தொண்டு தமிழ்த் தொண்டு ! நும் பேச்சு மூச்சு யாவும் தமிழே ! தாங்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய-ஆற்றிவரும் தொண்டுகளுக்குத் தமிழகம் என்ன கைம்மாறு செய்ய வல்லது, எண்ணற்ற பெருஞ் செல்வர் இருக்கின்றார் தமிழகத்தில், அவர்கள் உள்ளம் தமிழ்ப் பணியில் நிலவி அவர்கள் தமிழ்த் தொண்டு செய்ய முற்படுவதே தங்களுக்குப் பாராட்டும் நன்றியாகும். அத்தகைய நன்றியைத் தமிழகம் என்றும் ஆற்றும் என்று நம்புகின்றோம். மணிவிழாக் கொண்ட பெரியீர், தாங்கள் மேலும் உடலுரமும் உள்ள உரமும் வாய்க்கப்பெற்று மேலும் அரும் பெருஞ் செயல்கள் ஆற்றிப் பெரும் புகழும் பெரு வாழ்வும் பெற்றுச் சிறக்க அருள்புரியுமாறு ஆண்டவனை வேண்டிக் கொள்கின்றோம். தங்களின் அறுபதாண்டு அநுபவங்கள் தமிழ் நாட்டிளைஞர்க்கு அரிய கலைக்கருவூலமாய்த் திகழுமாதலின் அதனைத் தங்கள் வாழ்க்கையோடு ஒட்டிய அரியநூலாக ஆக்கித்தருதல் வேண்டும் என்ற வேண்டுகோளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க ! வாழ்க பெரியார். மயிலை சிவ முத்து !
வெல்க அவர்தம் அரும்பணிகள் !

சென்னைக் கோகலே மண்டபம்,
சென்னை-1, 5-1-1952.

இங்ஙனம்,
*மாணவர் மன்றத்தினர்.*

மாதிரி 2

உ

ஓம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதினம்
இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்ரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

காசி யாத்திரை சென்று திரும்பு வழியில் தமிழ் நாட்டுத் தலைநகரமாகிய சென்னைக்கு விஜயம் செய்தபோது

சென்னை மாணவர் மன்றத்தினர் அடிகளாருக்கு வாசித்தளித்த

# நல் வரவேற்பு இதழ்

**மகா சந்நிதானம் அவர்களே!**

வணக்கம்.

எங்கள் நகருக்குத் தங்கள் வரவு நல்வரவாகுக! தெய்வத் தமிழ் நாட்டில் சமயச் சார்புடையனவும் தமிழ் வளர்ச்சி கருதியனவுமாய பிரசாரங்களின் மூலம் தாங்கள் தலைசிறந்த மணிவிளக்காய் விளங்கு கின்றீர்கள்.

**சிவம் பெருக்கித் தமிழ் வளர்க்கும் செம்மலே!**

மாணவர் மன்றத்தினேமாகிய எங்களுடைய அடிப்படையான குறிக்கோள் தமிழ் வளங் கருதித் தொண்டாற்றுவதேயாகும். தமிழும் சைவமும் அத்துவிதத் தொடர்புடையனவாய் இருக்கிற காரணத்தால், சுவாமிகளுடைய சமயப்பணி வாயிலாக எங்கள் குறிக்கோள் நிறை வேறுதல் கண்டு நாங்கள் கழிபேருவகை எய்துகிறேம், பெரும!

மகாசந்நிதானமவர்கள் தருமை ஆதினப் பட்டம் வகித்தது முதற் கொண்டு தமிழாகங் கருதிச் செய்த திருப்பணிகள் ஏட்டிலோ எண்ணிலோ அடக்கமுடியா! இதுகாறும் அச்சேறியுள்ள தருமபுர ஆதின வெளியீடுகளான செந்தமிழ் நூல்கள் நூற்றுத் தொண்ணூற்று என்பதை ஒருவர் கேட்கும்போது அவர் திகைப்படையாமலிருக்க முடியாது. இவற்றுடன் ஞானசம்பந்தம் என்னும் பைந்தமிழ்ப் பத்திரிகையொன்றையும் நடத்தி வருகிறீர்கள்.

தேவாரப் பாடசாலை நிறுவி நாளும் இன்னிசையால் தமிழ் பரப்புவது, ஆங்கிலக் கலாசாலையில் தமிழ்ப் பரிசு அமைப்பது, ஆதினக்

கோயில்கள் தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது, தமிழ்க் கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற்கனுப்புவது, தமிழ்ப் பணி செய்பவர்க் குதவுவது, புத்தக்சாலை அமைத்துப் பழந்தமிழ் நூல்களைப்பாதுகாப்பது, பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர்களுக்கு உதவுவது — ஆகிய இன்னோரன்ன விழுமிய ஆதீனத் திருப்பணிகள் எங்கள் உள்ளத்தை இன்பத்தால் தழைக்கச் செய்கின்றன.

**தகைசால் அடிகளே!**

தங்கள் வருகையும் வள்ளன்மையும் எம்மாணவர் மன்ற வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுமென்னும் உறுதியுடையேம். மகாசந்நிதானமவர்களுக்கு மீண்டும் நல்வரவு கூறி வணக்கஞ் செலுத்துகிறோம். அடிகளாருடைய சிறிதுகாலச் சென்னை வாசம் பல இன்ப நினைவுகளைத் தோற்றுவிப்பதற்குத் துணையாய் இருக்குமென்னும் நம்பிக்கையுடையேம்.

"வசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழங்கும் துறை வெல்க!"

சென்னை-,
4-3-1950.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள,
*சென்னை மாணவர் மன்றத்தினோம்.*

---

*மாதிரி 3*

**தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்க ஐந்தாவது மகாநாட்டின் தலைவர்,**

**உயர்திரு. L. சட்டநாத கரையாளர், B.A, B.L., M.L.A.,**

**அவர்கட்கு வழங்கிய**

## ★ வரவேற்பு வாழ்த்துரை ★

---

**பெருந்தகை ஐய,**

வணக்கம், வருக. உங்கள் வருகை எங்கட்குப் பல நன்மைகள் பயப்பதாகுக. எங்கள் வேண்டுதற்கிணங்கிவந்து எங்கட்குத் தலைமை தாங்கி மகாநாட்டை சிறப்புற நடத்தித்தர இசைந்த உங்கள் எளிமையை நாங்கள் என்றும் மறவோம். நீவிர் நீடு வாழ்க.

---

நீர் உள்ளமட்டும் மீன் துஞ்சு துள்ளும்.

## தன் நலம் கருதாத் தன்மையாளரே !

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரான நமது அண்ணல் காந்தி யடிகளாரது பூத உடலை இழந்த நம் நாட்டிற்கு அவர் கருத்துப்படி நாம் செய்யவேண்டியன பலவாகும். அவைகளெல்லாம் நும்போன்ற தேசியத் தொண்டர்களின் துணைகொண்டே செய்யப்பட வேண்டும் என்பது புகழுரையல்ல. பொருளுரையேயாகும்.

## ஆன்றமைந்து அடங்கிய பெரியீர் !

நாட்டின் உயிர்நிலை கிராம முன்னேற்றத்தை ஒட்டியதே. நமது காந்தியாரின் கருத்தும் அதுவேயாகும். கிராம முன்னேற்றம் அதைப் பரிபாலிக்கும் கிராம உத்தியோகஸ்தர்களின் நிலையை ஒட்டியதாகும். அண்மையில் நமது அரசியலார் சிக்கன முறையை ஒட்டிச் சில மாறு தல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளால் கிராம முன் னேற்றம் எந்த நிலையை அடையும் என்பதை உங்கள்போன்று மக்க ளோடு மக்களாக வாழ்ந்தவர்கட்கே புலனாகும். திறந்த உள்ளம் படைத்த தாங்கள் எங்கட்கு எடுத்துக்கூறி ஆவன செய்ய வேண்டு கிறோம்.

## கைம்மாறு கருதாச் செம்மையுடையீர் !

மக்கள் நலனுக்காக எப்போதும் அரும்பாடுபட்டு வருகின்றீர். சிக்கலான நேரங்களில் சிறை சென்றிருக்கின்றீர். நமது காங்கிரஸ் மந்திரி சபையில் கல்வி மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசியாக இருந்து எல்லோரும் கல்வி யறிவுபெற, பெரும் முயற்சி யெடுத்துக் கொண்டீர்கள். உங்கள் தொண்டு என்றென்றும் மறக்கற்பால தன்று.

## வாழ்க பெரியீர் !

எங்கள் தலைவரேவருக. கிராம முன்னேற்றங்கருதிச் சொற்பொழி வாற்றும் பெரியீர் வருக. யாங்கள் நடைமுறையில் செய்துவர வேண்டும் கடமைகளை எடுத்துக் கூற வருக, வருக என்று வரவேற்று இறைவனருளால் நீங்கள் மேற்கொள்ளும் பணியில் வெற்றிகொண்டு நீடு வாழ்க என்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வணக்கம்.

| | | |
|---|---|---|
| சென்னை,<br>20-3-1948. | } | இங்ஙனம்,<br>தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம். |

## சென்னை மாணவர் மன்றத்தின் இருபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது

பரிசு பெற்ற மாணவர் மாணவியர்கட்குப் பரிசு வழங்கிய
சென்னைப் பல்கலைக் கழக செனட் சபை உறுப்பினரான

**திருமதி S. காந்தம்மா, B. Sc. (Hons.), M. Sc., L. T.**

அவர்கட்கு

மன்றத்தினர் மகிழ்ந்தளித்த

# ★ வரவேற்புரை ★

---

**அருங்குண அம்மையீர்,**

வருக, வருக, எங்கள் மன்றத்திற்குத் தங்கள் வருகை நல்வரவாகுக. சென்ற ஆண்டு நாங்கள் நடத்திய பலவகைப்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவ மாணவியர்கட்கு இப் பேரவையில் தாங்கள் பரிசு வழங்க வேண்டுமெனத் தங்களை நாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கி எழுந்தருளினமைக்காக எங்கள் மகிழ்ச்சியும் நன்றியும் வாழ்த்தும் வணக்கமும் தங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பரிசு பெற்ற மாணவ மாணவியர், கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த தங்களைப் போன்ற ஒரு பெண்மணியினிடமிருந்து அவற்றைப் பெறுதலை மற்றொரு பரிசாக மதிப்பார்களென்னும் நம்பிக்கையுடையேம். நாங்கள் ஆண்டு தோறும் நடத்தும் போட்டிகளில் சிறப்பாகத் தேறும் சிறுவர் சிறுமியர்கட்குப் பொற் பதக்கங்கள், வெள்ளிக் கோப்பைகள், வெள்ளிப் பதக்கங்கள், விழுமிய தமிழ் நூல்கள் — இவற்றை வழங்குவதில் ஆயிரக் கணக்கான ரூபா செலவாகிறது. போட்டிகளில் கலந்து கொள்பவர்களில் பெரும்பாலோர் ஏமாற்றத்துடன் திரும்பக் கூடாதெனக் கருதி, ஏறக்குறைய எல்லோருக்குமே நன்மதிப்பிதழ்கள் வழங்குகிறோம். இவற்றை மாணவர்கள் பெருமையுடன் போற்றிக் கண்ணாடியும் சட்டமும் போட்டு வைத்துக் கொள்ளுகிறார்கள். இவ்வளவிலாவது இளந் தமிழர்களிடையே தமிழுணர்ச்சி பரவச் செய்வதற்கு ஒரு கருவியாயிருத்தல் பற்றி நியாயமான பெருமையடைகிறோம்.

**பெண் குலத்திற்குப் பெருமையளித்த அம்மணி,**

தமிழ்ப் பெண்மணிகள் கல்வியில் நாட்டம் செலுத்தாத அக்காலத்திலேயே தாங்கள் ஆர்வத்துடன் கல்வி பயின்று, தாவரங்கள் பற்றிய விஞ்ஞானத்தில் பெரு விருப்புடையவராகி, தாவர நூலில் எப் பல்கலைக் கழகத்தாரும் அளிக்கக்கூடிய மிகவுயர்ந்த ஆராய்ச்சிப் பட்டங்களைப் பெற்றுத் திகழ்கிறீர்கள். 'கைராசி,

'முகராசி' என்பதிலெல்லாம் எங்கட்கு நம்பிக்கையில்லை யாயினும், தங்கள் கையிலிருந்து பரிசு வாங்கும் மாணவர்கள் தங்களைப் போல் கல்வியின் சிகரத்தை எட்டிப் பிடிக்க ஆசை கொள்வார்களென்பதில் தடையென்ன? தங்களுடைய தாய் மொழி தமிழாயிருக்கவும், பள்ளியிலும், கல்லூரியிலும் தாங்கள் தெலுங்கு கற்றமை தங்களுடைய பன்மொழியார்வத்தை நன்கு காட்டுகிறது. தாங்கள் சென்னைப் பல்கலைக் கழக செனட் சபையில் உறுப்பினராயிருந்து, நம் கல்வி முறை சீர்கேடுறு மல் விழிப்புடன் பார்த்துக் கொள்வது எங்களுக்குப் பேருவகை கொடுக்கின்றது.

**நற்பணிகட்குதவும் நங்கையீர்,**

'ஒரு பெண் எத்துணைப் படித்தாலும், வீட்டிற்குள் அடங்கி யிருக்க வேண்டியவள் தானே' என்று நம்மிடையே வழங்கிவரும் ஒரு முட்டாள்தனமான கருத்தை தவிடு பொடியாக்கி, இரண்டா வது உலகப் பெரும்போர் நடந்த ஞான்று தாங்கள் கச்சை கட்டி வெளிப் போந்து, சேலம் மாவட்டத்தில் தேசியப் போர் முன்னணியிற் பிரசாரகராக இருந்து ஆற்றிய தொண்டினை யாரால் மறக்கமுடியும்?

**தேசங்கள் பலகண்டு திரும்பிய தமிழன்னையே,**

தங்களுடைய சிறந்த அறிவு வாழ்க்கைக்குச் சிகரம் வைத்தாலென்ன, அண்மையில் பாரிஸ், சுவிட்சர்லந்து முதலிய மேநாடுகட்குச் சென்று, ஆங்கு கல்வி போதிக்கப்படும் முறை களைக் கவனித்து அனுபவம் பெற்று வந்திருக்கிறீர்கள். இவ் வனுபவம் நம் நாட்டுக் கல்வி முறைக்குப் பெரிதும் பயன்பட வேண்டுமென விழைகின்றோம்.

**சீர்மை குன்றாச் செல்வி,**

இறுதியாக, மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தி தெரிவிக்க விழை கின்றோம். எங்கள் பேட்டையில், எல்லா நற்றுறைகளிலும் பெண்களைத் தட்டியெழுப்பிய **திருமதி டாக்டர் எஸ். தருமாம் பாள் அம்மையார்** எல்லோருடைய ஏகோபித்த வேண்டு கோளின்பேரில் சென்ற மூன்றாண்டுகளாக எங்கள் மன்றத் தலைவியாராக இருந்து வருகிறார்கள். அத்தமிழரசி தலைமைப் பதவியிலிருப்பதனால்தான் போலும், இப்போதெல்லாம் எங்கள் மன்றப் போட்டிகளில் ஆண்களோடு பெண்கள் எண்ணிக் கையில் சரிசமானமாக — இன்னுங் கேட்டால், அதிகமாகக்கூட — கலந்து கொள்கிறார்கள். தாங்கள் பரிசு வழங்க இசைந்து வந்திருக்கும் நேரத்தில் இத்தகைய நன்னிலை ஏற்பட்டுள்ள சிறப்பினைக் கண்டு பேருவகை கொள்கிறோம்.

பெண்மை வாழ்க! வெல்க!! என்னும் முழக்கத்துடன் தங்களை வரவேற்கிறோம்.

கோக்கலே மண்டபம்,
சென்னை-, 5-1-1952.

இங்ஙனம்,
சென்னை மாணவர் மன்றத்தினேம்.

மாதிரி 5

உ

முருகன் துணை

டாக்டர் குருசுவாமி முதலியார் தொண்டைமண்டலம்
துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளித்

**திறப்பு விழாவின் போது**

உயர்திருவாளர் **பிரதம நீதிபதி பி. வி. இராஜமன்னார்**

அவர்களுக்கு ஷை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்
மனம் உவந்து வாசித்து அளித்த

# ★ வரவேற்பிதழ் ★

**ஆக்கம் அளித்து அறிஞர்களை ஆதரிக்கும் பெரியோய்!**

பெருமை சால் குடியில் புகழுடன் தோன்றிப் பிறந்த நாள் தொட்டு இந்நாள் வரையில் பேறுடன் வளர்ந்து, மக்கள் அனைவரும் விரும்புதற்குரிய நற்பண்புகள் வாய்ந்த பெரியோய்! நீவிர் டாக்டர் குருசுவாமி முதலியார் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர் நிலைப் பள்ளியைத் திறந்து வைத்தற்கு இசைந்தமை குறித்து நாங்கள் அகமிக மகிழ்கின்றோம். நீவிர் நாட்டிற்கும், மக்களுக்கும் நற்றொண்டாற்றும் பண்பைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்து உம்மை வரவேற்கின்றோம்.

**நீதி மன்றத்தை நேர்மையுடன் நடாத்தும் நற்குணக் குன்றே!**

நும் தந்தையார் நீதிபதிப் பதவியை ஏற்று நேர்மையாய் நியாயம் வழங்கி நற்புகழ் பெற்றது போலவே, நீவிரும் பட்சபாதம் இன்றி நியாயம் வழங்கி வருவது குறித்து நும்மைப் பெரிதும் போற்றி வரவேற்கின்றோம். வள்ளுவர் வகுத்த முறைப்படி வழக்குகளை ஆய்ந்து மக்களுக்குப் பெருந்துணை புரிந்து நல்லற வாழ்க்கையில் நின்றிலங்கும் நீவிர் என்றும் இன்புடனும், இசையுடனும் விளங்குவீர்களாக! என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

**பாரினர் போற்றப் பன்மொழியில் புலமை பெற்று விளங்கும் பேரறிவாள!**

எல்லார் சொல்லினும் நல்லன ஏற்றுப் பொறையுடைமை, பக்தி நெறி, தன்னடக்கம் முதலிய நற்பண்புகளில் சிறந்து விளங்கும் தலைவ! நீவிர் தெலுங்கு மொழியில் நாடகம் எழுதியது மிகவும் போற்றற்குரியது.

இயல், இசை, நாடகம் என்னும் மூன்றனுள்ளும் சிறந்ததெனக் கருதப்படும் நாடகத்தின்கண் நீவிர் பேர் ஊக்கம் காட்டி வருவது மிகப் பொருத்தமே. இளஞ்சிறுவர்களுக்கு நாடகத்தின்கண் உள்ள நுண் கலையை விளக்குவான் வேண்டி நீவிர் வெளியிட்ட நாடகத்தைப் போலவே வேறு சில நாடகங்களும் வெளிவரல் வேண்டும் என்று ஒல்லும்வகை முடித்தற்குரிய எண்ணம் கொண்டுள்ள பேரறிஞரே! உம்மைப் பெரிதும் போற்றி வரவேற்கின்றோம்.

## பெறுதற்கரிய பெரும் புகழ் படைத்த பெருந்தகையோய்!

“கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லா தவர்” என்னும் வள்ளுவர் வாக்கை உள்ளத்தில் கொண்டு பெரிதும் முயன்று இம்மைக்கும், மறுமைக்கும் ஏதுவாகிய கல்வி அறிவை வளர்க்கப் பேரூக்கம் காட்டிப் புதியதொரு கட்டடத்தைக் கட்டிக் குழந்தைகள் கல்வி பயிலக் காரணராயிருந்துவரும் டாக்டர். எம். ஆர். குருசுவாமி முதலியார் அவர்களும், இக்கலாசாலைக்கென்றே தன் உடலையும், உயிரையும் பொருட்படுத்தாது பெரிதும் உழைத்து வரும் திரு. ஸ்ரீராமன் அவர்களும், மெய்வருத்தம் பாராதும், பசி நோக்காதும், கண்துஞ்சாதும் மாணவர்களது நலனுக்கும், கலா சாலையின் முன்னேற்றத்திற்கும் மிகுதியும் பாடுபட்டுவரும் தலைமை யாசிரியர் திரு. என். கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும், இத்திறப்பு விழாவைச் சிறப்புற நடத்தித்தர இசைந்தருளிய நீவிர் பல்லாண்டு வாழுமாறு இக்கலாசாலையின் சார்பாக உம்மை வாழ்த்துகின்றார்கள். டாக்டர் குருசுவாமி முதலியார் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டு நீவிர் நீடுழிகாலம் வாழ்வீராக என்று எல்லாம் வல்ல முருகப் பெருமானின் சேவடிகளைப் போற்றி உம்மைப் பன்முறை வாழ்த்தி மகிழ்கின்றோம்.

சென்னை-,
25-10-1951.

இங்ஙனம்,
ஆசிரிய சங்கத்தார்.

---

### பிரதம நீதிபதிக்கு நல்வரவு

உத்தம குருசாமி உயர்நிலைப் பள்ளி தன்னை
வித்தகன் ராஜமன்னார் விதிமுறை திறந்து வைக்கச்
சித்தம திசைந்து வந்தார் சிறப்புட னவர்க்கு நாமும்
மெத்தநல் வரவு கூறி மிகமகிழ் வெய்து வோமே.

—*T.* பார்த்தசாரதி அய்யங்கார், B.A., L.T.

---

நுண்ணறிவென்பது நூலறிவாதம்.

## மாதிரி 6

உ

முருகன் துணை

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க!

முதலாண்டு விழாக் கூட்டத் தலைவர்

உயர்திரு ரசிகமணி

**டி. கே. சிதம்பரநாத முதலியார், B.A., B.L.,**

அவர்கட்கு

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி

பழைய மாணவர் கழகத்தார்

அன்புடனளித்த

# ★ வரவேற்புரை ★

---

**தமிழ் வளர்ச்சிக்குத் தக்க துணையாயிருக்கும் ரசிகமணியே!**

எங்கள் கல்லூரி 14-7-1938-இல் தொடங்கி பத்து ஆண்டுகளாகச் செவ்வனே நடைபெற்று வருகிறது. எல்லாம் வல்ல மயிலம் முருகன் திருவருளாலும், எங்கள் அருள் தலைவர் சிவத்திரு. சிவஞான பாலய சுவாமிகள் கருணையாலும் இக்கல்லூரியிலிருந்து பல மாணவர்கள் வித்துவான் பட்டம் பெற்று வெளியிடங்கட்குத் தமிழ்ப் பரப்பும் பணியைத் தலைமேற்கொண்டு சென்றிருக்கிறார்கள். இந்தப் பழைய மாணவர்களும், இன்று கல்லூரியிற் பயிலும் மாணவர்களும் சேர்ந்து நடத்தும் விழாவே இது. இந்த விழாவிற்குத் தாங்கள் தலைமைதாங்க இசைந்தது எங்கள் நற்பேறு என்றே கருதுகின்றோம்.

**கம்பன் கவியைக் கவினுறச் சுவைக்கும் அண்ணால்!**

தமிழ் நாட்டில் தமிழ்க் காவியங்கட்குக் குறைவில்லை. என்றாலும் உயர்ந்த காவியம் எது? பயனற்ற செய்யுள் எது? என்ற வேறுபாட்டை எல்லோரும் உணர்ந்து விட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. இப்படிப்பட்ட தமிழகத்தில் தாங்கள் தோன்றி தமிழ்க் கவி என்றால் என்ன? கம்பர் என்பவர் யார்? என்பவைகளை எடுத்துக்காட்டி செஞ்சொற்கவி மணக்கும் செய்யுட்களையும், தெய்வம் மணக்கும் பாக்களையும் நாடு முழுதும் பரப்பிவரும் தங்கள் தொண்டினைப் பெரிதும் போற்றுகின்றோம்.

கம்பன் காவியமாகிய கவிப்பூஞ்சோலையினிடையில் முளைத்துள்ள களைகளைக் (இடைச்செருகல்களைக்) களைந்தும், பூஞ்செடிகளைத் திருத்த வேண்டுவன திருத்தியும் தாங்கள் செய்யும் தொண்டைப் பாராட்டு

---

கின்றோம். இத்தகைய 'கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும்' தொண்டிலேயே எங்களையும் ஊக்குவிக்குமாறு வேண்டுகின்றோம்.

**ரசிகமணியே !**

இன்னிசையால் தமிழ்ப் பரப்பிய அடியார்கள் எத்தனை எத்த னையோ பேர்! அவர்கள் எல்லாம் ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவ னையே கண்டவர்கள். அத்தகைய தமிழ் நாட்டில் தமிழில பாடுவோர் கூட்டம் சுருங்கியிருந்தது என்றால், அதனைப்பற்றி என்ன சொல்வது? இன்று தமிழ் நாடு முழுவதும் தமிழிசை முழக்கம் கேட்கிறது என்றால், அதற்கெல்லாம் மூலகாரணம் தாங்களேயல்லவா? தமிழ் நாட்டில் தமிழர்களிடையே தமிழில்தான் பாடவேண்டும் என்று வீரமுழக்கம் தாங்கள் செய்ய, அதனால் பெருங்கொடை வள்ளல் செட்டி நாட்டரசர் **இராஜா சர் அண்ணாமலை செட்டியார்** அவர்கள் பல்லாயிரக் கணக் கான தொகையை அந்த இயக்கத்திற்கு உதவ, தமிழர்களும் விழித்துக் கொண்டார்கள். இசைவாணர்களும், இசைவாணிகளும் இன்று தாங்கள் தொடங்கியிருக்கும் தொண்டினைத் திறம்பட நடத்துகிறார்கள். இதை எல்லாம் அறிந்த நாங்கள் பெருமகிழ்ச்சியடைகின்றோம். தங்கள் வரவு எங்கள் கல்லூரிக்கு நலம்பல விளைக்குமென்று முருகனை வழுத்துகின்றோம்.

**கலைப்பெருஞ் செல்வ !**

தமிழ் மொழிக்காகவும், தமிழ்க் காவியங்கட்காகவும், தமிழ்க் கலைக்காகவும் வாழ்கின்ற தாங்கள் **கன்னித் தமிழேபோல், கம்பன் கவியே போல், மன்னும் பொதிய மலையேபோல்** எங்களிடையே பன்னெடுங்காலம் நிலைத்து வாழ எங்கள் மயிலம் முருகனை வழுத்துகின்றோம்.

சி. பா. சு. தமிழ்க் கல்லூரி,
மயிலம்,
16-4-1948.

இங்ஙனம்,
பழைய மாணவர் கழகத்தார்.

---

மாதிரி 7

வெல்க தமிழ்!

சிவத்திரு சிவஞான பாலய அடிகளார் திருவடி வாழ்க!

பதினோரம் ஆண்டு நிறைவிழாக் கூட்டத் தலைவர்
திண்டிவனம் பெருவட்டத் துணைவேந்தர் (Sub-Collector)

உயர்திருவாளர் - தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M. A.,
அவர்கட்கு

மயிலம் முருகன் செந்தமிழ்க் கழகத்தார்
அன்புடன் அளித்த

★ வரவேற்புரை ★

**தமிழோடு ஆங்கிலம் தகவுடன் அறிந்த தலைவரே!**

**ப**ண்பார் செந்தமிழ் பரவிக்கிடந்த பாண்டிய நாட்டைப் பிறப்பக மாகக் கொண்டு, பண்ணிகர் தமிழறிஞரோடு பாங்குடன் தலைக்கூடி செந்தமிழ்ப் புலமை நிரம்பி நாட்டுக்கும், மொழிக்கும் செயலாற்றிவரும் பாஸ்கரத் தொண்டைமானே வருக! தங்கள் வரவு நல்வரவாகுக!

**மாண்புமிகு மாவட்டத் துணைவேந்தே!**

**தே**னினுமினியது; தெவிட்டாதது; நவில்தொறும் நயம் விளைப்பது; எது? நம் வளமார் செந்தமிழ். அன்று அரசாண்டது. இன்று ஆளக் காலம் பார்த்திருப்பது. அவ் வெண்ணத்தை நிறை வேற்றத் தமிழ்ப் புலவர்களும் தமிழோடு ஆங்கிலம் அறிந்தவர்களும் வேண்டற் பாலார். அம்முறையில் இருமொழிப் புலமை நிரம்பி அத்துடனமையாது, கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் அமிழ்தினு மினிய தமிழ் மொழியில் சொற்பெருக் காற்றும் செம்மால்! வருக! வருக!! தங்கள் வருகையைக் குறித்து அகமிக மகிழ்கின்றோம்.

**செந்தமிழ் நூல்கள் செழிப்புடன் ஆக்கிய செம்மால்!**

**அ**ரசியல் துறையில் அரும்பணி ஆற்றி, இள மாணவர் பயில கம்பன் கவிதையைக் கவினுற ஆக்கி, ரஸிகமணி, வெள்ளக்கால் முதலியார் முதலியவர்களது வாழ்க்கையை வரைந்து நாளும் தொண்டாற்றிவரும் தோன்றலே! வருக! வருக!! வருக!!! தங்கள் வருகை தமிழ்மொழிக்கு நலம் பல விளைப்பதாகும்.

தங்கள் போன்றாரின் தொண்டு மென்மேலும் ஓங்கவேண்டு மென்று இன்றமிழிறையாம் முருகனை இறைஞ்சுகின்றோம்.

மயிலம்,
13-3-1948.

இங்ஙனம்,
முருகன் செந்தமிழ்க் கழகத்தார்.

நூறு நாள் கற்ற கல்வி ஆறு நாள் விடப் போம்.

## (ஆ) பாராட்டுரை

### மாதிரி 1
### பாராட்டுக் கடிதம்.

பாண்டிச்சேரி,
6-11-1940.

சுவாமி சுத்தானந்த பாரதி,
அரவிந்தர் ஆஸ்ரமம்.

அன்பு மோகனசுந்தரம்,
அமைச்சர்,
மாணவர் மன்றம்,
சென்னே.

அன்புடையீர்,

ஆசி. மாண்வர் மன்றம் மாண்புறப் பொலிக. பொலிக.

நீங்கள் எல்லாம் மாணவர் மன்றத்திற்கூடி முறையாகத் தமிழ்ப் பயிற்சி செய்து வருவதுபற்றித் தமிழுள்ளம் பெருமகிழ்வெய்துகிறது. தமிழ்த்தாயின் நிறைவான அறிவொளி உங்களுக்காகுக! உங்கள் தமிழ் வகுப்பு தமிழ் நலத்தின் தொகுப்பாகுக.

நீங்கள் நாலடியார் கற்பது தமிழ் வளர்ச்சியில் நாலடி முன்னேறுவதாகும். பத்துப்பாட்டுக் கற்றல் மேற்கொண்டு பத்தடி முன்னேறுவதாகும். ஈரடிக் குறள் கற்பது மேற்கொண்டு இரண்டு காதம் முன்னேறுவதாகும். கற்கக் கற்கத் தமிழ் கற்கண்டினும் இனிக்கும்.

முயல்க முயல்க முயல்க மேன் மேலும்
பயன்களே வைத் தீசன் பதம்.

அன்பு. அன்பு. அன்பு.
சுத்தானந்த பாரதி.

மாதிரி 2

பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியின் முன்னைய தலைமைத் தமிழாசிரியரும் நூலாசிரியரும் உரையாசிரியருமான முதுபெரும்புலவர்

**உயர்திரு. கா. ர. கோவிந்தராஜ முதலியார்**

அவர்கட்கு

22—5—1949 அன்று நடந்த

**நிதியளிப்பு விழாவில்**

அன்புடன் அளித்த

## ★ பாராட்டு வாழ்த்துரை ★

---

**ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியர் மரபிலே வந்த நல்லியற் புலவரே வருக! வருக! தங்கள் வரவு நல்வரவாகுக!**

வழிவழி வந்த பழந்தமிழ்ப் புலவர்களிடத்தே செந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை ஐயந்திரிபறப் பாடக்கேட்டுணர்ந்த பேராசிரியரே! அரிய பல நூல்களுக்கு விரிவுரை எழுதி வெளியிட்டும், சொல்வளனும் பொருட்பொலிவும் அமைந்த பைந்தமிழ்ப் பாக்கள் பல பாடியும், கருத்தினிமையும் நடையினிமையும் கலந்த கவின்பெறும் உரை நடைகள் பல இயற்றியும் தமிழணங்கிற்குப் பல புத்தணிகளை ஆய்ந்து புனைந்த தமிழ்ப் பெரும் புலவரே! தங்களை வரவேற்றுப் பாராட்டும் பேறு பெற்றமைக்கு உளம் மிக மகிழ்கின்றோம்; புத்துணர்ச்சி கொள்கிறோம்.

**மலையின் மாண்பும் மலரின் குணமும் வாய்ந்த தமிழாசிரியரே!**

ஆயிரக் கணக்கிலே தங்களை நாடிவந்த அருந்தமிழ் மாணவர்களுக்கெல்லாம் தாங்கள் அவரவர் தகுதிக்கேற்ற வண்ணம் அரிய பெரிய நூல்களையெல்லாம் உளங்கொள உணர்த்தும் திறமை மிகப் பெற்றவர். தங்களிடம் தமிழ் பயின்ற பலர் இன்று பேராசிரியர்களாகத் திகழ்ந்து தங்கள் புகழைப் பரப்பி வருவதைத் தமிழ்நாடு நன்கறியும்.

---

## செந்தமிழ் நூற்களே செல்வம் என்று உணர்ந்த செல்வரே!

தங்கள் வாழ்க்கையில் எத்துணையோ பல இடுக்கண்கள் அடுக்கி வந்தபோதும் போர்க்களத்திலே அஞ்சாது நின்று பகைவரை வென்று நாட்டைக் காக்கும் வீரத் தனிமகனைப் போன்று உள்ளம் தளராது உழைத்துப் பல சிறந்த நூல்களை எழுதியும் வெளியிட்டும் வருகின்றீர்கள். யாண்டு பலவாகியும் உடல் நடுக்குற்றும் அருந்தமிழ் வளர்க்கும் ஆற்றலில் சிறிதும் குறையாத தங்கள் உள்ளத்தின் சிறப்பையும், உடல் நலம் கருதாது தமிழ் நலம் கருதும் தியாகப் பெருங்குணத்தையும் நாங்கள் எவ்வாறு பாராட்ட வல்லோம்! உங்கள் வாழ்க்கை எங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு!

## பொறுமையே உருவெனப் பொலியும் நற்பெரியீர்!

தாங்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் புரிந்துள்ள—புரிகின்ற தொண்டுகளைத் தமிழர் என்றும் மறவார். சிறப்பாகத் தங்களால் பரிந்தோம்பி வளர்க்கப் பெற்ற தங்கள் அருந்தமிழ் மாணவர்களும், புலவர் பெருமக்களும், சென்னைப் பொது மக்களும் தங்களை-தங்கள் தொண்டுகளை என்றும் மறவார். அதன் அறிகுறியே இன்றைய பாராட்டு விழா. சென்னை நகராண்மைக் கழகத் தலைவரும் புலவர்களின் புரவலரும் ஆகிய மாண்புமிக்க மேயர் உயர்திரு. S. இராமசாமி நாயுடு அவர்கள் தலைமையில் தாங்கள் பாராட்டப் பெறுவது புலவர் குழுவினர்க்கே ஒரு பெரும் பேறாகும். அன்னார் தலைமையில் அளிக்கும் அன்புக் கையுறையை அருள் கூர்ந்து ஏற்று எங்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

## பேரறிஞரே! முதுபெரும் புலவரே! இலக்கணப் பேராசிரியரே!

தாங்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்வீர்களாக! தங்கள் உடல் நலனும் உள்ள உரமும் வளர்வனவாக! அவைகளின் மூலம் தமிழன்னை இன்னும் பல புத்தணிகளை அணிந்து பொலிவுறுவாளாக! வாழி! வாழி! வணக்கம்.

சென்னை,
பச்சையப்பன் உயர்பள்ளி
மண்டபம், 22-5-49.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
பாராட்டு விழாக் குழுவினர்.

---

மாதிரி 3

லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மயிலை

தலைமை ஆசிரியை

**ஸ்ரீமதி S. செல்லம்மாள் அவர்கள், M.A., L.T.**

தலைமைப் பதவி வகித்த பத்தாண்டு நிறைவு விழாவன்று
மாணவியர் சங்கத்தினர் அன்பு கூர்ந்தளித்த

# ★ பாராட்டுரை ★

எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தலைவியே !

இன்று தாங்கள் தலைமை வகித்துத் தொண்டு புரிந்த பத்தாண்டு பூர்த்தி விழாவில் யாம் பங்கெடுத்துக்கொள்ள அன்பும் உவகையும் பொங்க பேரவாவுடன் முன் வந்துள்ளோம். நாங்கள் உள்ளன்புடன் அளிக்கும் இந்த உபசாரப் பத்திரத்தை எங்கள் அன்பின் காணிக்கையாய் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

என்று தாங்கள் பதவி ஏற்றீர்களோ, அன்று முதல் இப் பள்ளியின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது. கல்விக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு புத்துயிர் பெற்றது. சலியா உழைப்பும், தளரா நெஞ்சமும், இடையரு ஊக்கமும், பொங்கும் உவகையும் கொண்டு சேவை செய்தவர்களில் எமக்குத் தெரிந்த வரையில் தங்களைத் தவிர்த்து மற்றெருவர் இருப்பதாக புலனாகவில்லை.

தங்கள் தலைமையில் இப்பள்ளியில் தோன்றிய சங்கங்கள் பல. அவற்றால் எமக்கும் எம் பெற்றோருக்கும் விளைந்த நன்மைகள் மிகப் பல. சிறப்பாக, நாள்தோறும் நடைபெறும் ஒவ்வொரு சேவையிலும் நாங்களே பங்கெடுத்துக் கொண்டு செய்யவும், அதனால் எங்கள் எதிர் கால வாழ்க்கையில் நாங்கள் தன்னம்பிக்கையுடன் முன்னேறவும் உதவி புரிகின்றன இச்சங்கங்கள்.

அறிவுப் பசிக்கு கல்வியுணவு தருவதோடு அமையாமல், ஏழை மாணவியரின் பசிப்பிணி நீங்க உணவும் தந்து போற்றும் "தீனபந்து சங்கமும்" தங்கள் பெரு முயற்சியினால் ஏற்பட்டதன்றோ ?

நம் பள்ளியில் கலை பயிலும் மாணவியர் ஆயிரத்து நானூறு பேர். இவர்களில் தாங்கள் அறியாதார் ஒருவரும் இலர். ஒவ்வொருவருடைய பெயர், குணம், கல்வித் திறமை முதலிய எல்லாவற்றையும் அறிந்து கவனிக்கும் தங்கள் பேராற்றலை என்னென்று புகழ்வது!

அல்லும் பகலும் மலர்ந்த முகம்; அன்பும் ஆதரவும் சுரக்கும் உள்ளம்; வரையாது வழங்கும் வண்மை; பள்ளியின் முன்னேற்றத்திற்காக தன்னலத்தை அறவே மறக்கும் தியாகம் முதலிய நற்பண்புகள் எல்லாம் சேர்ந்த குணக் குன்றமாகிய தாங்கள், எமது தலைவியராய் இன்னும் பல்லாண்டுகள் தொண்டாற்றுமாறு இறைவன் அருள்புரிக!

இங்ஙனம்,
தங்கள்,
அன்பும் பணிவுமுள்ள,
மாணவியர் சங்கத்தினர்.

சென்னை-4,
14-7-1950.

---

*மாதிரி 4*

டாக்டர் குருசுவாமி முதலியார் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளித் திறப்பு விழாவின்போது அனுப்பின

# ★ வா ழ் த் து ரை ★

---

### ஆசிரியப்பா

**மயின்மே** லேறிய அயில்வேற் கையினன்
அடியவர் துயரற அறுமுகங் கொண்டவன்
என்றும் இளையவன் எழிலுரு அமைந்தவன்
முருகன் இணையடி முழுமனம் பற்றினன்;
மருத்துவ உலகில் மாணப் பெரியவன்;
உருக்குலை நோய்கள் உருக்குலைந் தோடத்
தெளிந்து எளிதினில் தீர்க்குநல் வல்லுநன்;
அடுத்தவர்க் கிரங்கி அனைத்தும் அளிப்பவன்;
உயர்குணம் பலவும் ஒருங்கு நிறைந்தவன்;
செருக்கும் தன்னலம் சிறிது மிலாதவன்;
என்றும் அழியா அறம்பல செய்தவன்;
பாடற் குரியவன்; பண்புசால் புடையவன்;
டாக்டர் குருசாமி முதலியார் என்னப்
பலர்புகழ் செம்மல்; பண்டை வேளாண்
மரபினிற் கொருநல் மணியாய் விளங்குநன்;
எம்பள்ளி விருத்திக் கிடமாய் நின்றவன்;
**குருமிகு டாக்டர் குருசாமி முதலியார்**
**தொண்டை மண்டலம் துளுவ வேளாளர்**
**பள்ளி** இதுவெனப் பல்லூழி பலர்சொல
இடமாய் நின்றஅவ் வேந்தல் வாழி;
ஒருக்கால் என்னோய் ஒழித்தவன் வாழி;
வாழி வாழியவன் எந்நாளும் வாழி;
வாழி வாழி அன்னவன் சூழ்கிளை;
வாழி வாழி அன்னவன் பள்ளியே.

—*திரு.* V. C. *ஏகாம்பரம்,*

(*தமிழ் மருத்துவரும்*, இப்பள்ளியின் *பழைய மாணவரும்*).

---

நோண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.

## மாதிரி 5

### மேற்படி விழாவின்போது அனுப்பின மற்றொரு வாழ்த்துரை.

சென்னைத் தொண்டமண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியின் பழைய மாணவனாயிருக்கும் பேறுபெற்றமைக்கு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வள்ளன்மையிற் சிறந்த வேளாண் குடிமக்களால் தமிழ்ப் பாடசாலையாகத் தோற்றுவிக்கப் பெற்ற இப்பள்ளி இன்று சென்னை நகரின் சிறந்த பள்ளிகளுள் ஒன்றாய்த் திகழ்கின்றது. செல்வச் சிறுவர்களையும், கல்வியில் தேர்ச்சியுற்றோரின் குழந்தைகளையும் கொண்டு சில பள்ளிகள் விளங்குகின்றன. ஆனால் இருக்க இடமும், உண்ண உணவும், உடுக்க உடையும் தேவையான அளவுகூட இன்றி வருந்தும் எளியவர்களது குழந்தைகளையே பெரிதும் கொண்டிலங்கும் இப்பள்ளி இந்நகரின் மாண்புடைய பள்ளிகட்குச் சரிநிகராய்ச் சிறந்து விளங்கி பல அறிஞர் பெருமக்களை உலகுக்கு அளித்து வருகின்றது மிகவும் போற்றற்குரியதே!

திருவருட்பிரகாச வள்ளற்பெருமானார் சொற்பொழிவு தொடங்கிய அற்றைநாள் தொட்டு சற்சங்க நிலையமாகவே இப்பள்ளி திகழ்ந்து வருகின்றது. மேலும் உண்மை ஒழுக்கத்திலும், கடவுள் பக்தியிலும் சிறந்த உயர்திரு. டாக்டர் குருசுவாமி முதலியார் அவர்களைத் தலைவராய்க் கொண்டு, நீடிய புகழுடன் விளங்குகின்றது.

சற்குண சீலராய் விளங்கும் நமது தலைவர் அவர்களைப் பின்பற்றி மாணவர்கள் அனைவரும் ஒழுக்கத்திலும், கடவுள் பக்தியிலும் சிறந்து விளங்க வேண்டுமென அரும்பாடுபடும் நமது செயலாளர் உயர்திரு. ஸ்ரீராமன் அவர்களும், தலைமை ஆசிரியர் உயர்திரு. N. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும் மகிழும் வண்ணம் கல்வியில் சிறந்த தேர்ச்சியடைவதோடு ஒழுக்கத்திலும் உயர்ந்தவர்களாய் இருக்கவேண்டியதே மாணவ, ஆசிரியர்களின் கடனாம். அதுவே நாம் செய்யவேண்டிய கைம்மாறுமாகும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

—எஸ். நடராஜன்
ஆசிரியர்.

---

*மாதிரி 6*

ஸ்ரீ கிருஷ்ணன் திருவடிகளே சரணம்

**லேடி சிவஸ்வாமி அய்யர்**
**பெண்கள் உயர்தரப்பள்ளி,**

மயிலாப்பூர், சென்னை.

பள்ளியின் "குசேலா நிதிக்காகப்" பள்ளியின் "நுண்கலைக் கழகத்தினர்" 16-9-1950-இல் பெரிய காவியமான மஹாபாரதத்துள் மிகச் சிறந்த தத்துவம் அடங்கிய 'கர்ணமோக்ஷத்தை' நாடக ரூபமாக 'இதற்குமேல் சிறப்பாக நடிக்க இயலாது' என்று சபையோர் மெச்சும் படி நடித்துக்காட்டினர். அதில் பங்கெடுத்துக் கொண்ட

'ஸௌபாக்யவதி..........................................................க்கு' இது, பள்ளியின் அன்பர்கள் ஆசியுடன் அளிக்கப்பட்டது.

"பெண்ணுலகம் உயர விரும்பும் இந்நாளில், பெரிதும் கற்ற ஆசிரியைகள்பால் பயிலும் குழந்தாய்! நீ, நலமார் அன்புமிகப் பெற்றே, நல்லார் போற்றும் அறிவழகுடன் இமிழ் கடல்சூழ் தமிழ் நாட்டில், இறைவனருளால் செல்வமெலாம் பெற்றினிது வாழ்க! நீடு வாழ்க!! உயர்க !!!"

—பள்ளியின் அன்பர்கள்.

---

## (இ) சொற்பொழிவு

---

*மாதிரி 1*

*** சென்னையில் 25-12-1951 அன்று நடந்த தமிழ் நாடு புத்தக காலய மகாநாட்டில் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சொற்பொழிவு.**

"மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை என்று மூன்று ஆசைகள் உண்டு என்று கூறுவர். நாலாவது ஆசையும் ஒன்று உண்டு. அதுதான் புஸ்தக ஆசை. அந்த ஆசையுள்ளவர்கள் மற்ற மூன்று ஆசைகளையும் மறந்துவிடுவர். தமிழ் நாடு பூராவும் புத்தக ஆசை கொள்ளுமாறு செய்யும் நோக்கத்துடன் இம்மகாநாடும் புத்தகக் காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"நம் நாட்டில் மக்களிடையே புத்தக ஆசை போதிய அளவு ஏற்பட வில்லை. சிறந்த புத்தகங்களுக்குப் பரிசு கொடுக்க சர்க்கார் திட்டம்

---

* 25/26-12-1951 'சுதேசமித்திர'னில் வெளிவந்தது.

போட்டனர். அவ்வாறே இரண்டு மூன்று ஆண்டுகள் கொடுத்தனர். மூன்றும் ஆண்டு புத்தகங்களே பரிசு கோரி வரவில்லை. அச்சுப் புத்தகங்களில்லாவிட்டாலும் கையெழுத்துப் பிரதிகளாவது வரட்டும் என்று அறிவித்தபின் சில கையெழுத்துப் பிரதிகள் வந்தன. அவற்றிற்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆனால் அப்பிரதிகள் அச்சிடப்படவில்லை. புத்தகங்களை வாங்குவோர் போதிய அளவு இல்லை என்பதே இந்நிலைக்குக் காரணம். பிரிட்டனில் 23,000 புத்தகாலயங்கள் உள்ளன. 1 கோடியே 20 லட்சம் வாசகர்கள் உள்ளனர். 30 கோடி புஸ்தகங்களை படித்துள்ளனர். ஆனால், நம் நாட்டின் நிலை என்ன? மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்யாசம்.

"தமிழ் நாட்டில் படிப்பதற்கு ருசி அதிகமாயுள்ளது. ஆனால் புத்தகசாலை விஷயத்தில் நாம் பிற்பட்ட நிலையிலுள்ளோம். மதுவிலக்கின் பயனாக கிராம மக்களிடம் பணம் சேர்ந்துள்ளது. இதனால் டூரிங் சினிமாக்கள் செழிக்கின்றன. இது பூராவும் டூரிங் சினிமாக்களுக்கே போகாமல், எழுத்தாளர்களுக்கும் பிரசுரகர்த்தர்களுக்கும் ஓரளவு சென்றால் நல்லது. இதற்கு புத்தகாலயங்கள் ஏற்படவேண்டிய தவசியம்.

"புத்தகாலய சட்டம் நிறைவேற்றப்பட்டு இரண்டு வருஷங்களாகியும் ஒரு புஸ்தகசாலையாவது இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. புத்தகாலய தீர்வை மூலம் 5 லக்ஷம் ரூபாய் பணம் வசூலிக்கப்பட்டுள்ளதுதான் மிச்சம். ஆகையால் மக்களுக்குப் புத்தகசாலையூட்டிலாவது அவர்கள் அவற்றை வாங்கிப் படிப்பார்கள் என்பதற்காக இம்மகாநாடு நடத்தப்படுகிறது."

---

## மாதிரி 2

### * மேற்படி விழாவில் ஆர். எம். அழகப்பச் செட்டியாரின்

## தலைமையுரை.

"ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சிறிய புத்தகசாலையாவது இருக்க வேண்டும். புத்தி விசாலமும் பல விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையும் வேறு பிரதிபலனில்லாமல் அவ்விதம் தெரிந்து கொள்வதிலேயே ஒரு மகிழ்ச்சியும் அடைய வேண்டுமானால் அரிய பெரிய புத்தகங்கள்தான் அதற்குச் சுலபமான வழி. புத்தகப் பழக்கமும் இருக்கவேண்டும். இல்லாவிடில் நாட்டில் புத்திசாலிகள் இருப்பார்களே தவிர புத்தி விசாலமும் அதனுடன் பிறந்த பல குணங்களும் குன்றிவிடும் என்பதே.

"புத்தகங்களைப் படிப்பதற்கு அடிப்படையானது கல்வி. ஜனநாயக அரசாட்சியில் படிப்பில்லாத வோட்டர்கள் இருப்பதே ஒரு பெருங்குறை. ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடங்களை அதிகப்படுத்த

* 25/26-12-1951 'சுதேசமித்திர'னில் வெளிவந்தது.

வேண்டுவது ஒருபுறமிருக்க படித்ததை மறவாமல் காப்பாற்றுவது அவசரமாக நாம் அனைவரும் கவனிக்கவேண்டிய விஷயமாகும். தொழில்செய்யும் குடிகள் எப்படிக் கற்றதை மறவாமல் இருப்பது? இதற்குச் சுலபமான வழி ஒன்றுதான். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிறிய புத்தகசாலை வைக்க வேண்டும். அதில் எளிய புத்தகங்களை வாங்கி வைக்கவேண்டும். கிராமத்தில் பள்ளிக்கூட உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் படித்து வெளியில் சென்ற பையன்களின் பெயர், தொழில் இவைகளுக்கு ஒரு ஜாபிதா வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களை ஆரம்பத்தில் அடிக்கடி சந்தித்து புத்தகசாலைக்கு வரும்படி அழைக்கவேண்டும். சமுதாய ரேடியோ, பள்ளிக்கூடத்துப்புத்தகசாலை எல்லாம் ஒரே இடத்திலிருக்க வேண்டும். அதாவது ஜனங்கள் வேறு காரியமாகச் சேரும் இடத்தில் புத்தகசாலையும் இருக்க வேண்டும். சிலரைக்கொண்டு பத்திரிகைகளை உரக்கப்படிக்கச் செய்ய வேண்டும். குறிப்பிட்ட நாட்களில் புத்தகப்படிப்பு தினந்தோறும் ஒரு மணி நேரம் மாலையில் புத்தகசாலையிலோ வேறு ஒவ்வொரு தெருவுக்கும் ஓர் இடத்திலோ, அனைவரையும் ஒன்று சேர்த்து உயர்ந்த காவியங்களிலிருந்தும் வேறு புத்தகங்களிலிருந்தும் சில பக்கங்களை படித்துக் காட்டவேண்டும். இத்தகைய பெரிய கிளர்ச்சியை ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பம் செய்யாவிட்டால், நமது கிராமவாசிகள் படித்த சிறு படிப்பும் வீணாகப்போகும் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. பஞ்சாயத்துகளும், முனிசிபாலிடிகளும், ஜில்லா போர்டுகளும், புத்தகசாலைக்காக நூற்றில் ஒரு பங்கு தங்கள் வருமானத்திலிருந்து வேறுபடுத்தி வைக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்ய வேண்டும். இதை கவர்ன்மெண்டிலிருந்து நடக்கிறதா, இல்லையா என்று கவனிக்கவும் வேண்டும்.

"புத்தகம் இல்லாத அறையும், உயிர் இல்லாத உடலும் சமம் என்று ஆங்கிலக் கவி சொன்னதை ஒட்டி நம் பாரதியாரும் வீடு தோறும் ஈலையின் விளக்கமும் வீதிதோறும் பலப்பல பள்ளியுமாக விளங்கவேண்டுமென்று விரும்புகிறார். பாரதியாரது கனவு நனவாக வேண்டுமானால், அறிவு வளர்ச்சியில் ஆசை கொண்டவர்கள் ஒவ்வொருவரும் தம்மால் பத்துப் பேரையாவது புத்தகப் பிரியர்களாகச் செய்தோம் என்ற உணர்ச்சிக்கு உகந்த காரியத்தில் கங்கணம் கட்டிக்கொண்டு ஈடுபட வேண்டும்."

---

## *மாதிரி 3*

*** சென்னையில் தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் 26-12-1951 அன்று நடந்த தேவாரப் பண்கள் ஆராய்ச்சிக் கூட்டத்தில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அருட்டிரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகளின் சொற்பொழிவு.**

* 27/28-12-1951 'சுதேசமித்திர'னில் வெளிவந்தது.

இசை இன்பந் தருவது; ஒருங்கே பொறி புலன்களுக்கு இன்பந் தருகின்ற பெருமை இசைக்குண்டு. இயங்கச் செய்கின்ற ஆற்றல் இசைக்குண்டு; உணர்ச்சியற்றவர்களுக்கும், உணர்ச்சியை ஊட்டுகின்ற பேராற்றல் இசைக்குண்டு; கன்னெஞ்சையும் கசிவிக்கச் செய்கின்ற திறன் இசைக்குண்டு; அலிகளுக்கும் ஆண்மைக் கனலேற்றுகின்ற திறன் இசைக்குண்டு; நல்லுணர்வை நல்குகின்ற திறனும் இசைக்குண்டு; குழைந்த உள்ளத்தைத் தருகின்ற திறனும் இசைக்குண்டு; எடுத்த யாவினும் வெற்றி தருகின்ற இணையற்ற வாய்ப்பும் இசைக்குண்டு.

இசை உயிர்; பாடல் உடல். உயிரின்றி உடல் இயங்காது; உடற் இன்றேல் உயிருக்கும் இயக்கம் இல்லை; பயனுமில்லை. எனவே பாடுகின்ற பாடல்களின் பொருளை உணர்கின்ற நிலை வருகிற பொழுதே இசைக்கலையின் பயனை அனுபவிக்கச் சாதாரண மக்களிலிருந்து பெரியவர்கள் வரை முடியும். மேலும் வாழ்க்கையை வளப்படுத்தத் தானே கலைகள்? வெறும் இசை கேட்கச் சிறிது நேரம் இன்பமாக இருக்குமேயொழிய வளம் பயப்பதில்லை. நல்ல கருத்துள்ள பாடல்களை இசையுடன் பாடுகின்ற பொழுது கேட்பதினால் நல்ல உணர்ச்சியையும், மெய்ப் பாட்டையும் அடைய முடிகிறது; உண்மை இன்பத்தையும் அனுபவிக்க முடிகிறது. எனவே தமிழிசைதான் இந்த நாட்டிற்குத் தேவை என்று நிச்சயமாக நம்புகின்றோம். இந்த நம்பிக்கை வேற்றுமொழியின்கண் உள்ள வெறுப்பினால் அல்ல என்பதையும் உணர்த்த ஆசைப்படுகின்றோம்; தமிழ்ச் சமுதாயத்தைத் திருத்த, உயர்ந்த அவர்கள் எளிதில் கேட்டு அனுபவிக்கக்கூடிய தமிழிசை தேவை என்ற எண்ணத்தால் தான் இங்ஙனம் சொல்லுகின்றோம்; நாட்டின் தேவையறிந்து காலத்தில் தமிழிசை இயக்கத்தைக் கண்ட ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

## சமயமும் இசையும்

தமிழ் மக்கள் கலைகள் அனைத்தையுமே கடவுள் தொண்டுக்கே பயன்படுத்தினர். புலமை, ஓவியம், சிற்பம், இசை முதலிய கலைகளெல்லாம் கடவுள் தொண்டுக்கே பயன்படுத்தப்பெற்றன. அதனாலன்றோ சிற்பக்கலைக் களஞ்சியங்களாக, ஓவியக் கலையின் உறைவிடமாக ஆலயங்கள் அமைந்தன. ஆலயங்களில் தேவாரங்கள் பண்ணுடன் ஓதப் பெறவும், ஏனைய இசை வாத்தியங்கள் வாசிக்கவும், தமிழ் மன்னர்கள் இறையியாக நிலங்கள் அளித்துள்ளனர். சிறப்பாக இசை சமயத்திற்கென்றே கருதப்பெற்றது.

தமிழ்மக்கள் சமயத் துறையில் இசையைப் பெரிதும் போற்றினர்; இறைவனையே ஏழிசையாகவும் இசையின் பயனாகவும் கண்டு வழிபட்டனர்; ஆண்டவனை அகங்குளிர்ந்த உள்ளத்துடன் இசை

யொன்றைப் பாடுகின்ற பண்பு தமிழ் மக்களுக்கே உரியது; ஆண்டவன் தமிழோடு இசை கேட்கின்ற பெரு விருப்பினனாகி விளங்குகின்றான் என்றே அவர்கள் உணர்ந்து ஓதினர்; ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலிய சமயப் பெருமக்கள் இசை கலந்த பாடல்களைப் பாடிப் பரமனை மகிழ்வித்ததோடு மக்களிடையேயும் பக்தி உணர்ச்சியைப் பரப்பினர். இசையின்கண் எழுந்த வேட்கையினால் மதுரை ஆலவாயண்ணல் யாழ்ப்பாணருக்குத் திருமுகங் கொடுத்தார்; அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய ஆனாய நாயனார் ஏழிசையைக் குழலில் ஊதிப் பேரின்பப் பெருநிலை பெற்றார்; இசையினால் இறைவனை ஏத்துதலாள் பெறும் பயனை "அளப்பில் கீதஞ் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே" என்று அநுபூதிச் செல்வர் சொல்லுகின்றார்; பிற்காலத்தில் தமிழிசை சமயத்தின் அரவணைப்பிலேயே வளர்ந்தது; இன்றும் தமிழிசை நிலவுவது இசை நலத்தோடு அமைந்த தேவாரப் பதிகங்களால்தான்.

பண்ணிசையின் ஆக்கத்திற்குத் தேவார ஆசிரியர்கள் மூவரும் செய்த தொண்டு மிகவும் போற்றுதற்குரியது.

## நல்ல கீர்த்தனைகள் வேண்டும்

தமிழிசை இயக்கம் வலுப்பட நல்ல கீர்த்தனைகள் வேண்டும். அக்கீர்த்தனைகள் பொருட் செறிவும் இசைப் பொருத்தமும் பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய கீர்த்தனைகளின் பெருக்கிற்குச் சாகித்ய கர்த்தாக்கள் இசைப்புலமையும் தேர்ச்சியும் பெறவேண்டும். தமிழ்ப் புலவர்களும் இசை நுணுக்கங்களைக் கற்று முத்தமிழ் வளர்ச்சிக்குப் பணிசெய்ய வேண்டும். தமிழிசைக் கலையின் வளர்ச்சிக்குப் பயன்படக்கூடியவைகளையெல்லாம் நாடு, இனம், மொழி என்ற வேற்றுமைகளைப் பாராது நாம் கைக்கொள்ளவேண்டும். தேவாரப் பாக்களை அவற்றிற்குரிய பண்பு முறையில் ஓதுதலே நன்மை பயக்கும். இசையுலகின் ராகங்களுக்கும் பண்களுக்கும் சிற்சில பண்களில் கலை வித்தியாசம் இருப்பதைக் காணலாம். இந்த மாதிரியான செய்திகள் எல்லாம் அமைதியான உள்ளத்துடன் ஆய்ந்து முடிவு செய்து தமிழிசையுலகுக்கு ஆக்கமளிக்கத் தமிழிசைச் சங்கம் தலைப்பட்டது போற்றுதற்குரியது.

---

## (ஈ) பிரிவு உபசாரப் பத்திரங்கள்

*மாதிரி 1*

சேயாறு போர்டு உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்
உயர்திரு. புலவர். **கோ. பாலசுந்தர நாயகர்,** எம்.ஏ. அவர்கள்
வந்தவாசி போர்டு உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராக
மாற்றப் பெற்ற போது அவர்தம் மாணவர்கள் படித்தளித்த

# பிரிவு நன்மொழி வாழ்த்து

**பலகலை வல்ல புலமைகோள் எந்தாய்,**

வணக்கம். சென்ற பத்து ஆண்டுகளாக எம் பள்ளியில் மாணவர்கட்குத் தமிழ் அமுதூட்டிக் காத்த தாங்கள் இன்று வேற்றூருக்கு மாற்றப்பட்ட செய்தி கேட்டுத் தாயைப் பிரியும் கன்றுபோல் நாங்கள வருந்துகிறோம். இந்நேரத்தில் பற்பல நினைவு அலைகள் எங்கள் உள்ளக் கடலில் மோதுகின்றன. என்ன கூறுவது; என்ன செய்வது என்று தோன்றாமல் திகைக்கிறோம்.

தாங்கள் பாடம் சொல்லும் முறை தனிப்பெருமை வாய்ந்தது. தங்களுக்கென்று அமைந்த இனிய குரலில் எல்லோருக்கும் கேட்கும் வண்ணம் எல்லோருக்கும் புரியும்படி தெளிவாகப் புகட்டினீர்கள். பாடநேரம் தவிர மற்ற நேரங்களில் தாங்கள் ஆடம்பரமின்றி எளிய முறையில் எங்களுடன் பழகி எங்கள் துன்பங்களைப் போக்கி உதவிகள் புரிந்ததை நாங்கள் எவ்வாறு மறப்போம்? கம்பீரமான தோற்றம், இன்சொல், பரோபகாரம், அன்பு முதலிய அருங்குணங்களே தங்கள் ஆபரணங்கள்.

கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் படைத்த தாங்கள் பள்ளிப்படிப்பு மட்டுமின்றி, நாடகம், இசை, மேடைப் பேச்சு முதலிய துறைகளிலும் மாணவர்களைப் பயிற்றிப் பயனடையச் செய்தீர்கள், கைமாறு கருதாத தங்கள் சேவைகள் எம் பள்ளி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தகுந்தவை என்றே கூறலாம். தங்கள் பிரிவுக்குத் தங்கள் ஆசிரிய நண்பர்களுடன் அருமை மாணவர்களும் பள்ளிப் பணியாளரும் கண்கலங்கி நிற்கும் காட்சியைப் பாருங்கள்.

“பிரிவு இயற்கையானது; புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்” என்று தாங்கள் அடிக்கடி கூறும் அறவுரைகளைக் கொண்டே நாங்கள் ஆறுதல் அடைகிறோம்.

பசியுள்ளவன் ருசியறியான்

"கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்னும் பொன் மொழிக்கேற்பத் தாங்கள் செல்லும் ஊரில் தங்கள் திருப்பணிகளால் உயர்ந்த புகழைப் பெறுவீர்கள் என்னும் உறுதியுடையோம்.

இறைவன் திருவருளால் தாங்கள் மக்கள், காணி, மனையறம் செழித்து, ஆல்போல் தழைத்து, அரசுபோல் உயர்ந்து பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டுமென அவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம். வணக்கம்.

சேயாறு, 16-7-1940.

இங்ஙனம்,
தங்கள் அன்பகலாத மாணவர்கள்.

---

மாதிரி 2

இராணிப்பேட்டை, துரைத்தனத்தார் போதனமுறைப் பாடசாலை, தலைமை ஆசிரியர்

## ஸ்ரீ N. தியாகராஜ அய்யர், B.A.,L.T.

அவர்கள்

தம் வேலையிலிருந்து ஓய்வு (Retirement) பெற்றபோது ஷை பாடசாலை ஆசிரிய மாணவர்கள் அளித்த

# பிரிவு உபசாரப் பத்திரம்

---

கலைபல மலிந்த தலைமை ஆசிரிய !

'சோழவளநாடு சோறு உடைத்து' என்று ஔவையார் பாடிய பெருமை உடையது சோழநாடு. அந்நாட்டின் திலகம்போல் விளங்குவது கும்பகோணம் என்னும் அழகிய நகரம். அந்நகரில், 'செந்தண்மை பூண்டு ஒழுகும்' அந்தணர் குலத்தில் தோன்றிய ஸ்ரீ நடேச தீக்ஷிதரின் அருந்தவப்பயனைத் தாங்கள் அவதரித்தீர்கள். இளமையிலேயே வடமொழியில் நல்ல பாண்டித்யம் பெற்றதோடு தமிழிலும் தாங்கள் சிறந்த அறிவு பெற்றிருக்கிறீர்கள். இத்தகைய அறிவு நிலையமாகிய தங்களை தாங்கள் பல ஆண்டுகள் ஆரம்ப பாடசாலைகளின் கண்காணிப்பாளராகத் (Deputy Inspector) தொண்டாற்றிய பின்னர் சென்ற ஆறு ஆண்டுகளாக எங்கள் பாடசாலை, தலைமை ஆசிரியராகப்

பெற்ற பாக்கியத்தை நாங்கள் எண்ணி எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் தங்களுடன் இன்னும் சில ஆண்டுகள் நாங்களும், எங்கள் வழிவரும் ஆசிரிய மாணவர்களும் பயில்வதற்கு இல்லாமல் பிரிய நேர்ந்ததற்குப் பெரிதும் வருந்துகின்றோம்.

**அரும்பணியாற்றிய பெரும் பெயர்த் தலைவ!**

'**தியாகராஜர்**' என்ற தங்கள் பெயருக்குப் பொருத்தமாகவே தன்னலம் பாராமல் மாணவர்கள் நலத்தையே கருதி தாங்கள் பதவிக்கு வந்த சிறிய காலத்தில் பல அரிய வேலைகளை ஆற்றியுள்ளீர்கள். தாங்கள் இருந்த காலத்திலேயே எம் கலாசாலையின் பொன் விழா (Golden Jubilee) சிறப்பாக நடைபெற்றதைக் கண்டு வியப்படையாதவரும் உளரோ? மாணவர்களின் மனமாகிய குதிரை, தீய வழியில் போனால் அதன் கடிவாளத்தைப் பிடித்து திருப்பித் முன்னேற்றம் உண்டாக்கத்தக்க நல்வழியில் வேகமாகவும் உற்சாகமாகவும் தட்டி ஓட்டத் தக்க சாரதி தாங்களே என்பதை நாங்கள் அனுபவத்தில் அறிவோம். "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்னும் பொய்யா மொழியாரின் பொன்னுரையைக் கடைப்பிடித்து நிற்கும் பெரியீர் தங்களை விட்டுப் பிரியும் இதுபோது நாங்கள் சென்ற சில திங்களாகத் தங்களிடத்தில் கண்ட சிறந்த குணங்களைப் பாராட்டப் புகுந்தால் இந்த சிறிய பத்திரம் ஒரு பெரிய புத்தகமாகவே முடியும்.

**நுண்ணிய அறிவு மன்னிடும் அறிஞரே!**

*தி*ங்கள் பெருந்தன்மையை காட்டும் அழகிய விரைந்த நடை; உன்னதமான எண்ணங்கள் தோன்றும் தலை அசைவு; தன்னை நோக்கி வருபவரை இனிய மொழியோடு வரவேற்கும் புன்முறுவல் தவழும் முகம்; எல்லாப் பொருளையும் உற்றுநோக்கி உண்மை அறியும் கூரிய பார்வை ஆகிய இவற்றுடன் தங்கள் கூரிய ஞாபக சக்தியும் என்றும் எங்கள் மனத்தில் மலர்ந்து நிற்கும் மணமலர்கள் அன்றோ! அன்றியும் இப்பள்ளியில் தங்கள் உருவப்படத்தை (Photo) காணுந்தோறும் தங்களை நேரில் காண்பது போலவே நாங்கள் கருதி வழிபடக் கடவோம்.

**நீதி நெறி புகல் போதகாசிரிய!**

*மா*ணவர்கள் மனநூல் (Psychology) கரைகண்டு எங்கள் உள்ளம் கொள்ளை கொள்ளும்படி பாடம் சொல்லும் தங்கள் ஆற்றலை நாங்கள் எவ்வாறு பாராட்டுவோம்! தாங்கள் சொல்லும் ஒவ்வொரு நீதியும் மாணவர்களாகிய எங்களுடைய வாழ்க்கைக் கப்பலுக்குரிய கலங்கரை விளக்கம் (Light house) ஆகுமன்றோ? தங்கள் விடாமுயற்சியும் உழைப்பும் மாணவர்கள் பின்பற்றுதற்குறியனவாகும்.

**வாழி எம் தலைவ, வளம்பல மலிந்தே.**

தாங்கள் ஓய்வுபெறும் இந்நாளில் தங்களைப்பற்றி எங்கள் மனதுக்கு எட்டியவரை எடுத்துரைத்தோம். தாங்கள் எல்லாம் வல்ல இறைவன் அருளால் சென்ற விடங்களில் சிறப்புகள் பெற்று, மக்கள், காணி, மனை, அறம் செழித்து உடல் வளமும் பெற்று பல்லாண்டு வாழ்க என்று அல்லும் பகலும் அனவரதமும் அவன் அடிகளைத் துதிக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள,
*ஆசிரிய மாணவர்கள்.*

இராணிப்பேட்டை,
21-10-1940.

---

*மாதிரி 3*

பத்தாம் வகுப்பு மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடித்து வெளியே செல்லும் போது மற்ற நண்பர்களுக்கு அளித்த

## பிரிவு நன்மொழி

---

அன்புள்ள சகோதரர்களே,

இன்று நாங்கள் உங்களிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறோம். தாய்ப்பள்ளியில் சென்ற சில வருஷங்களாக நாம் உடன் பிறந்தவர்களைப்போல வேற்றுமையின்றி உள்ளன்புடன் பழகினோம். நம் தந்தையரைப்போன்ற ஆசிரியர்கள் காட்டிய அறநெறிகளை நாங்கள் கடைப்பிடித்து நாட்டுக்கேற்ற நல்ல பிள்ளைகளாக வாழ்வோம் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறோம்.

ஒரு குடும்பத்துத் தம்பியர்போல் எங்களிடம் நீங்கள் இதுவரையில் காட்டிய அன்புக்கு மிகவும் நன்றி. பத்து ஆண்டுகளும் எப்படியோ பறந்துவிட்டன. இது கால இயற்கை. எனினும் அன்புக்கயிற்றால் பிணிக்கப்பட்ட நம் நட்பைக் காலம் என்ன செய்யும்? தூரம் என்ன செய்யும்? நாங்கள் உங்களையும் இத்தாய்ப் பள்ளியையும் என்றும் மறவோம். நம் பள்ளி வளர்ச்சிக்கான தொண்டுகளை எப்போதும் புரியக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் பிரிந்து சென்றாலும் பழைய மாணவர் சங்கத்தின் மூலமாக உங்களை அடிக்கடி சந்திக்கும் பேறு பெறுவோம் என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறோம். நாங்கள் பிரிந்து செல்லும் நேரத்தில் உங்களுக்குச் சில நல்லுரைகள் கூற விரும்புகின்றோம். நம் பள்ளி ஆசிரியர்களே நம் கண் கண்ட தெய்வங்கள். அவர்கள் கூறும் புத்திமதிகளை நீங்கள் தெய்வ வாக்காக மதித்துப் பாராட்ட வேண்டும். பள்ளிக்கூடத்திலும், வெளியிலும் நம் பள்ளியின் நல்ல பெயருக்குக் கேட்டைத் தரும் எத்தகைய காரியங்களிலும் நீங்கள் தலையிடலாகாது. பள்ளிப் பாடம் தவிர மற்றும் பள்ளிக்கூடத்தில் நடக்கும் சொற்பொழிவுப் போட்டிகள், நாடகம், இசை, விளையாட்டுப் போட்டிகள் முதலிய எல்லாவற்றிலும் நீங்கள் பங்கெடுத்துக்கொண்டு பயன்பெற வேண்டும். காலந்தவறாமல் பள்ளிக்கு வந்து கடமைகளைச் செய்யுங்கள்.

பிற்கால சமூகத்தில் நம் உயர்வைக் கண்டு ஆசிரியர்கள் மகிழ்ச்சியடையுமாறு நீங்கள் இந்தப் பருவத்திலேயே, பள்ளியில் படிக்கும்போதே நல்ல பழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும். இந்நல்வழிகளை நீங்கள் ஒருபோதும் மறவாதீர்கள். ஆண்டவன் உங்கட்கு அருள் புரிவான்.

இங்ஙனம்,
உங்கள் அன்பை மறவாத,
*பத்தாம் வகுப்பு மாணவர்கள்.*

---

*மாதிரி 4*

## பிரிவுபசாரப் பத்திரிகை: *1947-'48*

அன்புடையீர்,

மின்னல் வேகத்தில் பல வருடங்கள் நம்மை கடந்துவிட்டன. பிரியும் நேரமும் நெருங்கி விட்டது. ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு வினாடியும், உள்ளத்தில் துக்க அலைகள் பொங்கி எழுகின்றன. ஆற்றொணாத் துயரமும் அடைந்துள்ள இவ்வுள்ளத்திற்கு அமைதியும் கிட்டுமா?

நீங்கள் எங்களுக்கு அறிவு புகட்டினீர்கள்; அன்பின் எல்லையைக் காட்டினீர்கள்; ஆதரவு அளித்தீர்கள்; உலகத்தோடு ஒத்து வாழவும், வாழ்க்கையில் இன்ப துன்பங்களை மன உறுதியோடு எதிர்கொள்ளவும் எமக்குக் கற்பித்தீர்கள்; எங்களை அரசாங்கப் பரீட்சைக்கு தகுதியாக்கும் வேலையில் நீங்கள் அல்லும் பகலும் அனவரதமும் உழைத்து, உம் தேக சுகத்தையும் கால அருமையையும் கவனியாமல் உங்களையே

---

பசியுள்ளவன் ருசியறியான்.

எங்களுக்காகத் தியாகம் செய்துவிட்டீர்கள். சேவையே உங்களது குறிக்கோள்! அன்பே உங்களது ஆயுதம்! என்னே உங்களது தன்னலமற்ற தியாக சிந்தனை!

நிற்க, இதோ! எங்கள் மனதில் என்றும் அழியாது நிற்கும் தியாக உருவம்; தன் உடல் நலத்தையும் கவனியாத உழைப்பு; பொருளைப் பொருட்படுத்தாத பொன்னுள்ளம்; கைமாறு கருதாத் தியாகம்—இவையனைத்தும் பொருந்தி, எங்களுக்கு என்றும் எடுத்துக்காட்டாக நிற்கும் அவ்வுருவை யாம் மறப்பினும் எம்முள்ளம் மறவாது. மலர் முகத்துடன், எளிய முறையில் எங்களுக்கு நற்புத்தியும் காட்டி, எடுத்துக்காட்டாய் நிற்கும் எமது தலைவி!

மேலும், அறிவுச்சுடர்; முதிர்ந்த அநுபவம்; கல்வி புகட்டும் தனிப்பெரும் ஆற்றல்; பிறருக்குப் பணிபுரிவதே தன் கடன் என்ற கொள்கை, பிறர் இன்பமே தன் வாழ்வின் குறிக்கோள். இவ்வளவும் உருவாயமைந்த எம் காரியதரிசிக்கு நன்றி உரைக்க எம் நா அனைத்தும் போதா. அவரை மௌனமாய்ப் பணிந்து எம் மனமார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவிக்கிறோம். ஆசிரியை ஆச்ரயிக்கிறோம்.

ஆனால், இன்று, இடைவிடாது மலர்ந்த முகங்களின் மத்தியில் சோகரேகை ஓடுகின்றது. பல வருடங்களாக எங்களுக்கு கல்வி புகட்டி எம்முடனேயே இருந்த ஆசிரியர்களாகிய உங்களை விட்டுப் பிரியவேண்டுமென்பதை எண்ணும்பொழுதே எம்முள்ளம் துக்கத்தால் குமுறுகிறது. எம் கண்களுக்கு இமைபோலவும் எங்கள் இருள் மிக்க மனதிற்கு ஒளி வீசும் சுடர் போலவும் நின்று வாழ்க்கையின் பயங்கர பாதையில் அபயம் அளித்து, அன்பும் ஆதரவும் காட்டிய ஆசிரியைகளாகிய உங்களை விட்டுப் பிரிவது எங்களுக்குத் துன்பம் தரும் என்பதில் ஐயமில்லை. பிரிவு என்பது வாழ்க்கையில் மிகவும் வருத்தம் தரத்தக்கது என்றறியாமலா ஔவையார் 'கூடிப் பிரியேல்' என்று கூறினர்? ஆயினும் பிரிந்தே ஆகவேண்டியிருக்கிறது. ஆனால் உங்களை விட்டு எங்கள் மனம் பிரியாது! ஆம்! பிரிய முடியாது.

எம் வெற்றியே உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கவல்லது. ஆகையினால் வரப்போகும் பரீட்சைப் போரில் வாகை சூடி, இப்பள்ளியை என்றென்றும் குன்றின் மேலிட்ட விளக்கென ஒளிச் செய்வது எம் கடமை; அதுவே எமது லட்சியமுமாம்.

இறுதியாக எம் அனைவருடைய மனமார்ந்த வந்தனமும் நன்றியும் உங்களுக்கு உரித்தாகுக!

தங்கள் அன்பிற்குரிய,
S. மாலதீ,
R. சம்பூர்ணம்,
ஆளும் அமைப்பு.

## மாதிரி 5

### பள்ளிப் படிப்பை முடித்து அரசாங்கப் பொதுத் தேர்வுக்குச் செல்லும் மாணவர்களுக்கு ஆசிரியர் ஒருவர் கூறும்

## ★ பிரிவு நல்லுரை ★

**அன்பும் அருங்குணங்களும் நிறைந்த என் மாணவ மணிகளே,**

பல ஆண்டுகள் இப்பள்ளியில் தகுந்த முறையில் கல்விகற்று அறிவுக் களஞ்சியங்களாக விளங்கும் உங்களை நான் பாராட்டுகின்றேன். இந்நாளில் உங்களுக்கு நான் ஒரு சில நல்லுரைகளைக் கூற விரும்புகின்றேன்.

நீங்கள் எவ்வளவுதான் கற்பினும் கல்லாதவனவற்றை நோக்கின் கற்றது கைம்மண்ணளவே ஆகும்என்பதை உணர வேண்டும். கற்பனவற்றைக் கசடறக் கற்றுக் கற்ற வழியில் நடத்தல் வேண்டும். கற்பது வயிற்றுப் பிழைப்புக்காக என்பதை மறந்து அறிவுச் செல்வத்தை மேலும் மேலும் திரட்ட முன்வாருங்கள். கல்வியுடன் கைத்தொழிற் பயிற்சியிலும் உங்கள் நாட்டம் செல்ல வேண்டும்.

தெய்வபக்தியிலும் பெரியோர்பால் மரியாதையாய் நடப்பதிலும் நீங்கள் ஒரு சிறிதும் தவறலாகாது. தன்னம்பிக்கையிலும் தன் முயற்சியிலும் நீங்கள் தளராமல் இருந்து எடுத்த காரியங்களில் வெற்றி பெறுதல் வேண்டும். நன்றி மறவாதவர்களாகவும் நீங்கள் விளங்குதல் வேண்டும். எங்கு செல்லினும், எத்தொழில் புரியினும் தாய்ப்பள்ளியை மறவாது அதன் வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளைப் புரிய முன்வரவேண்டும்.

உங்களைப்போன்ற சிறுவர்கள் கிராமங்களிலும், சுரங்கங்களிலும், வயல்களிலும் கடுமையான வேலைகளைச் செய்துகொண்டு வருந்தும் இக்காலத்தில் பள்ளியில் படிக்கும் நீங்கள் பாக்கியம் பெற்றவர்கள் என்றே கூறலாம். உங்கள் படிப்புக்குப்பின் உங்கள் சகோதர மக்களாகிய அவர்களை மறவாமல் நீங்கள் சமூகப் பணிபுரிய வேண்டும். சமூகசேவையே உங்கள் வாழ்க்கையின் லட்சியமாகக் கொள்ளுங்கள்.

வரப்போகும் பொதுத்தேர்வில் படித்ததை நன்கு சிந்தித்து எழுதி வெற்றிமாலை சூடுவீர்கள் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. கடவுள் அருளால் நீங்கள் அனைவரும் வெற்றிபெற்றுச் சிறந்த உடல் வளமும், நிறைந்த வாழ்நாளும் பெற்று வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்,
உங்கள் அன்புள்ள ஆசிரியன்,
கா. கோவிந்தன்.

---

பஞ்சும் நெருப்பும் ஒன்றாய்க் கிடக்குமோ?

## மாதிரி 6

## ஓர் பள்ளியின் ஆரும் அமைப்பு மாணவியர் விடைபெற்றுச் செல்லுகையில் அவர்கள் தலைவியின் நல்லுரை

குழந்தைகளே!

இன்று நீங்கள் செய்த பிரிவு உபசாரங்களை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டோம். இன்றைய நிகழ்ச்சியையும் வழக்கம் போல் நீங்கள் ஒழுங்காகச் செய்து முடித்தீர்கள். இன்றைய நிகழ்ச்சியின் ஒவ்வொரு அங்கமும் எங்களுக்குக் களிப்பைத் தந்தது.

நீங்கள் அன்போடளித்த ருசிகரமான சிற்றுண்டி, செவிக்கினிய மதுரகானம், ஹாஸ்யம் பொங்கும் நாடகத்தின் திறமையான நடிப்பு, இவை யாவும் எங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டன.

மேலும், நீங்கள் வணக்கத்துடன் அளித்த இவ்வுபசாரப் பத்திரம் உங்களுடைய அன்பின் உருவப் படமாகவே எங்களுக்குத் தோற்றம் அளித்தது. இப்பத்திரத்தில் உபாத்தியாயர்களைப் புகழ்ந்து கூறியுள்ளீர். இது மிகவும் பொருத்தமானதே. அவர்கள் தங்கள் சிரமத்தைப் பாராட்டாமல் உற்சாகத்துடன் உங்களுடைய நன்மைக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். இன்னும் உங்கள் தலைவியை மற்றவர்களிடமிருந்து பிரித்து பிரத்தியேகமாய் போற்றி இருக்கிறீர்கள். இது அவசியமென்று எனக்குப் படவில்லை.

ஒரு மலர் ஒரு ஹாரமாகாது. ஒரே விதமான பல மலர்களை ஒன்று சேர்த்து ஒரு ஹாரமாக கட்டிய பிறகு அம்மலர்களுள் எது மிகச் சிறந்தது? எது அடுத்தபடியாக சிறந்தது? எது தாழ்ந்தது? என்று எல்லாம் கூறமுடியாது. அதுபோலவே இப்பள்ளியின் நன்மைக்காக உழைக்கும் என் நண்பர் பலருள் நானும் ஒருத்தியாக இருக்க என்னைத் தனியாகப் புகழ்ந்து கூறுவது பொருத்தமுடையதாகுமோ? ஆயினும் தலைவி என்பதனால் அவ்விதம் கூறியுள்ளீர் போலும்! உங்களுடைய உபசார வார்த்தைகளினால் உங்கள் வணக்கத்தையும், மரியாதையையும் தெரிவித்தீர்கள். ஆனால் நீங்கள் அனைவரும் சேர்ந்து என் மேல் ஒரு பெரும் பாரத்தைத் சுமத்திவிட்டீர்கள். நீங்கள் பத்திரத்தில் குறித்திருக்கிற அநேக விசேஷ குணங்களில் ஒன்றாவது என்னிடத்தில் பரி பூரணமாக இல்லை என்பதே எனது எண்ணம். இனி நான் உங்கள் கற்பனாசிருஷ்டிக்குத் தகுந்தவாறு என்னை மாற்றிக்கொள்ள வேண்டும். இதைத் தான் நீங்கள் என்பேரில் சுமத்திய பாரம் என்று கூறினேன்.

இத்துடன் உங்கள் பள்ளி வாழ்க்கை முடிவுறுகிறது. உங்களுக்கு நான் எடுத்துக் கூறவேண்டுவது யாதுமில்லை என எண்ணுகிறேன்.

நான் கூறக்கூடியதெல்லாம் அவ்வப்போது கூறியுள்ளேன் என்றும் நினைக்கிறேன். இருந்தாலும் பிரியுமுன், உங்கள் பிற்கால வாழ்க்கைக்கு அனுகூலமாக இருக்கும் சில புத்திமதிகளைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எத்துறையில் புகுந்தாலும் உம் கடமைகளைத் தவறாது செவ்வனே செய்து முடிக்க முயலுங்கள். இன்றைக்கு செய்யக்கூடிய காரியத்தை நாளைக்கு என்று தள்ளிப் போடாமல் இன்றே செய்து முடியுங்கள். மேற்கண்ட காரியத்தை ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் செய்யுங்கள். நாம் வேலை செய்யாமல் சுக வாழ்வு வாழலாம் என்று ஒரு நாளும் எண்ணாதீர்கள். நம்மைச்சுற்றி நோக்குங்கால் சகல ஜீவராசிகளும் தத்தம் வேலையை ஒழுங்காகச் செய்வதை நாம் காண்கிறோம்.

ஒரு அற்ப உதாரணம் கூறுகிறேன். கோழியின் வேலை அதிகாலையில் கூவுவதே. என்றைக்காவது கோழி கூவவில்லை என்று கூறமுடியுமா? காக்கை தூங்கிவிட்டது இன்று கரையவில்லை என்று சொல்லிக் கேட்டிருக்கிறோமா? தாவரங்களும் காலாகாலத்தில் பூத்துக் காய்த்துப் பழுத்துத் தம் கடமையை நிறைவேற்றிக் கொள்ளுகின்றன. பகவான் சிருஷ்டியில் யாவும் தம் தம் கடமையைச் செய்து கொண்டிருக்க மனிதன் ஒருவனே வேலை செய்யாமல் பலனை எதிர்பார்க்கிறான். மனச்சாந்தியும், கௌரவமும் வேண்டுமென்றால் நம் உழைப்பினாலேயே இவைகளை அடையலாம். உலகம் முழுவதும் காந்தி மகானைப் போற்றுவதற்குக் காரணம் அவருடைய சுயநல மற்ற உழைப்பே.

மேலும், பெரியோர்களிடத்தில் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். பெற்றோர்களை தெய்வமெனப் போற்றி அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். மனிதர்களிடையே சிற்சில துர்க்குணங்கள் அவர்களது வாழ்நாளை வீழ்நாளாக்கிக்கொண்டு வருகின்றன. அவைகளை அறவே ஒழிக்க வேண்டும். பிறரைத் தூற்றுவது, பிறரை இகழ்ந்து பேசுவது, பிறரை எந்தக் குற்றத்திற்காக நாம் நிந்திக்கிறோமோ அந்தக் குற்றத்தையே மறைவாகச் செய்வது ஆகிய இக்குணங்கள் நமக்கு ஆகா. நமக்கு மன நிம்மதி வேண்டுமென்றால், சில லக்ஷியங்களை மேற்கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டும்.

நீங்கள் பள்ளியை விட்டுச் செல்வதினால் உங்களுக்கு மாத்திரம் துக்கமில்லை, எங்களுக்கும் துக்கம்தான். ஆனால் அத்துக்கத்துடன் பெருமையும், மகிழ்ச்சியும் கலந்துள்ளன. இத்தகைய உணர்ச்சிகளை சரிவர விவரிக்கவே முடியாது. எங்கள் ஆதரவில் படித்த குழந்தைகள் பள்ளிக்கும் தங்களுக்கும் புகழ் தேடுவார்களென்று நினைக்கும் பொழுது எங்களுக்குப் பெருமையே. ஆனால் 80 குழந்தைகளும் ஒரே சமயத்தில் எங்களைவிட்டுப் பிரிந்து செல்கிறார்கள் என்றால் எங்களது மனமும் அமைதி அடையுமா? இன்னும் பற்பல நாட்களுக்கு நீங்கள்

பணக்காரன் பின்னும், பைத்தியக்காரன் பின்னும் பத்து பேர்.

படித்த இடமும், நீங்கள் குதித்து ஆடி ஓடிய இடங்களும் எங்களுக்கு வெறும் வெளித் தோற்றமாகவே இருக்கும்.

நீங்கள் பிரியுமுன் பள்ளிக்கு அளித்த அனேக வெகுமதிகளை நாங்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டோம். நீங்கள் ஒவ்வொருவரும் வரப்போகும் பரீட்சையில் சிறந்த வெற்றிபெற்று உம் இல்லற வாழ்க்கையிலேனும், கல்லூரி வாழ்க்கையிலேனும், உத்தியோக வாழ்க்கையிலேனும், வாழ்க்கையின் பலவகைப்பட்ட துறைகள் யாதாயினும் சரி, அவற்றில் பெறற்கரிய பேறெல்லாம் பெற்று மகிழ்ந்திருக்குமாறு அருள்புரிய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

---

*மாதிரி 7*

ஸ்ரீராமஜெயம்

சென்னை ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்

காக்ஸ்டன் அச்சக மானேஜர்

## உயர்திருவாளர் C. கெஜகேசரி நாயுடு அவர்கள்

விக்ருதி ஆண்டு பங்குனித் திங்கள் 10-ம் நாள் வெள்ளி முதல் ஓய்வு பெற்றதை முன்னிட்டு

ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் காக்ஸ்டன் அச்சக உத்தியோகஸ்தர்கள் மனமுவந்து அளிக்கும்

## ★ நல் உபசாரப் பத்திரம் ★

---

**அன்பே உருவமான பெரியீர்,**

பணிவு பல. தாங்கள் குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் அலுவலகத்தில் 20 ஆண்டுகளாகப் பொதுச் செயலாளராகவும், காக்ஸ்டன் அச்சகத்தில் 12 ஆண்டுகளாக மேற்பார்வையாளராகவும் இருந்து நேர்மையுடன் தொண்டுபுரிந்து எங்களை மகிழ்வித்து இன்று எங்களை விட்டுப் பிரிகின்றீர்கள்.

அலுவலகத்தில் தாங்கள் இன்னமுதூட்டி மைந்தரைக் காக்கும் அன்னையே போன்ற உரிமையாளரின் உள்ளன்புக்குரியவராய் உண்மைத் தொண்டாற்றியதை எங்களால் என்றுமே மறக்க இயலாது. தாங்கள் தொழிலாளர்கள்பால் உற்ற தோழராகவும்,

மலர்ந்த முகத்தினராகவும், இன்மொழி இயம்புநராகவும் இருந்து பொறுமையே அணியாகப் பூண்டு நன்மை பல புரிந்தீர்கள். தாங்கள் தொழிலாளர்பால் அன்பு பாராட்டித் திறமையுடன் தொழில் புரியச் செய்த நிகழ்ச்சி எங்கள் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது. இத்தகைய தாங்கள் எங்களை விட்டுப் பிரியும்போது நாங்கள் பெரிதும் வருந்துகின்றோம்.

தாங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளும் இந் நன்னாள் முதல் தங்கள் குடும்பத்தாரோடும், உறவினரோடும், நட்பினரோடும் இடையறாத இன்பமுடன் எல்லா வளமும் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றோம்.

ஓய்வு பெற்றாலும் தாங்கள் ஓய்வின்றி உழைக்கக்கூடிய உத்தமப் பெரியாராவீர்கள். தங்கள் அறிவும், ஆற்றலும் இனி தமிழ்நாட்டு இளைஞர்கட்கும், கலைக்கும், மொழிக்கும் பயன்படுமாறு செய்வீர்கள் என்னும் உறுதியுடையோம்.

எங்கள் வழிகாட்டியாக விளங்கும் தாங்கள் உடல்வளமும், மன அமைதியும், நீங்காத செல்வமும் பெற்று இன்ப வாழ்வுடன் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க வாழ்க என எல்லாம் வல்ல ஸ்ரீ பேரருளாளனின் பொற்பாத கமலங்களில் வணங்கி வேண்டுகின்றோம்.

சென்னை,
2-4-1951.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்,
காக்ஸ்டன் அச்சக உத்தியோகஸ்தர்கள்.

## (உ) ஆசிரியருக்குக் கடிதங்கள்

### மாதிரி 1

### *பஸ் போக்குவரவு அதிகாரிகள் கவனிப்பார்களா?

ஐயா,

சென்னை எம். யு. வி.-க்கும் தண்டையார்பேட்டைக்கும் செல்லும் 6 ஏ. ரூட் ஒன்றுவிடப்பட்டிருக்கிறது. இதில் மொத்தம் 3 சிறிய பஸ்கள்தான் ஓடுகின்றன. அதுவும் ஒரு மணி நேரம் பஸ் ஸ்டாண்டில் காத்துக் கொண்டிருந்தாலும், பஸ்ஸில் இடம் கிடைப்பதில்லை.

சில சமயங்களில் 'பஸ் ரிப்பேர்' என்று சில வண்டிகள் ஓடாமல் நின்று விடுகின்றன. அதனால் போகவேண்டிய இடங்களுக்கு காலா காலத்தில் போகமுடிவதில்லை. அவசர வேலையாகச் செல்பவர்களுக்கு இது உபயோகப்படுவதே இல்லை என்றுதான் கூறவேண்டும்.

* 22-11-1950 'தினத்தந்தி'யில் வெளிவந்தது.

ஆகவே, வட சென்னைப் பகுதி மக்களுக்கு சௌகரியம் செய்து வைக்க அரசாங்கம் முன் வரவேண்டும். ஆபீஸ் நேரங்களில் இந்தப் பாதையில் அதிக பஸ்கள் விடவேண்டும். அதுவும் பெரிய பஸ்களாக விடவேண்டும். இதைச் செய்ய அரசாங்க பஸ் நிர்வாகத்தினர் முன் வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
கண்ணம்மாள்,
வண்ணாரப்பேட்டை.

---

மாதிரி 2

## * திருவண்ணாமலையில் தபால் குறைகள்

திருவண்ணாமலை நகர அமைப்பு தற்போது மிக்க விஸ்தரிப்பு ஏற்பட்டு முன்னேறி வருகின்றது. இங்குச் சுமார் 5,000 வீடுகள் இருக்கின்றன. மலை அடிவாரம் கூடக் குடியிருப்பு பிராந்தியமாக மலையிடையிலும் பலர் இருக்கின்றனர். நகர எல்லைக்குட்பட்ட இவ்வூருக்கு நான்கே பேர்கள் தபால் பட்டுவாடா செய்து வருவதின் காரணமாகக் காலை 6-30 மணிக்குக் கிடைக்கும் தபால்கள் நடுப்பகல் 12 மணிக்கு மேல்பட்டும்கூட பட்டுவாடா செய்யப்படுவதில்லை. தபால் கொடுக்கிறவர்களும் ஓய்வு ஒழிவு இன்றித்தான் கொடுக்கின்றனர். ஆகவே, இவ்வூரின் ஜன நெருக்கம், நகர விஸ்தரிப்பு இவைகளைப் பரிசீலித்து இன்னமும் இரண்டு மூன்று அதிக ஆட்களை நியமித்து சீக்கிரமாகத் தபால் பட்டுவாடா செய்ய அதிகாரிகள் வசதி செய்ய வேண்டும்.

மற்றொரு விசனிக்கத்தக்க விஷயம் 1-10-1950 முதற்கொண்டு ரயில்வே கால நேரம் மாறுதலின் பின் காட்பாடி-வேலூர், ஆரணி, போளூர், ஆகிய பாகங்களின் தபால் 2 நாட்கள் கழித்தே பட்டுவாடா செய்யப்படுகின்றன. இந்தத் தபால்கள் அன்றே பட்டுவாடா செய்யப்பட ஏற்பாடு செய்வது மிக முக்கியமாகும். தபால் போக்குவரத்தில் மக்கள் அதிக அக்கரை கொண்டுள்ள இந்நாட்களில் ஞாயிறு விடுமுறை ஏற்கெனவே பாதிக்கின்றது. தபால்கள் 2 நாட்கள் தாமதிக்கப்பட்டு பட்டுவாடா ஆனால், மக்கள் விஷயத்தை அறிவதில் எவ்வளவு காலதாமதமாகின்றதென்பதை உணரவேண்டும்.

திருவண்ணாமலை,
27-10-1950.

வி. வி. திலக் சாஸ்திரி.

---

* 5-11-1950 'சுதேசமித்திர'னில் வெளிவந்தது.

## மாதிரி 3

### * பிருந்தாவனம் காலனிக்குத் தண்ணீர் வசதி செய்து தருக!

அன்புடையீர்,

பிருந்தாவனம் லேபர் காலனியில் ஐந்து தெருக்கள் இருக்கின்றன. ஒரு தெருவிலும் குடிதண்ணீர்க் குழாய் இல்லாமையால் பொது ஜனங்கள் தண்ணீருக்கு அதிகக் கஷ்டப்படுகிறார்கள்.

ஆகையால், இங்கு குடிதண்ணீருக்குத் தக்க ஏற்பாடு செய்யும்படி அதிகாரிகளுக்கு பல மகஜர்கள் எழுதியும் இதுவரை பலன் ஏற்பட வில்லை.

இதனால் பொதுமக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகி வருகிறார்கள். குடிக்கும் தண்ணீருக்கும் திண்டாடிக் கொண்டிருக்கவேண்டிய நிலை மிகவும் பரிதாபகரமானதாகும். எங்கள் குறையை நீக்கிக் குடிதண்ணீர் வசதியை அதிவிரைவாகச் செய்து தரும்படி ஹரிஜன டைரக்டர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேதி...............

இப்படிக்கு,
ஏ. எம். ராகவேல்,
பிருந்தாவனம், சென்னை-10.

---

## மாதிரி 4

### * போக்குவரத்து அதிகாரிகள் கவனிப்பார்களா?

ஐயா,

தண்டையார்பேட்டையிலுள்ள காலரா ஆஸ்பத்திரி சமீபத்தில் 5 ரோடுகள் ஒன்றாகக் கூடியிருக்கின்றன. இந்த சந்திப்பு இடத்தில் இதற்கு முன்பு இரண்டு மூன்று தரம் விபத்துக்களும் ஏற்பட்டிருக் கின்றன.

இந்த பரிதாபமான நிலையைப் போக்க சென்னை அரசாங்க போக்கு வரத்து இலாகாவினர் முன் வரவேண்டும். இந்த சந்திப்பான இடத்தில் ஒரு ட்ராபிக் போலீஸ் கான்ஸ்டேபிளை வைத்து நேரக் கூடிய விபத்துக்களை தடுக்கவேண்டும்.

இது விஷயத்தை அந்த அதிகாரிகள் கவனித்து, உடனடியாக ஆவன செய்வார்களென்று எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
ஜி. செல்வராஜ்,
தண்டையார்பேட்டை.

தேதி...............

* 20-11-1950 'தினத்தந்தி'யில் வெளிவந்தது.

## மாதிரிகள் 5 & 6

### பாம்புக்கடி வைத்தியம்

**ஆசிரியர் அவர்கட்கு,**

ஐயா, பாம்புக்கடி வைத்தியர் ஒருவரின் பெயரும், விலாசமும் தங்கள் பத்திரிகையின் மூலமாக வெளியிடுவதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர் **'விஷ ராஜா'** என்னும் பெயரால் மிகவும் புகழ் பெற்றவர். அவர் வீட்டு விலாசம்: **M. S. துரைசாமி ஐயர், அம்மன்குடி, ஜெயபுரம் போஸ்டு, திருச்சிராப்பள்ளி** என்பதாகும். அவருடைய தந்தி விலாசம்: **"விஷராஜா, எலமனூர், பாம்புக் கடிக்காக"** (Poison King, Elamanur, for snake bites) என்பது. பாம்புக்கடி சிகிச்சைக்காக அவருக்குத் தந்தி அனுப்புவோர் கடிக்கப்பட்டவரின் பெயரும், உடம்பில் பாம்பு கடித்த இடத்தையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். விஷ ராஜாவிடமிருந்து எத்தகைய ஆலோசனையும் வருவதற்கு முன் எப்படிப்பட்ட மருந்தும் கொடுக்கக் கூடாது.

தந்தி இலாகா அதிகாரிகள் இத்தகைய தந்திச் செய்திகளை யாதொரு கட்டணமும் இல்லாமல் ஏற்றுக் கொள்வார்களானால் அவர்கள் மனித வர்க்கத்துக்குச் சிறந்த சேவை புரிந்தவர் ஆவர்.

மதுரை, 17-8-1950. **A. P. வரதன்.**

**ஆசிரியர் அவர்கட்கு,**

வில்லிவாக்கத்திலும் ஒரு பாம்புக்கடி வைத்தியர் இருக்கிறார். அவர் வீட்டு விலாசம்: **ஸ்ரீ வெங்கட்ராம அய்யர், மாஜி ஸ்டேஷன் மாஸ்டர், தாழக்கிணற்றுத்தெரு, வில்லிவாக்கம்** என்பது. அவருடைய தந்தி விலாசம்: **"பாம்பு ஐயர், வில்லிவாக்கம்."**

22-8-1950. **M. பீர்முகம்மது.**

## மாதிரி 7

### சென்னையில் பாம்புக்கடி வைத்தியர்

பச்சையப்பன் கல்லூரித் தாவர சாஸ்திர உதவிப் பேராசிரியர் ஸ்ரீ- எஸ். சிவ. சுப்ரமண்யம் **தினமணி** ஆசிரியருக்குப் பின்வருமாறு எழுதுகிறார்.

**அன்புள்ள ஐயா,** 23-8-1950.

பாம்புக்கடியை எளிதில் குணப்படுத்தக் கூடியவர் ஒருவர் சென்னையில் இருக்கிறார். அவர் பெயர். **எம். சிவசுப்ரமணிய நாடார்** அவர் விலாசம்: **163, பூந்தமல்லி ஹைரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை.** மருந்து ஒன்றும் இடையாது. "சுப்ரமண்ய சுவாமி ஜபம்" செய்து குணப்படுத்துகிறார். இதுவரையில் அவரிடம் வந்தவர்களில் ஒருவராவது குணமாகாமல் திரும்பியது இல்லை.

—எஸ். சிவ. சுப்ரமண்யம்.

# அனுபந்தங்கள்

## (அ) பொது இட அழைப்புக் கடிதங்கள்

[குறிப்பு : பள்ளிக்கூடம் போன்ற பொது இடங்களிலிருந்து விழாக் காலங்களில் பிறர்க்கு அனுப்பப்பெறும் அழைப்புக் கடிதங்களின் மாதிரிகள் சில இப்பகுதியில் தரப்பட்டுள்ளன.]

---

*மாதிரி 1*

**லேடி சிவஸ்வாமி ஐயர் பெண்கள் உயர்தரப் பள்ளி, மயிலை.**

### ★ நவராத்திரி அழைப்பு இதழ் ★

1-10-1951.

அன்புடையீர்,

நாளது அக்டோபர் மாதம் 8-10-1951 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு எங்கள் பள்ளியில் வைக்கும் கொலுவிற்கு அன்னையர்கள் வந்து மஞ்சள் குங்குமம் பெற்றுக்கொண்டு எங்களை மகிழ்விக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

10-10-1951 புதன்கிழமை **விஜயதசமி** அன்று பள்ளியில் பூஜை நடைபெறும்.

பள்ளிக்கூட மாணவிகள் அனைவரும் அன்றைய விழாவில் கலந்து கொள்ளுவர். சில மாணவிகள் தங்கள் இனிய கீதங்களினால் யாவரையும் இன்புறச் செய்வர். சுமார் 250 மாணவிகளுக்கு அன்று ரவிக்கைத் துண்டு கொடுக்கப்படும். 4½ மணிக்கு காவிய பிரசங்க இரத்தினாகரம் ஸ்ரீ T. S. கண்ணபிரான் பிள்ளை 'கம்பரும் கலைமகளும்' என்பதைப்பற்றி உபந்நியாசம் செய்வார். பள்ளியின் அன்பர்கள் பலரும் வந்து, அன்றைய நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துக் குழந்தைகளையும், பள்ளியையும் ஆசிர்வதிக்கவும்.

இங்ஙனம்,
தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

S. *செல்லம்மாள்*,
*தலைவி.*

K. P. *லலிதா*, T. S. *அலமேலு*,
V. *ஜமுனா*, K. *ஸீதா*.
மாணவர் சங்கம், ஸேவா சங்கம், —காரியதரிசிகள்.

---

பராக்கிரமம் செய்ய முடியாததை உபாயம் செய்து முடித்துவிடும்.

மாதிரி 2

லேடி சிவஸ்வாமி ஐயர் பெண்கள் உயர்தரப் பள்ளி, மயிலை

## ★ பழைய மாணவர் சங்கம் ★

பதின்மூன்றுவது ஆண்டு விழா

7-8-1950.

அன்புடைச் சகோதரி,

இச்சங்கத்தின் பதின்மூன்றுவது ஆண்டு விழா, நிகழும் 1951-ஆம் வருஷம் ஜனவரிமாதம் 20-ஆம் தேதி, சனிக்கிழமை மாலை 3-30 மணிக்குப் பள்ளிக்கூடப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.

அவ்வமயம் பள்ளிக்கூடப் பழைய மாணவியான ஸ்ரீமதி ஸரோஜினி வரதப்பன் அவர்கள் தலைமை வகிக்க இசைந்துள்ளார்கள்.

இவ்விழாவிற்குத் தாங்கள் விஜயம் செய்து, இக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

S. செல்லம்மாள், M.A., L.T.,
தலைவி.

G. சாந்தா, B.A., B.T.,
J. காஞ்சனமாலா,
காரியதரிசிகள்.

நிகழ்ச்சி நிரல்

| | | | |
|---|---|---|---|
| வரவேற்பு | ... | மாலை | 3-30 |
| தேநீர் | ... | ,, | 3-45 |
| காரியக் கூட்டம் | ... | ,, | 4-30 |
| பொதுக் கூட்டம் | ... | ,, | 4-45 |
| கதம்ப நிகழ்ச்சி | - ... | ,, | 5-30 |

மாதிரி 3

## லேடி சிவஸ்வாமி ஐயர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மயிலை.

ஸ த் ச ங் க ம்

9-10-1950.

அன்புடையீர்,

இப்பள்ளியில் ஸத் சங்கத்தின் ஆதரவில் 2-11-1950, வியாழன் மாலை 4-30 மணிக்குத் தொடங்கிப் பின் குறிக்கப்பெற்ற தேதிகளில், காவிய

பிரசங்க இரத்தினாகரம் T. S. கண்ணபிரான் பிள்ளையவர்கள் ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவையிலிருந்து குறித்த விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

தாய்மார்களும், பள்ளி அன்பர்களும் வந்திருந்து ஸ்ரீ ஆண்டாள் அருளைப் பெற்று இன்புறுக!

இங்ஙனம்,

S. செல்லம்மாள்,
தலைவி.

விசாலாக்ஷி நாராயணன்,
V. ராஜம்மாள்,
J. ஜயம்,
R. துங்கா, } மாணவிகள்,
—செயலாளர்கள்,

## நிகழ்ச்சி நிரல்

| தேதி | கிழமை | விஷயம் |
|---|---|---|
| 2-11-1950 | வியாழன் | சூடிக் கொடுத்த சுடர்க்கொடி |
| 3-11-1950 | வெள்ளி | பாவை நோன்பின் பயன் |
| 6-11-1950 | திங்கள் | ஆண்டாள் அழைத்த அருந்தவச் செல்வியர் |
| 7-11-1950 | செவ்வாய் | நந்தன் மனையில் நம்பியைப்பரவுதல் |
| 13-11-1950 | திங்கள் | உடையவர் விரும்பிய ஒரு பாசுரம் |
| 17-11-1950 | வெள்ளி | 'கூடாரை வெல்லி' |
| 18-11-1950 | சனி | ஸ்ரீ ஆண்டாள் திருமணம் |

மாதிரி 4

# ★ காந்தி ஜயந்தி விழா, ★

## மகாத்மா காந்தி பாடசாலை

சந்தானகோபாலபுரம்,
விழுப்புரம்.

அன்புடையீர்!

நிகழும் கர ஆண்டு புரட்டாசி மாதம் 15 நாள் (2-10-1951) முதல் 22-ம் நாள் (8-10-'51) முடிய இத்துடன் உள்ள நிகழ்ச்சிக் குறிப்பின்படி நம் பள்ளியில் "காந்தி ஜயந்தி விழா"க் கொண்டாட்டம் நடைபெறும்.

தாங்கள் தவறுது ஒவ்வொரு நாளும் வந்திருந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றனன்.

விழுப்புரம்,
1-10-1951.

இங்ஙனம்,
தங்களன்பன்,
பெ. சு. லக்ஷ்மணசுவாமி,
நிர்வாகி.

அடக்கம் :
நிகழ்ச்சிக் குறிப்பு.

---

மாதிரி 5

## மாணவர் மன்றம், சென்னை

---

### உயர்திரு. டாக்டர் S. தருமாம்பாள்
### உயர்திரு. புலவர் மயிலை. சிவ-முத்து

அவர்கள்

அறுபதாம் ஆண்டு நிறைவு

## ★ மணி விழா அழைப்பிதழ் ★

---

அன்புடையீர்,

வணக்கம்.

தமிழ் வளர்ச்சியே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும் அரும்பெருந் தொண்டுகள் பலவும் ஆற்றிவரும் பெரியார்கள் திருமதி. டாக்டர் S. தருமாம்பாள் (தலைவர், மாணவர் மன்றம்), திருவாளர் தமிழ்ப் பேராசிரியர் புலவர் மயிலை. சிவ-முத்து (தலைவர், சென்னைத் தமிழாசிரியர் கழகம், தேர்வுக் குழுத் தலைவர், மாணவர் மன்றம்) ஆகியவர்தம் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா 5-1-1952 சனிக்கிழமை காலை 10 மணிக்குச் சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறும்.

மணிவிழாக் கொண்ட மாபெருந் தலைவர், தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனுர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகிக்க அன்புடன் இசைந்துள்ளனர். அறிஞர்கள் பலர் மணிவிழாத் தலைவர்களைப் பாராட்டிப் பேசுவர். அனைவரும் வந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகின்ருேம்.

சென்னை-1,
23-12-1951.

இங்ஙனம்,
மாணவர் மன்றத்தினர்.

## நிகழ்ச்சி

**வரவேற்பு:**

தமிழ்ப் பேராசிரியர், பாரிப்பாக்கம், கண்ணப்ப முதலியார் அவர்கள்

**தலைவர் உரை:**

பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்

**தமிழ்த் தாய் வணக்கம்:**

திருமதி பார்வதி அம்மையார்
திருமதி தாமரைக் கண்ணியார்

**மணிவிழாத் தலைவர்கட்குப் பாராட்டு:**

அறிஞர் T. புருஷோத்தம் அவர்கள்
அறிஞர் இளவழகனார், குருகுலம், மாம்பாக்கம்
அறிஞர் பூ. ஆலாலசுந்தரனார், M.A., தமிழ்ப் பேராசிரியர்
புலவர் அன்பு கணபதி, தமிழ்ப் பேராசிரியர்
அறிஞர் ஜே. தங்கவேல், B.A. (சுரபி)
புலவர் ம. இராஜமாணிக்கம் பிள்ளை, B.O.L., தமிழ்ப் பேராசிரியர்
அறிஞர் N. V. நடராசன், திராவிடன் ஆசிரியர்
பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மையார்

ஓவியப் புலவர் திரு. ரெ. பரமசிவம் அவர்களால் எழுதப் பெற்ற மணிவிழாத் தலைவர்களின் உருவப் படங்களை மணிவிழாத் தலைவர்களுக்கு வழங்குதல்.

பெரியார் காவேரிப்பாக்கம், மாணிக்க முதலியார் அவர்கள்

மணி விழாத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் வெளியிடுதல்.

விழாத் தலைவர்கள் அறிவுரை.

**விழாவில் கலந்துகொள்பவர்:**

திருமதி தேவசேனா அவர்கள்
இசையரசர் தண்டபாணி தேசிகர்
ஏழிசை மன்னர் M. K. தியாகராஜ பாகவதர்
நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன்
திருமதி T. A. மதுரம் அவர்கள்

குறிப்பு: வாழ்த்துரை அனுப்பும் அன்பர்கள் அருள்கூர்ந்து முன்னதாகவே அனுப்பிவைக்க வேண்டுகிறேம்.

---

மாதிரி 6

மாணவர் மன்றம், சென்னை

## இருபதாம் ஆண்டு நிறைவு விழா

## ★ அழைப்பிதழ் ★

23-12-1951.

அன்புடையீர்,

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1982 மார்கழித் திங்கள் 21-ஆம் நாள் (5-1-1952) சனிக்கிழமை மாலை 4 மணிக்குச் **சென்னை கோகலே மண்டபத்தில்** மன்றத்தின் இருபதாம் ஆண்டு நிறைவு விழா நடைபெறும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னைய துணைவேந்தர் உயர் திருவாளர் **டாக்டர் S. G. மணவாளராமாநுஜம்,** M.A., Ph. D. (London), D.I.C. அவர்கள் அருள் கூர்ந்து விழாவிற்குத் தலைமை வகிக்க இசைந்துள்ளார்கள்.

உயர்திரு. **N. D. சுந்தரவடிவேலு,** M.A. L.T. அவர்கள் [சென்னைக் கல்வித் துறைத் துணைத் தலைவர், Deputy Director of Public Instruction (Elementary Education), Madras] மாணவர்களுக்கு நல்லுரை வழங்கவும், திருமதி S. **காந்தம் அம்மையார்.** M.SC., L.T., அவர்கள் சென்ற ஆண்டில் மன்றத்தார் நடத்திய பல்வேறு போட்டிகளிலும் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கவும் அன்புடன் இசைந்துள்ளனர்.

தமிழ் ஞாயிறு சிவத்திரு. ஞானியாரடிகள் தம் திருவுருவப் படத்தைச் சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர் உயர்திரு. டாக்டர் :M. இராஜமாணிக்கம் பிள்ளை, M.A.,L.T., M.O.L., Ph D., (தமிழ்ப் பேராசிரியர், விவேகானந்தா கல்லூரி, சென்னை) திறந்து வைக்க இசைந்துள்ளார்கள்.

அன்பர்கள் வந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

| | |
|---|---|
| டாக்டர் | வலலை. பாலசுப்பிரமணியம், B.A., |
| S. தருமாம்பாள், | A. M. கணபதி, M.A., |
| தலைவர். | அமைச்சர்கள். |

## (ஆ) வைஷ்ணவக் கடிதங்கள்

[வைஷ்ணவர்கள் தங்கள் பரிபாஷையில் ஒருவருக்கொருவர் எழுதும் கடிதங்கள்.]

### 1. சாதாரண தினசரிக் கடிதங்கள்

#### (1) இளையவர் முதியவருக்கு எழுதும் கடிதம்.

கோயம்புத்தூர்,
க்ஷேமம். ஸ்ரீ: 4-7-1949.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமத் வேத மார்க்கப் பிரதிஷ்டாபனசார்ய, ஸ்ரீ உபய வேதாந்தாசாரியராய் எழுந்தருளியிருக்கும் சேட்லூர் ராகவாச்சார் ஸ்வாமி ஸந்நிதியில் அடியேன் ஆராவமுதன் அனந்தமான தண்டம் ஸமர்ப்பிவித்து விக்ஞாபனம். உபயகுசலோபரி. தேவரீர் ஸ்ரீமுகம் கிடைத்தது. க்ருதார்த்தனானேன். அடியேனுடைய ச்ரமம் அறிந்து, தேவரீர் கிருபை செய்ததுபற்றி அடியேன் மிகவும் க்ருதக்ஞதையுடையவனாக இருக்கிறேன். ஸ்வாமியின் அனுக்ரஹத்தாலும், ஆசார்யன் அனுக்ரஹத்தாலும் ஒன்றும் குறைவில்லை. க்ஷேமங்களுக்கு அடிக்கடி ஸ்ரீமுகம் க்ருபை செய்யும்படியாகப் பிரார்த்திக்கிறேன். சிரமங்களுக்கு க்ஷமிக்கவும்.

வாசக தோஷ: க்ஷந்தவ்ய:
தாஸன்,
*ஆராவமுதன்.*

#### (2) முதியோர் இளையோருக்கு எழுதும் கடிதம் — மேல் கடிதத்திற்குப் பதில்.

திருக்குடந்தை,
க்ஷேமம். ஸ்ரீ: 6-7-1949.

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரம்ஹணே நம:

சிரஞ்சீவி ஆராவமுதனுக்கு வேதோக்தமான ஆசீர்வாதம். உன் கடிதம் வந்தது. மிகவும் ஸந்தோஷம். அவ்விடத்தில் எல்லோரும் க்ஷேமமா? இவ்விடம் மாமி, குழந்தை எல்லோரும் க்ஷேமம். அங்கே ஸ்வாமி அழகியசிங்கர் எழுந்தருளுவதாகக் கேள்வி. எப்போது எழுந்தருளுகிறார் என்பதை முன்பாகவே தெரிவி. மற்றபடி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

வேணும் ஆசீர்வாதம்,
*ராகவாச்சாரி.*

## 2. குழந்தை பிறந்து புண்ணியாஹவாசனம்

க்ஷேமம். ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ உ.வே. ஸம்பந்தி ஸ்வாமி ஸந்நிதியில் அடியேன் கிருஷ்ண தாஸன் விக்ஞாபனம். உபயகுசலோபரி. இங்கு நேற்று வெள்ளிக்கிழமை (30-6-1946) ஆனி ௴ 17-ஆம் தேதி சாயங்காலம் (7-54 P. M.) சௌ. ஜானகி பிரஸவித்து ஆண் குழந்தை பிறந்து, தாயும் குழந்தையும் ஸௌக்யம். 10-7-1946 அன்று புண்ணியாஹவாசனம் ஆனபடியால், குழந்தைகளை ஆசீர்வதிக்க, தேவரீர் இஷ்டமித்ர பந்துக்களுடன் எழுந்தருளும் படியாகப் பிரார்த்திக்கிறேன்.

சித்திரகூடம், 5-7-1946.

வாசக தோஷ: க்ஷந்தவ்ய:
தாஸன்,
கிருஷ்ணன்.

## 3. குழந்தையின் அப்தபூர்த்தி (அல்லது) பிறந்த நாள்

ஸ்ரீ:

க்ஷேமம்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ உபய.வே......ஸ்வாமி ஸந்நிதியில் விக்ஞாபனம். உபய குசலம். நாளது விக்ருதி வருஷம் ஆனி ௴ 20-ஆம் தேதி அடியேன் தௌஹித்ரன் சிரஞ்சீவி தேசிகனுக்கு அப்தபூர்த்தி நடப்பதால், இஷ்டமித்ர பந்துக்களுடன் எழுந்தருளியிருந்து, குழந்தையை அனுக்ரஹிக்கப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை-3, 28-6-1948.

தாஸன்,
ராமபத்ரன்.

## 4. மேற்படி கடிதங்களின் வகையில் குழந்தையை வாசிக்க வைப்பதற்கு

'சிரஞ்சீவி தேசிகனுக்கு அக்ஷராப்யாஸம் செய்வதாய்ப் பெரியோர்கள் நிச்சயித்திருக்கிறபடியால்,' என்று எழுதவும்.

## 5. உபநயந முகூர்த்தம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

**உபநயந முகூர்த்தப் பத்திரிகை**

விக்ஞாபனம்: க்ஷேமம். க்ஷேமாதிசயங்களுக்கு ஸ்ரீமுகம் கிருபை செய்தருளவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன். இப்பவும் நாளது ஸர்வதாரிஞூ வைகாசிமீ" 14உ (27-5-1948) வியாழக்கிழமை உத்திராட நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் உதயாதி நாழிகை 4-க்கு மேல் 8-நாழிகைக்குள் மிதுன லக்னத்தில் அடியேன் தம்பி சிரஞ்சீவி................பௌத்திரனும்,..............புத்திரனுமான சிரஞ்சீவி..............க்கு உபநயந முகூர்த்தம் நடத்துவதாய் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் க்ருபையை முன்னிட்டுப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஷை முகூர்த்தம்.........இல் நடப்பதால், ததனுக்ரஹத்திற்கு 2 நாள் முன்னதாய் எழுந்தருளி முகூர்த்தத்தை நடத்திவைத்து, வடுவை அனுக்ரஹிக்கப் பிரார்த்திக்கிறேன். வேணும் அ. தெ. விண்ணப்பம்.

இடமும், }<br>
தேதியும். }

தாஸன்,<br>
....................

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ஹேமாப்ஜநாயிகா ஸமேத ஸ்ரீ தேவநாத பரப்பிரம்ஹணே நம:

# விவாஹ உபநயந சுப முகூர்த்தப் பத்திரிகை

ஸ்ரீ உபய........................................................................ஸ்வாமி ஸந்நிதியில்
அடியேன் திருமலை ஈச்சம்பாடி ராமபத்ர தாஸன் விக்ஞாபனம். உபயகுசலோபரி.
நாளது விக்ருதி௵ தை௴ 15-ஆம்தேதி (28-1-1951) ஞாயிற்றுக்கிழமை உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் உதயாதி நாழிகை 18¾-க்குமேல் கன்யா லக்னத்தில்,

| | |
|---|---|
| அடியேன் தம்பி சிரஞ்சீவி<br>தி. ஈ. ராமானுஜன் குமாரத்தி<br>ஸௌ. **ஜயத்தை** | மாமண்டூர் ஸ்ரீ உ. வே. வரதாசார் குமாரன்<br>சிரஞ்சீவி **நரஸிம்மனுக்கு** |

கன்னிகாதானம் செய்து கொடுப்பதாயும், ஷை ராமானுஜனின் குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீனிவாஸ தேசிகனுக்கு விருஷப லக்னத்தில் உபநயந முகூர்த்தமும் செய்வதாயும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, முகூர்த்தங்கள் சென்னை திருவல்லிக்கேணி ராமானுஜ கூடத்தில் நடக்கிற படியால், தததனுக்ரஹத்துக்கும், அன்றுமாலை நடக்கும் ஆசீர்வாதத்துக்கும், எழுந்தருளி, தம்பதிகளையும், வடுவையும் அனுக்ரஹிக்கப் பிரார்த்திக்கிறேன். வேணும்,

இடமும், }
தேதியும். }

தாஸன்,
தி. ஈ. ராமபத்ரன்.

## 7. ருதுசாந்தி முகூர்த்தத்திற்கு

'அடியேன் குமாரன் சிரஞ்சீவி நரஸிம்மன் பார்யாள் ஸௌ. கமலாவுக்குக் கர்ப்பாதான முகூர்த்தம் செய்வதாய்ப் பெரியோர்கள் நிச்சயித்திருக்கிறபடியால்,' என்று எழுதவும்.

## 8. கடிதம் 7-இல் உள்ளபடி ஸீமந்தத்திற்கு

'பும்ஸவன முகூர்த்தம்' என்ற வார்த்தையை உபயோகப்படுத்தல் வேண்டும்.

## 9. இறந்தவர்களைப் பற்றி எழுதும் கடிதம்

ஒரு குமாரன் தன் தாயார் ஆசார்யன் திருவடிகளை அடைந்த விஷயத்தைத் தெரிவித்தல்.

---

*அப்தேஸ்மின் பிரபவாஹ்வயே தினமணௌ வ்ருச்சிங்கதேமேசகே*
*பக்ஷே பார்க்கவவாஸரே ம்ருகசிரஸ்தாரே த்விதீயாதிதௌ |*
*கௌண்டின்யான்வய துக்த வாரிதி விதோ : ஸ்ரீ ராகவஸ்ய ப்ரியா*
*ப்ராப ஸ்ரீ பரகால ஸூரி கிருபயா ஸ்வாசார்ய பாதாம்புஜம் ||*

*ப்ரபவே கிருத்திகா கிருஷ்ண த்விதீயாயாம் ப்ருகோர்தினே |*
*கௌண்டின்ய ராகவாசார்ய ப்ரியா ப்ராபஹரே: பதம் ||*

கடந்த ஷ்ஸ (4-1-1950) மார்கழிமீ 20வ அடியேன் தாயார்....... ஆசார்யன் திருவடிகளை அடைந்தார். தசாக கைங்கர்யங்கள் திருவிண்ணகரில் அடியேனது க்ருஹத்தில் க்ரமேண நடக்கின்றன.

திருவிண்ணகர்,
6-1-1950.

தாஸன்,
*ராமானுஜன்.*

---

## 10. பொதுக் கடிதம்

க்ஷேமம். ஸ்ரீ : 24, புதுத் தெரு,
சேலம், 10-1-1950.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமத் வேத மார்க்கப் ப்ரதிஷ்டாபன சார்யராய் உபய வேதாந்தாசார்யராய் அஸ்மத் ஸகலவித பந்துவாய் அஸ்மத் ஸ்வாமியாய் எழுந்தருளியிருக்கும் திருமலை நல்லான் சக்ரவர்த்தி ஸ்வாமி தேனே மலரும் திருவடித் தாமரைகளில் அடியேன் திருமலை குமார நன்பாக்கம் வேங்கடேச தாஸன் தானும் தடக்கையும் கூப்பித்திக்கு நோக்கி அனந்தமான தண்டம் சமர்ப்பிவித்து விக்ஞாபனம்.

---

பிள்ளை அருமை பெற்றவர்களுக்குத் தெரியும்.

இப்பவும் இவ்விடத்தில் தாஸ வர்க்கங்கள் எல்லோரும் க்ஷேமம். அவ்விடத்திய தேவரீர்களுடைய நித்ய ததியாராதன க்ரந்த காலக்ஷேபாதிசயங்களுக்குப் பதே பதே பதில் ஸ்ரீமுகம் கிருபை செய்தருள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன். இந்த வருஷம் நடக்க இருக்கும் திருநாராயணபுரம் வைரமுடி ஸேவைக்குப் போகலாமென்று உத்தேசம். உற்சவத்திற்குப் பத்து நாள் முன்னதாகத் தேவரீர்கள் இவ்விடம் எழுந்தருளினால், நாம் போய்வர வசதியாய் இருக்கும். அவ்விடத்தில் எனக்குத் தெரிந்த அத்யந்த ஆப்த ஸ்னேகிதர் ஒருவர் இருக்கிறார். அவரும் கட்டாயம் இவ்வருஷம் வரும்படி எழுதியிருக்கிறார். தேவரீருடன் போய், திவ்ய தேச எம்பெருமான்களை ஸேவிப்பதில் எனக்கு ஒரு தனி ப்ரீதி. ஆகையால், தேவரீர்கள் கட்டாயம் எழுந்தருள வேணுமாய் வற்புறுத்திப் பிரார்த்திக்கிறேன். தவிர, தேவரீர்களை சமீபத்தில் பெருமாள் கோயிலில் பார்த்தபொழுது நம் பையன் கல்யாண விஷயத்தைப் பற்றி வார்த்தை நடந்தது ஞாபகமிருக்கலாம். அதை விசாரித்துக் கொண்டு அது விஷயமாய் நடக்க வேண்டிய விஷயங்களையும் தெரிந்து கொண்டு வந்திருந்து அதனையும் பூர்த்திசெய்து வைக்க வேண்டியது தேவரீருடைய பொறுப்பு.

இந்த வருஷம் வெளியில் எங்கும் மழைக் குறைவினால் விளைச்சல் இல்லாமல் இருக்கையில், நம் பக்கத்தில் நல்ல சமயத்தில் கொஞ்சம் மழை பெய்து விளைச்சலும் சுமாராய் இருப்பதாக சமாசாரம் வந்திருக்கிறது. இந்த வருஷம் பெருமாளுக்குத் தளிகைக்குக் குறைவு படாது என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். கிராமத்துக்குப் போய் விவரமாய் எழுதுகிறேன்.

எல்லாவற்றிற்கும் தேவரீர்களுடைய பதில் ஸ்ரீமுகத்தை எதிர் பார்க்கிறேன்.

வாசக தோஷம் க்ஷமித்தருளவேணும்.

தாஸன்,
வேங்கடேசன்.

---

## (இ) விளம்பரங்கள்

[குறிப்பு: வியாபாரத்தின் பொருட்டும், இன்னும் சொந்த விஷயத்திற்காகவும் பத்திரிகைகளில் வெளிவரும் விளம்பரங்கள் பலவகைப்படும்; அத்தகைய விளம்பரங்களின் மாதிரிகள் சிலவற்றையும், புத்தாண்டு, பொங்கல் போன்ற விசேஷக் காலங்களில்

வியாபாரிகள் வெளியிடும் வாழ்த்து விளம்பரங்களின் சில மாதிரிகளை யும் இப்பகுதியில் தந்துள்ளோம்.]

## 1. வரி விளம்பரங்கள்

### மாதிரி 1

**கல்வி**

ஹோமியோபதி வைத்தியத்தைத் தமிழில் தபால் மூலம் குறைந்த செலவில் கற்க இப்பொழுது அரிய சந்தர்ப்பம். விவரங்களுக்கு எழுதவும் : தி ஹோமியோபதிக் ஸ்கூல், 684, கீழ ராஜ வீதி, தஞ்சாவூர்.

### மாதிரி 2

**புத்தகம்**

லிட்டில் லிப்கோ டிக்ஷனரி : இங்கிலீஷ்-இங்கிலீஷ்-தமிழ்; பல பயனுள்ள அனுபந்தங்களுடன் கூடியது; அழகான பைண்டிங்; விலை ரூ. 2-8; தபால் மூலம் ரூ. 3-1; தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, தியாகராயநகர், சென்னை-17.

### மாதிரி 3

'அன்பு': புதுக் கதை. கவர்ச்சியான மூவர்ண மேலட்டை. பல வர்ணப் படங்கள். நேர்த்தியான அச்சு. விலை 8 அணா. இப்பொழுது விற்பனையாகிறது. ஏஜண்டுகள் தேவை. ஜெய் ஹிந்த் பதிப்பகம், சென்னை-18.

### மாதிரி 4

**பத்திரிகை**

'சட்டம்': ஜனவரி வெளியீடு. சட்ட நுட்பங்களையும், சட்ட மாறுதல்களையும், அழகாக விளக்கும் மாதப் பத்திரிகை. விலை 6 அணா. விற்பனையாளர்கள் உடனே தேவை. எழுதுக: நிர்வாகி, 'சட்டம்,' சேலம்.

### மாதிரி 5

**விற்பனைக்கு**

திருவாரூர் ஜங்ஷனுக்கு எதிரில விஜயபுரம் கடைத்தெருவிலுள்ள சுந்தர விலாஸ் பிராமணாள் ஹோட்டல் (Running) விலை ரூ. 8,000. தேவையுள்ளவர்கள் நேரில் வரவும். தபால் வேண்டாம்.

*மாதிரி 6*

**வியாபாரம்**

உயர்தர காய்கறி விதைகள் கிடைக்கும். விலை விவரத்திற்கும், தேவைக்கும் எழுதுக: R. முதலியார் கம்பெனி, 17, மேட்டுத் தெரு, மதுரை.

*மாதிரி 7*

**தேவை**

எமது பிரபல தேயிலையைச் சென்னை ராஜ்யத்தில் விற்க, சுறுசுறுப்புள்ள ஜில்லா ஏஜண்டுகள் தேவை; முன் பணம் ரூ. 1,000 கட்டுபவர்களாய் இருக்க வேண்டும்; மாதச் சம்பளம் பிரயாணப்படி உள்பட ரூ. 175. விண்ணப்பிக்க: கல்கத்தா தேயிலை கம்பெனி, பென்டின்க் தெரு, கல்கத்தா-4.

*மாதிரி 8*

**நன்றியறிவிப்பு**

என் மகன் செல்வன் த. மணிவண்ணனுக்கும், திருச்சிராப்பள்ளி திரு. அப்புசாமி செட்டியார் மகள் செல்வி ம. சுசிலாவுக்கும் சென்ற 6-9-1951-இல் கும்பகோணத்தில் நடந்த திருமணத்தின் சமயம் எண்ணற்ற வாழ்த்துகள், பரிசுகள் முதலியன அனுப்பிய நண்பர்கள், சுற்றத்தினர் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக. இதுபற்றி அவரவர்கட்குத் தனியாக எழுத முடியாமைக்குப் பெரிதும் வருந்துகிறேன்.

பெரிய கடைத் தெரு,
கும்பகோணம்,
10-9-1951

*கோ. தணிகாசலம் செட்டியார்,*
மளிகை வியாபாரம்.

*மாதிரி 9*

**பிறப்பு**

**"புகழேந்தி"**

அப்பர் பிரதர்ஸ் உரிமையாளரான திரு. ராமமூர்த்தி அவர்களின் மனைவி திருமதி R. ருக்மணி அவர்களுக்கு 9-1-1952 புதன்கிழமை அன்று ஒரு பெண் குழந்தை ஜனனம்.

மாதிரி 10

**காணோம்**

R. கோபாலனுக்கு : குழந்தாய், வீட்டுக்கு உடனே திரும்பு. உன் பிரிவால் என் உடலே தளர்ந்துவிட்டது. தயைசெய்து, நல்ல புத்தியுடன் திரும்பி வா. உனது அன்புள்ள தந்தை,

**S. ராகவாச்சாரியார்.**

## 2. பிற விளம்பரங்கள்

### (1) வழக்குகளின் அறிவிப்புகள்.

மாதிரி 1

ஆரணி ஜில்லா முன்சீப் கோர்ட்டு
O. P. 18/50

செல்லம்மாள் — —மனுதாரி
கந்தசாமி முதலியார் வகையரா — எதிர் மனுதாரர்கள்

மனுதாரியின் மகன் காலஞ் சென்ற K. முனியப்பன் எண் 10543-க்குச் சென்னை ஆர். ஐ. இ. தொகுதி ஆபீஸிலிருந்து சேர வேண்டிய தொகையாகிய ரூ. 2,181-8-0 ஐ ஷை முனியப்பன் செய்துள்ள வாரசுப் பத்திரத்தின் (நாமினேஷன்) படி தனக்குச் சேர வேண்டும் என்றும், ஷை எண்ணில் மனுதாரி வார்சு சர்டிபிகேட் தனக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் விண்ணப்பம் செய்து அது 5-8-1950 தேதியன்று இக்கோர்ட்டில் வாய்தா ஏற்பட்டிருக்கிறது. இதைக் குறித்து ஆக்ஷேபனையுள்ளவர்கள் நேரிலாவது வக்கீல் மூலமாவது வாய்தா தினத்தன்று தெரிவித்துக் கொள்ளவும்.

ஆரணி,
15-7-1950.
—கே. எம். அநந்தராமன், பி.ஏ., பி.எல்.,
மனுதாரியின் வக்கீல்.

மாதிரி 2

நாகப்பட்டினம் முன்சீப் கோர்ட்டு
S. O. No. 38 of 5-4-1950.

சுதந்திரா மில்ஸ் லிமிடெட் உரிமையாளர்
என். ரங்கநாதஞ் செட்டியார் } —வாதி
த. ந. ராமநாதஞ் செட்டியார் — பிரதிவாதி

வாதி சுதந்திரா மில்ஸுக்கு ஷை பிரதிவாதி 1-5-1948-இல் எழுதிக் கொடுத்திருக்கும் பிராமிசரி நோட்டுப்படி அசலும், வட்டியும் ரூ.600/-க்கு

வாதி வழக்குத் தொடுத்து, சம்மனைச் சார்வு செய்யவும், பத்திரிகையில் வெளியிடவும் உத்தரவாகி 20-9-1950-இல் வழக்கு நடக்கவிருப்பதால், அவர் அன்று காலை 10 மணிக்குத் தலைமை நீதிபதி முன்பு ஆஜராக வேண்டும். வரத்தவறினால், ஒரு தலைப்பக்கமாகத் தீர்ப்பு வழங்கப்படும்.

நாகப்பட்டினம், 20-8-1950.

—ஆ. ரங்கநாதன்னார் நாயுடு, வாதியின் வக்கீல்.

## (2) ஏல விளம்பரம்.

பரிதிபுரம் பக்ஷீஸ்வரர் தேவஸ்தானம் நன்செய் — புன்செய் தோப்புகள் 21-7-1950-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு மேல், தேவஸ்தானம் நிலையத்தில் பகிரங்கமாய்க் குத்தகைக்கு ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகளை ஷை தேவஸ்தான அதிகாரியின் நிலையத்திலிருந்து எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

இடமும், தேதியும்.

க. சுப்பிரமணிய முதலியார், தருமகர்த்தா, பக்ஷீஸ்வரர் தேவஸ்தானம், பரிதிபுரம்.

## (3) உல்லாசப் பயண அறிக்கை.

வேளாளர் சங்கம், சென்னை
(1919-இல் நிறுவப்பட்டது)

வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு வர ஒப்புக்கொண்ட அன்பர்கள் 7-10-1944 சனி மாலை 5½ மணிக்குள்ளாக சென்னைக் கடற்கரைப் புகைவண்டி நிலையத்துக்கு வந்துவிட வேண்டும். கடற்கரைக்கு வர முடியாதவர்கள் அவரவர் வசதிக்கேற்ற வண்ணம், 5½ மணிக்குள் கோட்டை அல்லது பூங்கா அல்லது எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போய் வாலாஜாவுக்கு டிக்கெட் வாங்கிக்கொள்ள வேண்டும்.

ரயில் கட்டணம் கடற்கரையிலிருந்து போகவர இரண்டு ரூபாய் ஆகும். கைச் செலவுக்கு அவரவர் விருப்பம் போல் பணம் வைத்துக் கொள்ளலாம்.

கடற்கரையிலிருந்து வண்டி மாலை 5-55-க்குப் புறப்படுகிறது. அவரவர்கள் தங்கள் படுக்கை முதலியவைகளைச் சிக்கனமான முறையில் கொண்டு வருவது நலம்.

சென்னை, 2-10-1944.

சி. து. தங்கவேல், வ. பாலசுப்பிரமணியம், அமைச்சர்கள்.

## (4) பிற அறிவிப்புகள்.

*மாதிரி 1*

### ஏஜண்டு நியமனம்

ஸ்ரீ Y. K. ராமநாதஞ் செட்டியார், உரிமையாளர், பாரதி பத்திரிகாலயம் அவர்கள் எமது பத்திரிகைகளான தினத் தூதன், பாரத மணி என்னும் பத்திரிகைகளைத் தம் சொந்தப் பொறுப்பில் திருவண்ணாமலையில் 1-1-1952 இலிருந்து விற்பனை செய்ய ஏஜண்டாய் நியமிக்கப்பட்டுள்ளார்.

இடமும், } மானேஜர், தினத் தூதன்,
தேதியும். } சென்னை-1.

*மாதிரி 2*

### ஏஜண்டு மாறுதல்

எமது கம்பெனி ஏஜண்டாய் வேலைபார்த்துவந்த திரு. R. ஜயராமன் அவர்களை 1-5-1950-லிருந்து விலக்கி அவருக்குப் பதிலாய் K. குணசேகரன் அவர்களை இராமநாதபுரம் ஏஜெண்டாக நியமித்துள்ளோம். பழைய ஏஜண்டினிடம் மேற்படி தேதிக்கு மேல் எமது வாடிக்கைக்காரர்கள் எத்தகைய கொடுக்கல், வாங்கல் வைத்துக் கொண்டாலும், நாங்கள் பொறுப்பாளியாகமாட்டோம் என்பதை இதனால் தெரிவித்துக் கொள்கிறோம்.

இடமும், } உரிமையாளர், பாரதி பதிப்பகம்,
தேதியும். } மதுரை.

*மாதிரி 3*

### எச்சரிக்கை

என் கணவனர் திரு. வீரராகவ முதலியார் சென்ற இரண்டு மாதங்களாகப் புத்தி சுவாதீனமில்லாமல் இருப்பதால், பொது மக்கள் யாரும் அவரிடம் கொடுக்கல், வாங்கல் வைத்துக் கொள்ளக் கூடாது. இதனை மீறி நடப்போர் அவருக்குக் கொடுக்கும் கடனுக்கும், எங்களுக்கும் யாதொரு தொடர்பையும் கொள்ள முடியாது என்பதை இந்த அறிக்கையின் மூலம் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடமும், } தே. கண்ணம்மாள்.
தேதியும். }

மாதிரி 4

**தரம் உயர்ந்து ருசி மிகுந்த**
**சவரன் பிஸ்கோத்துகள்!**

சவரன் பிஸ்கோத்துகளின் சிறந்த தன்மையை மேலும் உயர்ந்ததாக்க எங்கள் பாக்டரியில் நவீன இயந்திரங்கள் நிறுவியுள்ளோம் என்னும் செய்தியை ஆதரவாளர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

மாறாத புது மணத்தால் —
மங்காத மொறுமொறுப்பால் —
தின்னுந்தோறும் தரும் திருப்தியால் —
சவரன் பிஸ்கோத்துகள் அனைவரது அபிமானத்தையும் பெற்றிருக்கின்றன.

**சவரன் பிஸ்கோத்து பாக்டரி,**
கோயம்புத்தூர்.

(5) புத்தாண்டு வாழ்த்து விளம்பரங்கள்.

மாதிரி 1

எமது ஏஜண்டுகளுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும்

**எமது புது வருட வாழ்த்துக்கள்!**

**தி சவரன் பிஸ்கோத்து பாக்டரி,**
(சிறந்த பிஸ்கோத்துகளைத் தயாரிப்பவர்கள்)

தந்தி: சவரன் : : டெலிபோன்: **1083**

44, பெரிய தெரு, கோயம்புத்தூர்.

மாதிரி 2

அன்பர்கள்
அபிமானிகள்
வாடிக்கைக்காரர்கள்
அனைவருக்கும்

**எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்**

**ஸ்ரீ லக்ஷ்மி ஸ்டோர்ஸ்,**

**வெண்ணெய், நெய் விற்பனையாளர்கள்,**
108, மேட்டுத் தெரு, சேலம்.

**(6) பொங்கல் வாழ்த்து விளம்பரம்.**

**ஸ்ரீ கோபால் எலெக்டிரிகல் கம்பெனி,**
தி. நகர், சென்னை-17.

★

**எமது பொங்கல் வாழ்த்துக்கள்**

**அன்புமிக்க வாசகர்களே,**

எங்களுடைய மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தங்களுக்குத் தெரிவிக்கிறோம்: 'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.'

நாங்கள் மற்றும் ஓர் ஆண்டு வெற்றிகரமாகத் தொண்டு புரிந்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறோம்.

## (ச) கடன் பத்திரங்கள்

### மாதிரி 1

நெல்லிக்குப்பம்,
5-7-1951.

உயர்திரு. ஏ. கணபதி முதலியார் அவர்களிடம் நான், ஆண்டு ஒன்றுக்கு (ரூ. 100-க்கு) நூற்றுக்குப் பன்னிரண்டு ரூபாய் வட்டி வீதம், இன்று ரொக்கமாகப் பெற்றுக் கொண்ட தொகை ரூ. 600 (எழுத்தால் ரூபாய் அறுநூறு மட்டும்). இத்தொகையை மேற்படி ஏ. கணபதி முதலியார் வேண்டும்போது அவருக்காவது அவருடைய உத்தரவு பெற்றவர்களுக்காவது அசலும், வட்டியும் சேர்த்துக் கொடுக்க இதன் மூலம் ஒப்புக் கொள்கிறேன்.

சாட்சிகள் :

1. ..................
2. ..................

| ப. திருவேங்கடம். |
|---|
| இரண்டணு |
| ரெவின்யூ |
| ஸ்டாம்பு. |

### மாதிரி 2

இடமும், தேதியும்.

19—வருஷம் ———மாதம் ———தேதி ——— ஜில்லா ——— தாலுக்கா——தெரு——எண்ணுள்ள வீட்டிலிருக்கும்——குமாரர்—— அவர்களுக்கு ——— ஜில்லா——— தாலுக்கா——— தெரு ——எண்ணுள்ள வீட்டிலிருக்கும்——— ஆகிய நான் / நாங்கள் எழுதிக் கொடுத்த அண்டிமாண்டு என்னவென்றால், இப்பொழுது என்/எங்கள் குடும்பச் செலவுக்காக நான்/நாங்கள் தங்களிடத்தில் ரொக்கம் பெற்றுக்கொண்ட ரூபாய் 200/- (எழுத்தால்) ரூபாய் இருநூற்றுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100-க்கு வட்டி ரூ. 0-8-0 (அணு எட்டாக) சேரும் வட்டியும், அசலும் தாங்கள் வேண்டும்போது தங்களுக்காவது தங்களுடைய உத்தரவு பெற்றவர்களுக்காவது கொடுத்து இந்த அண்டிமாண்டைத் திரும்பப் பெற்றுக் கொள்கின்றேன்/றோம். இங்ஙனம் நான்/நாங்கள் சம்மதித்து எழுதிக்கொடுத்த அண்டிமாண்டு.

சாட்சிகள் :

1. ...........
2. ...........

| கடன் பெற்றவர் கையொப்பம். |
|---|
| ஓர் அணு |
| ரெவின்யூ |
| ஸ்டாம்பு. |

இந்த அண்டிமாண்டு எழுதியவர்———.

புலி வந்து பாய்ந்தாலும் பொய் சொல்லலாகாது.

குறிப்பு :—மேற்படி கடன் பத்திரங்களுக்கு ரெவின்யூ ஸ்டாம்பு ஒட்ட வேண்டிய விவரம் :

(i) ரூ. 250-க்கும், அதற்குக் குறைந்த தொகைக்கும்...1 அணா.

(ii) ரூ. 1000-க்கும், ரூ. 250-க்கு மேற்பட்டதாகவும் ரூ. 1000-க்குக் குறைந்துமுள்ள தொகைக்கும்...2 அணா.

(iii) ரூ. 1000-க்கு மேற்பட்ட எத்தொகைக்கும்...4 அணா.

## (உ) நகைச்சுவைக் கடிதங்கள்

### (1) பஸ் கண்டக்டர் சொல்லக்கூடும்.

ஐயா,

பஸ் பிரயாணிகளிடம் நாங்கள் மரியாதையாக நடந்துகொள்ள வில்லையாம். அடிக்கடி பலர் கடிதம் எழுதிவிடுகிறார்கள். மரியாதையாய் நடந்துகொள்ள வேண்டும் என்று அவர்கள் சொல்லும்போது, எங்களிடமிருந்து அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்றே தெரியவில்லை!

கனம் பிரயாணி பஸ்ஸில் அடி எடுத்து வைத்தவுடனே, "வாங்க ஸார், வாங்க. ஏது ரொம்ப நாள் ஆச்சே? இந்தப் பக்கமே வரதில்லையே, இப்பெல்லாம் நடந்தே போகிறீங்களா? வீட்டிலே எல்லோரும் சௌக்கியந்தானே?" என்று கேட்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்களா? அப்படிக் கேட்பதில் ஒன்றும் தப்பு இல்லைதான்! ஆனால், அதற்கு எங்களுக்கு நேரமில்லையே! பஸ் நிற்பதற்கு முன்னேயே கம்பியை பிடித்துக்கொண்டு ஏறுவதற்கு ஓடிவரும் கூட்டத்தைப் பார்த்து, 'நின்ற பிறகு ஏறுங்க சார்', 'இறங்குகிறவர்களுக்கு வழி விடுங்க சார்; அப்புறம் ஏறலாம்', 'ஸார், ஸார்! உங்களைத்தான்! பூட்ஸ் காலாலே மிதிச்சுகிட்டு இறங்கறீங்களே' என்று இந்த மாதிரியெல்லாம், கத்துகிறதுக்கே தொண்டை தண்ணீர் வற்றிப் போகிறதே. மரியாதையாக இரண்டு வார்த்தை அவர்களுடன் எங்கே பேச முடிகிறது?

இன்னும் சிலர் முதல் டிரிப்பிலேயே பத்து ரூபாய் நோட்டை நீட்டிவிட்டு 0-1-6 அணா டிக்கட் வாங்கும்போது நாங்கள் சில்லறைக்கு எங்கே போவது? அப்படியே இருந்தாலும் மீதி சில்லறையை எண்ணிக் கொடுப்பதற்குள் எங்கள் தாவு தீர்ந்து விடுகிறது.

சில்லறையைத்தான் எண்ணிக் கொடுக்கிறோமே, பதில் பேசாமல் வாங்கிப்போட்டுக் கொள்ளுகிறார்களா? அதுவுமில்லை. 'என்னப்பா இந்த நோட்டில் இங்கிக்கரை பட்டிருக்கிறதே', என்றெல்லாம் கேட்கிறார்கள். இந்தக் காலணா என்ன ஓட்டையாயிருக்கிறதே என்ற கேள்வியைத்தான் இதுவரை யாரும் கேட்டதில்லை!

சிலர் இருக்கிறார்கள். அவர்களை ஒரு தடவைக்குப் பத்து தடவை கேட்டால்தான் டிக்கட் வாங்குவார்கள் போலிருக்கிறது. இல்லா விட்டால், புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டோ, பராக்கு பார்த்துக் கொண்டோ இருந்தே பிரயாணம் செய்துவிடுவார்கள்! இன்ஸ்பெக்டர் வந்து பார்க்கும்போது, நாங்கள்தான் அகப்பட்டுக்கொண்டு முழிக்க வேண்டியிருக்கிறது. ஒரு சிலர் பஸ் எந்த இடத்திற்குப் போகிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே ஏறிவிடுகிறார்கள். டிக்கட் வாங்க வரும்போதுதான் தெரிந்து கொள்ளுகிறார்கள். அடுத்த ஸ்டாப்பில் இறங்கிவிடுவார்கள்.

சிலர், ஏறும் வழியில் நின்றுகொண்டு இந்தப் பக்கம் அந்தப் பக்கம் அசையமாட்டார்கள்.

இப்படிப்பட்டவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்வ தென்பது முடிகிற காரியமா? அப்படி மரியாதை வேண்டுமானால், இவர்கள் மாமியார் வீடுகளுக்குப் போவதுதானே! பஸ்ஸில் ஏன் ஏற வேண்டும்?

இப்படிக்கு,
ஒரு பஸ் கண்டக்டர்.

## (2) கமிஷனர் சொல்லக்கூடும்.

ஐயா,

டிராம்காரர்களையோ, பஸ்காரர்களையோ, ரிக்ஷாக்காரர்களையோ (ஏன், தபால்காரர்களையோ கூட) கேட்டால் தகவல் தெரியாது. அப்படிப்பட்ட ஒரு சின்ன சந்து பத்திரிகைகளில் கடிதம் எழுதும் 'நகரவாசி'க்கு மட்டும் எப்படிக் கண்ணில் படுகிறதோ தெரிய வில்லை. அந்தச் சந்தில் பூராவும் குப்பையும், கூளமுமாக இருக்கிறதாம். கார்ப்பரேஷன் என்ன செய்கிறது என்று கேட்கிறார் 'நகரவாசி.'

தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வது நகர சபைக்கு மட்டுமே உள்ள பொறுப்பு என்று ஏன் கருதுகிறீர்கள்? தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதில், அங்கு குடியிருப்பவர்களுக்கு எந்தப் பொறுப்புமே கிடையாதா? அந்தச் சந்தில் குப்பைத் தொட்டிகள் வைத்திருக்குமே, அவைகள் அவர்கள் கண்ணில் படுவதில்லை. எச்சில் இலை முதல், குழந்தை கிழித்துப்போடும் காகிதம் வரையில் எல்லா வற்றையுமே தெருவில் கண்டபடி எறிந்து வைப்பது என்று பெண் மணிகள் வழக்கமாகக் கையாண்டு வருகிறார்களே, அது ஏன் அவர்கள் கண்ணில் படுவதில்லை?

இவர்களுடைய அசிரத்தையின் பயனாகத்தான் தெருவில் குப்பைகள் குவிகிறது என்றாலும்கூட, அவைகளையும் அகற்றுவதற்காகத் தான் ஏகப்பட்ட குப்பை வண்டிகளை நாங்கள் வைத்திருக்கிறோம். தப்பித்தவறி ஒன்றிரண்டு சந்துகளில் எப்போதாவது குப்பை குவிந்து விடுகிறதென்றால், அதற்குக் காரணம் சில தோட்டிகள் சோம்பேறிகளாக இருப்பதுதான்.

அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இந்தப் பிரமுகர்கள் பேனாவையும், காகிதத்தையும் எடுத்து வைத்துக் கொண்டு பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுத ஆரம்பித்து விடுவதற்குப் பதிலாக பக்கத்துத் தெருக்களுக்கு வரும் குப்பை வண்டிக்காரனிடம் நேரடியாகச் சொல்லி குப்பையை அகற்ற வழி செய்யலாம்.

ஆனால், அதில் ஒரு அசௌகரியம். கடிதம் எழுதுபவர்களின் பெயர் அச்சில் வருவதற்கே சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும்!

இப்படிக்கு,
கார்ப்பரேஷன் கமிஷனர்.

## (ஊ) நாமும், தபால் நிலையமும்

### 1. முக்கியமாகக் கவனிக்க வேண்டுவன

1. உங்களுடைய கடிதங்களில் கீழ்க்கண்டபடி தெளிவான மேல்விலாசம் இருந்தால், அவை கட்டாயம் விரைவாகவும், பத்திரமாகவும் பட்டுவாடா செய்யப்படும்; இல்லையேல், கடிதங்கள் விலாசதாரிடம் போய்ச் சேரமாட்டா.

(i) முதலில், விலாசதாரின் பெயர்.

**உதாரணம்:** திரு. த. கு. புண்யகோடி அவர்கள்.

(ii) பின்னர், ஆள் இன்னாரென்று அறிந்து கொள்வதற்காகத் தேவையானால், உத்தியோகம், வியாபாரத் தொழில், தகப்பனார் பெயர்.

**உதாரணம்:** போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் (அல்லது) புத்தக வியாபாரம் (அல்லது) திரு. த. குமரப்பா அவர்களின் குமாரர்.

(iii) அடுத்தபடியாக, கதவிலக்கமும், தெருப் பெயரும் (அல்லது) இடத்தின் பெயர்.

**உதாரணம்:** 56, பெரிய தெரு (அல்லது) கும்பகோணம்.

(iv) கடைசியாக, முடிவாய்ச் சேரவேண்டிய இடத்தின் தபால் பட்டணத்தைச் சிலாக்கியமாக, கொட்டை எழுத்துக்களில் எழுதி அடியிற் கோடு கிழிக்கவும்; அடைப்புகளில், தேவையானால், ஜில்லாவின் பெயரை எழுதவும் (ஆங்கிலத்திலும் இப்பெயர்களை எழுதுவது நலம்).

**உதாரணம்:** சென்னை-1 (உள்ளூர்), MADRAS-1 (Local)

கும்பகோணம் (தஞ்சாவூர் ஜில்லா), KUMBAKONAM (Tanjore Dist.)




விலாசம் எழுதுதல்: தவறான முறைகள்.




விலாசம் எழுதுதல்: சரியான முறைகள்.




சேரவேண்டிய இடத்தைக் குறிப்பிடாததால், இக்கடிதம் அனுப்பியவருக்கே திரும்பி விட்டது.




போதுமான அளவுக்குத் தெளிவான விலாசம் எழுதாததால், இக்கடிதமும் அனுப்பியவருக்கே திரும்பிவிட்டது.

2. கார்டுகளில் கடிதங்கள் எழுதும்போது, விலாசக் கோட்டைத் தாண்டி நம் செய்திகளை எழுதுதல் கூடாது; அவ்வாறு செய்தால், கடிதம் பெறுபவர் தகுந்த அபராதம் செலுத்த நேரிடும்.


எழுதவும். சென்ற கார்த்திகை
தீபத்திற்குத்தாங்க
திருவண்ணாமலைக்கு
சென்றிருந்ததாக
மிக மகிழ்ச்சி அடைகிறேன்.
வணக்கம்.
இங்ஙனம்,
கு. ஆறுமுகம்.
குறிப்பு:- தங்கள் அருமைத்
தந்தையாரின் உடல் நலம்
தற்சமயம் எப்படி
உள்ளது?

POST CARD
ADDRESS O
உயர்திரு.
வே. வேங்கடேசன் அவர்கள்
27, புதுத் தெரு,
விழுப்புரம்.
VILLUPURAM.(S.I.R.)

விலாசக் கோட்டைத் தாண்டிச் செய்தியை எழுதியதால், இக்கடிதத்தைப் பெற்றவர் 2½ அணு அபராதம் செலுத்த நேர்ந்தது.

3. கடிதத்தை நிறுத்துப் பார்த்துத் தபால் தலைகளை ஒட்டுக. உத்தேசமாய் ஒட்ட வேண்டாம்; இல்லாவிடில், சில சமயம் கடிதத்தைப் பெறுபவர் அபராதம் செலுத்த நேரிடும். தபால் தலைகளைக் கடிதத்தின் தலைப்பக்கத்து வலப்புறத்தே மூலையில் ஒட்டுதல்தான் சரியான முறை.




போதுமான அளவுக்குத் தபால் தலை ஒட்டாததால், இக்கடிதத்தைப் பெறுபவர் ½ அணா அபராதம் செலுத்த நேர்ந்தது.




அனுப்பியவர் தபால் தலை ஒட்ட மறந்ததால்,
இக்கடிதத்தைப் பெறுபவர் 4 அணா அபராதம்
செலுத்த நேர்ந்தது.



4. ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் வெள்ளம்போன்று அநேககடிதங்களைத் தபால் நிலையத்தார் விரைவில் கவனிக்கவேண்டும்; எனவே, உங்கள் கடிதங்களை, கூடுமான வரையில், காலை நேரத்திலேயே தபால் பெட்டியில் போட்டு, அதன்மூலம் தபால் நிலையத்தார் எல்லாக் கடிதங்களையும் நிதானமாகக் கவனித்து, அவை குறிப்பிட்ட விலாசதாரர்களிடம் பத்திரமாகவும், விரைவாகவும் போய்ச்சேரத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய உதவி புரியுங்கள்.

5. **ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங்** பெற்றால், கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டது நிச்சயம் என்று அறியலாம்.

---

**பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும்.**

6. தந்திச் செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

7. உள்ளூர் தபால் நிலையத்திற்கு உங்கள் விலாசத்தில் ஏதேனும் மாறுதல் இருந்தால், உடனே தெரிவியுங்கள்; உங்களுக்குத் தெரியாத மற்ற விஷயங்களைத் தபால் விசாரணை நிலையத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

## 2. தபால், தந்திக் கட்டணங்கள்

## (1) உள் நாட்டுத் தபால்

### 1. தபால் கார்டுகள்

**உள்ளூர்**

ஒற்றை ... 6 பை.
ரிப்ளை (பதில்) ... 1 அணா.

**குறிப்பு :**—(i) உள்ளூர் கார்டுகளின்மேல் விலாசத்திற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் 'உள்ளூர்' (LOCAL) என்று கொட்டை எழுத்துக்களில் எழுத வேண்டும்.

(ii) ரயில்வே தபால் பெட்டியில் உள்ளூர் கடிதங்களைப் போடக்கூடாது.

(iii) உள்ளூருக்குள் மட்டுமே இத்தகைய கடிதங்களைத் திருப்பி யனுப்பலாம்; வெளியூருக்குத் திருப்பியனுப்ப முடியாது.

**வெளியூர்**

ஒற்றை ... 9 பை.
ரிப்ளை (பதில்) ... $1\frac{1}{2}$ அணா.

**குறிப்பு :**—(i) தபால் தலைகளைத் தவிர, சாதாரணமாக, வேறு எதுவும் போஸ்ட் கார்டுடன் இணைக்கப்படக்கூடாது.

(ii) சொந்தத்தில் தயாரிக்கப்பட்ட கார்டுகளின் அளவுகள் :

நீள, அகலம்:—

(a) உயர்ந்தது $5\frac{7}{8}'' \times 4\frac{1}{8}''$
குறைந்தது $4'' \times 2\frac{7}{8}''$

(b) பருமன்—தபால் ஆபீஸில் கொடுக்கப்படும் ஒரு போஸ்ட் கார்டைப் போல.

(iii) ஸ்டாம்பு ஒட்டாத கார்டுகள் பரிசோதனை ஆபீஸிற்கு அனுப்பப்பட்டு அழிக்கப்படும்; குறைவாக ஒட்டப்பட்டிருந்தால்,

விலாசதாரிடம் குறைவைப்போல் இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்.

## 2. உள் நாட்டுக் கடிதத்தாள்

உள் நாட்டுக் கடிதத்தாள் (Inland Letter) ... $1\frac{1}{2}$ அணா.

## 3. கடிதங்கள்

ஒரு தோலாவிற்கு மேற்படாதவை ... 2 அணா.

ஒரு தோலாவிற்குமேல் பிரதி ஒவ்வொரு தோலாவிற்கும் (அல்லது) அதன் பின்னத்திற்கும் ... 1 அணா.

குறிப்பு :—ஸ்டாம்பு ஒட்டாத கடிதங்களுக்கு விலாசதாரிடம் இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்; குறைவாக ஒட்டப்பட்டிருந்தால், குறைவைப்போல் இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்.

## 4. வியாபார பதில் கடிதங்கள், கார்டுகள்

வியாபார பதில் கடிதங்களையும், கார்டுகளையும் உபயோகப்படுத்த விலாசதார் ஒரு வருஷத்திற்கு ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும்; விலாசதாரிடம் பட்டுவாடா செய்யும்போது, அவற்றின் தபால் கட்டணங்கள் வசூலிக்கப்படும். தபால் நிலையத்தார் குறிப்பிட்டுள்ள ஒரு பொது மாதிரிப் பிரகாரம் அவைகள் அச்சிடப்படவேண்டியது அவசியமாகும்.

## 5. புத்தகப் பாக்கெட்டுகளும், மாதிரிப் பாக்கெட்டுகளும்

ஐந்து தோலாவுக்கு மேற்படாதவை ... 9 பை.

ஐந்து தோலாவுக்கு மேல்
ஒவ்வொரு $2\frac{1}{2}$ தோலாவிற்கும்
(அல்லது) அதன் பின்னத்திற்கும் ... 3 பை.

குறிப்பு :—(i) உறையில்லாமலாவது, இரு பக்கங்களிலும் வாய் திறக்கப்பட்டுள்ள உறையோடாவது அல்லது ஒட்டாமலிருக்கும் உறையோடாவது இருக்க வேண்டும் அல்லது பாக்கெட்டுகளின்மேல் வைக்கப்பட்ட அரக்கு முத்திரை உடைபடாமலும், காகிதம் கிழியாமலும், ஒட்டிக் கொண்டிருக்கும் பக்கங்களைப் பிரிக்காமலும் சந்தேகம் வருங்காலத்தில் உள்ளடக்கப்பொருள்களை எளிதில் வெளியே எடுத்துப் பரிசோதிக்கக் கூடிய வகையிலாவது மேற்படி பாக்கெட்டுகள் இருக்க வேண்டும்.

(ii) பின்கண்ட அளவுகளைவிட அதிகமாக இருக்கக் கூடாது.

(a) 2' × 1' × 1'

(b) சுற்று—30″ நீளம், 4″ குறுக்களவு (diameter).

(iii) ஒரு மாதிரிப் பாக்கெட்டின் எடை 200 தோலாவுக்குமேல் போகக் கூடாது; ஆனால், ஒரு புத்தகப் பாக்கெட்டின் எடைக்கு அளவு கிடையாது.

(iv) இத்தகைய பாக்கெட்டுகளில் எல்லாவிதமான வெளியீடுகள், பத்திரிகைகள், அச்சிடப்பட்ட பாடல் புத்தகங்கள், படங்கள், தேசப் படங்கள், தொழில், வர்த்தக அல்லது கோர்ட்டு தஸ்தாவேஜிகள், அச்சடிக்கப்பட வேண்டிய கையெழுத்துப் பிரதிகள், ஏற்கனவே தபால் மூலமாய் அனுப்பப்பட்ட பழைய தேதியில் எழுதப்பட்ட கடிதங்கள், உண்மையான வர்த்தக மாதிரிகள் அல்லது வர்த்தகச் சரக்குகளின் தினுசுகள் முதலியன இருக்கலாம்.

(v) சொந்த விஷயம் சம்பந்தமாக எந்தச் செய்தியும் இருக்கக் கூடாது.

(vi) மேற்படி விதிகளை மீறினால், அத்தகைய பாக்கெட்டுகள் பட்டுவாடா செய்யும்போது கடிதம் அல்லது பார்ஸல் (எது குறைவாக உள்ளதோ) கட்டணம் வசூலிக்கப்படும்.

(vii) ஸ்டாம்பு ஒட்டாத பாக்கெட்டுகளுக்கு இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்; குறைவாக ஒட்டப்பட்டிருந்தால், குறைவைப்போல் இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்.

## 6. ரிஜிஸ்தர் செய்த பத்திரிகைகள்

**ஒரே ஒரு பத்திரிகையைக் கொண்ட பாக்கெட்டுகள்:**

| | | |
|---|---|---|
| 10 தோலாவிற்கு மேற்படாதவை | ... | 3 பை. |
| 10 தோலாவிற்குமேல், ஆனால் 20 தோலாவிற்கு மேற்படாதவை | ... | 6 பை. |
| 20 தோலாவிற்குமேல் பிரதி ஒவ்வொரு 20 தோலாவிற்கும் (அல்லது) அதன் பின்னத்திற்கும் | ... | 6 பை. |

**ஒன்றுக்குமேல் பத்திரிகைகளைக் கொண்ட பாக்கெட்டுகள்:**

| | | |
|---|---|---|
| 10 தோலாவிற்கு மேற்படாதவை | ... | 6 பை. |
| 10 தோலாவிற்குமேல் பிரதி 5 தோலாவிற்கும் (அல்லது) அதன், பின்னத்திற்கும் | ... | 3 பை. |

(அல்லது) பாக்கெட்டிலுள்ள ஒவ்வொரு பத்திரிகைக்கும் தனித்தனியாகக் கணக்கிட்டால், வரும் கட்டணம் (இவ்விரண்டிற்குள் எது குறைவாக உள்ளதோ அக்கட்டணம்).

---

**பேசுகிறவன் இறைக்கிறான்; பேசாதவன் பொறுக்குகிறான்.**

குறிப்பு :—

(i) இத்தகைய பத்திரிகைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட வேண்டுவது அவசியம்.

(ii) பட்டுவாடா செய்யும் தபால் நிலேயத்தில் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் பத்திரிகை ஏஜெண்டுகளிடம் மட்டுமே பத்திரிகைகளின் பாக்கெட்டுகள் பட்டுவாடா செய்யப்படும்.

(iii) லேசென்ஸ் பெற்றுக்கொண்டு, முதலில் தபால் கட்டணமின்றிப் பத்திரிகைகளேத் தபாலில் போடவும் வசதியுண்டு.

## 7. பார்ஸல்கள்.

(கட்டணம் முன்னதாகச் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும்).

பிரதி ஒவ்வொரு 40 தோலாவிற்கும் (அல்லது)
அதன் பின்னத்திற்கும் ... 6 அணு.

குறிப்பு :—

(i) உயர்ந்த எடை $12\frac{1}{2}$ சேர் அல்லது 1,000 தோலா.

(ii) அளவு—நீளம் $3\frac{1}{2}$ அடி; நீளமும், சுற்றும் சேர்ந்து 6 அடி.

(iii) உள்ளடக்கங்கள் :

(a) தபால் மூலம் அனுப்பப்படுவதற்குத் தடையில்லாததும், கட்டுப்பாடில்லாததுமான பொருள்கள்.

(b) பார்சலின் விலாசதாருக்கே எழுதப்பட்ட கடித வகையான சமாசாரமோ அல்லது சொந்த விஷயமான சமாசாரமோ அடங்கியுள்ள ஒரே ஒரு கடிதம்; ஒன்றுக்குமேல் இத்தகைய கடிதங்கள் காணப்படின், பிரதி ஒவ்வொரு கடிதத்திற்கும் கடிதத்திற்குள்ள கட்டணத்தைப் போன்று இரட்டிப்புக் கட்டணம் விலாசதாரிடம் வசூலிக்கப்படும். இதில் முன்னதாகச் செலுத்தப்பட்ட கட்டணத் தொகை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

(iv) 440 தோலாவிற்கு மேற்பட்ட பார்ஸல்கள் ரிஜிஸ்தர் செய்யப்பட வேண்டும்.

(v) விலாசதாருக்குத் திருப்பப்படுவதற்குக் கட்டணம், முன்னதாகச் செலுத்தப்பட்ட கட்டணத்தில் பாதியாகும்.

## 8. ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங்

ரிஜிஸ்தர் செய்யப்படாத ஒரு கடிதம், கார்டு அல்லது பாக்கெட் தபாலில் சேர்க்கப்பட்டதற்கு அத்தாக்ஷியாகக் கொடுக்கப்பெறும் ஒரு ரசீது இது; இதற்குக் கட்டணம் பிரதி ஒவ்வொரு மூன்று உருப்படிகளுக்கும் (அல்லது) அதற்குக் குறைந்த உருப்படிகளுக்கும் ...6 பை.

குறிப்பு :—

(i) தபாலில் சேர்க்கப்பட வேண்டிய கடிதங்களின் விவரங்களையும், அவற்றில் உள்ளபடி மேல் விலாசங்களையும் கொண்டுள்ளதும், இதற்கான கட்டணத்திற்கான தபால் பில்லைகள் ஒட்டப்பட்டிருப்பதுமான பாரங்கள் (அல்லது) காகிதங்கள் (அல்லது) நோட்டுப் புத்தகங்களுடனும், கடிதங்களுடனும் தபால் நிலையத்தில் மூன்று கொண்ட பிரிவுகளாகக் கொடுக்கப்பட வேண்டும்.

(ii) தபால் பில்லை முழுவதும் ஒட்டாத (அல்லது) குறைவாக ஒட்டப்பட்ட உருப்படிகளுக்கும் 'ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங்' உண்டு.

## 9. எக்ஸ்பிரஸ் டெலிவரி (துரிதத் தபால் பட்டுவாடா)

ரிஜிஸ்தர் செய்யப்படாத ஒவ்வொரு உருப்படியையும் "எக்ஸ்பிரஸ் டெலிவரியாக" தபாலில் அனுப்பலாம். உருப்படிக்குள்ள தபாற் கட்டணத்தைத் தவிர 2 அணா பிரத்தியேகமாகக் கட்டணம் இதற்கு உண்டு.

குறிப்பு :—

(i) பட்டுவாடா செய்யும் தந்தி நிலையத்திலிருந்து 5 மைல்களுக்குள் உள்ள இடங்களுக்கு மட்டுமே இவ்வித வசதி உண்டு.

(ii) குறித்த தபால் நிலையத்தைச் சேர்ந்தவுடன், அது தந்தியைப் போல் பட்டுவாடா செய்யப்படும்.

(iii) உருப்படிகளின் மேல் "எக்ஸ்பிரஸ் டெலிவரி" என்று கொட்டை எழுத்துக்களில் எழுத வேண்டும் (அல்லது) இலவசமாக இதற்காகப் பிரத்தியேகமாகக் கிடைக்கும் லேபில்களையும் வாங்கி அவற்றை உருப்படிகளின்மேல் ஒட்டி அனுப்பலாம்.

## 10. லேட் பீஸ் (Late fees)

| | | |
|---|---|---|
| ரிஜிஸ்தர் செய்யப்படாத ஒரு கடிதம், போஸ்ட் கார்டு அல்லது பாக்கெட்டு | தபால் நிலையம் ... | ½ அணா. |
| | R. M. S. ... | 1 அணா. |

## 11. ரிஜிஸ்தர் செய்தல்; அக்னுலெட்ஜ்மெண்ட்

பிரதி ஒவ்வொரு கடிதம், போஸ்ட் கார்டு,
பாக்கெட், பார்ஸலுக்கு ... 4½ அணா.

தபால் அல்லது பிற பில்லைகள், செக்குகள் (Cheques), உண்டி, பாங்க் நோட், பாங்க் போஸ்ட் பில், போன்றவைகள் அடங்கிய உருப்படிகள் ரிஜிஸ்தர் செய்யப்பட வேண்டும்.

மேற்கொண்டு ஒரு அணு அதிகக் கட்டணம் செலுத்தி விலாசதார் பெற்றுக் கொண்டதாகக் கையெழுத்திட்ட ஒரு ரசீது (Acknowledgment) பெறலாம்.

## 12. இன்ஷியூர் செய்தல்

**தபால், ரிஜிஸ்தர் கட்டணங்களைத் தவிர மேற்கொண்டு பின்கண்ட கட்டணங்கள் வசூலிக்கப்படும்:**

| | |
|---|---|
| மதிப்பு ரூ. 100-க்கு மேற்படாதவை | ... 4 அணு. |
| மதிப்பு ரூ. 100-க்குமேல் பிரதி ஒவ்வொரு ரூ. 100-க்கும் (அல்லது) அதன் பின்னத்திற்கும் | ... 2 அணு. |

**குறிப்பு :—**

(i) ரிஜிஸ்தர் அல்லது வால்யூ பேயபிள் கடிதங்கள் அல்லது பார்ஸல்களை இன்ஷியூர் செய்யலாம். வால்யூ பேயபிள் பாக்கெட்டுகள், கடிதங்கள் (ரயில்வே ரசீதுகள், பத்திரங்கள், பில் முதலியன வற்றைக் கொண்டவை), இவைகளைத் தவிர, விலாசதார் அனுப்ப வேண்டிய தொகையானது ரூ. 25-க்கு மேற்பட்டதாக உள்ள எல்லா வால்யூ பேயபிள் உருப்படிகளையும் இன்ஷியூர் செய்ய வேண்டும்.

(ii) தலைமைத் தபால் நிலையத்திலும், அங்கீகரிக்கப்பட்ட ஸப் நிலையங்களிலும் ரூ. 5,000 வரையிலும்; அங்கீகரிக்கப்பட்ட கிளை நிலையங்களில் ரூ. 600 வரையிலும் இன்ஷியூர் செய்யலாம்.

(iii) இன்ஷியூர் செய்யப்படவேண்டிய உருப்படிகளைக் குறிப்பிட்ட முறையில் நன்ருகப் பாக்கிங் செய்து, ஸீலிட வேண்டும்; துணியினல் செய்யப்பட்ட ரிஜிஸ்தர் உறைகளை உபயோகிக்கச் சிபார்சு செய்யப்படுகின்றது.

(iv) இன்ஷியூரன்ஸ் தொகையை அடித்தல், அழித்தல், திருத்த மின்றி உறையின்மேல் எண்ணுலும், எழுத்தாலும் எழுத வேண்டும்.

(v) அனுப்புவோரின் பெயரும், விலாசமும் உறையில் இடது பக்க மூலேயில் எழுதப்பட வேண்டும்.

(vi) பட்டுவாடா செய்தவுடன் விலாசதார் (அல்லது) அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டு கையெழுத்திட்ட அக்னலெஜ்மெண்ட் ஒன்று விலாசதாருக்கு இலவசமாக அனுப்பப்பெறும்.

(vii) நாணயங்கள், பிளாட்டினம், தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த கற்கள், கரன்ஸி நோட்டுகள், நகைகள் முதலியனவற்றைக் கொண்ட

கடிதங்கள் அல்லது பார்ஸல்கள் கண்டிப்பாக இன்ஷியூர் செய்யப்படல் வேண்டும்.

## 13. வால்யூ பேயபிள் போஸ்ட்

### (ரிஜிஸ்தர் செய்தல் அவசியம்)

(i) பின்கண்ட உருப்படிகளை வால்யூ பேயபிள் போஸ்ட் மூலம் அனுப்பலாம்: ரிஜிஸ்தர் செய்யப்பட்ட கடிதங்கள், பார்ஸல்கள், பாக்கெட்டுகள், பத்திரிகைகள்.

(ii) தொகையின் அளவு—அனுப்புபவருக்கு விலாசதார் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 1,000-க்கு மேற் போகக்கூடாது.

(iii) V. P. மணியார்டர் பாரம் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு, அத்துடன் உருப்படியானது தபால் நிலையத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

**கட்டணங்கள்:**

(*a*) **விலாசதார் அனுப்பவேண்டிய தொகை ரூ. 25-க்கு மேற்படாம லிருந்தால்:**

1. அந்த உருப்படிக்குள்ள தபாற் கட்டணம்.
2. ரிஜிஸ்தர் செய்யக் கட்டணம் ... 4½ அணா.
3. V. P. கட்டணம் ... 1 அணா.

4. இன்ஷியூர் செய்யக் கட்டணம் (இன்ஷியூர் செய்யப்பட்டால் தான் தரப்பட வேண்டும்; இன்ஷியூர் செய்வது அவசியமில்லை).

(*b*) **விலாசதார் அனுப்பவேண்டிய தொகை ரூ. 25-க்கு மேற்பட்டால்:**

1. அந்த உருப்படிக்குள்ள தபாற் கட்டணம்.
2. ரிஜிஸ்தர் செய்யக் கட்டணம் ... 4½ அணா.
3. V. P. கட்டணம் ... 2 அணா.

4. இன்ஷியூர் செய்யக் கட்டணம் (இன்ஷியூர் செய்யப்பட்டால்தான் தரப்பட வேண்டும்; வால்யூ பேயபிள் பாக்கெட்டுகள், கடிதங்கள் (ரயில்வே ரசீதுகள், பத்திரங்கள், பில் முதலியனவற்றைக் கொண்டவை) இவைகளைத் தவிர, விலாசதார் அனுப்பவேண்டிய தொகையானது ரூ. 25-க்கு மேற்பட்டதாக உள்ள எல்லா வால்யூ பேயபிள் உருப்படிகளையும் இன்ஷியூர் செய்வது அவசியம்; பிறவற்றை அவ்வாறு செய்வது அவசியமில்லை).

## 14. சாதாரண மணியார்டர் கட்டணங்கள்

| | | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| ரூ. 5-க்கு மேற்படாத் தொகைக்கு | | | ... | 0 | 2 |
| ரூ. 5-க்கு மேற்பட்டதும், ஆனால், ரூ. 10-க்கு மேற்படாததமான தொகைக்கு | | | ... | 0 | 3 |
| ரூ. 10-க்கு | ,, | ரூ. 15-க்கு ,, | ... | 0 | 4 |
| ரூ. 15-க்கு | ,, | ரூ. 25-க்கு ,, | ... | 0 | 6 |
| ரூ. 25-க்கு | ,, | ரூ. 30-க்கு ,, | ... | 0 | 8 |
| ரூ. 30-க்கு | ,, | ரூ. 35-க்கு ,, | ... | 0 | 9 |
| ரூ. 35-க்கு | ,, | ரூ. 40-க்கு ,, | ... | 0 | 10 |
| ரூ. 40-க்கு | ,, | ரூ. 50-க்கு ,, | ... | 0 | 12 |
| ரூ. 50-க்கு | ,, | ரூ. 55-க்கு ,, | ... | 0 | 14 |

இவ்வாறு கணக்கிடப்பட வேண்டும்.

குறிப்பு :—

(i) ஒரு சாதாரண அல்லது தந்தி மணியார்டரின் தொகையின் அளவு ரூ. 600-க்கு மேற்படக் கூடாது; ஒரு அணுவின் பின்னமாக இருத்தல் கூடாது.

(ii) பட்டுவாடா செய்தவுடன் விலாசதார் (அல்லது) அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டு கையெழுத்திட்ட அக்னலஜ்மெண்ட் ஒன்று விலாசதாருக்கு இலவசமாக அனுப்பப்பெறும்.

(iii) இலவசமாக விலாச மாற்றம் செய்யப்படும்.

(iv) விலாசதாரின் பெயரை மற்றொரு முறை கமிஷன் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம்.

(v) பணம் கொடுக்காமல் தடை செய்ய வசதியுண்டு.

(vi) பட்டுவாடா செய்யும் தபால் நிலையத்திற்கு விலாசதாரைத் தெரியாமலிருந்தால், பணம் அவரிடம் கொடுக்கப்பெறுவதற்கு முன்னர் அவருடைய அடையாளம் தேவையாகும்.

(vii) கடிதங்கள், தபால் கார்டுகள் இவைகளைப் போன்று மணியார்டர்களும், எங்கெங்கு வசதியாக உள்ளதோ, அங்கெல்லாம் ஆகாய மார்க்கமாக எடுத்துச் செல்லப்படும்; இதற்காக எந்த விதமான கட்டணமும் செலுத்தப்பட வேண்டுவதில்லை; எந்த விதமான தனி லேபிளும் ஒட்ட வேண்டுவதில்லை.

## 15. தந்தி மணியார்டர்கள்

இம்மணியார்டர்களுக்கு மணியார்டர் கட்டணம், தந்திக் கட்டணம் இவற்றுடன் 2 அணு சேர்த்துக் கட்டணம் வசூலிக்கப்படும்.

இம்மணியார்டரில் தொகையின் அளவு ஒரு ரூபாயின் பின்னமாக இருத்தல் கூடாது.

## 16. இந்தியன் போஸ்டல் ஆர்டர்

(i) இந்தியன் போஸ்டல் ஆர்டர்களை 8 அணா, ரூ. 1, ரூ. 1-8-0, ரூ. 2-0-0,...என்ற முறையில் ரூ. 10 வரையில் 20 வகைகளில் விற்கவும், அவைகளுக்குப் பணம் கொடுக்கவும் எல்லாத் தலைமைத் தபால் நிலையங்களிலும், ஸப் நிலையங்களிலும் வசதியுண்டு.
கமிஷன்:—எந்த ஒரு ஆர்டருக்கும்...1 அணா.

(ii) 7 அணாவுக்கு மேற்படாத தொகைகளுக்கு (ஒரு அணாவின் பின்னமாக இருக்கக்கூடாது) இரண்டிற்கு மேற்படாத தபால் தலைகளாக வாங்கி மேற்படி எந்த ஆர்டரிலும் (ரூ. 10 தவிர) ஒட்டி அனுப்பலாம்.

(iii) ஒரு போஸ்டல் ஆர்டர் கொடுக்கப்பட்ட மாதத்தின் கடைசி தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் பணம் பெற்றுக் கொள்ளாவிட்டால், இரண்டாவது முறையாக ஒரு அணா கமிஷன் வாங்கப்படும்; எந்த விதத்திலும், ஒரு வருடத்திற்குப் பிறகு அவைகள் செல்லுபடியாகா.

(iv) போஸ்டல் ஆர்டர்களை க்ராஸ் செய்தும் அனுப்பலாம். போஸ்டல் ஆர்டரில் மாற்றுவது, திருத்துவது முதலியன செய்தல் கூடாது; இப்போஸ்டல் ஆர்டர்கள் காணமை, அழிதல் போன்ற எல்லாப் புகார்களையும் அவைகள் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 12 மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட தபால் நிலையங்களின் சூப்ரெண்டெண்டுக்கோ அல்லது முதல்தர போஸ்ட் மாஸ்டருக்கோ தெரிவிக்க வேண்டும்.

## 17. அடையாளக் கார்டுகள்

கட்டணம்:

குறிப்பு:—

(i) மேற்படி அடையாளக் கார்டுகளுக்கு, நபரின் புகைப்படத்துடன் ($3\frac{1}{4}'' \times 2\frac{1}{4}''$ அல்லது இதற்குச் சற்றுக் குறைவாக அளவு உள்ள) தலைமை போஸ்ட் மாஸ்டருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) இத்தகைய கார்டுகள் மூன்று வருஷங்கள் வரை செல்லும்.

(iii) இவைகள் காணமல் போனல், வேறொரு கார்டு தரப்படும்.

## 18. சேவிங்ஸ் பாங்க்

(i) சில குறிப்பிட்ட ஆபீஸ்களைத் தவிர, எல்லா தலைமைத் தபால் ஆபீஸ்களிலும், ஸப் ஆபீஸ்களிலும் சேவிங்ஸ் பாங்க் உள்ளது; விசேஷமாகக் குறிப்பிடப்பட்ட சில கிளை தபால் ஆபீஸ்களிலும் சேவிங்ஸ் பாங்க் உள்ளது.

(ii) **டெபாஸிட் தொகை:** (*a*) குறைந்தது—ரூ. 2. (*b*) உயர்ந்தது—ரூ. 10,000. (*c*) ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகைகளையோ அல்லது ஒரு ரூபாயின் பின்னமாக உள்ள தொகைகளையோ ஏற்றுக் கொள்வதில்லை. (*d*) குறிப்பிட்ட தலைமை ஆபீஸிற்குக் கீழ் உள்ள எந்தத் தபால் ஆபீஸிலும் டெபாஸிட் செய்யலாம். (*e*) ஒரு ஸப் அல்லது கிளை ஆபீஸில் டெபாஸிட் செய்த தொகைக்கு ரசீது, சம்பந்தப்பட்ட தலைமை ஆபீஸிலிருந்து டெபாஸிட் செய்தவருக்கு அனுப்பப்படும்.

(iii) **பணத்தைத் திருப்பிப் பெறல்:** (*a*) வாரம் ஒரு முறை வாங்கிக் கொள்ளலாம். (*b*) ஒரு ரூபாயின் பின்னமாக இருக்கக் கூடாது; சேவிங்ஸ் பாங்கில் மீதியுள்ள தொகை ரூ. 2-க்குக் குறையக் கூடாது. (*c*) கணக்கு வைத்துள்ள போஸ்ட் ஆபீஸில் மட்டுமே பணம் திருப்பிப் பெறலாம்.

(iv) **வட்டி :** (*a*) நடைமுறை வருஷத்தில் எந்த நாளிலும், அல்லது புதுக் கணக்காக இருப்பின், கணக்கு வைக்க ஆரம்பித்த தேதியிலிருந்து நடைமுறை வருஷம் முடியும் வரையில் எந்த நாளிலும் மீதியுள்ள தொகை ரூ. 200-க்குக் குறையாமல் உள்ள எல்லாக் கணக்குகளுக்கும் (பொது மக்கள், போலீஸ், செக்யூரிடி டெபாஸிட் போன்ற கணக்குகளைத் தவிர) டிபாஸிட் தொகைகளின்மீது 1 ௵-க்கு ரூ. 100-க்கு ரூ. 2 வட்டி தரப்படும். (*b*) மற்ற எல்லாக் கணக்குகளுக்கும் 1½% வீதம் வட்டி தரப்படும். (*c*) ஒவ்வொரு மாதத்திய நான்காவது தின முடிவிற்கும், கடைசி தினத்திற்கும் மத்தியில் மிகக் குறைவாகக் காணப்பட்ட மீதியுள்ள தொகைகளின்மீது வட்டி தரப்படும்.

(v) தனக்காக ஒன்றும், புத்தி ஸ்வாதீனமில்லாத ஒருவருக்காக ஒன்றும், வயது வராத தன் சம்ரக்ஷணையிலுள்ள மைனர் ஒருவருக்காக ஒன்றும் ஆக ஒருவர் மொத்த மூன்று கணக்குகள் வைத்துக் கொள்ளலாம்.

(vi) **கணக்கு மாறுதல்:** கணக்கு வைக்க ஆரம்பித்த அல்லது மாற்றப்பட்ட முதல் மூன்று மாதங்களுக்கு மாற்றுதல் கிடையாது; கணக்கு மாறும்போது, பாஸ் புத்தகங்கள் இலவசமாக மாற்றப்படும்.

(vii) பாஸ் புத்தகங்கள் காணமற்போனால் உடனுக்குடன் தெரிவிக்கப்பட வேண்டும்; பாஸ் புத்தகங்கள் காணமற்போனாலும், அல்லது கெட்டுப்போனாலும் (கட்டுப்பாட்டிற்கு உட்படாத சமயங்களைத் தவிர) மற்றொரு புத்தகம் தருவதற்குக் கட்டணம் ரூபாய் ஒன்று.

(viii) டெபாஸிட்டரது விலாஸத்தில் ஏதாவது மாறுதல் இருந்தால், அத்தகைய மாறுதல்களை குறிப்பிட்ட தபால் நிலையங்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கவேண்டும்.

---

பொற்கலம் ஒலிக்காது; வெண்கலம் ஒலிக்கும்.

## 19. நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள்

(i) 5 ஞூ, 7 ஞூ, 12 ஞூ ஆகிய மூன்று வகைகளில் மேற்படி ஸர்டிபிகேட்டுகள் கிடைக்கும்.

(ii) மேற்படி மூன்று வகைகள் ஒவ்வொன்றிலும் எந்தெந்தத் தொகைகளில் ஸர்டிபிகேட்டுகள் கிடைக்கும் என்பதும், வட்டி சேர்த்து எவ்வளவு தொகை கிடைக்கும் என்பதும் கீழே காட்டப்பட்டுள்ளன :

(*a*) 12 வருஷ ஸர்டிபிகேட்டுகள் :—

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொகை | ரூ. | 5 | 10 | 50 | 100 | 500 | 1,000 | 5,000 |
| 12 ஞூ-க்குப் பின் வட்டியுடன் சேர்த்துக் கிடைக்கும் தொகை | | 7-8, | 15, | 75, | 150, | 750, | 1,500, | 7,500 |

(*b*) 7 வருஷ ஸர்டிபிகேட்டுகள் :—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தொகை | ரூ. | 5 | 10 | 50 | 100 | 1,000 | 5,000 |
| 7 ஞூக்குப் பின் வட்டியுடன் சேர்த்துக் கிடைக்கும் தொகை | | 6-4, | 12-8, | 62-8, | 125, | 1,250, | 6,250 |

(*c*) 5 வருஷ ஸர்டிபிகேட்டுகள் :—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தொகை | ரூ. | 5 | 10 | 50 | 100 | 1,000 | 5,000 |
| 5 ஞூக்குப் பின் வட்டியுடன் சேர்த்துக் கிடைக்கும் தொகை | | 5-12, | 11-8, | 57-8, | 115, | 1,150, | 5,750 |

(iii) ஒருவராக இருப்பின், ரூ. 25,000-க்குமேல் (காஷ் ஸர்டிபிகேட்டுகள் ஏதேனும் வைத்திருந்தால், அவற்றையும் சேர்த்து) இத்தகைய ஸர்டிபிகேட்டுகளைப் பெற முடியாது ; இதில் 5 ரூபாய் ஸர்டிபிகேட்டுகள் ரூ. 125-க்குமேற் போகக்கூடாது ; கூட்டாளிகளாக இருப்பின், ரூ. 50,000-க்குமேற் பெற முடியாது ; இதில் 5 ரூ. ஸர்டிபிகேட்டுகள் ரூ. 250-க்குமேற் போகக்கூடாது.

(iv) 5 ஞூ, 7 ஞூ ஸர்டிபிகேட்டுகளை எப்பொழுது வேண்டுமானாலும் பணமாக மாற்றிக் கொள்ளலாம். 12 ஞூ ஸர்டிபிகேட்டுகளை குறிப்பிட்ட முதல் சில மாதங்கள் கழித்துத்தான் மாற்ற முடியும்.

(v) இவற்றால் கிடைக்கும் வட்டித் தொகைக்கு வருமான வரி இல்லை.

# (2) உள்நாட்டுத் தந்தி

## 1. தந்திக் கட்டணங்கள்

உள்நாட்டுக் கட்டணங்கள் (உள்ளூர் உட்பட)

| வகை | யூனிட்டுக்குரிய பதங்கள் | உள்ளூரில் பட்டுவாடா செய்ய: யூனிட் விகிதம் | உள்ளூரில் பட்டுவாடா செய்ய: அதிகமான ஒவ்வொரு பதத்துக்கும் | இந்தியாவில் பட்டுவாடா செய்ய: யூனிட் விகிதம் | இந்தியாவில் பட்டுவாடா செய்ய: அதிகமான ஒவ்வொரு பதத்துக்கும் | பாகிஸ்தானில் பட்டுவாடா செய்ய: யூனிட் விகிதம் | பாகிஸ்தானில் பட்டுவாடா செய்ய: அதிகமான ஒவ்வொரு பதத்துக்கும் | இலங்கையில் பட்டுவாடா செய்ய: யூனிட்டுக்குரிய பதங்கள் | இலங்கையில் பட்டுவாடா செய்ய: யூனிட் விகிதம் | இலங்கையில் பட்டுவாடா செய்ய: அதிகமான ஒவ்வொரு பதத்துக்கும் | விசேஷம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. அ. | ரூ. அ. | ரூ. அ. | ரூ. அ. | ரூ. அ. | ரூ. அ. | | ரூ. அ. | ரூ. அ. | |
| அவசரம் ... | 8 | 0 12 | 0 1 | 1 8 | 0 2 | 2 12 | 0 4 | 12 | 2 8 | 0 3 | } கட்டணம் வசூலிக்கப்படும். |
| சாதாரணம் ... | 8 | 0 6 | 0 ½ | 0 12 | 0 1 | 1 6 | 0 2 | 12 | 1 4 | 0 2 | |

குறிப்பு :—

(i) அவசரத் தந்திகள் சாதாரணத் தந்திகளைக் காட்டிலும் விரைவில் பட்டுவாடா செய்யப்படும்; அவை பகல், இரவு (தந்தி நிலையம் திறந்திருந்தால்) நேரங்களில் எந்தச் சமயத்திலும் பிரத்தியேகமான ஆள் மூலம் உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்படும். ஞாயிற்றுக் கிழமைகளிலும், பிற தந்தி விடுமுறை நாட்களிலும் அவசரத் தந்திகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(ii) எவ்வித விசாரணையுமின்றி, எளிதில் பட்டுவாடா செய்வதற்கேற்றவாறு தந்திகளில் விலாசங்கள் தரப்பட வேண்டும்.

(iii) எவரும் தமது விலாசத்தை 10 எழுத்துக்களுக்குமேல் போகாத ஒரு பதத்தினால் சுருக்கி, அதைத் தந்தி விலாசமாகக் கொள்ளலாம். இதற்கான கட்டணம் வருஷத்திற்கு ரூ. 20 அல்லது 6 மாதங்களுக்கு ரூ. 12 முன்னதாகச் செலுத்தப்பட வேண்டும்.

(iv) நூறு வார்த்தைகள் அல்லது அதற்குக் குறைந்த வார்த்தைகளைக் கொண்ட ஒரே சமாசாரமுடைய ஒரு தந்தியை ஒரே தந்தி நிலையத்தின் இலவச பட்டுவாடா எல்லைக்குள் இருக்கின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலாசங்களில் பட்டுவாடா செய்ய ஒரு விலாசத்திற்கு மேற்பட்ட பிரதி ஒவ்வொரு விலாசத்திற்கும் 4 அணா கட்டணம் வசூலிக்கப்படும்.

(v) தந்தி மூலம் பதில் கிடைப்பதற்காக அப்பதில் தந்தியின் கட்டணத்தையும், முன்பே முதல் தந்தியுடன் சேர்த்துக் கட்டி விடலாம் ஆனால், அவ்வாறு பதிலுக்காகக் கட்டப்படும் கட்டணத் தொகை ஒரு சாதாரண தந்திக்கான குறைந்த கட்டணத் தொகையைக், காட்டிலும் குறைவாக இருக்கக் கூடாது.

## 2. வாழ்த்துத் தந்திகள்

குறிப்பிடப்பட்ட விசேஷக் காலங்களிலும், பாராட்டுதலைத் தெரிவிக்கும் காலங்களிலும் வாழ்த்துத் தந்திகள் குறைந்த கட்டணத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இத்தகைய தந்திகளுக்குக் குறைந்த கட்டணம் ரூ. 1-4-0 (அவசரம்); ரூ. 0-10-0 (சாதாரணம்); இவைகளில்—

| | | |
|---|---|---|
| (*a*) விலாசதாரின் பெயரும், விலாசமும் | ... | 4 பதங்கள் |
| (*b*) வாழ்த்து (ஒரு எண்ணால் குறிக்கப்படுவது) | ... | 1 பதம் |
| (*c*) அனுப்புபவர் பெயர் | ... | 1 பதம் |

ஆக மொத்தம் 6 பதங்களுக்குமேல் இருக்கக்கூடாது.

6-க்குமேல் உள்ள பிரதி ஒவ்வொரு பதத்திற்கும் 2 அணா (அவசரம்); 1 அணா (சாதாரணம்) கட்டணம் வசூலிக்கப்படும். வாழ்த்துக்

போன் தடத்துக்துப் போட்டிட வேண்டுமா?

களைக் குறிக்கும் எண்களின் அட்டவணைகள் எல்லாத் தந்தி நிலையங்களிலும் கிடைக்கும்.

அனுப்புவதற்காக வாழ்த்துத் தந்திகள் டெலிபோன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும்; ஆனால், டெலிபோன் மூலம் பட்டுவாடா செய்யப்படுவதில்லை.

வாழ்த்துத் தந்திகள் பிரத்தியேக வர்ண உறைகளில் போடப் பட்டுப் பட்டுவாடா செய்யப்படுகின்றன. உள்ளூர் வாழ்த்துத் தந்திகளுக்கு மேற்கூறிய கட்டணங்களில் பாதிதான் வசூலிக்கப்படும்.

## (3) உள்நாட்டு ஆகாயத் தபால்

கார்டு, கவர், கடிதத் தாள், மணியார்டர் இவைகளுக்குப் பிரத்தியேகமாக அதிகப்படி தபால் தலை ஒட்ட வேண்டியதில்லை. எங்கெங்கு வசதியாக உள்ளதோ அங்கெல்லாம் இவைகள் பிரத்தியேகக் கட்டணமின்றி ஆகாய மார்க்கத்தில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

ஆகாயத் தபால் உருப்படி ஒவ்வொன்றையும் சாதாரணத் தபால் கட்டணத்தைத் தவிர, $4\frac{1}{2}$ அணு அதிகம் செலுத்தி, ரிஜிஸ்தர் செய்யலாம். 1 அணு அதிகம் செலுத்தி, அவைகளுக்கு அக்னாலஜ்மெண்டும் பெறலாம். ஆனால், இவைகளை இன்ஷியூர் செய்ய முடியாது.

**கட்டணங்கள்** (சாதாரண தபால் கட்டணம், ரிஜிஸ்தர் கட்டணம்) நீங்கலாக :-

(i) **பாக்கெட்டுகள்:** பிரதி ஒவ்வொரு தோலாவிற்கும், அல்லது அதன் பின்னத்திற்கும்............ 1 அணு.

(ii) **பார்ஸல்கள்;** பிரதி ஒவ்வொரு 20 தோலாவிற்கும் (அல்லது அதன் பின்னத்திற்கும்......... 10 அணு.

(440 தோலாவிற்கு மேற்பட்ட பார்சல்களை ரிஜிஸ்தர் செய்வது அவசியம்); அதிகப்படியான எடை 800 தோலா. அளவு:—நீளம் 2 அடி; நீளமும், சுற்றும் சேர்ந்து 4 அடி. மற்ற நிபந்தனைகள் சாதாரண பார்ஸல்களுக்குள்ள நிபந்தனைகளேயாகும்.)

## (4) வெளிநாட்டுத் தபால்

ஆடென், ஸிலோன், நேபால், பாகிஸ்தான், போர்ச்சுகல் இந்தியா ஆகிய இடங்களுக்கு உள்நாட்டுத் தபால் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

தபால் உருப்படிகள் யாவும் உள்நாட்டு முறையில் உள்ளது போலவே பிரிக்கப்பட்டுள்ளன.

**மற்ற எல்லா நாடுகளுக்கும் :—**

### 1. தபால் கார்டுகள்

| | | |
|---|---|---|
| ஒற்றை | ... | ... $2\frac{1}{2}$ அணா. |
| ரிப்ளை (பதில்) | ... | ... 5 அணா. |

### 2. கடிதங்கள்

| | |
|---|---|
| ஒரு அவுன்ஸிற்கு மேற்படாதவை | ... 4 அணா. |
| ஒரு அவுன்ஸிற்குமேல் பிரதி ஒவ்வொரு அவுன்ஸிற்கும் (அல்லது) அதன் பின்னத்திற்கும் | ... $2\frac{1}{2}$ அணா. |

குறிப்பு:—ஸ்டாம்பு ஒட்டாத கடிதங்களுக்கும், கார்டுகளுக்கும் விலாசதாரிடம் இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்; குறைவாக ஒட்டப்பட்டிருந்தால், குறைவைப்போல் இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்.

### 3. அச்சிட்ட காகிதங்கள்

| | |
|---|---|
| பிரதி ஒவ்வொரு 2 அவுன்ஸிற்கும் (அல்லது) அதன் பின்னத்திற்கும் | ... 9 பை. |

(ரிஜிஸ்தர் செய்த பத்திரிகைகளுக்கு பிரதி ஒவ்வொரு 2 அவுன்ஸிற்கும் அல்லது அதன் பின்னத்திற்கும் ஒரு பத்திரிகைக்கு 3 பை வீதம் கட்டணம் வசூலிக்கப்படும்.)

குறிப்பு:—தபால் தலைகள் முழுவதும் முன்னதாகவே ஒட்டப்பட வேண்டும்.

### 4. வியாபாரக் காகிதங்கள்

| | |
|---|---|
| 10 அவுன்ஸிற்கு மேற்படாதவை | ... 4 அணா. |
| 10 அவுன்ஸிற்குமேல் பிரதி ஒவ்வொரு 2 அவுன்ஸிற்கும் (அல்லது) அதன் பின்னத்திற்கும் | ... 9 பை. |

### 5. மாதிரிப் பாக்கெட்டுகள்

| | |
|---|---|
| 4 அவுன்ஸிற்கு மேற்படாதவை | ... $1\frac{1}{2}$ அணா. |
| 4 அவுன்ஸிற்குமேல் பிரதி ஒவ்வொரு இரண்டு அவுன்ஸிற்கும் (அல்லது) அதன் பின்னத்திற்கும் | ... 9 பை. |

குறிப்பு :—வியாபாரக் காகிதங்களுக்கும், மாதிரிப் பாக்கெட்டு களுக்கும் தபால் பில்லேகள் முன்னதாகவே ஒட்டப்பட வேண்டும்.

### 6. ரிஜிஸ்தர் செய்தல்

ஒவ்வொரு உருப்படியையும் ரிஜிஸ்தர் செய்ய . . 4½ அணு.

### 7. அக்னலஜ்மெண்ட்

(ரிஜிஸ்தர் செய்த உருப்படிகளுக்கு மட்டும்) . . . 3 அணு.

### 8. இன்ஷியூர் செய்தல்

பிரதி ஒவ்வொரு £ 35-க்கும் அல்லது ரூ. 460-க்கும் ... 12 அணு.

## (5) வெளிநாட்டு ஆகாயத் தபால்

(சாதாரணத் தபால் கட்டணம் நீங்கலாக)

இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும்

கடிதங்களுக்கும், பாக்கெட்டுகளுக்கும்—பிரதி ஒவ்வொரு தோலா விற்கும் (அல்லது) அதன் பின்னத்திற்கும் ... 1½ அணு.
கார்டுகள் ... 9 பை.

---

## 3. சென்னை நகரத்தில் விசேஷத் தபால் வசதிகள்

சென்னை நகரத்தில் வழக்கமாக இருந்துவரும் தபால் வசதிகளைத் தவிர, வேறு சில விசேஷ வசதிகளும் இருந்துவருவதை பொது மக்கள் தெளிவாக அறியவில்லை என்று சென்னையிலுள்ள தபால் அதிகாரி கள் கருதுவதால், பின்வரும் விவரங்களைத் தெரிந்துகொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் :

இந்த விசேஷத் தபால் வசதிகள் இருவகைப்பட்டதாகும். அதாவது (1) இரண்டு தபாலாபீசுகளில் அலுவல் நேரம் விஸ்தரிக்கப்பட்டிருப்பது; (2) மாலை வேளைகளில் சுற்றிவரும் தபாலாபீஸ் ஒன்று வேலை செய்து வருவது.

(1) சென்னை ஜெனரல் தபாலாபீசும், மௌண்ட் ரோடு தபா லாபீசும் தினந்தோறும் காலை 8-மணியிலிருந்து இரவு 8-30 மணி வரையில் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஞாயிறு தவிர மற்ற தினங்களில் இந்தத் தபாலாபீசுகளில் காலை 8-மணியிலிருந்து, பிற்பகல் 3-மணி வரையிலும் மணியார்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் சேவிங்ஸ் பாங்க், தேசிய சேமிப்புப் பத்திரம்.ஆகியவை சம்பந்தமான கொடுக்கல், வாங்கல்களும் நடத்தப்படுகின்றன. இன்ஷியூர் செய்யப் பட்ட தபால்கள் மாலை 4 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

---

ரிஜிஸ்தர் செய்யப்பட்ட தபால்கள், தந்தி மணியார்டர்கள், தபால் தலை விற்பனை, இந்திய போஸ்டல் ஆர்டர்கள் விற்பனை ஆகியவை காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணிவரை நடத்தப்படுகின்றன.

சேவிங்ஸ் பாங்க், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஆகியவை சம்பந்தமான கொடுக்கல், வாங்கல்கள் தவிர மற்ற எல்லா அலுவல்களும் ஞாயிற்றுக்கிழமையன்றும் நடத்தப்பட்டு வருகின்றன.

(1) 1951 ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து நகரத்தில் வேலை செய்து வரும் சுற்றிவரும் தபாலாபீஸ் தினந்தோறும் மாலை 5 மணியிலிருந்து இரவு 8-30 மணிவரை கீழ்க்கண்ட நேரங்களில் ரிப்பன் கட்டடம், பாய்க்கடை, மெரினா, மயிலாப்பூர், தியாகராயநகர் ஆகியவிடங்களில் தங்கி வேலை செய்துவருகிறது:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரிப்பன் கட்டடம் | மாலை | 5 | மணியிலிருந்து | 5-30 | வரை |
| பாய்க்கடை | ,, | 5-45 | ,, | 6-15 | ,, |
| மெரினா | ,, | 6-30 | ,, | 7 | ,, |
| மயிலாப்பூர் | ,, | 7-15 | ,, | 7-45 | ,, |
| தியாகராயநகர் | ,, | 8 | ,, | 8-30 | ,, |

சாதாரணத் தபால்களையும், இன்ஷியூர் செய்யப்படாத தபால்களையும், விமானப் பார்சல்களையும் இந்தத் தபால் ஆபீஸ் மூலம் அனுப்பலாம். தபால் பில்லைகளும், கார்டு கவர்களும்கூட இதில் விற்கப்படுகின்றன.

மேலே குறிக்கப்பட்ட விசேஷத் தபால் வசதிகள் ஞாயிற்றுக்கிழமை உட்பட ஆனால் தபால் விடுமுறை நாட்கள் நீங்கலாக எல்லா நாட்களிலும் இருந்துவரும்.

## 4. தபால் ஆபீஸ்கள் அதிகரிப்பு

### போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் தகவல்

### இலாகாவின் வேலைமுறைபற்றி விளக்கம்

**சென்னை, பிப். 5.**

"வெளி ஜில்லாக்களில் அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மேலும் 1,807 தபால் ஆபீஸ்களைத் திறக்கச் சர்க்கார் உத்தேசித்துள்ளது. டெலிபோன் எக்ஸ்சேஞ்சுகளையும் அதிகரிக்கப் பரந்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது" என்று சென்னை போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ஸ்ரீ ஸி. வி. ராஜன் நேற்று மாலை திருவல்லிக்கேணி கிரஸண்டு சங்கத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

மணலை உழுதவன் மாண்டான்; மண்ணை உழுதவன் வாழ்ந்தான்.

தபால், தந்தி இலாகாவின் வேலைமுறை பற்றி அவர் விரிவான தோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அவர் பிரசங்கத்தில் வெளியிட்ட சில முக்கிய விஷயங்கள் வருமாறு :

இலாகாவில் மொத்தம் வருஷத்தில் சுமார் 500 கோடி ரூபாய் ரொக்கம் லேவாதேவி ஆகிறது. இதில் சென்னையின் பங்கு சுமார் 150 கோடி. சென்ற வருஷத்தில் இந்தியா முழுவதும் 7 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது; சென்னையில் 32,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இதில் ஈடுபட்டவர்கள் 150 சிப்பந்திகளே. மொத்தம் கையாளப்படும் பணத்தின் அளவை நோக்குமிடத்து, மோசடிகள் மிகக் குறைவே.

## வேலையின் பளு

இந்தியாவில் வருஷந்தோறும் 22,000 லக்ஷம் தபால்கள் கையாளப்படுகின்றன. சென்னை ராஜ்யத்தில் தினசரி 15 லக்ஷம் தபால் சாமான்கள் பட்டுவாடா செய்யப்படுகின்றன. சென்னை நகரில் மட்டும் தினசரி $2\frac{1}{2}$ லக்ஷம் கடிதங்கள் டெலிவரி செய்யப்படுகின்றன. தினசரி பணம் லேவாதேவி சுமார் 9 லக்ஷம் ஆகும். மணியார்டர்களின் தினசரி தொகை 1·3 லக்ஷம்; சுமார் 10 ஆயிரம் ரிஜிஸ்தர் சாமான்கள் டெலிவரி செய்யப்படுகின்றன; சுமார் அதே அளவு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. 22 ஆயிரம் ரூபாய்க்கு தினசரி ஸ்டாம்புகள் விற்பனையாகின்றன. சேவிங்ஸ் பாங்கில் தினசரி சுமார் 37 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. 3,600 தந்திகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, சுமார் 2,700 தந்திகள் டெலிவரி செய்யப்படுகின்றன. எக்ஸ்பிரஸ் டெலிவரி கடிதங்கள் தினசரி சுமார் 1,400 பெறப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமைகளில் 5,000 கடிதங்கள் வருகின்றன. விமானத் தபால் சர்விஸில் தினசரி சென்னை விமான நிலையத்தில் சுமார் 5,000 பவுண்டு எடையுள்ள தபால்கள் கையாளப்படுகின்றன.

ராஜ்யத்தில் தற்போது 10,563 தபால் ஆபீஸ்கள் உள்ளன. தந்தி ஆபீஸ்களின் எண்ணிக்கை 852. சென்னை ராஜ்யத்தில் 104 டெலிபோன் எக்ஸ்சேஞ்சுகள் உண்டு. 10 ஆயிரம் டெலிபோன் இணைப்புகள் இருக்கின்றன. இன்னும் 1005, விண்ணப்பங்கள் இருக்கின்றன.

புதிய எக்ஸ்சேஞ்சுகளை ஏற்படுத்தச் சர்க்கார் திட்டமிட்டுள்ளது. சென்னை நகருக்கு இதனால் மொத்தம் மேலும் 3,600 இணைப்புகள் கிடைக்கும். பெங்களூருக்கு 108,00; கொச்சிக்கு 500; விசாகப்பட்டணத்துக்கு 250; மதுரைக்கு 300; எர்ணுகுளத்துக்கு 200; திருச்சூருக்கு 100 ஏற்படுத்தப்படும்.

நடமாடும் தபாலாபீஸில் தினசரி சுமார் 10 ஆயிரம் கடிதங்களுக்கு மேல் போடப்படுகின்றன.

—சுதேசமித்திரன்; பக்கம் 3; 5-2-1952 (சென்னை).

---

மட்டான போஜனம் மனதிற்கு மகிழ்ச்சி.

## 5. தபால், தந்தி விடுமுறை நாட்கள்

எல்லா ஞாயிற்றுக்கிழமைகளும் தபால், தந்தி விடுமுறை நாட்களாகும். அவற்றுடன் பின்வரும் விசேஷ தினங்களும் தபால் விடுமுறை நாட்களாக அனுஷ்டிக்கப்படும் :—

பாங்க் விடுமுறை நாள், குடியரசு தினம்*, சிவராத்திரி, ஹோலி*, பெரிய வெள்ளிக்கிழமை*, ஈத்-உல்-பிதர்*, ஜன்மாஷ்டமி*, சுதந்திர தினம்*, ஈத்-உல்-ஸுஹா* மகாத்மா காந்தி பிறந்த தினம்*, தசரா*, மூஹரம், தீபாவளி*, குருநானக் பிறந்த தினம்*, ஈத்-இ-மிலாத், கிறிஸ்துமஸ் தினம்*.

இவற்றில் நட்சத்திரக் குறியிட்டவை தந்தி விடுமுறை நாட்கள் ஆகும். இந்நாட்களில் சாதாரண உள்நாட்டுத் தந்திகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா ; எக்ஸ்பிரஸ் (அவசரம்) தந்திகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் குறிப்பிட்ட சில தபால் நிலையங்களைத் தவிர, ஏனைய நிலையங்கள் யாவற்றிலும் எவ்விதமான அலுவலும் நடைபெறுது. எக்ஸ்பிரஸ் டெலிவரி கடிதங்களை மட்டுமே அவ்வாறு குறிப்பிடப்பட்ட சில தபால்-தந்தி நிலையங்களும், தந்தி நிலையங்களும் பட்டுவாடா செய்யும். இன்னும் "Late-fee" ஒட்டின கடிதங்களை அனுப்புதலும், ஸ்டாம்புகள், கார்டு, கவர்கள் முதலியவற்றை விற்றலும் ஆகிய அலுவல்களை மட்டும் R.M.S., குறிப்பிடப்பட்ட சில தந்தி நிலையங்கள், தபால்-தந்தி நிலையங்கள் குறிப்பிட்ட நேரங்களில் அத்தினங்களில் கவனிக்கும். சென்னை மௌன்ட் ரோடு, ஜெனரல் போஸ்டாபீஸ் இவை ஞாயிற்றுக்கிழமைகளில் கவனிக்கும் அலுவல்களை இப்புத்தகத்தின் 225-226 பக்கங்களில் காணலாம்.

ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர, மற்ற விடுமுறை நாட்களில் பின்வரும் அலுவல்களை மட்டுமே தபால் நிலையங்கள் கவனிக்கும் : (1) குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் ஸ்டாம்புகள், கார்டு, கவர் முதலியன விற்பனை; (2) எக்ஸ்பிரஸ் தந்தி மணியார்டர்கள் பட்டுவாடா செய்தல்; (3) வாங்கிக் கொள்ளல்; (4) ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங்; (5) ஒரே ஒரு முறை தபால்களைப் பட்டுவாடா செய்தலும், தபால் பெட்டியிலிருந்து தபால்களை எடுத்தனுப்புதலும்.

## 6. இந்தியன் மணியார்டர் பாரம் ஒன்றின் மாதிரி (முன் பக்கம்)

### SPECIMEN OF AN M.O. FORM-(FRONT PAGE)

*Oblong M. O. stamp on issue.* *Month-stamp.*

A. O. stamp No.......... Date..........

Issued for Rs. (in words)..........

Amount (in figures) Rs. As.

*M. O.-Clerk.* *Issuing Postmaster.*

All the entries below to be filled up by the remitter.

*If the money order is to be advised by Telegram or by Air, write across the form "By Telegram Express" (or ordinary) or "By Air Mail", as the case may be.*

*Additional fee for advising a money order by air in India is 1 anna and to Ceylon or Burma it is 1½ annas Stamps of these values are to be affixed by the remitter in the adjoining space if advice by air mail is desired.*

Amount (in Words) (1) Rupees Thirty Three and annas nine only

Name and address of the payee (in full) (2) The Little Flower Co., (3) "Bhurangam Buildings," 8, Ranganatham Road, T. Nagar, Madras-17.

(4) Date 7-3-1952

(5) N. Vasant Rao.
*Signature of remitter.*

(ACKNOWLEDGMENT INDIAN POSTS AND TELEGRAPHS DEPARTMENT.)

(2) Name of payee — The Little Flower Co

(1a) Amt. of order (in figures) Rs. 33 As. 9

(1) (In Words) Rupees thirty three and as. nine only.

Name and address of the remitter (in full). (5a) N. Vasant Rao, (6) 14, All-Joy Road Basantpur (Saran)

(D) Date of remittance: 7-3-1952

*Date-stamp of office of payment*

*Name-stamp of the office of issue.*

COUPON. *The remitter may write here any communication to the payee, and his name and address overleaf.* Rs. 33 As. 9 (1a)

Dear Sirs,
This is Sent in Full Settlement of account

I am
Yours faithfully,
N. Vasant Rao. (5)

(D) Date of remittance: 7-3-1952

1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் அனுப்புகின்ற ரூபாயின் தொகையும் (எழுத்துக்களில்); 1 a-இல் எண்களில் அனுப்புகின்ற ரூபாயின் தொகையும்; 2-இல் விலாசதாரின் பெயரும்; 3-இல் அவரது முழு விலாசமும்; 4-ல் அனுப்பும் தேதியும்; 5-இல் அனுப்புவோரின் கையெழுத்தும்; 5a-இல் அவரது பெயரும்; 6-இல் அவரது முழு விலாசமும் எழுதப்படல் வேண்டும். இவைகளைத் தவிர, D எனக் காட்டியுள்ள இரு இடங்களிலும் பணமனுப்பும் தேதியைக் குறிப்பது நல்லது.

இந்தியன் மணியார்டர் பாரம் ஒன்றின் மாதிரி (பின் பக்கம்)

## SPECIMEN OF AN M.O. FORM-(BACK PAGE)

INDIAN POSTS AND TELEGRAPHS DEPARTMENT

# INDIAN MONEY ORDER

To

The Postmaster ____________ S. O.

H. O.

———— FOLD HERE ————

Received the sum specified on the reverse.

Round M. O. Stamp authorising payment.

⑦ (Signature (in ink) of payee or thumb impression, if payee is illiterate)

⑧ → *(Signature of witness.)

Paid by me on ____________

Signature ____________

*Oblong M. O. Stamp on payment.*

*To be taken when payee is illiterate or not known to post office or when payment is made to a pardanashin lady or by a village postman.

IDENTIFIER'S CERTIFICATE.

*(To be taken when payee is not permanently resident within the jurisdiction of the paying post office or is not known to it.)*

*The payment has been made in my presence to the payee who is personally known to me and whose permanent address is*

____________

*(Signature of identifier.)*

____________

*Address of identifier.*

———— FOLD HERE ————

*Received the sum specified on the reverse on* ⑨ ____________

**Signature of witness to be taken when the payee is illiterate or not known to the post office and in all cases when payment is made by a village postman or to a pardanashin lady on her own signature.*

⑧ *Signature of witnes*

⑨ → *Date* ____________

⑦ Signature (in ink) of payee or thumbimpression of payee.

The Post Office is not responsible for the payment of a money order to a person other than the rightful payee, if such wrong payment arises out of incorrectness or incompleteness of the name or address of the payee as written by the remitter.

If the payee of a money order cannot be found, the amount of the order will be paid to the remitter.

FOLD HERE ———— FOLD HERE

*Name and Address of remitter.* ⑤a N. Vasant Rao,
⑥ → 14- All-Joy Road,
Basantpur (Saran).

Postmen are strictly forbidden to accept any fee or gratification from payees of money orders. Before obtaining payment of the money order the payee must sign it and the acknowledgement, and return the form to the postman after cutting off this coupon which should be retained by him (the payee).

**BUY NATIONAL SAVINGS CERTIFICATES**

A.P. Madras.—5-48—1 Ⓣ To The Little Flower Co., Madras-17.

5 அ-இல் அனுப்புவோரின் பெயரும்; 6-இல் அவரது முழு விலாசமும்; 7-இல் பணம் பெறுபவர் கையெழுத்தும்; 8-இல் சாட்சியின் கையெழுத்தும்; 9-இல் பணம் பெறும் தேதியும் இருக்க வேண்டும். இவைகளைத் தவிர, T எனக் காட்டியுள்ள இடத்தில் பணம் பெறுபவரின் பெயரையும், ஊரையும் எழுதுவது நல்லது.

A SPECIMEN OF AN INDIAN (INLAND) POSTAL ORDER.



A B

A 087081

COUNTERFOIL

To be detached and kept by the Sender.

The Director General of Posts & Telegraphs does not undertake to consider any application respecting an Order which has miscarried, or has been lost or destroyed, unless the Counterfoil is produced.

POSTAL 8 आ. As.8 ORDER

To whom payable 1 The Little Flower Co.

At what office. 2 Madras.

Whether Crossed. Yes 3

Date Sent 5-2-1952 4

NOT NEGOTIABLE THE SENDER MUST FILL IN THE PAYEE'S NAME BEFORE PARTING WITH THE ORDER

A 087081

INDIAN POSTAL ORDER

To The Director General of Post and Telegraphs

Pay to 1 The Little Flower Co.

THE SUM OF

As.8 आठ आना

ONE ANNA

3

at the Post Office

at 2 Madras Within

Six Calendar Months from the last day of the month of Issue

5 POSTAGE STAMPS not exceeding two in number or Seven annas in total value may be affixed here to make up a broken amount (excluding a fraction of an anna).

FOR REGULATIONS SEE BACK

RECEIVED the Sum due

6

PAYEE'S SIGNATURE

PAYING OFFICE STAMP WITH DATE CANCELLING THIS ORDER

ISSUING OFFICE STAMP WITH DATE

7. இந்தியன் போஸ்டல் ஆர்டர் ஒன்றின் மாதிரி

——1-எனக்காட்டியுள்ள இடங்களில் பணம் பெறுபவரது பெயரும்; 2-இல் அவரது ஊரும்; 4-இல் போஸ்டல் ஆர்டரை. அனுப்பின தேதியும் இருக்க வேண்டும். 3-என்ற இடத்தில் காட்டியுள்ளபடி இதைக் கிராஸ் செய்தும் அனுப்பலாம், 5-என்ற இடத்தில் ஏழு அணுக்களுக்குள் இரண்டிற்கு மேற்படாத தபால் பில்லைகளை ஒட்டி அனுப்பலாம் (ஆனுல் மொத்தத் தொகை ஒரு அணுவின் பின்னமாக இருக்கக் கூடாது). 6-இல் பணம் பெறுபவர் கையெழுத்திட வேண்டும். A எனக் காட்டியுள்ள பகுதியை போஸ்டல் ஆர்டரை அனுப்புவர் தம் வசமே வைத்துக்கொள்ள வேண்டும்; B-ஐ மட்டும் வெட்டி வெளியூரிலுள்ள பணம் பெற வேண்டியவருக்கு அனுப்ப வேண்டும்.




## 8. வரிசையாக நிற்கப் பழகுங்கள்!

மேலே—1: *சரியான முறையல்ல*: இதனுல் பொது மக்களுக்கும், தபால் அதிகாரிகளுக்கும் வீணே கால தாமதமாவதுடன், சண்டையும், சச்சரவும் ஏற்படக்கூடும்.

மேலே—2: *சரியான முறை*: அமைதியுடன் எவ்விதக் குழப்பமும், கால தாமதமும் இன்றி, வேலே முடிய இம்முறை ஏதுவாகும்.

Ramanath Press, Madras-14.

## 9. சென்னையில் தெருக்கள் வாரியாக உள்ள பேட்டைகளின் குறியீட்டு எண்கள்

குறிப்பு :—இடப் பக்கத்தில் குறிப்பிட்டபடி, பேட்டைகளின் குறியீட்டு எண்களைச் சென்னை என்பதுடன் சேர்த்து எழுதுவது விரைவில் கடிதங்கள் செல்ல ஏதுவாகும்.

**ஜார்ஜ் டவுன் —சென்னை-1.**

சென்னை G. P. O., பிராட்வே, ஜார்ஜ் டவுன், பூக்கடை, ஹைகோர்ட் பில்டிங்ஸ், மண்ணடி, தங்கசாலைத் தெரு, மணியக்காரர் சத்திரம், சௌக்கார்ப்பேட்டை, வால்டாக்ஸ் ரோடு, கிருஷ்ணப் குளம்.

**மவுண்ட் ரோடு — சென்னை-2.**

சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பேட்டை, கோமளேஸ்வரன்பேட்டை, ஸ்பென்ஸர் பில்டிங்ஸ், P.M.G. ஆபீஸ், மவுண்ட் ரோடு.

**பார்க் டவுன் — சென்னை-3.**

ரிப்பன் கட்டடம், வால்டாக்ஸ் ரோடு, சைடன்ஹாம்ஸ் ரோடு, தங்கசாலைத் தெரு.

**மயிலாப்பூர் — சென்னை-4.**

மௌபரீஸ் ரோடு, பிராடீஸ் ரோடு, சாந்தோம், லேடி வில்லிங்டன் கல்லூரி.

**திருவல்லிக்கேணி —சென்னை-5.**

சேப்பாக்கம், ஜாம்பஜார், பார்த்தசாரதி கோயில், பைகிராப்ட்ஸ் ரோடு, மேரி ராணி கல்லூரி.

**கத்தீட்ரல் — சென்னை-6.**

மவுண்ட் ரோடு, நுங்கம்பாக்கம், இலயோலா கல்லூரி, கோபாலபுரம்.

**வேப்பேரி — சென்னை-7.**

புரசவாக்கம், சூளை, பூவிருந்தவல்லி ஹைரோடு, புரசவாக்கம் ஹைரோடு, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு (கதவிலக்கம் 1 முதல் 49 வரை), சைடன் ஹாம்ஸ் ரோடு.

**எழும்பூர் — சென்னை-8.**

சேட் காலனி, எழும்பூர் R. S., போஸ்டல் ஆடிட் பில்டிங்ஸ், W. C. C.

**செயின்ட் ஜார்ஜ் கோட்டை — சென்னை-9.**

**கீழ்ப்பாக்கம் — சென்னை-10.**

அமிஞ்சிக்கரை, கீழ்ப்பாக்கம் மேற்கு P.O., சேத்துப்பட்டு, செனாய் நகர், பூவிருந்தவல்லி ஹைரோடு, புரசவாக்கம் ஹைரோடு.

**பெரம்பூர் — சென்னை-11.**

**பெரம்பூர் பாரக்ஸ் — சென்னை-12.**

பெரம்பூர் பாரக்ஸ் ரோடு (கதவிலக்கம் 50 முதல் முழுவதும்), பெரம்பூர் ஹைரோடு.

**ராயபுரம் — சென்னை-13.**

**ராயப்பேட்டை — சென்னை-14.**

மௌபரீஸ் ரோடு.

**சைதாப்பேட்டை — சென்னை-15.**

கிண்டி : என்ஜினிரிங் கல்லூரி.

**பரங்கிமலை — சென்னை-16.**

ஆலந்தூர், பட்ரோடு, திருவான்மியூர், வேளச்சேரி, மீனம்பாக்கம், விமான நிலையம்.

**தியாகராயநகர் — சென்னை-17.**

கிழக்கு மாம்பலம், பழைய மாம்பலம்.

**தேனம்பேட்டை — சென்னை-18.**

ஆள்வார்ப்பேட்டை, மௌபரீஸ் ரோடு.

**திருவொற்றியூர் — சென்னை-19.**

**அடையார் — சென்னை-20.**

தியாஸாபிகல் சொஸைடி.

**வண்ணாரப்பேட்டை — சென்னை-21.**

**சென்னை கவர்னர் முகாம் — சென்னை-22.**

**பெரம்பூர் ரயில்வே காலனி — சென்னை-23.**

குன்னூர் ஹைரோடு, அயன்புரம்.

**அக்பராபாத் — சென்னை-24.**

அக்பராபாத், கோடம்பாக்கம், பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம், க்ஷயரோக விடுதி, R.I.A.F., ரெட்ஹில்ஸ், வில்லிவாக்கம்.

# 10. சென்னையில் முக்கியமான டெலிபோன் எண்கள்

| | | |
|---|---|---|
| 1. | தீயணைக்கும் படை நிலையம் ; ஆம்புலன்ஸ் ... | 99 |
| 2. | போலீஸ் நிலையம் ... | 3971 |
| 3. | ” (அவசரக் காலத்தில்) ... | 93 |
| 4. | மின்சாரத் தடை ஏற்பட்டால் ... | 85441 |
| 5. | குடிநீர் சப்ளை — புகார்கள் ... | 85426 |
| 6. | தென் பிராந்திய ரெயில்வே — விசாரணை நிலையம் சென்ட்ரல் ஸ்டேஷன் | 3983 |
| 7. | ” ” எழும்பூர் ஸ்டேஷன் ... | 84051 |
| 8. | ஜெனரல் போஸ்ட் ஆபீஸ் — விசாரணைகள் ... | 3740 |
| 9. | தந்தி விசாரணை நிலையம் ... | 3331 |
| 10. | டிரங்க் ரிகார்ட் ... | 90 |
| 11. | டிரங்க் அழைப்பு — விசாரணை நிலையம் ; புகார்கள் | 91 |
| 12. | உள்ளூர் டெலிபோன் — விசாரணை நிலையம் ... | 97 |
| 13. | ” — புகார்கள் ... | 98 |
| 14. | நேரமறிய ... | 94 |
| 15. | போனோகிராம் ... | 95 |
| 16. | ஜெனரல் ஆஸ்பத்திரி ... | 4991 |
| 17. | சர்க்கார் ராயப்பேட்டை ஆஸ்பத்திரி ... | 86913 |
| 18. | ” ஸ்டான்லி ” ... | 4985 |
| 19. | மியூஸியம் ... | 86274 |
| 20. | கன்னிமரா நூல் நிலையம் ... | 86625 |
| 21. | பரங்கிமலை ஆகாய விமான விசாரணை நிலையம் ... | 80781 |
| 22. | குதிரைப் பந்தய நிலையம் ... | 88278<br>88238 |
| 23. | அகில இந்திய வானொலி நிலையம் ... | 86435 |
| 24. | ............................................ ... | .......... |
| 25. | ............................................ ... | .......... |
| 26. | ............................................ ... | .......... |

# (எ) அரசாங்கப் பொது விடுமுறை நாட்கள்

| விசேஷம் | | 1953ஆு | 1954ஆு | 1955ஆு |
|---|---|---|---|---|
| புது வருஷ நாள் | ... | வியாழன், ஜனவரி 1 | வெள்ளி, ஜனவரி 1 | சனி, ஜனவரி 1 |
| வைகுண்ட ஏகாதசி | ... | ... | ... | ... |
| போகிப் பண்டிகை | ... | ... | ... | ... |
| பொங்கல் | ... | ... | ... | ... |
| மாட்டுப் பொங்கல் | ... | ... | ... | ... |
| குடியரசு தினம் | ... | திங்கள், ஜனவரி 26 | செவ்வாய், ஜனவரி 26 | புதன், ஜனவரி 26 |
| மகா சிவராத்திரி | ... | ... | ... | ... |
| தெலுங்கு வருஷப் பிறப்பு | ... | ... | ... | ... |
| புது வெள்ளிக்கிழமை | ... | ... | ... | ... |
| தமிழ் வருஷப் பிறப்பு | ... | ... | ... | ... |
| ரம்ஜான் | ... | ... | ... | ... |
| ஆறு மாத பாங்க் கணக்கு முடிவு | | செவ்வாய், ஜூன் 30 | புதன், ஜூன் 30 | வியாழன், ஜூன் 30 |
| ஆவணி அவிட்டம் | ... | ... | ... | ... |
| சுதந்திர தினம் | ... | சனி, ஆகஸ்டு 15 | ஞாயிறு, ஆகஸ்டு 15 | திங்கள், ஆகஸ்டு 15 |
| விநாயக சதுர்த்தி | ... | ... | ... | ... |
| பக்ரீத் | ... | ... | ... | ... |
| ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி | ... | ... | ... | ... |
| மஹாளய அமாவாசை | ... | ... | ... | ... |
| ஆயுத பூஜை | ... | ... | ... | ... |
| முஹரம் | ... | ... | ... | ... |
| மகாத்மா காந்தி பிறந்த தினம் | ... | வெள்ளி, அக். 2 | சனி, அக். 2 | ஞாயிறு, அக். 2 |
| தீபாவளி | ... | ... | ... | ... |
| மீலடி நபி | ... | ... | ... | ... |
| கிறிஸ்துமஸ் தினம் | ... | வெள்ளி, டிஸ. 25 | சனி, டிஸ. 25 | ஞாயிறு, டிஸ. 25 |
| வைகுண்ட ஏகாதசி | ... | ... | ... | ... |
| வருட பாங்க் கணக்கு முடிவு | ... | வியாழன், டிஸ. 31 | வெள்ளி, டிஸ. 31 | சனி, டிஸ. 31 |

குறிப்பு :—இவ்விடுமுறை நாட்களைத் தவிர, எல்லா ஞாயிற்றுக்கிழமைகளும், ஒவ்வொரு மாதத்திய கடைசிக்கு முன் வரும் எல்லா சனிக்கிழமைகளும் சென்னை அரசாங்கப் பொது விடுமுறை நாட்களாகும்.

# (ஏ) கடிதங்கள் சம்பந்தமான சில கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| Abbreviation | — | சுருக்குச் சொல் |
| Acceptance | — | ஒப்புக் கொள்ளல் |
| Account | — | கணக்கு |
| Acknowledgment | — | ஒப்பச் சீட்டு |
| Address | — | முகவரி, விலாசம் |
| Addressee | — | விலாசதார் |
| Advertisement | — | விளம்பரம் |
| Advice | — | புத்திமதி, அறிவுரை |
| Affectionate | — | அன்புள்ள |
| Agreement | — | ஒப்பந்தம் |
| Air Mail | — | விமானத் தபால் |
| Application | — | விண்ணப்பம் |
| Appointment order | — | அலுவல் அமர்த்தாணை |
| Auction | — | ஏலம் |
| Book-post | — | புத்தக அஞ்சல் |
| Business letters | — | வியாபாரக் கடிதங்கள் |
| Business terms | — | வியாபார நிபந்தனைகள் |
| Certificate | — | நற்சான்றுப் பத்திரம் |
| Circulation | — | விநியோகித்தல் |
| Classes of letters | — | கடிதங்களின் வகைகள் |
| Code | — | குறியீடு |
| Complaint | — | புகார் |
| Condolence | — | அனுதாபம் |
| Congratulatory letter | — | பாராட்டுக் கடிதம் |
| Consolatory letter | — | ஆறுதல் கடிதம் |
| Copies of letters | — | கடிதத்தின் பிரதிகள் |
| Copyright | — | பதிப்புரிமை |
| Correspondence | — | கடிதப் போக்குவரவு |
| Courtesy | — | மரியாதை |
| Date | — | தேதி |
| Dear | — | அன்புள்ள, அன்புமிக்க |
| Delivery | — | பட்டுவாடா |
| Demand | — | தேவை |
| Department | — | இலாகா |
| District | — | ஜில்லா, மாவட்டம் |
| Document | — | பத்திரம் |
| Domestic letters | — | குடும்பக் கடிதங்கள் |
| Door number | — | கதவிலக்கம் |
| Editor | — | பதிப்பாசிரியர் |
| Employee | — | ஊழியன் |

| | | |
|---|---|---|
| Employer | — | தலைவன் |
| Enquiry | — | விசாரணை |
| Envelope | — | அஞ்சல் உறை, கவர் |
| Express delivery | — | துரிதப் பட்டுவாடா |
| Express letter | — | அவசரத் தபால் |
| Faithful | — | நம்பிக்கையுள்ள |
| Farewell Address | — | பிரிவு உபசாரப் பத்திரிகை |
| Fee | — | கட்டணம் |
| Foreign Mail | — | வெளிநாட்டுத் தபால் |
| Friend | — | நண்பன், தோழன் |
| Government | — | அரசாங்கம் |
| Greetings | — | வாழ்த்து |
| Head Accountant | — | தலைமைக் கணக்கர் |
| Head Clerk | — | தலைமை அலுவலாளர் |
| High Road | — | நெடுஞ் சாலை |
| Holiday | — | விடுமுறை நாள் |
| Honourable | — | பெருமை பொருந்திய |
| Income tax | — | வருமான வரி |
| Institution | — | நிலையம் |
| Invitation | — | அழைப்பு |
| Letter | — | கடிதம் |
| Letter-headings | — | கடிதத் தலைப்புத் தாள்கள் |
| Letter-writing | — | கடிதம் எழுதுதல் |
| Local | — | உள்ளூர் |
| Marriage | — | திருமணம் |
| Memorandum | — | நமூனா |
| Message | — | செய்தி |
| Mofussil | — | வெளியூர் |
| Money order | — | பண அஞ்சல் |
| Municipality | — | நகர சபை |
| Newspapers | — | செய்தித் தாள்கள் |
| Note | — | குறிப்பு |
| Notice, public | — | பகிரங்க அறிவிப்புகள் |
| Number | — | இலக்கம் |
| Obedient | — | பணிவுள்ள |
| Office | — | அலுவலகம் |
| Office letters | — | ஆட்சிநெறிக் கடிதங்கள் |
| Order | — | ஆணை, கட்டளை |
| Parts of a letter | — | கடிதத்தின் உறுப்புகள் |
| Post | — | தபால் |
| Postal Declaration | — | தபால் அறிக்கை |
| Post-card | — | தபால் கார்டு |

| | | |
|---|---|---|
| Post-office | — | தபால் நிலையம், அஞ்சல் அலுவலகம் |
| Principal | — | தலைவர் |
| Private letters | — | உறவுக் கடிதங்கள் |
| Proprietor | — | உரிமையாளர் |
| Province | — | மாகாணம் |
| Public letters | — | பொதுக் கடிதங்கள் |
| Quotations | — | விலை விவரங்கள் |
| Rate | — | விகிதம் |
| Recommendation | — | சிபார்சு |
| Records | — | தஸ்தாவேஜிகள் |
| Reference | — | நினைவுக் குறிப்பு |
| Registration | — | பதிவு |
| Reply | — | பதில் |
| Replying letters | — | பதில் கடிதங்கள் |
| Resignation | — | ராஜிநாமா |
| Road | — | சாலை |
| Sales letters | — | விற்பனைக் கடிதங்கள் |
| Sales Tax | — | விற்பனை வரி |
| Sender | — | அனுப்புபவர் |
| Signature | — | கையெழுத்து |
| Sincere | — | உண்மையுள்ள |
| Specimen | — | மாதிரி |
| Stamp, Postage | — | தபால் பில்லை |
| Street | — | தெரு |
| Subscription | — | முடிவு |
| Superintendent | — | கண்காணிப்பாளர் |
| Superscription | — | முகவரி, விலாசம் |
| Tax | — | வரி |
| Telegram | — | தந்தி |
| Terms | — | நிபந்தனைகள் |
| Testimonials | — | நற்சான்றுத் தாள்கள் |
| Thankful letters | — | நன்றியறிவிப்புக் கடிதங்கள் |
| Threatening letters | — | பயமுறுத்தற் கடிதங்கள் |
| Truly | — | உண்மையுள்ள |
| University | — | பல்கலைக் கழகம் |
| Via | — | வழியாக |
| Welcome Address | — | வரவேற்பிதழ் |
| Working hours | — | அலுவல் நேரம் |
| Writ | — | தாவா, வழக்கு |
| Writer | — | எழுதுபவர் |

..................................................... தபால் ஆபீஸ் திறந்திருக்கும் நேரம்

| விவரம் | வார நாட்களில் | | சனிக்கிழமைகளில் | | விடுமுறை நாட்களில் | |
|---|---|---|---|---|---|---|
| | வேலை ஆரம்பிக்கும் நேரம் | வேலை முடிக்கும் நேரம் | வேலை ஆரம்பிக்கும் நேரம் | வேலை முடிக்கும் நேரம் | வேலை ஆரம்பிக்கும் நேரம் | வேலை முடிக்கும் நேரம் |
| தபால் பில்லைகள் (stamps) விற்பனை | | | | | | |
| ரெஜிஸ்ட்ரேஷன்; பார்ஸல் | | | | | | |
| மணியார்டர்; சேவிங்ஸ் பாங்க்; காஷ் சர்ட்டிபிகேட்டுகள் | | | | | | |
| தந்திகள்; தந்தி மணியார்டர்கள் | | | | | | |

## விசாரணை செய்யும் டெலிபோன் எண்கள்:

தபால் ஆபீஸ் ............... தந்தி ஆபீஸ்.................... டெலிபோன் ஆபீஸ்.....................

[குறிப்பு: இப்பக்கத்திலும் அடுத்த பக்கத்திலும் உள்ள காலியிடங்களை அவரவர்கள் ஊருக்குத் தகுந்தபடி பூர்த்தி செய்துகொள்வது நலம். இதற்குத் தாங்கள் வசிக்கும் இடத்திற்குரிய தபால் ஆபீஸ் போஸ்ட் மாஸ்டரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.]

## ஆபீஸிலிருந்து தபால் உருப்படிகளைப் பட்டுவாடா செய்யும் நேரம்

| விவரம் | வார நாட்களில் | | சனிக்கிழமைகளில் | | விடுமுறை நாட்களில் | |
|---|---|---|---|---|---|---|
| | மணி | நிமிஷம் | மணி | நிமிஷம் | மணி | நிமிஷம் |
| முதல் பட்டுவாடா | | | | | | |
| இரண்டாவது பட்டுவாடா | | | | | | |
| மூன்றாவது பட்டுவாடா | | | | | | |

## தபால் ஆபீஸ் கடிதப் பெட்டியிலிருந்து உருப்படிகளைப் பட்டுவாடா செய்யும் நேரம்

| விவரம் | மணி | நிமிஷம் | மணி | நிமிஷம் | மணி | நிமிஷம் |
|---|---|---|---|---|---|---|
| முதல் பட்டுவாடா | | | | | | |
| இரண்டாவது பட்டுவாடா | | | | | | |
| மூன்றாவது பட்டுவாடா | | | | | | |

7. புத்தகத்தைத் தலையணையாக உபயோகிக்க வேண்டாம்.

8. எண்ணெய், தண்ணீர் முதலியன பட்ட கைகளோடு புத்தகத்தைத் தொட வேண்டாம்.
9. கோபம் வரின், ஆளின் பேரிலோ, தரையிலோ புத்தகத்தை எறிய வேண்டாம்.

10. கரையான்கள் அரிக்கும்படி புத்தகத்தை வைக்க வேண்டாம்.
11. பிறர் புத்தகங்களைக் குறித்த காலத்தில் திருப்பித் தர மறக்க வேண்டாம்.
12. புத்தகத்தை இழந்து வீண் செலவு செய்ய வேண்டாம்.

## செய்ய வேண்டுபவை

1. நாம் கடன் கொடுத்த அல்லது கடன் வாங்கிய புத்தகங்களைக் கவனமாகக் குறித்துக் கொள்ள வேண்டும்.
2. புத்தகங்களுக்காக நாம் செலவிட்ட பணம் ஓர் தலை சிறந்த மூலதனம் எனக் கருத வேண்டும்.
3. வெய்யிலிலும், மழையிலும் புத்தகங்கள் கெடாதபடி கவனித்துக் கொள்ளுதல் வேண்டும்.
4. புத்தகங்கள் நெடு நாட்கள் கெடாமலிருக்கத் தேவையானால், அவற்றை மற்றொரு முறை நன்கு 'பைண்டு' செய்து கொள்ள வேண்டும்.
5. ஒரு புத்தகத்தைப் பிறரிடம் கொடுக்கும்போதோ, அதனிருப்பிடத்தில் திருப்பி வைக்கும்போதோ, கூடுமானவரையில் அது கெடுதி அடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
6. சுருங்கக் கூறின், புத்தகங்களை ஓர் சிறந்த பொக்கிஷம் எனக் கருதி, அவற்றைத் தகுதியான முறையில் காப்பாற்றுதல் வேண்டும்.

# LIFCO'S 2 MOST USEFUL

## LETTER-WRITING BOOKS

(THE BEST LETTER-WRITERS IN ENGLISH)

1. THE LIFCO'S

### BIG LETTER-WRITER

★ Nearly 700 Pages; 2,300 Topics.

★ Price Rs. 5-0; Postage Extra.

2. THE LIFCO'S

### LITTLE BOOK OF LETTERS

★ A Smaller Edition of the Big Book.

★ Price Re. 1-9; Postage Extra.

*DO YOU WANT*

to write a letter to any of your relatives?
to correspond with your friends?
to apply for a post?
to espouse a public cause by writing to the Editor of a Newspaper?
to write business letters?
to write letters on the subject of marriage?
to express yourself fully and freely when you are unfortunately forced to write a letter of condolence?
to send your greetings on some happy occasion or express your gratitude for some favour received?
to give advice, enter into a contract or execute a bond?

You will always find it worth your while to look into these books whenever you have a letter-writing problem; no pains have been spared in making these books really useful to the students, the business community and the general public.

*PRINTED & BOUND ATTRACTIVELY!*

**THE LITTLE FLOWER CO., MADRAS-17.**

BA